பைந்தமிழ் வாசகம்

முதல் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது.]

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர் :

தெப்பக்குளம் | 2/27, பிராட்வே
திருச்சிராப்பள்ளி | ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை அணா 4

முதற் பதிப்பு—அக்டோபர், 1954

Kabeer Printing Works, Madras (2700)

முன்னுரை

இளஞ்சிறுர்க்குத் தாய்மொழி கற்பிக்கத் தொடங்குங் கால், எழுத்துக்களை முதலில் கற்பித்து அவைகளினின்று சொற்களையும் அச்சொற்களினின்று வாக்கியங்களையும் கற்பிப்பது தொன்றுதொட்டுக் கையாளப்பெற்ற முறை. பிள்ளைகள் பள்ளிக்கு வருதற்கு முன்னரே அவர்கள் அறிந்துள்ள சொற்களைப் படங்கள் மூலமாகவும் பொருள் களைக் கொண்டும் வருவித்து, அச்சொற்களின் உதவி கொண்டே அவற்றில் வரும் எழுத்துக்களைக் கற்பித்தலும், ஆங்காங்குக் கற்ற எழுத்துக்களாலாகிய வேறு பல சொற் களையும் சொற்றொடர்களையும் பயிற்சிகளின் மூலமாகக் கற்பித்தலும் இடைக்காலத்தில் தோன்றிய முறையாகும்.

இனிப் பிள்ளைகள் அறிந்துள்ள சொற்களைப் படங் களைக் கொண்டும் பொருள்களைக் கொண்டும் வருவித்த லோடு, முதன் முதலில், படிக்கும் பயிற்சி மட்டும் அளித் துப் பின்னர் எழுதும் பயிற்சி அளிப்பது தற்கால முறை யாகும். இங்ஙனம் முதலில் படிக்கும் பயிற்சி மட்டும் அளித்தலால் எழுத்துக்களின் வரிவடிவங்களைப் பற்றிய அறிவு பிள்ளைகளின் மனத்தில் ஊன்றிவிடும் என்பதும், அதன் பிறகு எழுதும் பயிற்சி அளிப்பின் பிள்ளைகள் எளிதாகவும் உற்சாகத்துடனும் பாடத்தைக் கற்றுக் கொள்வர் என்பதும் தற்காலப் புதியமுறையின் நோக்க மாகும்.

இப்புதிய முறைப்படியும் அரசியலார் வெளியிட்டுள்ள புதிய பாடதிட்டத்தை ஒட்டியும் இப் பைந்தமிழ் வாசகம் முதற் புத்தகம் எழுதப்பெற்றுள்ளது.

இப் புத்தகத்தில், பிள்ளைகள் பழக்கத்தில் வழங்கக் கூடிய சொற்களும் தொடர்களும் வாக்கியங்களுமே உபயோகிக்கப்பட் டுள்ளன; சிறுவர் சிறுமியரின் மனத்தைக் கவரக்கூடிய சித்திரப் படங்கள் நிரம்ப அமைந்துள்ளன; எழுத்து நிரப்புதல், படம் பார்த்துப் படித்தல், அட்டை எழுத்துக்களைக்கொண்டு சொற்களை ஆக்குதல் முதலிய பயிற்சிகள் பயன்படத்தக்க முறையில் படிப்படியாக வேண்டிய அளவு கொடுக்கப்பட்டுள்ளன; இன்னும், பிள்ளைகளுக்குக் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் உண்டாகும் வண்ணம் வேடிக்கைச் செய்தியும் பாட்டும் உரையாடலும் அமைக்கப் பெற்றுள்ளன.

இப்புத்தகத்தைக் கல்வி இலாகா அதிகாரிகளும் பள்ளிக்கூடத் தலைவர்களும் ஆரம்ப ஆசிரியர்களும் ஏற்றுப் போற்றி ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

ம. பெரியசாமிப் பிள்ளை.

முதல் வகுப்பிற் குரியது

அம்மா அப்பா
பாப்பா



ஆடு



ஆமை

இறகு



இலை

ஈக்கள்



ஈட்டி



உரல்



உறி

ஊசி



ஊதல்



எலி



எருமை



ஏணி



ஏற்றம்

ஐவர்

ஐயர்



ஒட்டகம்

1

ஒன்று

ஓணான்



ஓடுகள்

ஔவை

2700—2

கலயம்



சக்கரம்



சங்கு



மாங்காய்



சட்டி

தச்சர்

மஞ்சள்



ஊஞ்சல்

குடம்

கட்டில்



கிணறு

வண்டு



தவளை



வாத்து



நண்டு



பந்து



பசு



காப்பு



மயில்

மரம்



யானை



நாய்

உரல்



ஏர்

கலசம்

அணில்



வண்டி

அவ்வை

பழம்



சிமிழ்



குளம்



தேள்



முறம்



நாற்காலி

கூனன்



கன்று

கண்

கால்

கிளி

கீரி

குடை



கூடை

கெண்டி



கேணி



கைகள்

கொக்கு



கோழி



கௌதாரி

2700—3

அட்டை எழுத்துக்களைக் கொண்டு பொருள்களின் பெயர்களை அமைத்தல்—I

அட்டை எழுத்துக்களைக் கொண்டு பொருள்களின் பெயர்களை அமைத்தல்—II



அட்டை எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கும் விளையாட்டு—I



அட்டை எழுத்துக்களைக் கொண்டு சொற்களை ஆக்கும் விளையாட்டு—II



படங்களைப் பார்த்து, கோடுள்ள இடங்களில் எழுத்துக்களை நிரப்பு.



காக் —	— ழி	வா — —
ம — ல்	பு —	— — கு
— ரு —	கி —	க — —

இவை என்ன?



கத்தரிக்காய் — வெண்டைக்காய்

பூசணிக்காய் — பரங்கிக்காய்

புடலங்காய் — தேங்காய்

மாங்காய் — பலாக்காய்

வாழைக்காய்

இவை என்ன?



மாதுளம்பழம் மாம்பழம்

பலாப்பழம் வாழைப்பழம்

ஆரஞ்சுப்பழம் எலுமிச்சம்பழம்

கொய்யாப்பழம் நாவல்பழம்

விளாம்பழம்

குடை பிடி.

குடை விரி.

பாய் விரி.

கயிறு திரி.

பாடம் படி.

பாடம் எழுது.

2700—4

ஏர் உழு.

விதை தெளி.

நாற்று நடு.

கதிர் அறு.

போர் அடி.

நெல் அள.

புழு ஊரும்.



பூச்சி பறக்கும்.

பாம்பு சீறும்.



கோழி முட்டை
இடும்.

தராசு நிறுக்க
உதவும்.



ஊசி நூல் தைக்க
உதவும்.



இவன் கூலிக்காரன்.

இவன் கைவண்டி
இழுக்கிறான்.

இந்த நாய் என்ன
செய்கிறது?

இந்த நாய் எலும்பு
கடிக்கிறது.

இவன் பலூன் ஊது
கிறான்.

இந்தப் பலூன்
ரப்பர் பலூன்

இவர் தாத்தா.
தாத்தா கோல் ஊன்றி
நடப்பார்.

இவர் எங்கள் பாட்டி.
எங்கள் பாட்டி கதை
சொல்வார்.

இவர்கள் அக்கா, தங்கை.
தங்கை பெயர் செல்லம்.
அக்கா பெயர் கமலம்.



வாத்து நீரில் நீந்தும்.
வாத்தின் உடம்பில்
நீர் ஒட்டாது.

இவன் நுங்கு
சீவுகிறான்.
நுங்கு இனிப்பாய்
இருக்கும்.

இது ஒரு பசு.
இந்தப் பசு தண்ணீர்
குடிக்கிறது.

தயிரோ ! தயிர்.

என்ன தயிர் ?

ஆடைத் தயிர்.

என்ன ஆடை ?

பால் ஆடை.

என்ன பால் ?

எருமைப் பால்.

என்ன எருமை ?

காட்டு எருமை.

சூரியன் கிழக்கில்
உதிக்கும்.
சூரியன் மேற்கில்
மறையும்.
நடுப்பகலில்
சூரியன் எங்கே
தெரியும்?



கிணற்றில் நீர்
ஊறும்.
கிணற்று நீர்
சுத்தமானது
இறைக்க இறைக்க
நீர் ஊறும்.



யானை பெரிய மிருகம்.
யானை புல் தின்னும்.
யானை காட்டில்
வசிக்கும்.

எறும்பு சிறிய பிராணி.

எறும்பு புற்றில்
வசிக்கும்.
எறும்பு ஊர்ந்து
செல்லும்.

மான் அழகான
மிருகம்.
மான் காட்டில்
வசிக்கும்.
மான் வேகமாய் ஓடும்.

படத்தைப் பார்த்துக் கோடுள்ள இடங்களை நிரப்பு—I

	——எலி பிடிக்கும்.
	——பொதி சுமக்கும்.
	——வீட்டைக் காக்கும்.
	——வேகமாய் ஓடும்.
	——ஊளை இடும்.
	——பால் தரும்.

படத்தைப் பார்த்துக் கோடுள்ள இடங்களை நிரப்பு–II

	—தழைகளைத் தின்னும்.
	—புல் மேயும்.
	—மரத்தில் வசிக்கும்.
	—காட்டில் வாழும்.
	—வண்டி இழுக்கும்.

குரங்கு எங்கே
இருக்கிறது?

குரங்கு மரத்தின் மேல்
இருக்கிறது.

ஆள் எங்கே நிற்கிறுன்?

ஆள் மரத்தின் கீழ்
நிற்கிறுன்.

படுக்கை எங்கே
இருக்கிறது?

படுக்கை கட்டிலின்
மேல் இருக்கிறது.

பூனை எங்கே
இருக்கிறது?

பூனை கட்டிலின் கீழ்
இருக்கிறது.





குழந்தை எங்கே
இருக்கிறது?

குழந்தை வீட்டின்
உள்ளே இருக்கிறது.

தாய் எங்கே
இருக்கிறாள்?

தாய் வீட்டின் வெளியே
இருக்கிறாள்.

எலி எங்கே இருக்கிறது?

எலி கூண்டின்
உள்ளே இருக்
கிறது.



பூனை எங்கே
இருக்கிறது?

பூனை கூண்டிற்கு
வெளியே இருக்கிறது.

பொன்னன் வருகிறான்.

கண்ணன் வருகிறான்.

பொன்னனும் கண்ணனும்
வருகிறார்கள்.

அண்ணன் எங்கே சென்றான்?

தம்பி எங்கே சென்றான்?

அண்ணனும் தம்பியும் எங்கே
சென்றார்கள்?

ஆடு மேய்கிறது.

மாடு மேய்கிறது.

ஆடுமாடுகள் மேய்கின்றன.

குதிரை ஓடுகிறது.

குதிரைகள் ஓடுகின்றன.



இலைகள்

இவை என்ன இலைகள்?

இலைகளின் நிறம் என்ன?

இலைகளில் பெரியது எது?

தாமரை இலை என்ன வடிவம்?

உனக்கு வேறு என்ன இலை தெரியும்?

வாழை மரம்

இது ஒரு வாழை மரம்.

வாழை மரத்தில் கிளைகள் இல்லை.

வாழை இலை மிகவும் பெரியது.

வாழை இலையில் சாப்பிடலாம்.

வாழைப் பழம் இனிப்பாய் இருக்கும்.

மாங்கன்று

தாதா, தாதா, என்ன செய்கிறீர்?
நான் மாங்கன்று நடுகிறேன்.
கன்று வளர்ந்து மாமரம் ஆகும்.
மாமரம் மாசி மாதம் பூ பூக்கும்.
பூவிலிருந்து பிஞ்சு தோன்றும்.
பிஞ்சு முற்றிக் காய் ஆகும்.
மாங்காய் பழுத்து மாம்பழம் ஆகும்.

தவளை

தவளை நீரில் வசிக்கும்.

தவளை நிலத்திலும் வசிக்கும்.

தவளை முட்டை இடும்.

தவளை பூச்சியைத் தின்னும்.



நான்

மரங்களில் வசிப்பேன்.

கிளைக்குக் கிளை தாவுவேன்.

கனிகளைத் தின்பேன்.

பல்லை இளித்துக் காட்டுவேன்.

கிட்ட வந்தால் உன்னை 'உர்' என்று மிரட்டுவேன்.

என் பெயரைச் சொல்லு.



பள்ளிக்கூடம்

இது ஒரு பள்ளிக்கூடம்.

உபாத்தியாயர் என்ன செய்கிறார்?

உபாத்தியாயர் பாடம் கற்பிக்கிறார்.

பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்?

பிள்ளைகள் பாடம் கேட்கிறார்கள்.



தபாற்காரர்

தம்பி: அண்ணா, இவர் யார்?

அண்ணன்: தம்பி, இவர் தபாற்காரர்.

தம்பி: தபாற்காரர் என்ன தந்தார்?

அண்ணன்: தபாற்காரர் கடிதம் தந்தார்.



இராட்டினம்

பருத்தியிலிருந்து கொட்டையை எடு.

பஞ்சை நல்ல பட்டை போடு.

இராட்டினம் நூல் நூற்க உதவும்.

இந்த நூலால் ஆடை நெய்யலாம்.

அந்த ஆடை கதர் எனப்படும்.

கதர் ஆடை உடுத்துவது நல்லது.



ஏர்

(பாட்டு)

ஏர்பிடித்து உழுதவர்கள்
என்றுமுயிர் காப்பார்.
ஊரிலவர் பெரியவர்கள்
உரிமையுடன் வாழ்வார்.
பாடுபட்டு உழுதவர்கள்
பசியின்றி வாழ்வார்.
நாடுகொண்ட பசிப் பிணியை
நலமுடனே தீர்ப்பார்.

நல்லொழுக்க விதிகள்

1. காலையில் எழுந்திரு.
2. கடவுளை வணங்கு.
3. தினமும் குளி.
4. சுத்த ஆடை கட்டு.
5. பெற்றோர் சொற்கேள்.
6. வேளையில் உண்.
7. கல்வியை விரும்பு.
8. குருமொழி கொள்.
9. மிதமாய் விளையாடு.
10. உண்மையே பேசு.
11. நல்லோர் சிநேகம் செய்.

தமிழ்

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ
க	கா	கி	கீ	கு	கூ	கெ
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ
ச	சா	சி	சீ	சு	சூ	செ
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ
ட	டா	டி	டீ	டு	டூ	டெ
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ
த	தா	தி	தீ	து	தூ	தெ
ந	நா	நி	நீ	நு	நூ	நெ
ப	பா	பி	பீ	பு	பூ	பெ
ம	மா	மி	மீ	மு	மூ	மெ
ய	யா	யி	யீ	யு	யூ	யெ
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ
ல	லா	லி	லீ	லு	லூ	லெ
வ	வா	வி	வீ	வு	வூ	வெ
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ
ற	றா	றி	றீ	று	றூ	றெ
ன	னா	னி	னீ	னு	னூ	னெ

எழுத்துக்கள்

ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
கே	கை	கொ	கோ	கௌ	க்
ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
டே	டை	டொ	டோ	டௌ	ட்
ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
தே	தை	தொ	தோ	தௌ	த்
நே	நை	நொ	நோ	நௌ	ந்
பே	பை	பொ	போ	பௌ	ப்
மே	மை	மொ	மோ	மௌ	ம்
யே	யை	யொ	யோ	யௌ	ய்
ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
லே	லை	லொ	லோ	லௌ	ல்
வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
றே	றை	றொ	றோ	றௌ	ற்
னே	னை	னொ	னோ	னௌ	ன்

நிலாப் பாட்டு

நிலா நிலா வாவா
நில்லாமல் ஓடிவா
மலைமேலே ஏறிவா
மல்லிகைப்பூ கொண்டுவா
நடு வீட்டில் வையே
நல்ல துதி செய்யே.

அ

அம்மா
அப்பா
அணில்
அவ்வை
அக்கா
அடிக்கிறான்
அண்ணன்
அழகான

ஆ

ஆடு
ஆமை
ஆடை
ஆரஞ்சுப்பழம்

இ

இரட்டினம்
இறகு
இலை
இவன்
இவள்
இவர்
இவர்கள்
இடும்
இழுக்கிறான்
இந்த
இல்லை
இனிப்பாய்
இருக்கும்
இது
இறைந்த
இவை

ஈ

ஈக்கள்
ஈட்டி

உ

உரல்
உறி
உதவும்
உடம்பில்
உள்ளது
உதிக்கும்
உனக்கு
உள்ளே
உழவன்
உழுகிறான்
'உர்'
உன்னை
உண்டு
உபாத்தியாயர்
உண்
உண்மை
உடுத்து
உழுதவர்

ஊ

ஊசி
ஊதல்
ஊஞ்சல்
ஊன்றி
ஊரும்
ஊதுகிறான்
ஊறும்
ஊளை

எ

எலி
எருமை
எங்கள்
என்ன
எலும்பு
எறும்பு
எங்கே
எது
எலுமிச்சம்பழம்
என்று
என்
எழுந்திரு

ஏ

ஏணி
ஏற்றம்
ஏர்

ஐ

ஐவர்
ஐயர்

ஒ

ஒட்டகம்
ஒன்று
ஒரு

ஓ

ஓணான்
ஓடுகள்
ஓடுகிறான்

ஔ

ஔவை

க

கலயம்
குடம்
கட்டில்
கிணறு
காப்பு
கலசம்
குளம்
கூனன்
கன்று
கிளி
கீரி
குடை
கெண்டி
கேணி
கைகள்
கொக்கு
கோழி
கௌதாரி
கால்
காய்
கிழவன்
கிழவி
கோல்
கதை
கமலம்
காடு
கடிதம்
கூலிக்காரன்
கைவண்டி
கடிக்கிறது
காது
குடிக்கிறது
கிழக்கில்
கிளைகள்
கழுகு
காக்கும்
குரங்கு
கீழ்
குழந்தை
கூண்டின்
கண்ணன்
குதிரைகள்
கறக்கிறான்
கடைகிறான்
கழுதை
குயவன்
கனிகளை
காட்டுவேன்
கிட்ட
கண்
கற்பிக்கிறார்
கேட்கிறார்கள்
காலையில்
கடவுளை
குளி
கட்டு
கல்வியை
குருமொழி
கொள்
காந்தி
கத்தரிக்காய்
கதர் கொட்டை

ச

சக்கரம்
சங்கு
சட்டி
சிமிழ்
சால்
சொல்வார்
செல்லம்
சீறும்
செய்கிறது
சீவுகிறான்
சுறுசுறுப்பு
சூரியன்
சுத்தமானது
சாப்பிடலாம்
சிறிய
செல்லும்
சென்றான்

சென்றுர்கள்
சட்டை
சோறு
சொல்லு

த

தச்சர்
தவளை
தேள்
தாய்
தாத்தா
தங்கை
தயிர்
தம்பி
தபாற்காரர்
தந்தார்
தராசு
தண்ணீர்
தெரியும்
தின்னும்
தாமரை
தரும்
துணி
தாவுவேன்
தலை
தினமும்
தீர்ப்பார்

ந

நாய்
நண்டு
நாற்காலி
நடப்பார்
நல்ல
நிற்கிருன்
நிறுக்க
நூல்
நீரில்
நீந்தும்
நுங்கு
நடுப்பகலில்
நிலத்திலும்
நிறம்
நிற்கிருர்கள்
நிற்கிருர்
நிற்கிறது
நிற்கின்றன
நாக்கு
நல்லொழுக்கம்
நல்லோர்
நாள்
நெய்யலாம்

ப

பாப்பா
பந்து
பசு
பழங்கள்
பூனை
பால்
பாய்
பையன்
பெண்
பாட்டி
பெயர்
பழுத்து
பூக்கும்
பாடுபடு
பசி
பிணி
புழு
பூச்சி
பறக்கும்
பாம்பு
பலூன்
புற்றில்
பெரியது
புரு
பலாப்பழம்
படுக்கை
பொன்னன்
பானை
பள்ளிக்கூடம்
பாடம்
பிள்ளைகள்
பெற்ருேர்
பூசணிக்காய்
பலாக்காய்
பரங்கிக்காய்
பஞ்சு
பட்டை

பருத்தி
பெரியவர்

ம

மாங்காய்
மஞ்சள்
மயில்
மரம்
முறம்
மணி
முட்டை
மேற்கில்
மறையும்
மிகவும்
மயில்
மாம்பழம்
மாதுளம்பழம்
மிருகம்
மான்
மேய்கிறது
மாடு
மிரட்டுவேன்
மூக்கு
மிதமாய்
மாங்கன்று
மாசி
மாதம்
மாமரம்
முற்றி

ய

யானை
யார்

ர

ரப்பர்

வ

வண்டு
வாத்து
வண்டி
வால்
வாய்
வசிக்கும்
வெள்ளியால்
வாழைமரம்
வேறு
விளாம்பழம்
வீட்டை
வெளியே
வருகிறன்
வருகிறர்கள்
வந்தால்
விரல்கள்
விதிகள்
வணங்கு
வேலையில்
விரும்பு
விளையாடு

பைந்தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம் | 2/27, பிராட்வே
திருச்சிராப்பள்ளி | ஜி. டி., சென்னை

1954

[விலை அணா 6

பதிப்புரிமை]

முதற் பதிப்பு—அக்டோபர், 1954

Kabeer Printing Works, Madras (2699)

முன்னுரை

ஒவ்வொரு நாட்டினரும் தமது தாய்மொழியைப் போற்றிப் பயிலவேண்டுவது இன்றியமையாத கடமையாகும். அதுபற்றியே நமது அரசியலாரும் ஆரம்ப பாடசாலைகளில் தாய்மொழிப் பயிற்சியை முதன்மையான பாடமாகவும் கட்டாய பாடமாகவும் அமைத்துள்ளார். நமது தாய்மொழியாகிய தமிழ் ஒரு இனிய மொழி. தமிழில், ஆரம்ப பாடசாலைப் பாட புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன வாயினும், தமிழ் வளர்ச்சி கருதி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எத்தனை புத்தகங்கள் வெளிவரினும் நலமே. ஆதலின், '**பைந்தமிழ் வாசகம்**' என்னும் பெயரால் இப் புதிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் வகுப்புக்கேற்ற வண்ணமும், மாணவர்கள் மேலும் மேலும் புதிய சொற்களைக் கற்பதற்கேற்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியைத் தருதலே பாட புத்தகத்தின் முக்கிய நோக்கமாதலின், அதற்குத் தக்கவாறு பயிற்சிகளும் கேள்விகளும் தரப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்தாம் வகுப்புக்களில் அரும்பதவுரை கொடுக்கப்பட்டிருத்தலோடு அந்தந்த வகுப்புக்கேற்ற அளவு எளிய முறையில் பாட சம்பந்தமான உதாரணங்களைக்கொண்டு இலக்கண

விதிகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக்குச் சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ள கதைப் பாட்டுக்களும் உரையாடலும் அங்கங்கே வேண்டிய அளவு தரப்பட்டுள்ளன.

கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச்சாலை யாசிரியரும் இப்புத்தகங்களைத் தங்கள் கல்விச்சாலைகளில் பாட புத்தகமாக வைத்து ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	எங்கள் குடும்பம்	...	1
2.	எங்கள் வீடு	...	2
3.	எங்கள் ஊர்	...	4
4.	எங்கள் பள்ளிக்கூடம்	...	5
5.	பூக்கள்	...	6
6.	நிறங்கள்	...	8
7.	பழங்கள்	...	10
8.	சுவைகள்	...	11
9.	பூனைக்கு மணி கட்டுவது யார்? **(படப் பயிற்சி 1)**	...	13
10.	கிளி	...	14
11.	சூரியன்	...	16
12.	திசைகள்	...	18
13.	சந்திரன்	...	20
14.	**காலைப் பாட்டு**	...	22
15.	கிழமைகள்	...	23
16.	தொழிலாளிகள்	...	25
17.	மாதங்கள்	...	27
18.	காக்கையும் நரியும் **(படப் பயிற்சி 2)**	...	29
19.	ஆலமரம்	...	30
20.	**நற்பழக்கம்**	...	33

எண்	பொருள்		பக்கம்
21.	புறவும் எறும்பும்	...	35
22.	யானை (**உரையாடல்**)	...	38
23.	பேராசையுள்ள நாய் (**படப் பயிற்சி 3**)	...	42
24.	வாழை	...	43
25.	நாணயங்கள் (**உரையாடல்**)	...	47
26.	நிலா	...	51
27.	தெனாலிராமன்	...	53
28.	தன் பலம் அறியாத காக்கை (**படப் பயிற்சி 4**)	...	58
29.	உடல் நலம் பேணுதல் (**உரையாடல்**)	...	59
30.	காக்கை	...	63
31.	பயிர்த்தொழில்	...	66
32.	வாலிழந்த நரி	...	69
33.	நமது நாடு	...	71
34.	உலகநீதி	...	73

இரண்டாம் வகுப்பிற் குரியது

1. எங்கள் குடும்பம்

1. இவர் என் தகப்பனார்.
2. தகப்பனார் பணம் சம்பாதித்து வருகிறார்.
3. எனக்குப் புத்தகங்களை வாங்கித் தருகிறார்.
4. அவர் என் தாயார்.
5. தாயார் எனக்குச் சாப்பாடு போடுகிறார்.
6. அவள் என் தங்கை.
7. நாங்கள் சேர்ந்து படிப்போம்.
8. எங்கள் குடும்பம் சிறிய குடும்பம்.

தகப்பனார்	சாப்பாடு	சம்பாதித்து
தாயார்	சேர்ந்து	பணம்
	குடும்பம்	



2. எங்கள் வீடு

1. நாங்கள் பெரிய வீட்டில் வசிக்கிறோம்.
2. எங்கள் வீட்டில் பல அறைகள் உண்டு.
3. முன் புறத்தில் நான் படிக்கும் அறை இருக்கிறது.
4. என் அறையில் இரண்டு சன்னல்கள் இருக்கின்றன.
5. சன்னல்கள் வழியே காற்று நன்றாய் வீசும்.
6. எனக்கு ஒரு தனி மேசை இருக்கிறது.

7. மேசையில் என் புத்தகங்களை வைத்திருக்கிறேன்.

8. வீட்டின் பின்புறம் ஒரு கிணறு இருக்கிறது.

9. கிணற்று நீரைத் தோட்டத்துக்கு இறைப்பேன்.

முன்புறம்	வீசும்	காற்று
நன்றாய்	தோட்டம்	தனி
பின்புறம்	இறைப்பேன்	



3. எங்கள் ஊர்

1. எங்கள் ஊர் ஒரு பெரிய கிராமம்.
2. ஊரில் பல தெருக்கள் இருக்கின்றன.
3. ஊரைச் சுற்றி வயல்கள் இருக்கின்றன.
4. வயல்களுக்கு மேற்கே ஓர் ஏரி உண்டு.
5. ஏரி நீர் வயல்களுக்குப் பாயும்.
6. ஊரின் நடுவில் ஒரு கோயில் இருக்கிறது.
7. கோயிலுக்கு எதிரில் ஒரு குளம் இருக்கிறது.
8. எங்கள் ஊரில் பள்ளிக்கூடம் இருக்கிறது.

கிராமம்	தெரு	ஏரி
நடு	பள்ளிக்கூடம்	சுற்றி



4. எங்கள் பள்ளிக்கூடம்

1. இது எங்கள் பள்ளிக்கூடம்.
2. எங்கள் பள்ளிக்கூடம் பெரியது.
3. இதில் ஐந்து வகுப்புகள் உண்டு.
4. நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.
5. காலையில் நாங்கள் பள்ளிக்கூடம் போவோம்.
6. ஆசிரியர் எங்களுக்குப் பாடம் சொல்வார்.
7. நாங்கள் நன்றாகப் பாடம் படிப்போம்.
8. மாலையில் நாங்கள் வீடு செல்வோம்.

காலை	மாலை	போவோம்	ஆசிரியர்
வகுப்பு	பாடம்	செல்வோம்	பள்ளிக்கூடம்



5. பூக்கள்

1. இதில் உள்ள பூக்கள் எத்தனை?
2. இவற்றில் ஒன்று மலர்ந்த பூ.
3. இன்னொன்று இப்பொழுது மலர்கின்ற பூ.
4. மற்றொன்று மலராத பூ.
5. மலராத பூ அரும்பு; மலர்ந்த பூ மலர்.
6. மலர்கின்ற பூவுக்குப் போது என்று பெயர்.
7. அரும்புக்கு மொட்டு என்றும் பெயர்.
8. பூ அழகும் மணமும் உள்ளது.
9. அதனால் பூவை யாவரும் விரும்புவார்.

10. பூவில் இனிய தேன் உண்டு.

11. வண்டுகள் தேனை உண்டு பாடும்.

12. உனக்குத் தெரிந்த பூக்கள் எவை?

தேன்	இனிய	இவற்றில்
மலர்	அரும்பு	மற்றொன்று
போது	மலர்ந்த	வண்டுகள்
அழகு	பாடும்	இப்பொழுது
உண்டு	தெரிந்த	விரும்புவார்
மணம்	யாவரும்	

பயிற்சி

இந்தப் பூக்களின் பெயர்களைச் சொல்லு :



கேள்விகள்

1. எதற்கு அரும்பு என்று பெயர் ?
2. போது என்று எதற்குப் பெயர் ?
3. பூவிலிருந்து கிடைக்கும் இனிய பொருள் யாது ?

6. நிறங்கள்

1. மல்லிகைப் பூ வெள்ளை நிறம்.
2. ரோசாப் பூ சிவப்பு நிறம்.
3. செவ்வந்திப் பூ மஞ்சள் நிறம்.
4. வெற்றிலை பச்சை நிறம்.
5. காக்கை கறுப்பு நிறம்.
6. இப்பொழுது கூறிய நிறங்கள் எவை ?
7. இந்த நிறங்கள் ஐந்தும் பஞ்சவர்ணம் என்று கூறப்படும்.
8. இன்னும் வேறு நிறங்களும் உண்டு.
9. அவை நீலம், ஊதா, பழுப்பு.
10. வானம் நீல நிறமானது.
11. அவரைப் பூவில் ஊதா நிறம் உண்டு.
12. வெல்லம் பழுப்பு நிறம் உள்ளது.

நீலம்	மஞ்சள்	கறுப்பு
ஊதா	அவரை	வெள்ளை
பச்சை	வெல்லம்	வெற்றிலை
சிவப்பு	இன்னும்	மல்லிகை
ரோசா	வானம்	செவ்வந்தி
கூறிய	பழுப்பு	பஞ்சவர்ணம்

பயிற்சி

I. தருந்த சொற்களால் பின்வரும் கட்டத்தை நிரப்பு:

பொருள்கள்	நிறம்
இரத்தம்	________
________	பச்சை
பால்	________
புல்	________
________	மஞ்சள்

II. முதல் வரிசையிலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பொருத்தமான நிறத்தை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்துச் சேர்த்துப்படி :

பொருள்	நிறம்
மிளகாய்ப்பழம்	மஞ்சள்
எலுமிச்சம்பழம்	வெள்ளை
மிளகு	பச்சை
வாழைத்தண்டு	சிவப்பு
வாழை இலை	கறுப்பு

கேள்விகள்

1. பஞ்சவர்ணம் எவை ?
2. வானம் என்ன நிறம் ? வெற்றிலை என்ன நிறம் ?
3. மஞ்சள் நிறமான பூக்கள் இரண்டு சொல்லு.



7. பழங்கள்

1. இந்தப் படத்திலுள்ள பழங்களைப் பார்.
2. இவைகளில் பெரிது பலாப்பழம்.
3. இன்னொன்று மாம்பழம்.
4. மற்றொன்று வாழைப் பழம்.
5. இவற்றிற்கு முப்பழம் அல்லது முக்கனி என்று பெயர்.
6. ஆரஞ்சு, மாதுளை, கொய்யா, திராட்சை இவை வேறு சில பழங்கள்.
7. இந்தப் பழங்கள் தித்திப்பா யிருக்கும்.
8. வேறு சில பழங்கள் புளிக்கும்.
9. புளியம்பழம், எலுமிச்சம்பழம் இவை புளிப்பான பழங்கள்.

முப்பழம்	பலாப்பழம்	ஆரஞ்சு
மாதுளை	கொய்யா	தித்திப்பு

கேள்விகள்

1. வேறு நான்கு பழங்களைச் சொல்லு.
2. முப்பழங்கள் எவை ?

8. சுவைகள்

1. கரும்பு இனிப்பாய் இருக்கும்.
2. எலுமிச்சம் பழம் புளிப்பாய் இருக்கும்.
3. வாழைக்காய் துவர்ப்பாய் இருக்கும்.
4. உப்பு உவர்ப்பாய் இருக்கும்.
5. பாகற்காய் கசப்பாய் இருக்கும்.
6. மிளகாய் காரமாய் இருக்கும்.
8. இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கசப்பு, கார்ப்பு என்பன சுவைகள்.
8. இந்த ஆறு சுவைகளும் அறுசுவை எனப்படும்.
9. நாம் நாவினுல் சுவை அறிகிருேம்.
10. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு சுவையில் பிரியம் அதிகம்.

காரம்	மிகுந்த	விருப்பம்
உப்பு	உவர்ப்பு	அறிகிருேம்
துவர்ப்பு	அறுசுவை	பாகற்காய்
கசப்பு	ஒவ்வொரு	எலுமிச்சம்பழம்

பயிற்சி

I. கசக்கும், உவர்க்கும், புளிக்கும், துவர்க்கும், பாக்கு, வேப்பிலை, உப்பு, புளி—இச்சொற்களைப் பின் கண்ட கட்டங்களில் பொருத்தமாக எழுது.

பொருள்கள்	சுவைகள்

II. கோடிட்ட இடங்களில் தகுந்த சொற்களைச் சேர்த்துப் படி :

1. ——— துவர்ப்பாய் இருக்கும்.
2. மிளகு ——— இருக்கும்.
3. வேப்பங்காய் ——— இருக்கும்.
4. ——— இனிப்பாய் இருக்கும்.

கேள்விகள்

1. அறு சுவைகள் எவை ?
2. உனக்கு எந்தச் சுவையில் பிரியம் அதிகம் ?
3. இனிக்கும் பொருள்கள் மூன்று சொல்லு.
4. புளிக்கும் பழங்கள் மூன்று சொல்லு.

9. பூனைக்கு மணி கட்டுவது யார்?

படப் பயிற்சி—1

ஒவ்வொரு படத்தையும் வரிசையாகப் பார்த்து ஒன்றிரண்டு வாக்கியங்கள் எழுது. பிறகு 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்ற கதையைச் சொல்லு.



10. கிளி

1. இது ஒரு கிளி.
2. கிளி மிகவும் அழகான பறவை.
3. கிளிகளைச் சிலர் வளர்ப்பார்கள்.
4. கிளியைக் கிளிப்பிள்ளை என்று சொல்வது உண்டு.
5. கிளிக்குப் பேச்சுக் கற்றுக் கொடுக்கலாம்.
6. அது நாம் சொன்னதைத் திருப்பிச் சொல்லும்.
7. கிளி தன் அலகினால் பழங்களைக் கொத்தித் தின்னும்; கொட்டைகளை உடைக்கும்.
8. நாம் அடிக்கடி பார்ப்பது பச்சைக் கிளி.

9. வேறு நிறமுள்ள கிளிகளும் உண்டு.

10. அவை வெள்ளைக் கிளி, சிவப்புக் கிளி, கருங்கிளி, பஞ்சவர்ணக் கிளி.

சிலர்	மிகவும்	உடைக்கும்
அலகு	கொத்தி	கிளிப்பிள்ளை
பேச்சு	கொட்டை	கற்றுக்கொடு
பறவை	அடிக்கடி	வளர்ப்பார்கள்

பயிற்சி

படத்தைப் பார்த்து விடை கூறு :

1. படத்தில் நீ என்னென்ன பார்க்கிறாய்?
2. கிளி எங்கே உட்கார்ந் திருக்கிறது?
3. கிளியின் அலகு எப்படி இருக்கிறது?

கேள்விகள்

1. கிளிகளில் என்னென்ன நிறமுள்ள கிளிகள் உண்டு?
2. கிளியின் ஆகாரம் என்ன?
3. பேசக் கற்றுக்கொடுத்தால் கிளி எப்படிப் பேசும்?



11. சூரியன்

1. சூரியன் வானத்தில் தோன்றும் நெருப்பு உருண்டை.
2. சூரியன் காலையில் எழும்; மாலையில் மறையும்.
3. சூரியன் எழுதல் சூரிய உதயம்.
4. சூரியன் மறைதல் சூரிய அத்தமனம்.
5. சூரியன் நடுப்பகலில் வானத்தின் உச்சியில் இருக்கும்.
6. சூரியன் நமக்கு வெளிச்சமும், வெப்பமும் கொடுக்கிறது.
7. சூரிய வெப்பத்துக்கு வெயில் என்று பெயர்.

8. சூரிய வெளிச்சம் உள்ள நேரம் பகல்.
9. சூரிய வெளிச்சம் இல்லாத நேரம் இரவு.
10. பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.

வெப்பம்	நெருப்பு	அத்தமனம்
உருண்டை	உச்சியில்	மறையும்
உதயம்	நடுப்பகல்	

பயிற்சி

கோடு உள்ள இடங்களை நிரப்பு :

1. சூரியன் மேற்கில் ———.
2. சூரியன் ——— உதிக்கும்.
3. சூரிய வெளிச்சம் இல்லாத நேரம் ———.
4. சூரிய வெளிச்சம் ——— நேரம் பகல்.

கேள்விகள்

1. சூரியன் நமக்கு என்னென்ன கொடுக்கிறது?
2. சூரியன் தோன்றுவிட்டால் என்ன ஏற்படும்?

12. திசைகள்

1. சூரியன் உதிக்கும் பக்கம் கிழக்கு.
2. சூரியன் மறையும் பக்கம் மேற்கு.
3. காலையில் சூரியனைப் பார்த்து நில்.
4. நீ கிழக்குப் பக்கம் பார்த்து நிற்கிறாய்.
5. இப்பொழுது உன் கைகளை இரு பக்கங்களிலும் நேராக நீட்டு.
6. உன் வலது கைப் பக்கம் தெற்கு.
7. உன் இடது கைப் பக்கம் வடக்கு.
8. உன் பின்பக்கம் மேற்கு.

9. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்ற நான்கு பக்கங்களும் திசைகள் எனப் படும்.

10. உன் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் எந்தத் திசையில் இருக்கிறது?

திசை	கிழக்கு	வலது கை
நீட்டு	மேற்கு	இடது கை
பக்கம்	தெற்கு	வடக்கு

பயிற்சி

படத்தைப் பார்த்துப் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி.

1. சூரியன் கிழக்கே ———.
2. ஒரு ——— ——— முகமாக நிற்கிறன்.
3. அவன் தன் இரண்டு ——— ——— ———.
4. அவனுக்கு ——— ——— தெற்கு.
5. ——— இடது கைப்புறம் ———.
6. அவன் முதுகுப்புறம் ———.

கேள்விகள்

1. திசைகள் எத்தனை?
2. அவற்றின் பெயர் என்ன?
3. சூரியன் அத்தமிக்கும் திசை எது?

13. சந்திரன்

1. சந்திரன் இரவில் வெளிச்சம் தரும்.
2. எல்லா நாட்களிலும் சந்திரன் வட்டமாக இராது.
3. மாதம் ஒரு நாள் சந்திரன் முழு வட்ட மாக இருக்கும்.
4. அன்று பௌர்ணமி எனப்படும்.
5. சந்திரன் அரை வட்டமாக இருக்கும் நாள் அட்டமி.
6. மாதம் ஒரு நாள் சந்திரனைக் காண முடியாது.
7. அன்று அமாவாசை எனப்படும்.

8. சந்திரனுக்கு நிலா என்றும் ஒரு பெயர் உண்டு.
9. அமாவாசை முதல் பௌர்ணமி வரை சந்திரன் வளர்ச்சி அடையும்.
10. இந்தக் காலம் வளர்பிறை.
11. பௌர்ணமி முதல் அமாவாசை வரை சந்திரன் குறையும்.
12. இந்தக் காலம் தேய்பிறை.

பௌர்ணமி	அட்டமி	அமாவாசை
வளர்ச்சி	வளர்பிறை	காலம்
குறையும்	தேய்பிறை	முடியாது

பயிற்சி

பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :—

1. சந்திரன் ——— வெளிச்சம் தரும்.
2. அமாவாசையன்று சந்திரனைக் காண ———.
3. சந்திரன் வளர்ச்சி அடையும் காலம் —— பிறை.

கேள்விகள்

1. .சந்திரன் ஏந்த நாளில் அரை வட்டமாகத் தோன்றும் ?
2. சந்திரனுக்கு உள்ள வேறு பெயர் என்ன ?
3. தேய்பிறைக் காலத்தில் சந்திரன் எவ்வாறு தோன்றும் ?

14. காலைப் பாட்டு

பொழுது விடிந்தது
  பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி பொலிவதைப்
  பாராய்
பொன்னே நீ
  எழுந்தோடி வாராய். 1

காகம் கரைந்தது
  காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப்
  பாராய்
கண்ணே நீ
  எழுந்தோடி வாராய். 2

—தேசிக விநாயகம் பிள்ளை

15. கிழமைகள்

1. ஒரு பகலும் ஓர் இரவும் சேர்ந்தது ஒரு நாள்.
2. ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம்.
3. வாரத்தின் ஏழு நாட்களுக்கும் பெயர்கள் உண்டு.
4. அவை ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.
5. வாரத்தின் முதல் நாள் ஞாயிற்றுக் கிழமை.
6. வாரத்தின் கடைசி நாள் சனிக்கிழமை.
7. ஞாயிற்றுக்கிழமை நீங்கள் பள்ளிக்கூடம் போகமாட்டீர்கள் அல்லவா ?
8. அன்று பள்ளிக்கூடத்திற்கு விடுமுறை நாள்.
9. திங்கட்கிழமை முதல் ஐந்து அல்லது ஆறு நாட்கள் பள்ளிக்கூடத்தில் வேலை நடக்கும்.
10. ஒரு மாதத்திற்குச் சுமார் நான்கு வாரங்கள்.

வாரம்	கடைசி	அல்லவா
முதல்	மாட்டீர்கள்	விடுமுறை

பயிற்சி

முதல் வரிசையிலுள்ள ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான வார்த்தையை இரண்டாம் வரிசையிலிருந்து எடுத்துச் சேர்த்துப் படி :—

வாரத்தின் முதல் நாள்	மாதம்
ஏழு நாட்கள் கொண்டது	ஞாயிறு
வாரத்தின் நடு நாள்	சனி
வாரத்தின் கடைசி நாள்	வாரம்
நான்கு வாரங்கள்	புதன்

கேள்விகள்

1. உன் பள்ளிக்கூடத்திற்கு எந்தக் கிழமைகள் விடுமுறை நாட்கள் ?

2. ஒரு நாள் என்பது என்ன ?

3. ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள். ஒரு மாதத்தில் எத்தனை முழு வாரங்கள் இருக்கின்றன? எத்தனை நாட்கள் மீதி ?



16. தொழிலாளிகள்

1. மரவேலை செய்கிறவர் தச்சர்.
2. இரும்பு வேலை செய்கிறவர் கொல்லர்.
3. பாத்திரம் செய்கிறவர் கன்னர்.
4. வீடு கட்டுகிறவர் கொற்றர்.
5. துணிகளை வெளுக்கிறவர் சலவைத் தொழிலாளர்.
6. துணிகளைத் தைப்பவர் தையற்காரர்.
7. நகைகள் செய்பவர் தட்டார்.
8. ஆடை நெய்பவர் சேணியர்.
9. மண்பாண்டம் செய்பவர் குலாலர்.

10. செருப்புத் தைப்பவர் செம்மார்.
11. தொழில் செய்பவர் தொழிலாளி.
12. அதனுல், இவர்களுக்குத் தொழிலாளிகள் என்று பெயர்.

நகை	செருப்பு	தைப்பவர்
ஆடை	தட்டார்	நெய்பவர்
வேலை	பாண்டம்	செம்மார்
தொழில்	கொல்லர்	தொழிலாளி
கன்னுர்	சேணியர்	கட்டுகிறவர்
குலாலர்	கொற்றர்	சலவைத் தொழிலாளி

பயிற்சி

பொருத்தமாகச் சேர்த்துப் படி.

1. ஆடை நெய்பவர்	வீடு கட்டுவார்.
2. துணி வெளுக்கிறவர்	நகைகள் செய்வார்.
3. கொற்றர்	சலவைத் தொழிலாளர்.
4. தட்டார்	சேணியர்.

கேள்விகள்

1. உனக்குத் தெரிந்த தொழிலாளிகள் யார்?
2. தச்சர் செய்யும் சாமான்கள் சில சொல்லு.
3. கன்னுரின் தொழில் என்ன?

17. மாதங்கள்

1. சுமார் முப்பது நாட்கள் கொண்ட காலம் ஒரு மாதம் எனப்படும்.
2. சில மாதங்களுக்கு முப்பத்தொரு நாட்களும் உண்டு.
3. பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்தது ஒரு வருஷம் அல்லது ஆண்டு எனப்படும்.
4. தமிழ் மாதங்கள் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி என்பன.
5. ஆங்கில மாதங்கள் ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல், மே, ஜுன், ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் என்பன.
6. மாதத்தின் நாட்கள் தேதி என்று சொல்லப்படும்.
7. சித்திரை மாதம் முதல் தேதி தமிழ் வருஷப் பிறப்பு.
8. ஜனவரி மாதம் முதல் தேதி ஆங்கில வருஷப் பிறப்பு.

9. சில மாதங்களில் அதிக வெயில் இருக்கும். இந்தக் காலம் கோடைக் காலம்.
10. சில மாதங்களில் அதிக மழை பெய்யும். இந்தக் காலம் மழைக் காலம்.
11. சில மாதங்கள் அதிகக் குளிராயிருக்கும். இந்தக் காலம் குளிர் காலம்.
12. கோடை, குளிர் முதலிய பருவகாலங்கள் மாறி மாறி வரும்.

மாதம்	வருஷம்	ஆண்டு
ஆங்கிலம்	தேதி	வருஷப் பிறப்பு
கோடை	குளிர்	பருவ காலங்கள்

பயிற்சி

முதல் வரிசையிலுள்ள ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொற்களை இரண்டாவது வரிசையிலிருந்து சேர்த்துப் படி :—

முப்பது நாட்கள் கொண்டது	ஆகஸ்டு
ஏழு நாட்கள் கொண்டது	புரட்டாசி
பன்னிரண்டு மாதங்கள் கொண்டது	வாரம்
ஆவணிக்குப் பின் வருவது	மாதம்
ஜூலைக்குப் பின் வருவது	வருஷம்

கேள்விகள்

1. தமிழ் மாதங்களை வரிசையாகச் சொல்லு.
2. ஆங்கில மாதங்களை வரிசையாகச் சொல்லு.
3. கோடைக் காலத்தில் எது அதிகம் ?

18. காக்கையும் நரியும்

படப் பயிற்சி—2



மேலேயுள்ள படத்தைக் கவனித்துப் பார். பிறகு கீழேயுள்ள வினுக்களுக்கு விடை சொல்:

1. (முதல் படத்தில்) பையன் கையில் என்ன வைத்திருக்கிருன் ?

2. காக்கை என்ன செய்கிறது ?

3. (இரண்டாவது படத்தில்) மரத்தின் மேல் உள்ள காக்கை தன் அலகில் என்ன வைத்திருக்கிறது ?

4. கீழே இருப்பது என்ன பிராணி ?

5. மூன்ருவது படத்தில் என்ன பார்க்கிருய் ?

காக்கையை நரி எப்படி ஏமாற்றியது என்ற கதையைச் சொல்.

19. ஆலமரம்

1. இந்த மரம் ஆலமரம். ஆலமரத்தின் அடிப்பாகம் மிகவும் பருத்து இருக்கும். இதற்குப் பெரிய கிளைகள் உண்டு. கிளையிலிருந்து ஒரு வகை வேர் பூமியை நோக்கி விழும். அதற்கு ஆலம் விழுது என்று பெயர்.

2. ஆலம் விழுது பூமியில் ஊன்றிப் பெரிய தூண் போல் ஆகும். விழுதுகள் பல பக்கத்திலும் இறங்கிப் பூமியில் பதியும். அதனால், ஆலமரம் ஒரு பெரிய பந்தலைப் போல் தோன்றும்.

3. ஆலமரத்தின் அடியில் அநேகர் தங்கி இருக்கலாம். ஆடு மாடுகள் நிழலுக்காக அதன் அடியில் படுத்திருக்கும். அதன் கிளைகளில் பறவைகள் கூடு கட்டி வசிக்கும்.

4. ஆலம்பழம் மிகவும் சிறியது. அது ஒரு கோலி அளவாக இருக்கும். அந்தப் பழத்திற்குள் விதைகள் நிறைந்து இருக்கும். ஆலம் விதை கடுகு போல் தோன்றும். இவ்வளவு சிறிய விதையிலிருந்து அவ்வளவு பெரிய மரம் எவ்வாறு உண்டாயிற்று! இது மிகுந்த ஆச்சரியம் அல்லவா?

5. ஆலம்பழம் பறவைகளுக்கு ஆகாரம் ஆகும். ஆலிலையில் சிலர் அன்னமிட்டு உண்பார்கள். ஆலம் விழுது பல் துலக்க உதவும்.

"ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி."

வேல்	தங்கி	அன்னம்
கடுகு	பந்தல்	ஆகாரம்
விதை	துலக்க	எவ்வாறு
விழுது	பதியும்	இவ்வளவு
உறுதி	நோக்கி	ஆச்சரியம்
ஊன்றி	பருத்து	அடிப்பாகம்

பயிற்சி

I. 1. ஆலமரம் ஒரு பெரிய மரம்; சிறிய மரம் இரண்டு சொல்லு.

2. விழுது கீழ்நோக்கி விழும்; மேல் நோக்கிச் செல்லும் பாகம் எது?

3. ஆலம்பழம் மிகவும் சிறியது; மிகவும் பெரிய பழம் ஒன்று சொல்லு.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி:

1. ஆலமரத்தின் அடிமரம் மிகவும் ——— இருக்கும்.

2. ஆலம் விழுது பூமியில் ஊன்றிப் பெரிய ——— போல் ஆகும்.

3. ஆலம் ——— பறவைகளுக்கு உணவாகிறது.

4. ஆலம் விதை ——— போல் இருக்கும்.

கேள்விகள்

1. விழுது என்பது என்ன?

2. ஆலமரம் பிராணிகளுக்கு எவ்வாறு உபயோகப்படுகிறது?

3. "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்றால் என்ன?

4. ஆலமரத்தின் எந்தப் பாகங்கள் நமக்குப் பயன்படுகின்றன?

20. நற்பழக்கம்

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு ;
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா. 1

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா ;
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்கு வர மாட்டாது பாப்பா. 2

துன்பம் நெருங்கி வந்தபோதும்—நாம்
சோர்ந்துவிடல் ஆகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா. 3

சாதிகள் இல்லையடி பாப்பா—குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி—அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர். 4

—பாரதியார்

நீதி	உயர்ச்சி	போக்கிவிடும்
துணை	தெய்வம்	புறஞ்சொல்லல்
அன்பு	தாழ்ச்சி	சோர்ந்துவிடல்
மேலோர்	அத்தனையும்	வழக்கப்படுத்து
துன்பம்	உயர்ந்தமதி	கனிவு கொடுக்கும்

பயிற்சி

பின்வரும் கட்டங்களில் சில நற்பழக்கங்கள், சில தீய பழக்கங்கள் இவற்றைக் குறி.

நற்பழக்கம்	தீய பழக்கம்
1.	
2.	
3.	
4.	
5.	

கேள்விகள்

1. யார் மேலோர் ?
2. எது எது கூடாது ?
3. நமக்குத் துணை யார் ?

21. புறுவும் எறும்பும்

1. ஒரு வாய்க்காலின் கரையில் ஒரு மரம் இருந்தது. மரத்தில் ஒரு புறு வசித்தது. ஒரு நாள் புறு மரக்கிளையில் உட்கார்ந்துகொண் டிருந்தது. அப்பொழுது வாய்க்கால் தண்ணீரில் ஓர் எறும்பு விழுந்து விட்டது. அது கரையேற முடியாமல் தவித்தது.

. . .

2. புறு இதைப் பார்த்தது; எறும்புக்கு உதவி செய்ய நினைத்தது. உடனே, அது மரத்திலிருந்து ஒரு சிறு குச்சியை ஒடித்துத் தண்ணீரில் போட்டது. குச்சி எறும்பின்

அருகே மிதந்தது. எறும்பு அதன்மேல் ஏறிக்கொண்டது. குச்சி கரையில் ஒதுங்கிற்று. எறும்பு அதிலிருந்து தரையில் இறங்கித் தப்பித்தது.

3. சிறிது நேரத்தில் அங்கே ஒரு வேடன் வந்தான். மரத்திலிருந்த புருவைப் பார்த்தான். அதன் மேல் அம்பு எய்ய நினைத்தான். வில்லை எடுத்து அதில் அம்பை வைத்துக் குறி பார்த்தான். அவன் காலுக்கு அருகே அந்த எறும்பு இருந்தது. அது அவன் காலில் சுரீரென்று கடித்தது.

4. வேடன் வலி பொறுக்க முடியாமல் "ஆ!" என்று கத்தினான். அவன் குறி தவறிவிட்டது. வேடன் கூக்குரலைப் புரு கேட்டது. உடனே அது பறந்து போய்விட்டது.

குறி	தப்பி	மிதந்தது
வில்	எய்ய	வாய்க்கால்
கரை	அருகே	பொறுக்க
குச்சி		

பயிற்சி

I. பொருத்தமாகச் சேர்த்துப் படி :

1. எறும்பு	ஒரு புறுவைக் கண்டான்.
2. வேடன் மரத்தில்	ஊர்ந்து சென்றது.
3. அவன் வைத்த	வேறிடத்தை அடைந்தது.
4. புறு பறந்து சென்று	குறி தவறிற்று.

II. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :

1. வாய்க்கால் தண்ணீரில் ——— விழுந்து விட்டது.
2. ——— எறும்புக்கு உதவி செய்ய நினைத்தது.
3. புறு மரத்திலிருந்து ஒரு சிறு ——— ஒடித்துப் போட்டது.
4. ——— குச்சியின்மேல் ஏறிக்கொண்டது.
5. வேடன் ——— எடுத்து அதில் ——— வைத்துக் குறிபார்த்தான்.
6. ——— வேடன் காலில் சுரீரென்று ———.
7. வேடன் குறி ———.

கேள்விகள்

1. எறும்புக்கு ஏற்பட்ட ஆபத்து என்ன ?
2. புறு எறும்பை எவ்வாறு காப்பாற்றியது ?
3. வேடன் எய்த அம்பிலிருந்து புறு எப்படித் தப்பியது ?
4. இந்தக் கதையால் நீ அறிவது என்ன ?



22. யானை

கந்தன் : அப்பா, இது என்ன ? இவ்வளவு பெரிதாய் இருக்கிறதே !

தந்தை : கந்தா, இதுதான் யானை. யானை, ஒரு பெரிய மிருகம் அல்லவா ?

கந்தன் : ஆமாம் அப்பா, யானை பெரிய மிருகம் தான். ஆனால் மிருகத்துக்கு நான்கு கால்கள் தானே இருக்கும். இதற்கு என்ன முன்னால் ஒன்றும் தொங்குகிறது ?

தந்தை: யானைக்கும் கால்கள் நான்குதான். ஆனால் முன்னால் தொங்குவது கை.

கந்தன்: இது என்ன அப்பா, மிருகத்துக்குக் கைகூடவா இருக்கும்?

தந்தை: ஆமாம்; யானைக்கு மாத்திரம் கை உண்டு. அதற்குத் தும்பிக்கை என்று பெயர்.

கந்தன்: ஏன் தும்பிக்கை என்று பெயர்?

தந்தை: யானைக்குத் தும்பி என்று ஒரு பெயர் உண்டு. ஆகையால், யானையின் கையைத் தும்பிக்கை என்று கூறுவது வழக்கம்.

கந்தன்: சரிதான் அப்பா, அது என்ன கையில் துவாரம் இருக்கிறதே!

தந்தை: கெட்டிக்காரன்; நீ அதையும் கவனித்து விட்டாயே. துவாரம் ஒன்று அல்ல; இரண்டு. அவைகளின் வழியாகத்தான் யானை சுவாசிக்கிறது.

கந்தன்: இது என்ன, அப்பா! நாம் மூக்கினால் அல்லவா சுவாசிக்கிறோம்! யானை

கையினுல் சுவாசிக்கிறது என்கிறீர்களே?

தந்தை: ஆமாம்; யானையின் கை இரட்டைக் குழாய் போல இருப்பதால் மூக்காகவும் உதவுகிறது. யானை தண்ணீரையும் இந்தக் குழாய்களில் உறிஞ்சிப் பிறகு வாயில் விட்டுப் பருகும்.

கந்தன்: தும்பிக்கைக்கு அடியில் வெள்ளை வெளேரென்று நீண்டிருப்பவை என்ன?

தந்தை: அவைதான் தந்தம். தந்தம் என்பது யானையின் பல்............

கந்தன்: என்ன அப்பா! பல்லா இவ்வளவு பெரிதாய் நீண்டு இருக்கிறது? இதனுல் யானை தீனியை மென்று தின்னுமா?

தந்தை: கந்தா, இவைகள் பற்கள்தான். ஆனுல் இவைகளால் யானை ஆகாரத்தை மென்று தின்ன முடியாது. இந்தப் பற்களால் அது தன் பகைவர்களைக் குத்திக் கொல்லும். ஆகாரத்தை மெல்லக்கூடிய பெரிய பெரிய பற்கள் கடைவாயில் உண்டு. அவைகளால் யானை

மிகவும் கெட்டியான பொருள்களையும் நொறுக்கி மென்று தின்னும்.

பருகு	தந்தம்	நொறுக்கி
குத்து	பகைவர்	கடைவாய்
சுவாசி	துவாரம்	தும்பிக்கை
உறிஞ்சு	கெட்டிக்காரன்	இரட்டைக்குழாய்

பயிற்சி

தகுந்த சொற்களால் கோடுகளை நிரப்பு:

1. யானை ஒரு பெரிய ———.
2. பூனை ஒரு ——— மிருகம்.
3. யானைக்குத் தும்பிக்கை ———.
4. மற்ற மிருகங்களுக்குத் தும்பிக்கை ———.

கேள்விகள்

1. யானை எதனால் சுவாசிக்கும்?
2. யானைக்கு அதன் தந்தத்தினால் என்ன உபயோகம்?
3. யானைக்கு உள்ள வேறு பெயர் என்ன?

23. பேராசையுள்ள நாய்

படப் பயிற்சி—3

பின்வரும் படங்களைப் பார்த்துக் கதை சொல்லு :



குறிப்பு :—1. நாய் எலும்பைக் கௌவிச் செல்லுதல். 2. வாய்க்காலை மரப்பாலத்தின் வழியாகக் கடத்தல். 3. தன் நிழலை நீரில் பார்த்தல். 4. வேறொரு நாய் எலும்பைக் கௌவிச் செல்வதாக நினைத்தல். 5. அந்த எலும்பையும் அடைய ஆசை கொள்ளுதல். 6. வாயிலிருந்த எலும்பையும் இழத்தல்.

24. வாழை

1. பிள்ளைகளே, முக்கனி என்றால் என்ன? உங்களுக்கு நினைவு இருக்கின்றதா? முக்கனிகளில் வாழைப்பழம் ஒன்று. வாழைக்காய் பழுத்தால் வாழைப் பழம் ஆகும். வாழைக்காய் வாழை மரத்தில் உண்டாகும்.

2. வாழை மரம் சுமார் பன்னிரண்டு அடி உயரம் உள்ளது. அதற்குக் கிளைகள் இல்லை. அதைச் சுற்றிலும் வாழைக் கன்றுகள் முளைத்திருக்கும்.

3. வாழை மரத்தின் அடிப்பாகத்தில் பட்டைகள் ஒன்றின்மேல் ஒன்ருக மூடியிருக்கும். அதன் நுனிப்பாகத்தில் நீண்ட இலைகள் உண்டு. அவை நாலா பக்கமும் பரவியிருக்கும்.

4. வாழை குலைதள்ளப் பத்து மாதம் செல்லும். வாழைக் குலைக்குத் 'தாறு' என்று பெயர். வாழை மரம் ஒரே தடவை தான் தாறு போடும். அதில் காய்கள் சீப்புச் சீப்பாய் இருக்கும். ஒரு தாற்றில் பத்துப் பன்னிரண்டு சீப்புகள் இருக்கும்.

5. வாழைக் காய்கள் ஏன் சீப்புச் சீப்பாய் இருக்கின்றன? வாழைப் பூவின் மடலை விரித்துப் பாருங்கள். அந்த வாழைப்பூ ஒரு சீப்புப் போல இருக்கும். அதனுல்தான் அதிலிருந்து உண்டாகும் காய்களும் சீப்புச் சீப்பாக இருக்கின்றன.

6. வாழைமரம் முற்ற முற்ற அதன் நடுவில் தண்டு உண்டாகிப் பெருக்கிறது. அத்தண்டிலிருந்தே பூ உண்டாகிறது; பூவிலிருந்து காய் உண்டாகும். அதனுல்தான் குலை தள்ளின வாழை மரத்தின் நடுவில்

தண்டு இருக்கிறது. குலை தள்ளாத வாழையை 'ஈனு வாழை' என்பார்கள்.

7. வாழை மரம் விதையிலிருந்து முளைப்பதில்லை; கன்றே மரமாகிறது. மரத்தின் அடியில் உள்ள வாழைக் கன்றுகளை வேரோடு பெயர்த்து எடுப்பார்கள். வேர் கிழங்குபோல் உருண்டையாக இருக்கும். நிலத்தைப் பண்படுத்தி வாழைக் கன்றுகளை வரிசை வரிசையாய் நடுவார்கள். அந்த வரிசைகளின் இடையே நீளமான குழிகள் தோண்டித் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

8. வாழையில் அநேக வகையுண்டு. அவை மொந்தன், ரஸ்தாளி, பூவன், செவ்வாழை, பச்சை வாழை, பேயன் முதலியன ஆகும்.

9. வாழையின் பூ, காய், தண்டு இவைகளைச் சமைத்து உண்கிறார்கள். வாழையிலை, பட்டை, இவை உண்கலமாக உபயோகப்படுகின்றன. கலியாணம் முதலிய காரியங்களுக்குப் பந்தற் கால்களில் வாழை மரங்களைக் கட்டுவார்கள். வாழைநார் பூத் தொடுப்பதற்கு உதவுகின்றது. ஒரு வகை

யான துணியும் வாழை நாரினுல் நெய்யப் படுகின்றது. வாழைப்பழம் மிகவும் சுவை யுள்ளது; உடம்புக்கும் நலம் தரும்.

நார்	குலே	உண்கலம்
துணி	சுமார்	கலியாணம்
தாறு	பட்டை	ஈனு வாழை
தண்டு	வரிசை	பாய்ச்சுவார்கள்
மடல்	பண்படுத்தி	சுவையுள்ளது
சீப்பு	முற்றமுற்ற	முக்கனி

பயிற்சி

மாற்றிப் படி.

1. வாழை மரத்தில் உபயோகப்படாத பாகம் ஒன்றும் இல்லே.

வாழை மரத்தில் எல்லாப் பாகங்களும் ———.

2. குலே தள்ளாத வாழை ஈனு வாழை எனப்படும்.

ஈனு வாழை என்பது ——— ———.

3. வாழையிலே, பட்டை இவைகள் உண்கலமாக உபயோகப்படுகின்றன.

வாழையிலே, பட்டை இவைகளே நாம் —— ——.

கேள்விகள்

1. வாழை மரத்தின் பாகங்கள் என்னென்ன ?
2. வாழையில் பலவகைகள் எவை ?
3. சமைத்து உண்ணக் கூடிய வாழையின் பாகங்கள் எவை ?

25. நாணயங்கள்

துரை : சேகர்! இதோ, நான் எவ்வளவு பணம் வைத்திருக்கிறேன் பார்த்தாயா!

சேகர் : இவ்வளவு பணம் உனக்கு ஏது?

துரை : என் மாமா வந்திருக்கிருர். அவர் பணக்காரரர் அல்லவா! எனக்கு இவ்வளவு பணத்தையும் அவர் கொடுத்தார்.

சேகர் : இதில் பாதி புதுக் காசாக இருக்கிறதே!

துரை : ஆம். இந்த ரூபாயைப் பார். இதில் ஒரு பக்கத்தில் அசோக சின்னமாகிய மூன்று சிங்க உருவமிருக்கிறது. மறு பக்கம் தானியக் கதிர் இருக்கிறது.

சேகர் : ராஜா தலை கிடையாதா?

துரை : இனிமேல் அச்சடிக்கப்படும் நாணயங்களில் ராஜா தலை இராது.

சேகர் : இது அரை ரூபாய்தானே?

துரை : ஆம். இரண்டு அரை ரூபாய்கள் சேர்ந்தது ஒரு ரூபாய்.

சேகர் : இது நாலணாவா?

துரை : ஆம். இதைக் கால் ரூபாய் என்றும் சொல்லலாம். நான்கு கால் ரூபாய்கள் சேர்ந்தது ஒரு ரூபாய்.

சேகர் : ஒரு ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் இந்த மூன்றும் வெள்ளிதானே?

துரை : இல்லை. முன்பெல்லாம் இவை வெள்ளியால் செய்யப்பட்டன. இப்பொழுது இவை இரும்பு, நிக்கல் ஆகிய

உலோகங்களின் கலவையால் செய்யப் படுகின்றன. காந்தம் இந்த ரூபாய்களை இழுக்கும்.

சேகர் : இது அரையணு ; இது ஒரு அணு ; இது இரண்டணு ; சரிதானே ?

துரை : சரிதான். ஒரு ரூபாய்க்கு எத்தனை அணு, தெரியுமா ?

சேகர் : பதினறு அணு என்று யாருக்குத் தான் தெரியாது !

துரை : அரை ரூபாய்க்கு எத்தனை அணு ?

சேகர் : எட்டு அணு.

துரை : கால் ரூபாய்க்கு எத்தனை அணு ?

சேகர் : நாலணு.

துரை : புதுக் காலணுவைப் பார்த்தாயா?

சேகர் : பவுன் மாதிரி இருக்கிறதே! இனி மேல் ஒட்டைக் காலணு அச்சடிக்க மாட் டார்களா ?

துரை : இனி வரும் காலணுக்களில் ஒட்டை இராது.

சேகர்: இந்தப் பணத்தை எல்லாம் கூட்டிப் பார்ப்போம். மூன்று ரூபாய் இருக் கிறதே! இதை என்ன செய்யப்போகிருய்?

துரை: புத்தகங்கள் வாங்கப் போகிறேன்.

பணம்	பணக்காரர்	புதுக்காசு
சின்னம்	நாணயம்	இரும்பு
நிக்கல்	கலவை	காந்தம்
பவுன்	ஓட்டை	கூட்டி

பயிற்சி

படத்தில் காட்டப்பட்ட நாணயங்களின் மதிப்பை எழுது.

நாணயத்தின் பெயர்	மதிப்பு
1. ஒரு ரூபாய்	பதினறு அணு
2.	
3.	
4.	
5.	

கேள்விகள்

1. நமது நாட்டில் வழங்கும் நாணயங்கள் என் னென்ன ?

2. நாணயத்தின் இரண்டு பக்கங்களிலும் என் னென்ன குறிக்கப்பட் டிருக்கும் ?



26. நிலா

1. நிலவே, நிலவே, வெண்ணிலவே,
சிலநாள் மாலையில் நீயுதிப்பாய்.

2. உனது வெளிச்சம் உண்மையிலே
எனது மனத்தை இன்புறுத்தும்.

3. எங்கேனும் நான் போயிடினும்
அங்கே நீயும் உடன் வருவாய் !

4. ஒருநாள் உன்னைக் காண்கையிலே
உருவம் பிறையாய் இருந்ததுவே.

5. தினமும் நானும் உனைப்பார்த்து
மனமும் மிகவும் மகிழ்வடைந்தேன்.

6. ஒவ்வொரு நாளும் நீ வளர்ந்து
செவ்விய வட்ட வடிவடைந்தாய் !

7. இன்றே முழுவெண் ணிலவாகும்
என்றே யானும் மகிழ்வடைந்தேன்.

8. ஆனல் அதிலொரு கரியநிறம்
ஏனே வந்தது? நீயுரைப்பாய்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

நிலவு	மகிழ்வு	உரைப்பாய்
ஏனே	செவ்விய	இன்புறுத்தும்
பிறை	எங்கேனும்	வெண்ணிலவு
உருவம்	வெளிச்சம்	கரியநிறம்

பயிற்சி

படத்தைக் கவனித்து அதிலுள்ள விஷயங்களைக் கூறு.

கேள்விகள்

1. இரவில் வெளிச்சம் தருவது எது ?
2. எதற்கு முழு நிலா என்று பெயர் ?
3. முழு நிலா தினமும் தெரியுமா ?



27. தெனாலிராமன்

1. தெனாலி என்ற ஊரில் இராமன் என்னும் பெயருள்ள ஒருவன் இருந்தான். அவனுக்குத் தெனாலிராமன் என்று பெயர். அவன் புத்திக் கூர்மையுள்ளவன். பிறரை ஏய்ப்பதில் மிகவும் சமர்த்தன்.

2. ஒரு நாள் இரவில் தெனாலிராமன் வீட்டிற்கு மூன்று திருடர்கள் வந்தார்கள். அவர்கள் வீட்டின் வெளிப் புறத்தில் ஓரிடத்தில் ஒதுங்கி நின்றார்கள். வீட்டிற்குள்

எப்படிப் போகலாம் என்பதைப்பற்றி ஒருவ ரோடு ஒருவர் இரகசியமாய்ப் பேசிக்கொண் டனர். வீட்டிற்குள் விழிப்பாய் இருந்த இராமனுக்கு இது தெரிந்துவிட்டது. உடனே அவன் ஒரு தந்திரம் செய்தான்.

3. தெனாலிராமன் தன் மனைவியை அழைத்து, "ஊரில் திருட்டு அதிகமாய் நடக் கிறது. நமது வீட்டுக்கும் திருடர்கள் வந் தாலும் வருவார்கள். ஆகையால், நமது வீட்டில் உள்ள விலை உயர்ந்த பாத்திரங்களை இந்தப் பெட்டியில் இட்டுப் பூட்டி நமது தோட்டத்தில் உள்ள கிணற்றில் போட்டு விடுவோம். திருட்டுப் பயம் நீங்கிய பிறகு இதை எடுத்துக் கொள்வோம்" என்று திரு டர்கள் காதில் விழும்படி உரக்கக் கூறினான். பின்பு ஒரு பெட்டியில் சில கற்களைக் 'கடமுட' என்று ஓசை கேட்கும்படிப் போட்டான்.

4. தெனாலிராமனும் அவன் மனைவியும் அந்தப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு சென்று, வீட்டின் பின்புறமுள்ள கிணற்றில் தொப்பென்று போட்டார்கள்.

5. திருடர்கள் இதையெல்லாம் ஒதுங்கி நின்று கவனித்துக் கொண்டிருந்தார்கள். தெனலிராமனும் 'மேல் என்ன நடக்கிறது பார்ப்போம்' என்று ஒரு பக்கமாக ஒதுங்கி நின்றான். திருடர்கள் சிறிது நேரம் கழித்துக் கிணற்றண்டை சென்றார்கள். அவர்களில் ஒருவன் கிணற்றில் இறங்கி அதை எடுக்க முயன்றான். தண்ணீர் அதிகமாக இருந்ததனால் அவன் மேலே ஏறி வந்து விட்டான்.

6. பின்பு அந்தத் திருடன் கொஞ்ச நேரம் யோசித்து, மற்றவர்களை நோக்கி, "இந்தக்கிணற்றிலுள்ள தண்ணீரை எல்லாம் இறைத்துவிட்டால் மிக எளிதாகப் பெட்டியை எடுத்துக் கொள்ளலாம்" என்று கூறினான். அவர்களும் இதற்குச் சம்மதித்தார்கள்.

7. அந்தக் கிணற்றில் ஒரு ஏற்றமரம் இருந்தது. அந்த ஏற்றமரந்தான் தெனலிராமன் தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்ச உதவுவது. திருடர்களில் இருவர் ஏற்று ஓடினார்கள். ஒருவன் தண்ணீரைச் சாலினால் மொண்டு மொண்டு விட்டான். இவ்வாறு

அவர்கள் இராத்திரி முழுதும் தண்ணீர் இறைத்தார்கள். ஏன்? அவர்களுக்கு இருந்த பணத்தாசையால் அல்லவா?

8. தெனுலிராமன் இவர்கள் இறைத்து விட்ட தண்ணீரை யெல்லாம் தன் தோட்டத்தில் உள்ள செடிகளுக்கும், பயிர்களுக்கும் மடை மாறிமாறிப் பாய்ச்சிக்கொண்டே இருந்தான். இப்படியாக இரவு கழிந்தது. விடியற்காலம் ஆனவுடன் தெனுலிராமன் திருடர்களை நோக்கி, "ஓ ஆட்களே! என் தோட்டம் முழுதும் நன்ருகத் தண்ணீர் பாய்ந்துவிட்டது. தண்ணீர் இறைத்தது போதும்; உங்கள் வேலையை நிறுத்துங்கள்" என்று உரக்கக் கூவினுன்.

9. இதைக் கேட்ட திருடர்கள் வெட்கமும் திகிலும் அடைந்து ஒரே ஓட்டமாக ஓடி மறைந்தனர். பிள்ளைகளே, தெனுலிராமன் சமர்த்தைப் பார்த்தீர்களா?

சால்	விழிப்பு	கூவினன்
திகில்	எளிதாக	ஏய்ப்பது
மடை	வெட்கம்	இறைத்தது
மனைவி	மொண்டு	மாறி மாறி
உரக்க	சம்மதி	இரகசியம்
ஒதுங்கி	சமர்த்து	புத்திக் கூர்மை
தந்திரம்	உதவுவது	மறைந்தனர்

பயிற்சி

படத்தைப் பார்த்து விடை சொல்லு :

1. ஏற்று ஏறியிருப்பவர்கள் யார்? கீழே நிற்பவன் யார்? அவர்கள் என்ன செய்கிருர்கள்? ஏன்?

2. மண் வெட்டி வைத்துக்கொண்டு நிற்பவன் யார்? அவன் என்ன செய்கிருன்?

கேள்விகள்

1. தெனுலிராமன் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?
2. அவன் குணங்கள் யாவை?
3. அவனுடைய சமர்த்தை விளக்க ஒரு கதை சொல்லு.

28. தன் பலம் அறியாத காக்கை

படப் பயிற்சி—4

படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லு :



குறிப்பு :—1. கழுகு ஆட்டுக் குட்டியைத் தூக்கிச் செல்லுதல் 2. அதை ஒரு காக்கை கவனித்தல். 3. காக்கையும் ஒரு ஆட்டைத் தூக்கிச் செல்ல முயற்சித்தல். 4. காக்கையின் கால்கள் ஆட்டு ரோமத்தில் சிக்கிக்கொள்ளல். 5. ஆட்டுக்காரன் காக்கையைப் பிடித்துத் தன் வீட்டிற்குக் கொண்டு வருதல். 6. காக்கையை அவன் தன் பிள்ளைகளிடம் காட்டிவிட்டுப் பறக்கவிடுதல்.



29. உடல் நலம் பேணுதல்

[தந்தையும் மகனும் உரையாடல்]

தந்தை : முருகா, இன்று பள்ளிக்கூடம் போனாயா ?

முருகன் : போனேன் அப்பா; இப்பொழுது தான் அங்கிருந்து வருகிறேன்.

தந்தை : ஏன் இவ்வளவு நேரம்?

முருகன் : பாடம் முடிந்தவுடன் உபாத்தியாயர் எங்களுடன் பேசிக்கொண்டிருந்தார், அப்பா.

தந்தை : எதைப்பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்?

முருகன் : உடல் நலம் பேணுதலைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தார்.

தந்தை : உடல் நலம் பேணுதலைப் பற்றி அவர் என்ன சொன்னர்?

முருகன் : அதை நான் நன்ருகக் கவனிக்க வில்லை, அப்பா.

தந்தை : கவனிக்காமல் இருக்கலாமா? உடல் நலம் பேணுதல் மிகவும் நல்ல காரியமாயிற்றே.

முருகன் : உடல் நலம் பேணுதல் என்ருல் என்ன? நீங்கள் சொல்லுங்கள் அப்பா.

தந்தை : முருகா, சொல்லுகிறேன் கேள். உடல் நலம் என்பது நமது உடம்பு நோய் இன்றிச் சௌக்கியமாக இருப் பது. நமது உடம்பு சுகமாக இருக்கும் படி நாம் கவனித்துக் கொள்ளுதலே உடல் நலம் பேணுதல் ஆகும்.

முருகன் : உடல் நலத்தைக் கவனிக்காவிட் டால் என்ன, அப்பா?

தந்தை: உடல் நலத்தைக் கவனிக்காவிடில் பல வியாதிகள் உண்டாகும். நன்ருகச் சாப்பிட முடியாது. தூக்கம் வராது. உடம்பில் பலம் குறையும். உடம்பு நல மில்லாதவன் எந்த வேலையையும் நன்ருகச் செய்ய முடியாது.

முருகன்: அப்படியானல் உடல் நலத்தைப் பேணுவது அவசியம்தான், அப்பா. ஆனல், உடல் நலத்தைப் பேணுவது எப்படி ?

தந்தை: முருகா, சொல்லுகிறேன் கேள். உடல் நலத்தோடு இருக்கவேண்டுமானல், நாம் சில விதிகளைக் கவனித்து நடக்கவேண்டும்.

(1) சுவாசிக்கும் காற்றும் குடிக்கும் தண்ணீரும் சுத்தமாக இருக்க வேண்டும்.

(2) நல்ல உணவைச் சாப்பிடவேண்டும்.

(3) முதலில் சாப்பிட்ட உணவு சீரணமாகிப் பசி எடுத்த பின்பே மறுபடியும் சாப்பிடவேண்டும்.

(4) தினந்தோறும் குளித்து உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

(5) நாள்தோறும் காலை மாலை நேரங் களில் ஓடி ஆடி விளையாடவேண்டும்.

முருகன்: அப்பா, இனிமேல் நான் நீங்கள் சொன்னபடியே செய்து உடல் நலத் தைப் பேண முயற்சி செய்கிறேன்.

உடல்நலம்	வியாதி	பேணுதல்
கவனி	காரியம்	சுவாசித்தல்
நோய்	சீரணம்	சௌக்கியம்
முயற்சி	அவசியம்	தினந்தோறும்
குறையும்	தூக்கம்	மறுபடியும்

பயிற்சி

பொருத்தமாகச் சேர்த்துப் படி:

1.	நல்ல உணவை	குடிக்க வேண்டும்
2.	சுத்தமான நீரை	நல்ல காரியம்
3.	உடல்நலம் பேணுதல்	உண்ண வேண்டும்.

கேள்விகள்

1. உடல்நலம் பேணுதல் என்றால் என்ன?
2. உடல்நலம் பேணாவிடில் என்ன நேரும்?
3. உடல்நலம் பேணுவது எப்படி?

30. காக்கை

1. காக்கை நாம் அடிக்கடி பார்க்கும் பறவை. அது கருமை நிறம் உடையது. ஆனல், அதன் கழுத்துச் சாம்பல் நிறமாக இருக்கும். ஒரு வகையான காக்கைக்கு உடம்பு முழுதும் கருமையாகவே இருக்கும். அதற்கு 'அண்டங் காக்கை' என்று பெயர்.

2. காக்கை மரக்கிளைகளில் கூடு கட்டிக் கொண்டு வசிக்கும்; கூட்டில் முட்டை இட்டுக் குஞ்சு பொறிக்கும். காக்கையின் குஞ்சுகள் கருமையாகவும் விகாரமாகவும் இருக்கும். ஆயினும், அது குஞ்சுகளை மிகவும் கவன மாகப் பாதுகாக்கும்; அவைகளுக்கு இரை ஊட்டும்; அவைகளிடத்தில் மிகுந்த அன்பாக

இருக்கும். அதனுல்தான் "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்னும் பழமொழி வழங்குகிறது.

3. காக்கை மிகவும் துணிவுள்ள பறவை. அது வீட்டின் முற்றத்தில் கிடக்கும் பொருள்களை அஞ்சாமல் கௌவிச் செல்லும். சிறு குழந்தைகளின் கையிலுள்ள தின்பண்டங்களைப் பிடுங்கிக்கொண்டு போய் விடும். காக்கை ஏதேனும் ஒன்றைப் பார்க்கும்போது, தன் தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துக்கொண்டு பார்க்கும்.

4. காக்கை தானியம், சோறு, மாமிசம், பூச்சி, புழு முதலிய எந்தப் பண்டத்தையும் தின்னும். அழுகிய மாமிசத்தையும் தின்னும்.

5. காக்கையினிடம் சில நல்ல குணங்கள் உண்டு. அது விடியற்காலையில் எழுந்திருக்கும்; எழுந்தவுடன் கத்திக் கொண்டு இரை தேடப் பறந்து செல்லும். காக்கை தனக்கு ஆகாரம் கிடைத்தால் தன் இனத்தையும் கா-கா-கா என்று கூவி அழைத்து அவைகளோடு உண்ணும். அது

தினந்தோறும் குளித்துத் தன் உடம்பைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும்.

இரை	சாம்பல்	பழமொழி
இனம்	மாமிசம்	விடியற்காலை
முற்றம்	விகாரம்	தின்பண்டம்
துணிவு	அஞ்சாமல்	பிடுங்கிக்கொண்டு
சாய்த்து	குஞ்சுபொறிக்கும்	

பயிற்சி

1. காக்கை ஒரு விகாரமான பறவை; அழகான பறவை ஒன்று சொல்லு.

2. காக்கை கூடு கட்டும்; கூடு கட்டும் பறவைகள் வேறு இரண்டு சொல்லு.

3. காக்கையைப் பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்லு.

கேள்விகள்

1. காக்கை எப்படிப் பார்க்கும்?

2. காக்கையினிடம் உள்ள நல்ல குணங்கள் எவை?

3. காக்கை தன் குஞ்சுகளை அன்பாக வளர்ப்பதைப் பற்றிய பழமொழி யாது?

31. பயிர்த் தொழில்

1. எங்கள் ஊரைச் சுற்றிலும் வயல்கள் இருக்கின்றன. அவற்றில் நெல் அதிகமாக விளையும். ஏரியில் தண்ணீர் இல்லாத காலம் உண்டு. அப்பொழுது வயல்களில் சோளம், கேழ்வரகு முதலிய தானியங்கள் பயிர் செய்வார்கள்.

2. எங்கள் ஊரில் அநேகர் பயிர்த் தொழில் செய்கிறார்கள். காலையில் எருதுகளை ஓட்டிக்கொண்டு வயல்களுக்குச் செல்வார்கள். சிலர் நிலங்களை உழுவார்கள். இன்னும் சிலர் கிணற்றிலிருந்து நீர் இறைட்

பார்கள். ஏரியில் நீர் இருந்தால் அதைப் பயிர்களுக்குப் பாய்ச்சுவார்கள்.

3. மழைக் காலத்தில் எல்லா வயல்களிலும் நெல் பயிராகும். நெற்பயிர் எங்கும் ஒரே பச்சையாக இருக்கும். அறுவடைக் காலத்தில் பயிர்கள் கதிர்களைத் தாங்கி நிற்கும். கிராமத்தில் எல்லார் வீட்டிலும் புது நெல் நிரம்பிவிடும்.

4. கோடைக் காலத்தில் சில நிலங்களில் சோளக் கதிர்களைக் காணலாம். வேறு சில நிலங்களில் பருத்தி பயிராகும். சில நிலங்களில் காய்கறிச் செடிகளும் உண்டாக்கப் படும்.

5. பயிர்த் தொழில் செய்வதால் தான் நமக்கெல்லாம் உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. ஆகையால் தொழில்களில் மிகவும் முக்கியமானது பயிர்த்தொழில்.

சோளம்	பாய்ச்சுவார்	கதிர்
கேழ்வரகு	அறுவடை	உண்டாக்கு
இறைப்பார்	நிரம்பிவிடும்	முக்கியம்

பயிற்சி

கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :

1. சிலர் ——— ஓட்டிக்கொண்டு வயல்களுக்குச் செல்வார்கள்.

2. சிலர் ——— உழுவார்கள்.

3. சிலர் ——— நீர் இறைப்பார்கள்.

4. மழைக்காலத்தில் எல்லா வயல்களிலும் ——— பயிராகும்.

5. அறுவடைக் காலத்தில் பயிர்கள் ——— தாங்கி நிற்கும்.

6. பயிர்த்தொழில் செய்வதால் நமக்கு———கிடைக்கிறது.

கேள்விகள்

1. ஏரியில் தண்ணீர் உள்ளபொழுது வயல்களில் என்ன பயிர் செய்யப்படும்? ஏரியில் தண்ணீர் இல்லாத பொழுது என்ன பயிராகும்?

2. பயிர்த்தொழில் ஏன் முக்கியமானது?

32. வாலிழந்த நரி

ஒருநாள் ஒரு நரி, கோழிப் பண்ணையொன்றில் புகுந்தது. சில கோழிகளைத் திருடிச் செல்ல அது முயற்சி செய்தது. பண்ணையின் சொந்தக்காரரர் அங்கு ஒரு பொறி அமைத்திருந்தார். அதில் நரியின் வால் அகப்பட்டுக்கொண்டது. தன்னை விடுவித்துக் கொள்ள நரி மிகவும் முயன்றது. முடிவில் அதன் வால் அறுந்துபோயிற்று. வால் போனாலும், உயிர் தப்பியதற்காக மகிழ்ச்சியடைந்த நரி காட்டுக்குள் ஓடிவிட்டது. அங்கு ஒரு புதரில் மறைந்து வாழ்ந்தது.

சில நாட்களில் வாலறுந்த புண் ஆறி விட்டது. இப்பொழுது அது பிற நரிக ளுடன் பழக முன்வந்தது. வாலிழந்த நரி மற்ற நரிகளைப் பார்த்து, "வாலில்லாமல் இருப்பது எவ்வளவு சௌகரியமாயிருக் கிறது! நான் செய்ததுபோல் நீங்களும் வாலை ஏன் அறுத்துவிடக் கூடாது? வால் ஒரு பெருஞ் சுமைதான். வாலில்லாவிட் டால், நீங்களும் அழகாயிருப்பீர்கள்!" என்றது.

இதைக் கேட்ட சில வாலிப நரிகள் தம் வாலை அறுத்துக் கொள்ளலாமென்று நினைத் தன. ஆனால் அங்கிருந்த ஒரு முதிய நரி, "வாலிருப்பதுதான் எங்களுக்கு அழகாயும் சௌகரியமாயும் இருக்கிறது. வால் இல் லாமலிருக்கும் அழகும் சௌகரியமும் உனக்கே இருக்கட்டும்," என்றது.

பண்ணை	பொறி	அகப்படு
சொந்தக்காரர்	அமைத்து	விடுவி
சௌகரியம்	வாலிபம்	முதிய

33. நமது நாடு

1. எங்கள்நா டிந்திய நாடு—அதற்
கெங்கும் இணையில்லை வேறொரு நாடு.

2. கங்கைந தியோடும் நாடு—என்றும்
பங்கமில் காவேரி பாய்ந்திடும் நாடு.

3. இமயம லையுள்ள நாடு—நல்ல
சமயம் பலவும் தழைத்திடு நாடு.

4. பல்வளம் மேவிய நாடு—மனிதர்
நல்வாழ்விற் கேற்ற நலமுடை நாடு.

5. கல்விநி ரம்பிய நாடு—அறிஞர்
பல்வித நூல்கள் பயின்றிட்ட நாடு.

6. வான்மீகி வாழ்ந்திட்ட நாடு—நல்ல
தேன்மொழிக் கம்பன் திகழ்ந்திட்ட நாடு.

7. வள்ளுவர் வாழ்ந்த எம்நாடு—தமிழ்த்
தெள்ளமு தத்தில் திளைத்திட்டோர் நாடு.

8. எங்கள் நாடிந்திய நாடு—அதற்
கெங்கும் இணையில்லை வேறொரு நாடு.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

நாடு	மேவிய	கம்பர்
இணை	சமயம்	வான்மீகி
பயில்	இமயம்	வள்ளுவர்
பங்கம்	இந்தியா	திளைத்திட்டோர்

பயிற்சி

நமது நாடு கங்கை நதி ஓடும் நாடு.

நமது நாட்டில் கங்கை நதி ஓடுகிறது.

இவ்வாறு கீழ் உள்ளவற்றை மாற்றிப் படி :

1. நமது நாடு ஆறுகள் பல பாய்ந்திடும் நாடு.
2. நமது நாடு பல புலவர்கள் பிறந்த நாடு.
3. நமது நாடு பல வளம் மேவியது.

கேள்விகள்

1. இப் பாட்டில் வரும் ஆறு, மலை இவற்றின் பெயர்களைச் சொல்லு.

2. நமது நாட்டில் தோன்றிய பெரும் புலவர்கள் யாவர் ?

34. உலக நீதி

1. ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்.
2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
3. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
4. வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்.
5. போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
6. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரியவேண்டாம்.
7. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
8. அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
9. மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
10. மாற்றானை யுறவென்று நம்பவேண்டாம்.
11. தருமத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
12. குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்.
13. கொலைகளவு செய்வாரோ டிணங்கவேண்டாம்.
14. கற்றவரை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
15. வார்த்தை சொல்வார் வாய்பார்த்துத் திரிய [வேண்டாம்.
16. மூத்தோர்சொல் வார்த்தைகளை மறக்கவேண்டாம்.
17. செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்.
18. உற்றாரை உதாசினங்கள் சொல்லவேண்டாம்.
19. இறந்தாலும் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
20. மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.
21. தெய்வத்தை ஒரு நாளும் மறக்கவேண்டாம்.

—உலகநாதர்

பைந்தமிழ் வாசகம்

மூன்றும் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை அணா 8

முதற் பதிப்பு—நவம்பர், 1954

Kabeer Printing Works, Madras (2711)

முன்னுரை

ஒவ்வொரு நாட்டினரும் தமது தாய்மொழியைப் போற்றிப் பயிலவேண்டுவது இன்றியமையாத கடமையாகும். அதுபற்றியே நமது அரசியலாரும் ஆரம்ப பாடசாலைகளில் தாய்மொழிப் பயிற்சியை முதன்மையான பாடமாகவும் கட்டாய பாடமாகவும் அமைத்துள்ளார். நமது தாய்மொழியாகிய தமிழ் ஒரு இனிய மொழி. தமிழில், ஆரம்ப பாடசாலைப் பாட புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன வாயினும், தமிழ் வளர்ச்சி கருதி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எத்தனை புத்தகங்கள் வெளிவரினும் நலமே. ஆதலின், '**பைந்தமிழ் வாசகம்**' என்னும் பெயரால் இப் புதிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் வகுப்புக்கேற்ற வண்ணமும், மாணவர்கள் மேலும் மேலும் புதிய சொற்களைக் கற்பதற்கேற்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியைத் தருதலே பாட புத்தகத்தின் முக்கிய நோக்கமாதலின், அதற்குத் தக்கவாறு பயிற்சிகளும் கேள்விகளும் தரப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்தாம் வகுப்புக்களில் அரும்பதவுரை கொடுக்கப்பட்டிருத்தலோடு அந்தந்த வகுப்புக்கேற்ற அளவு எளிய முறையில் பாட சம்பந்தமான உதாரணங்களைக்கொண்டு இலக்கண

விதிகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக்குச் சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ள கதைப் பாட்டுக்களும் உரையாடலும் அங்கங்கே வேண்டிய அளவு தரப்பட்டுள்ளன.

கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச்சாலை யாசிரியரும் இப்புத்தகங்களைத் தங்கள் கல்விச்சாலைகளில் பாட புத்தகமாக வைத்து ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை.

CONNEMARA PUBLIC
21 M
MADRAS

உள்ளுறை

பாடம்			பக்கம்
1.	பசு	...	1
2.	வருவதிற் பாதி	...	5
3.	மண் பாண்டம் வனைதல்	...	9
4.	ஆறு, ஏரி, குளம் (உரையாடல்)	...	12
5.	நெற்பயிர்	...	15
6.	மாணவர்களின் கடமைகள் (செய்யுள்)	...	19
7.	அறிவுள்ள ஒரு முயல்	...	21
8.	நாய்	...	26
9.	ஓநாயும் கழுதையும் (படப் பயிற்சி)	...	30
10.	தண்ணீர்	...	31
11.	தமிழ் நாடு (செய்யுள்)	...	35
12.	கோழி	...	37
13.	வாசுகியம்மையார்	...	42
14.	இரயில் வண்டி	...	46
15.	வழிப்போக்கன் (செய்யுள்)	...	50
16.	தென்னை	...	54
17.	காந்தியடிகளும் குருடனும்	...	58
18.	தபாற் கடிதம் (உரையாடல்)	...	62
19.	ஒரு சாதுரியமான தீர்ப்பு	...	66
20.	மழை (செய்யுள்)	...	71
21.	சிங்கமும் சுண்டெலியும் (படப் பயிற்சி)	...	73
22.	பாரி	...	74
23.	குடிசைத் தொழில் (செய்யுள்)	...	78
24.	கிராம அதிகாரிகள் (உரையாடல்)	...	80
25.	ஆத்திசூடி (செய்யுள்)	...	85
26.	கொன்றைவேந்தன் (செய்யுள்)	...	88

மூன்றும் வகுப்பிற்குரியது



1. பசு

1. நமது உணவுப் பொருள்களில் பால் ஒன்று. பாலைத் தனியாகவும் வேறு பொருள்களோடு கலந்தும் உட்கொள்ளுகிறோம். பாலிலிருந்து தயிரும் வெண்ணெயும் கிடைக்கின்றன. தயிரைக் கடைந்தால் மோராகும். வெண்ணெயைக் காய்ச்சினால் நெய்யாகும். இவ்வளவு உபயோகம் உள்ள பாலைக் கொடுக்கும் மிருகங்கள் எவை ? பசுவும் எருமையும் அல்லவா ?

2. இவைகளில் பசு மிகவும் சாதுவான மிருகம். அதற்குப் பருத்த உடலும் குட்டையான

கால்களும் உண்டு. பசுவின் கனத்த உடலைத் தாங்குவதற்குப் பலமான கால்கள் வேண்டுமல்லவா? அதனால், அதன் கால்கள் மிகவும் உறுதியாகவும் இருக்கின்றன.

3. பசுவின் கொம்புகள் சிறிது வளைந்திருக்கும். அதற்கு நீண்ட வால் உண்டு. வாலின் நுனியில் நீளமான மயிர் குஞ்சம் போல் அடர்ந்திருக்கும். அதனால் பசு தன் உடம்பில் மொய்க்கும் ஈக்களை ஓட்டிக்கொள்ளும்; தனக்குத் தீங்கு செய்பவர்களைக் கொம்பினால் முட்டித் தன்னைக் காத்துக்கொள்ளும்.

4. பசுவின் உடம்பில் தடித்த தோல் உண்டு. தோலில் குட்டையான உரோமம் அடர்ந்திருக்கும். இந்தத் தோலும் உரோமமும் கடவுள் அதற்கு அமைத்த சட்டையாகும். அதன் குளம்புகள் பிளவு பட்டவை. கொம்புள்ள எல்லா மிருகங்களுக்கும் பிளவுபட்ட குளம்பு உண்டு.

5. பசு தன் ஆகாரத்தை முதலில் நன்றாய் மென்று தின்பதில்லை; சிறிது மென்றவுடன் விழுங்கி விடும். அது, தான் ஓய்ந்திருக்கும் சமயத்தில் முன்பு விழுங்கிய உணவை மீண்டும் வாய்க்குக் கொண்டு வந்து நன்றாய் மென்று தின்னும். இவ்வாறு தின்பதற்கு அசைபோடுதல் என்று பெயர்.

6. பசு ஒரு தடவையில் ஒரே கன்று போடும். ஆண் கன்றுக்குக் காளை என்றும், பெண் கன்றுக்குக் கடாரி என்றும் பெயர். காளைக் கன்று வளர்ந்தால் காளைமாடு ஆகும். அதற்கு எருது என்று பெயர்.

7. பசுவுக்கு முக்கியமான உணவு புல். அது வைக்கோலையும், தட்டைகளையும் தின்னும். வீட்டில் வளர்ப்பவர்கள் அதற்கு ஆத்திக்கீரை, தவிடு, புண்ணுக்கு முதலியவைகளை ஆகாரமாக வைப்பார்கள். புண்ணுக்குக் கலந்த கழுநீரைப் பசு மிகவும் விருப்பமாகக் குடிக்கும்.

8. பசு மனிதருக்குப் பல வகையில் பயன்படுகிறது. அதன் பால் நமது உடலுக்குச் சுகம் தரும். நோயாளிகளுக்குப் பசுவின் பாலும் நெய்யும் மிகவும் ஏற்றவை. பசுவின் சாணம் வீட்டைச் சுத்தம் செய்வதற்கு உதவுகிறது; வயலுக்கு எருவாகவும் உபயோகப்படுகிறது. சாணத்தை வறட்டியாகத் தட்டி உலரவைத்து அடுப்பு எரிப்பார்கள்.

9. பசு பல வகையாக உபயோகப்படுவதால் மனிதர்கள் அதை மிகவும் பிரியமாக வளர்க்கிறார்கள்; சிலர் அதனைத் தெய்வமாகவும் கொண்டாடுகிறார்கள்.

எரு	கழுநீர்	உலரவை
கடாரி	தட்டை	பயன்படும்
ஓய்வு	வறட்டி	புண்ணுக்கு
தீங்கு	கனத்த	உட்கொள்
முட்டு	நோயாளி	மொய்க்கும்
சாணம்	ஏற்றவை	வெண்ணெய்
குஞ்சம்	உபயோகம்	அசைபோடுதல்
கலந்து	பிளவுபட்ட	

அரும்பதவுரை

ஏற்றவை - தக்கவை. தீங்கு - கெடுதல். பயன்படும் - உபயோகப்படும்.

எதிர்ப்பதங்கள்

பல X சில. தடித்த X மெலிந்த. உறுதியான X மிருதுவான. சுகம் X கஷ்டம்.

பயிற்சி

1. பசு பால் தரும்—இதில் 'பசு, பால், தரும்' என்ற மூன்று சொற்கள் இருக்கின்றன. இம்மூன்று சொற்களேயும் சேர்த்துக் கூறும்போது கருத்து முழுதும் விளங்குகிறது. இம் மாதிரி பல சொற்கள் சேர்ந்து ஒரு முழுக் கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் எனப்படும்.

குறிப்பு:—பசு—பசு பால்—பால் தரும்—பசு தரும்—என்று இம்மாதிரி சொன்னுல் கருத்து முடியவில்லே. ஆகையால் இவைகள் வாக்கியம் அல்ல.

2. பின்னே ஒவ்வொரு எண்ணுக்கும் எதிரில் உள்ள சொற்களே ஒவ்வொரு வாக்கியமாக அமை:

(1) தரும் பால் பசு.

(2) புல் முக்கியமான பசுவுக்கு உணவு.

(3) நமக்கு மிகவும் பசு உள்ளது உபயோகம்.

கேள்விகள்

1. பசு எப்படிப்பட்ட மிருகம்?

2. பசுவினுல் நமக்கு என்ன உபயோகம்?

3. எந்தெந்த மிருகத்துக்குப் பிளவுபட்ட குளம்பு இருக்கும்?

4. அசைபோடுதல் என்ருல் என்ன?

2. வருவதிற் பாதி

1. திருவானைக்கா என்னும் ஊரில் சடையப்பர் என்னும் பெயருள்ள ஒரு பிரபு இருந்தார். அவர் மிகவும் நற்குணம் வாய்ந்தவர் ; ஏழைகளுக்குச் சோறும் துணியும் கொடுப்பார் ; தம்மிடம் வரு பவர்களை அன்போடு உபசரிப்பார்.

2. அவர் வீட்டில் ஒரு கலியாணம் நடந்தது. அப்பொழுது அவர் தமது நண்பர்களுக்கும் பந்துக் களுக்கும் ஒரு பெரிய விருந்து செய்ய எண்ணினர். விருந்தில் சிறந்த உணவு அளிக்கப்படும் அல்லவா? உணவு அளிப்பதற்கு வேண்டிய பொருள்களெல்லாம் இருந்தன. ஆனல் மாம்பழம் மட்டும் கிடைக்கவில்லை. விருந்துக்கு முக்கனிகளைச் சிறப்பாகக் கொள்வது தமிழ் நாட்டு வழக்கம். முக்கனிகளில் மாங்கனி ஒன்று. அதனல், சடையப்பர் கவலையோடு தம் அறையில் உட்கார்ந்து என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தார்.

3. அப்போது தெருவில் ஒருவன் ஒரு கூடை நிறைய அருமையான மாங்கனிகள் கொண்டுவந்தான். அவன் சடையப்பர் வீட்டில் திருமணம் நடப்பதை அறிந்து' அவர் வீட்டுக்கு வந்தான் ; அங்கு மாம் பழத்தை நல்ல விலைக்கு விற்கலாம் என்பது அவன் எண்ணம்.

4. வீட்டின் வாயிற்படியில் இருந்த காவற்கார னிடம் தன் எண்ணத்தைக் கூறித் தன்னை உள்ளே

விடுமாறு கேட்டான். காவற்காரன் " உனக்கு வருவதில் பாதி கொடுப்பாயா? உள்ளே விடுகிறேன் " என்றான். பழக்காரன் அவனுடைய அயோக்கியத்தனத்துக்குத் தக்க தண்டனை கொடுக்கவேண்டும் என்று எண்ணினான். அதனால், " நீ கேட்டபடியே எனக்கு வருவதிற்பாதி தருகிறேன் " என்று கூறினான்.

5. காவற்காரன் மிகவும் மகிழ்ச்சியுடன் அவனை உள்ளே விட்டான். பிரபு மாம்பழம் வந்த செய்தி அறிந்து விரைவாக வந்து பார்த்தார்; மாங்கனிகள் இனிய சுவையுடையன என்பதையும் அறிந்துகொண்டார். உடனே, " இந்தப் பழமெல்லாம் என்ன விலையாகும்?" என்று கேட்டார். பழக்காரன் மிகுந்த பணிவோடு, " ஐயா, பிரபுவே, எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்; இவற்றின் விலையாக என் முதுகில் ஒரு 'டசன்' பிரம்படி கொடுத்தால் போதும்," என்று சொன்னான்.

6. அது கேட்ட பிரபு மிகுந்த ஆச்சரியமுற்று, " உனக்கென்ன பைத்தியமா? பழத்துக்கு அடியை விலையாகக் கேட்கிறாயே!" என்றார். உடனே பழக்காரன், " ஐயா, என் விருப்பம் இது; அடி கொடுத்தால், பழம் கொடுப்பேன்; இல்லாவிட்டால் நான் போகிறேன்," எனக் கூறினான்.

7. பிரபு இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கவேண்டும் என்று அறிந்துகொண்டார். அதனால் பழக்காரன் முதுகில் மெதுவாகப் பன்னிரண்டு அடி கொடுக்குமாறு தம் வேலைக்காரன் ஒருவனுக்குக் கட்டளை

இட்டார். அவனும் பழக்காரனைப் படுக்கவைத்து அவன் முதுகில் அடித்தான்.

8. பழக்காரன் ஒன்று-இரண்டு-என எண்ணிக் கொண்டே யிருந்து ஆருவது அடி விழுந்தவுடனே, "நிறுத்து! நிறுத்து!! என்னுடைய கூட்டாளி ஒருவன் இருக்கிருன்; அவனுக்கு ஆறடி கொடுக்க வேண்டும்," என்று கூவினுன். பிரபுவும் மற்றவர்களும் மிகவும் வியப்படைந்தார்கள். பிரபு, "உன் கூட்டாளி யார்?" என்று வினவிருர். உடனே பழக்காரன், "வாயிற் காப்பவனே என் கூட்டாளி," என்று சொல்லி, நடந்தவற்றைக் கூறினுன்.

9. பிரபு பழக்காரனுடைய புத்திக் கூர்மையை மிகவும் பாராட்டினுர்; தம்முடைய காவற்காரனை வரவழைத்து விசாரித்து உண்மை அறிந்தார்; உடனே அவன் முதுகில் பலமாக ஆறு அடி கொடுக்கச் செய்து அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார். அவனும் வந்ததிற்பாதி பெற்று மிக்க விசனத்துடன் வீடு சேர்ந்தான். பிரபு மிகுந்த மகிழ்ச்சியோடு பழங்களுக்கு இருமடங்கு விலை கொடுத்தார்; அதனேடு பழக்காரனுக்குப் பரிசாக ஒரு பவுனும் அளித்தார்.

அளி	விசாரி	தண்டனை	புத்திக்கூர்மை
பந்து	பிரபு	சூழ்ச்சி	தற்செயலாக
பவுன்	கவலை	அருமை	திருமணம்
மடங்கு	பாராட்டு	உபசரி	அயோக்கியத்தனம்
மகிழ்ச்சி	கூட்டாளி	நற்குணம்	

அரும்பதவுரை

பிரபு - பணக்காரர். அளி - கொடு. உபசரிப்பார் - மரியாதை செய்வார், வரவேற்பார். திருமணம் - கலியாணம். அயோக்கியத்தனம் - ஒழுங்கீனம். தற்செயல் - தானாக நிகழ்வது. கூட்டாளி - சேர்ந்தவன். பாராட்டினார் - மெச்சினார், கொண்டாடினார். விருப்பம் - ஆசை. சூழ்ச்சி - தந்திரம்.

எதிர்ப்பதங்கள்

அயோக்கியன் × யோக்கியன். பிரபு × ஏழை. விருப்பம் × வெறுப்பு.

பயிற்சி

1. காவற்காரன், பழக்காரன்—இம்மாதிரி 'காரன்' என்று முடியும் சில சொற்கள் கூறு.

2. காவற்காரனும் பழக்காரனும் பேசிக்கொள்வதுபோல நான்கு வாக்கியங்கள் கூறு.

(உ - ம்.)

காவற்காரன் : ஐயா, எங்கே போகிறீர் ?

பழக்காரன் : பிரபுவுக்கு மாம்பழம் கொண்டு வந்திருக்கிறேன் ; உள்ளே போகவேண்டும்.

கேள்விகள்

1. சடையப்பர் என்பவர் யார் ? அவர் எந்த ஊரில் இருந்தார் ? அவர் எப்படிப்பட்ட குணம் உள்ளவர் ?

2. காவற்காரன் என்ன தவறு செய்தான் ? அதனால் அவன் அடைந்த பலன் என்ன ?

3. இக் கதையிலிருந்து என்ன நீதி விளங்குகிறது ?



3. மண்பாண்டம் வனைதல்

1. உங்கள் வீட்டில் சமையல் செய்வதற்கு உபயோகப்படும் பாத்திரம் எது? பாத்திரத்துக்குப் பாண்டம் என்றும் பெயர். சிலர் வெண்கலப் பாத்திரத்தில் சமைப்பார்கள். சிலர் மண்பாண்டங்களில் சமையல் செய்வார்கள். மண்பாண்டம் செய்கிறவன் குலாலன்.

2. குலாலன் எவ்வாறு மண்பாண்டம் வனைகின்றான்? உங்களுக்குத் தெரியுமா? மண்பாண்டம் வனைவதற்கு முக்கியமாக வேண்டுவது மண். அதனோடு தண்டம், சக்கரம் முதலியவைகளும் வேண்டும். தண்டம் என்பது ஒரு கோல். மண்ணானது மெல்லிய மணல் கலந்த களிமண்ணாக இருக்க வேண்டும். வெறுங் களிமண்ணாக இருந்தால் பாண்டங்கள் காய்ந்தவுடன் வெடித்துப் போகும்.

3. குலாலன் மண்ணில் கல் முதலியவை இல்லாமல் செய்து, நன்ருகப் பிசைந்து வைத்துக் கொள்வான். பின்பு தன் எதிரில் ஒரு மணையின்மேல் சக்கரத்தைப் படுக்கை வசமாக வைத்து அதன் நடுவில் மண்ணை வைப்பான். பின்பு கோலிஞல் சக்கரத்தைச் சுற்றிவிடுவான். சக்கரம் சுழலும் போது, தான் வேண்டிய உருவத்துக்குத் தக்கபடி மண்ணைத் தன் கைகளால் பிடித்து அழுத்துவான்.

4. அப்பொழுது சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கவேண்டும். அவன் தான் நினைத்த வடிவம் வந்தவுடன் அந்த வடிவத்தின் அடிப் பாகத்தை ஒரு சிறு கத்தியால் அறுத்துச் சக்கரத்திலிருந்து எடுத்து நிழலில் உலர வைப்பான். இவ்வாறு எடுத்த பாண்டத்தின் அடிப்பாகத்தை ஒரு வகை மரக்கட்டையால் மெதுவாகப் பலமுறை தட்டுவான். இவ்வாறு தட்டத் தட்ட பாண்டத்தின் அடிப்பாகம் செம்மையாக அமையும். இதன் பிறகுதான் வெயிலில் உலரவைப்பான்.

5. உலர்ந்த பாண்டங்களைக் காவி தடவிச் சிறிது மேடான இடத்தில் வட்டமாக அடுக்குவான். இவ்வாறு அடுக்கும்போதே வறட்டிகளையும் உலர்ந்த தட்டைகளையும் அவைகளின் இடையில் வரிசையாக வைப்பான். பின்பு அக் குவியலின் மேற்புறத்தை வைக்கோலால் மூடிச் சேறு பூசித் தீ மூட்டுவான். இதற்குத்தான் சூளை வைத்தல் என்று பெயர். சூளை வெந்து அடங்கிய பிறகு அதைப் பிரித்துப் பாண்டங்களை எடுப்பான்.

6. மண்ணால் செய்யப்படும் பாண்டங்கள் பானை, சட்டி, குடம், தோண்டி, கூசா, தட்டு, தாழி, கூன் முதலியன. குதிரும் தொட்டியும் மண்ணினால் செய்யப்படுவது உண்டு.

7. மண்பாண்டம் மற்றப் பாத்திரங்களைவிட விலை குறைவானது. அதனால், ஏழை மக்கள் மண்பாண்டங்களை மிகுதியாக உபயோகிக்கிறார்கள். மண்பாண்டம் உடைந்துவிடக் கூடியது. ஆகையால் மிகவும் கவனமாக அவைகளை உபயோகிக்க வேண்டும். மண்பாண்டங்களில் சமைக்கப்படும் உணவு உடம்புக்கு நல்லது.

பிசை	அழுத்து	வனைதல்	வெடித்து
காவி	பாண்டம்	இடையில்	ஆராய்ந்து
சூளை	பாத்திரம்	சமையல்	வெண்கலம்
மணை	களிமண்	தண்டம்	குதிர்

அரும்பதவுரை

தண்டம் - கோல். மணை - பலகை. செம்மையாக - சரியாக, நன்றாக. இடையில் - மத்தியில்.

பயிற்சி

1. இரு பொருள் கூறு :—செம்மை, தண்டம்.
2. உருவம், சுழலும், சுற்றுவான் - இச்சொற்களைப் பின் வரும் வாக்கியங்களில் உரிய இடத்தில் சேர்த்துப் படி.

யானை பெரிய ——— உடையது.
குயவன் சக்கரத்தைச் ———.
காற்றாடி ———.

கேள்விகள்

1. மண்பாண்டங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன ?
2. மண்பாண்டம் வனைவதற்கு வேண்டிய பொருள்கள் யாவை ?
3. உங்கள் வீட்டில் உள்ள மண்பாண்டங்களைக் கூறு.



4. ஆறு, ஏரி, குளம்

[உரையாடல்]

தகப்பஞர் : இதோ, ஆற்றுக்கு வந்து விட டோம். பாலா! தண்ணீரில் ஆழத்தில் இறங்காதே

பாலன் : இல்லை அப்பா! இறங்கினுல் தண் ணீர் இழுத்துவிடும் என்று தெரியும்.

தகப்பஞர் : பாலா! இந்த ஆறு எந்தத் திசை யிலிருந்து எந்தத் திசையாக ஓடுகிறது?

பாலன் : மேற்கிலிருந்து கிழக்காக ஓடுகிறது

தகப்பஞர் : சரி, ஏன் அப்படி ஓடுகிறது?

கமலா : அப்பா, மேற்கே மேடான இடம் கிழக்கே தாழ்வான இடம்.

தகப்பஞர் : இதஞல் என்ன தெரிகிறது?

கமலா : தண்ணீர் மேடான இடத்திலிருந்து தாழ்வான இடத்திற்கு ஓடும் என்பது தெரிகிறது.

தகப்பனார் : சரி. ஆறுகள் மலையிலிருந்து வரும்பொழுது, கல்லை உடைத்து மணலாகக் கொண்டுவரும். நதிக்கு இரண்டு பக்கங்களிலும் கரைகள் உண்டு. நாம் வலது கரையில் இருக்கிறோம். எதிர்ப் பக்கத்துக் கரை இடது கரை. இந் நதியில் சனங்கள் என்ன செய்கிறார்கள் ? சொல்.

பாலன் : சிலர் குளிக்கிறார்கள். சிலர் கரையில் ஆடைகளைத் துவைக்கிறார்கள். சிலர் குடிப்பதற் குத் தண்ணீர் எடுத்துக்கொண்டு போகிறார்கள்.

கமலா : ஏன் அப்பா, இந்த நீர் காவிவர்ண மாக இருக்கிறது ?

தகப்பனார் : இந்த ஆறு, மலையிலிருந்து வரும்போது வழியிலுள்ள செம்மண்ணைக் கரைத்துக் கொண்டு வருகின்றது. இவ்வாறு கரைந்து வரும் மண் வண்டல் எனப்படும். இந்த வண்டல் நீரை நிலத்திற்குப் பாய்ச்சினால் பயிர் செழிக்கும்.

கமலா : நதி இல்லாத இடங்களில் என்ன செய் வார்கள் ?

தகப்பனார் : ஏரி, குளம், கிணறு இவைகளை உபயோகிப்பார்கள். இன்னும், நதியின் குறுக்கே அணைகட்டி நீரைத் தேக்கி, அத்தேக்கத்திலிருந்து கால்வாய்கள் வெட்டி, அவற்றின் மூலமாய் அதைக் கொண்டு போவார்கள். அந்நீரை ஒரு பெரிய ஏரி யிலோ, குளத்திலோ தேக்குவதும் உண்டு. சில ஏரி

களும், குளங்களும் மழை நீரால் நிரம்பும். குளப் ஏரி இவைகளைச் சுற்றிக் கரை போட்டிருப்பார்கள் தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்ச, அநேக இடா களில் மதகுகள் இருக்கும். நதி, குளம், ஏரி இ நீர் நிலைகளின் கரைகள் உடையாமலிருக்க அடிக்க பழுது பார்க்க வேண்டும்.

மேடான	ஆடை	காவிவர்ணம்
தாழ்வான	துவைக்கிறூர்	கால்வாய்
தேக்குவது	மதகு	வண்டல்

அரும்பதவுரை

தேக்குவது - தங்கி நிற்கச் செய்வது. மதகு - ஏரி முதலிய வற்றிலிருந்து நீர் பாயும் வழி. வர்ணம் - நிறம். பழுத பார்த்தல் - செம்மைப் படுத்தல்.

பயிற்சி

பூ, வா, போ - இவை தனித்தனி எழுத்துக்கள். இவற்றிற் குப் பொருள் உண்டு. பொருளைக் குறிக்கும்போது இவை சொற் கள் எனப்படும். பூ, வா, போ என்பன ஓரெழுத்துச் சொற்கள் பூமி, ஆண்டு, சங்கம் - இவை பல எழுத்துக்களால் ஆகிய சொற்கள். ஆகையால், எழுத்துக்கள் தனித்தாவது தொடர்ந் தாவது பொருளைத் தெரிவித்தால், சொல் அல்லது பதம் எனப் படும்.

கேள்விகள்

1. தண்ணீர் எங்கிருந்து எங்கே ஓடும் ?
2. ஆற்றில் வண்டல் மண் எப்படிச் சேர்கிறது ?
3. நமக்கு நீர் நிலைகளின் உபயோகங்கள் என்ன ?

5. நெற்பயிர்

1. நாம் உண்ணும் ஆகாரத்தில் பெரும்பாகம் சோறு. சோற்றுக்கு அன்னம் என்றும் சாதம் என்றும் பெயர். சோறு எவ்வாறு ஆக்கப்படுகிறது? அரிசியை உலைநீரில் போட்டு வேகவைத்தால் சோறாகும். அரிசி எதிலிருந்து கிடைக்கிறது? நெல்லில் இருந்து கிடைக்கிறது. ஆகையால், நமது உணவுக்கு உபயோகப்படும் பொருள்களில் நெல் முக்கியமானது அல்லவா? அது தானிய வகைகளில் ஒன்று. நெல்லைத் தரும் பயிர் நெற்பயிர் என்று கூறப்படும்.

2. நெல் விளையும் நிலத்துக்கு நன்செய் என்

றும், கம்பு, சோளம் முதலியவை விளையும் நில துக்குப் புன்செய் என்றும் பெயர். ஆகையால், நெ பயிர் நன்செய்ப்பயிர் என்று கூறப்படும்.

3. நெல் விளையும் நிலம் வண்டல்மண் உள் தாக இருக்கவேண்டும். மணற்பாங்கான பூமியிலு சுக்கான் பூமியிலும், களர் நிலத்திலும் நெல் நன்ரு விளையாது. நெற்பயிருக்குத் தண்ணீரும் வெப் மும் மிகுதியாக வேண்டும்.

4. நன்செய் நிலத்தில் முதலில் தண்ணீ பாய்ச்சுவார்கள். சில நாள் சென்றவுடன் ஏரினு உழுவார்கள். தண்ணீர் பாய்ந்த நிலம் நன்ருக ஊற யிருக்கும் அல்லவா ? ஆகையால், இரண்டு மூன்ற முறை உழுதால் நிலம் சேருகிவிடும். பின்பு, அத மட்டமாக இருப்பதற்குப் பரம்படிப்பார்கள். அதன் பிறகு விதை தெளித்து வயலில் உள்ள நீரை வடிய விடுவார்கள். நெல் விதையைத் தெளிப்பதற்கு முன் ஊற வைப்பது உண்டு.

5. நெல் முளைத்துக் குறும்பயிராக இருக்கு போது அதற்கு நாற்று என்று பெயர். நாற்று என் தற்கு 'முளைத்தது' என்று பொருள். நாற்ற முளைத்திருக்கும் நிலத்துக்கு நாற்றங்கால் என்ற பெயர். நாற்று மிகவும் நெருங்கியிருக்கும்.

6. நாற்றைப் பிடுங்கி, நன்ருக உழுத வேற நிலத்தில் சிறிது சிறிது இடம் விட்டு நடுவார்கள் நாற்று அந்த நிலத்தில் நன்ருக வேரூன்றி வளரும் இவ்வாறு வளரும்போது அடிக்கடி தண்ணீர் பாய்ச்

வேண்டும். நெற்பயிர் வளரும் நிலத்தில் புல்லும் வேறு செடிகளும் வளர்வது உண்டு. இவற்றை வளரவிட்டால் நெற்பயிர் நன்முக வளராது. ஆத லால், இவற்றைப் பிடுங்கி எறிவார்கள். இதற்குக் களைபறித்தல் என்று பெயர்.

7. நெற்பயிர் முற்றினவுடன் கதிர்விடும். நெற்கதிரில் நெல் வரிசையாக இருக்கும். கதிர் முற்ற முற்ற, பயிர் பழுத்துச் சாய்ந்துவிடும். ஏன்? நெற் பயிரின் தாள் குழாய் போன்றது; மிகவும் மெல் லியது; அதனால், நெல்மணிகளின் கனம் தாங்கமுடி யாமல் சாய்ந்துவிடுகிறது.

8. பழுத்துச் சாய்ந்த நெற்பயிரைத் தாளோடு அரிந்து சுமை சுமையாகக் கட்டிக் களத்துக்குக் கொண்டுபோய் அடிப்பார்கள். அடிக்கும்போது நெல் வேறாகப் பிரிந்துவிடும். நெல் நீங்கிய தாளுக்கு வைக்கோல் என்று பெயர். வைக்கோலைப் போராகப் போடுவார்கள். நெல்லோடு பதரும் கலந்திருக்கும். உள்ளே அரிசி இல்லாதது பதர்; அரிசி உள்ளது நெல். நெல்லைத் தூற்றி அதிலுள்ள பதரை நீக்கு வார்கள். பின்பு நெல்லை மூட்டை மூட்டையாகக் கட்டி, வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். நெல்லைச் சேர்த்து வைக்கும் இடத்திற்குக் குதிர் என்றும் களஞ்சியம் என்றும் பெயர்.

9. நெல்லில் கார்நெல், குறுவைநெல், சம்பா நெல் எனப் பலவகை உண்டு. இவற்றில், குறுவை இரண்டு மாதத்திலும், கார் மூன்று மாதத்திலும்

விளையும்; சம்பா விளைய ஆறுமாதம் ஆகும். சம்பா அரிசியால் சமைக்கப்படும் சோறே மென்மையாகவும் சுவையுள்ளதாகவும் இருக்கும். ஆகையால், சம்பா நெல் அதிக விலையுள்ளது.

முளை	களை	தாள்	கார்
வடிய	குதிர்	சம்பா	பரம்பு
குறுவை	நாற்று	மட்டம்	நன்செய்
புன்செய்	சுக்கான்	உலை நீர்	களர்நிலம்
களஞ்சியம்	மணற்பாங்கு		

அரும்பதவுரை

செய் - வயல், நிலம். நன்செய் - நல்ல நிலம். புன்செய் - கீழ்த்தரமான நிலம். மட்டமாக - மேடு பள்ளம் இல்லாமல்; சமமாக. களை - பயிருக்கு ஆகாத புல், செடி முதலியன.

பயிற்சி

உனக்குத் தெரிந்துள்ள நன்செய், புன்செய்ப் பயிர்களின் பெயரைக் கீழே உள்ள கட்டத்தில் எழுது.

நன்செய்ப் பயிர்	புன்செய்ப் பயிர்

கேள்விகள்

1. எப்படிப்பட்ட நிலத்தில் நெல் நன்றாக விளையும்?
2. நெல் பயிரிடுவோர் நிலத்தில் செய்யவேண்டிய வேலைகள் என்ன?
3. நெல்லில் பலவகை யாவை?

6. மாணவர்களின் கடமைகள்

1. படிக்கின்ற பிள்ளைகாள், நீங்கள்—நாளும்
விடுக்காமற் செய்கடன் விளம்புவேன் கேளீர்.

2. விடியும்போ தெழுந்திட வேண்டும்–கடவுள்
அடிகளை அன்புடன் துதிசெய்ய வேண்டும்.

3. காலைக் கடன்செய்ய வேண்டும்–வீட்டு
வேலைகள் செய்து படித்திட வேண்டும்.

4. தேய்த்துக் குளித்திட வேண்டும்–நன்கு
தோய்த்த உடைகள் உடுத்திட வேண்டும்.

5. உள்ளதை உண்டிட வேண்டும்–உங்கள்
பள்ளிக்குப் பாங்குடன் சென்றிட வேண்டும்.

6. நேரத்தில் வகுப்புற வேண்டும்–ஆசான்
கூறிய வற்றைக் குறிக்கொள்ள வேண்டும்.

7. பாடத்திற் கருத்துற வேண்டும்–உங்கள்
கூடப் படிப்போ ரிடத்தன்பு வேண்டும்.

6. விட்டபின் வீடுற வேண்டும்–மாலைத்
தட்டில்லா மல்விளை யாடிட வேண்டும்.

9. மாலைக் கடன் ஆற்ற வேண்டும்–தீபம்
சாலவே ஏற்றி முன் உட்கார வேண்டும்.

10. ஊன்றிப் படித்திட வேண்டும்–வருத்தம்
தோன்றினும் சோராமல் பயின்றிட வேண்டும்.

11. உணவுகொண் டுலவிட வேண்டும்—இறையைப்
பணிவாகத் துதித்துப் படுத்திட வேண்டும்.

12. விடியும்போ தெழுந்திட வேண்டும்—கடவுள்
அடிகளை அன்புடன் துதிசெய்ய வேண்டும்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

உற	சாலவே	சோராமல்	இறை
தீபம்	ஆசான்	உலவிடல்	நாட்கடன்
ஆற்ற	விளம்பு	அடிகளை	பாங்குடன்
தேய்	மாணவர்	துதிசெய்	குறிக்கொள்ளல்
தோய்	பணிவாக		

அரும்பதவுரை

நாட்கடன் - தினசரி வேலை. விளம்பு - சொல்லு. அடி - பாதம். இறை - கடவுள். பணிவாக - வணக்கமாக. சோராமல் - களைக்காமல். ஆசான் - உபாத்தியாயர், குரு. ஊன்றி - கருத்தாக, கவனமாக. ஆற்ற - செய்ய. கடன் - தவறுமல் செய்ய வேண்டிய காரியம். விடுக்காமல் - விடாமல். செய்கடன் - செய்ய வேண்டிய காரியம். சால - நன்ருக. தட்டில்லாமல் - தடையில்லாமல்.

பயிற்சி

தேய், தோய். காலை, காளை. பணி, பனி.—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

கேள்விகள்

1. காலையில் எழுந்ததும் செய்யவேண்டிய வேலைகள் யாவை? மாலையில் செய்யவேண்டிய வேலைகள் யாவை?
2. பாடங்களை எவ்வாறு படித்துப் பயிலவேண்டும்?
3. கூடப் படிப்போரிடத்தில் எப்படி இருக்கவேண்டும்?

7. அறிவுள்ள ஒரு முயல்

1. ஒரு காட்டில் ஒரு சிங்கம் வசித்து வந்தது. சிங்கம் மாமிச பட்சிணி. ஆதலால், அது தனக்கு இரையாக மற்ற மிருகங்களை அடித்துக் கொன்று தின்னும். ஆனால், அந்தச் சிங்கம் தனக்கு வேண்டிய இரைக்குத் தக்கபடி மிருகங்களைக் கொல்வதில்லை; தன் எதிரில் தோன்றிய மிருகங்களை யெல்லாம் அடித்துக் கொன்று விடும்.

2. இவ்வாறு அது தினந்தோறும் பல மிருகங்களைக் கொன்று வந்தது. இதைக் கண்ட மற்ற மிருகங்கள் பயத்தால் நடுங்கின. அவைகளுக்கு என்ன செய்வதென்று விளங்கவில்லை. கடைசியாக அவைகள் ஒரு கூட்டம் கூடித் தமக்குள் முறைவைத்துக்

கொண்டு ' ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்ருகச் சிங்கத் திற்கு இரையாவது ' என்று தீர்மானித்தன.

3. உடனே, அவைகள் ஒன்று சேர்ந்து சிங்கத் தினிடம் சென்று " மிருகேந்திரனே, நீ நாள்தோறும் கணக்கில்லாத மிருகங்களைக் கொல்லுகிருய். அத ஞல், காட்டிலுள்ள மிருகங்கள் எல்லாம் விரைவில் அழிந்துவிடும். கொஞ்ச நாளில் உனக்கும் இரைக்குப் பஞ்சம் வந்துவிடும். ஆதலால், நாங்கள் ஒரு முடிவு செய்திருக்கிறோம். நீ எங்களைக் கொல்லாதிருந்தால் நாங்களே ஒரு நாளைக்கு ஒருவராக வந்து உனக்கு இரையாவோம்," என்றன.

4. இந்த ஏற்பாட்டிற்குச் சிங்கமும் சம்மதித் தது. இதன்படியே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மிருகம் சிங்கத்திற்கு இரையாகி வந்தது.

5. ஒரு நாள் ஒரு கிழ முயலின் முறை வந்தது. அன்று மற்ற மிருகங்கள் கிழ முயலிடம் சென்று, " இன்று உன் முறை. நீ காலதாமதம் செய்யாமல் சிங்கத்தினிடம் சென்று இரையாகவேண்டும்," என்று கூறின. அதைக் கேட்ட கிழ முயல் முதலில் கொஞ் சம் வருத்தம் அடைந்தது. ஆயினும், அது ஒரு உபாயத்தால் சிங்கத்தை வெல்லலாம் என்று எண் ணிக் காலதாமதம் செய்தது. அன்று வழக்கம்போல் சரியான வேளையில் ஒரு மிருகமும் வராமையால் சிங்கம் மிகுந்த கோபங் கொண்டிருந்தது.

6. அப்பொழுது முயல் பதுங்கிப் பதுங்கிச் சிங்கத்தினிடம் சென்றது. அதைக் கண்ட சிங்கம்

கோபத்துடன், "இன்று உன் முறையா?" என்று கேட்டது. முயல் நடுங்கிக் கொண்டே, "ஆமாம்; ஆண்டவனே," என்றது. உடனே சிங்கம், "நீ ஏன் என் பசி வேளைக்கு வராமல் நேரங் கழித்து வந்தாய்?" என்றது. முயல், "ஐயனே, நான் உங்கள் பசிவேளைக்கு முன்பே வந்துகொண்டிருந்தேன். வழியில் வேறொரு சிங்கம் வந்தது. அதைக் கண்டு பயந்து ஒரு புதரில் பதுங்கி யிருந்தேன். அது போயின பின்பே நான் வெளிப்பட்டு இங்கு வந்தேன். அதனால் நேரம் ஆகிவிட்டது. அதற்காக என்னை மன்னிக்க வேண்டும்," என்றது.

7. அதைக் கேட்டவுடன் சிங்கம் கடுங்கோபம் கொண்டு, "என்னைத் தவிர இந்தக் காட்டில் வேறொரு சிங்கமும் இருக்கிறதா? அதை நீ எனக்குக் காட்டு வாயா?" என்றது. முயல், "ஆமாம், அரசே! நான் வேறொரு சிங்கத்தைக் கண்டேன். அது இருக்கும் இடமும் எனக்குத் தெரியும். நீங்கள் என்னுடன் வந்தால் நான் அதை உங்களுக்குக் காட்டுவேன்," என்றது. சிங்கம், "இதோ வருகிறேன். அந்தச் சிங்கத்தைக் காட்டு," என்று கூறிப் புறப்பட்டது.

8. முயல் சிங்கத்தை அழைத்துச் சென்று சேறும் நீரும் உள்ள ஒரு கிணற்றைக் காட்டி, "அந்தச் சிங்கம் இதனுள்ளே தான் இருக்கிறது," என்றது. உடனே, சிங்கம் எட்டிப் பார்த்தது. கிணற்று நீரில் அதன் உருவம் தெரிந்தது. அது அவ்வுருவத்தை வேறொரு சிங்கம் என்று நினைத்து, அதைக்

கொல்லுவதற்காகக் கடுங்கோபத்துடன் அதன்மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது.

9. கிணற்றில் சேறு மிகுதியாக இருந்ததனுல் சிங்கம் அதில் அமுந்தி மேலே ஏறிவர முடியாமல் சில நாள் இருந்து அங்கேயே இறந்தது. இதை அறிந்த மற்ற மிருகங்கள் அதிக மகிழ்ச்சி யடைந்தன; தங்களைச் சிங்கத்தினிடமிருந்து காப்பாற்றிய முயலைக் கொண்டாடின.

10. சிங்கம் முயலைவிட எத்தனையோ மடங்கு பலமுள்ளது; உருவத்திலும் மிகப் பெரியது. ஆயினும், முயலின் தந்திரத்தால் கிணற்றில் விழுந்து உயிரிழந்தது. ஏன்? அதன் அறிவின்மையால் அல்லவா?

'புத்திமான் பலவான் ஆவான்'

முறை	நேரம்	கடுங்கோபம்
இரை	தக்கபடி	பாய்ச்சலாக
முடிபு	நடுங்கின	கொண்டாடின
பஞ்சம்	மன்னித்தல்	தீர்மானித்தன
பதுங்கி	தினந்தோறும்	மாமிச பட்சிணி
உபாயம்	விளங்கவில்லை	

அருஞ்சொற்பதவுரை

முறை - வரிசை, ஒழுங்கு. பஞ்சம் - உணவு கிடைக்காமை. உபாயம் - தந்திரம். தீர்மானித்தன - முடிவு செய்தன. தீர்மானம் - முடிவு. மாமிச பட்சிணி - மாமிசம் தின்னும் பிராணி.

பயிற்சி

கூட்டமாக, சிங்கம், உபாயத்தால், தினந்தோறும், இரை - இச்சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் ஏற்றவாறு சேர்த்துப் படி.

1. கிழ முயல் சிங்கத்தை —— கொன்றது.
2. பூனைக்கு எலி ——.
3. சந்தையில் —— இருக்கும்.
4. —— காட்டில் வாழும்.
5. —— பாடம் படி.

கேள்விகள்

1. மிருகேந்திரன் என்று எதற்குப் பெயர் ?
2. கிழமுயல் சிங்கத்தைப் பார்த்து என்ன சொல்லிற்று ?
3. சிங்கம் ஏன் கிணற்றில் குதித்தது ?
4. இக்கதையால் விளங்கும் நீதி என்ன ?



8. நாய்

1. பூனை, நாய் முதலிய மிருகங்களை நாம் வீட்டில் வளர்க்கலாம். அதனால், அவைகளுக்கு வீட்டு மிருகங்கள் என்று பெயர். சிங்கம், புலி முதலிய மிருகங்கள் வீட்டில் வளர்க்கக் கூடாதவை. அவை காட்டில் வசிக்கும். அதனால், அவைகளுக்குக் காட்டு மிருகங்கள் என்று பெயர்.

2. நாய் வீட்டு மிருகங்களில் ஒன்று. அதற்கு நீண்ட உடலும், மெலிந்த கால்களும், மடிந்த காதுகளும், வளைந்த வாலும் உண்டு. அதன் மார்பு உயர்ந்தும் வயிறு குறுகியும் இருக்கும். அதன் முகம் கூர்மையானது.

3. நாய் தண்ணீர் குடிக்கும்போது நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது ஆடுமாடுகளைப்போல்

உறிஞ்சிக் குடிப்பதில்லை; நாக்கினால் நக்கிக் குடிக்கிறது. ஏன்? அதன் மூக்குத் துவாரங்கள் வாயின் பக்கத்தில் இருக்கின்றன. அது உறிஞ்சிக் குடித்தால் தண்ணீர் மூக்கில் ஏறிவிடும். அதனால்தான் நாய் தண்ணீரை நக்கிக் குடிக்கின்றது.

4. நாயின் முன் கால்களில் நான்கு விரல்களும் பின் கால்களில் ஐந்து விரல்களும் உண்டு. விரலின் நுனியில் கூர்மையான பெரிய நகம் உண்டு. ஆயினும் நாய் நடக்கும்போது நகம் பூமியில் படுவதால் தேய்ந்து மழுங்கி விடுகிறது.

5. நாய் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குப் போகவேண்டுமானால் நடந்து செல்லாது; ஓடும். ஏன்? அதன் தேகம் அதிக கனமில்லாமலும் கால்கள் உயரமாகவும் இருப்பதனால் அதற்கு ஓடுதல் எளிதாக இருக்கிறது.

6. அது நீண்டதூரம் போகும்போது நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டே ஓடும். அப்பொழுது அதன் நாக்கிலிருந்து நீர் சொட்டுச் சொட்டாக விழும். ஏன் இவ்வாறு நீர் சொட்டுகிறது? நாம் வேகமாய்ச் சென்றால் நமது உடம்பில் வியர்வை உண்டாகிறதல்லவா? அவ்வாறே நாய் ஓடும்போது அதற்கு வியர்வை உண்டாகிறது.. ஆனால், வியர்வை நீர் அதன் உடலில் தோன்றுவதில்லை; நாக்கின் வழியாக வெளிவருகிறது. அதனால்தான் அதன் நாக்கிலிருந்து நீர் சொட்டுகிறது.

7. நாயின் நாக்கு மிகவும் மெலிந்தும் வழவழப்

பாகவும் இருக்கும். அதன் பற்கள் கூர்மையானவை. முன்வாய்ப் பற்களில் மேல் வரிசையில் இரண்டும், கீழ் வரிசையில் இரண்டும் மிகவும் கூர்மையாகவும் சிறிது நீண்டும் வளைந்தும் இருக்கும். நாய் கடிக்கும் போது இந்தப் பற்கள் அழுந்துவதனுல்தான் பலத்த காயம் உண்டாகிறது.

8. நாயின் முக்கியமான ஆகாரம் மாமிசம். ஆயினும், அது சோற்றையும் தின்னும். எச்சில் இலைகளில் உள்ள சோற்றைத் தின்பதற்கு நாய்கள் ஒன்ருேடொன்று சண்டையிட்டுக் கொள்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நாய்க்கு எலும்பைக் கடிப்பதில் மிகவும் பிரியம். அதனுலேயே, ‘கடிக்க வரும் நாய்க்கு எலும்பைப் போடு’ என்னும் பழமொழி உண்டாயிற்று. நாய்க்குச் சந்தோஷம் உண்டாகும் போது தன் வாலை ஆட்டும்; கோபம் வந்தால் பல்லைக் காட்டி உறுமும்.

9. நாயைச் சிலர் விளையாட்டுக்காக வளர்க்கிருர்கள்; சிலர் தங்கள் வீட்டைக் காப்பதற்காக வளர்க்கிருர்கள்; சிலர் மந்தையைக் காப்பதற்காக வளர்க்கிருர்கள்; சிலர் வேட்டையாடுவதற்கு உதவியாக வளர்க்கிருர்கள். நாய் தன்னை வளர்ப்பவரிடம் மிகவும் விசுவாசமாக இருக்கும்; வளர்ப்பவன் தன்னை அடித்தபோதிலும் தன் வாலை ஆட்டி அன்பைக் காட்டும்.

நக்கி	உறுமும்	விசுவாசம்
மடிந்த	வியர்வை	வழவழப்பு
உறிஞ்சி	வேட்டை	வீட்டுமிருகம்
சொட்டு	தேய்ந்து	காட்டுமிருகம்

அரும்பதவுரை

விசுவாசம் - நன்றி மறவாமை. சொட்டு - துளி. எளிதாக - சுலபமாக.

பயிற்சி

(1) அவர் என்பது ஒரு சொல். அ, வ, ர் என்பன தனித் தனி எழுத்துக்கள். இம்மாதிரியே வீடு, தமிழ், விருந்து, வழக்கம் என்ற சொற்களிலுள்ள எழுத்துக்களைத் தனித்தனியே எடுத்துக் கூறு.

(2) மன்தனி   ஊைதன்   ன்றேகிடுவி

இவ்வெழுத்துக்களைச் சரியான வரிசையில் கூட்டிச் சொற் களாகச் சொல்.

கேள்விகள்

1. நாயிடத்தில் உள்ள சிறந்த குணம் என்ன?
2. நாயினுல் நமக்கு என்ன உபயோகம்?
3. நாய் எப்போது வாலை ஆட்டும்? கோபம் வந்தால் என்ன செய்யும்?

9. ஓநாயும் கழுதையும்

படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லு :



குறிப்பு : (1) ஒரு கழுதை தன்னை ஒரு ஓநாய் தாக்க வருதலைப் பார்த்தல். (2) கழுதை நொண்டி நடத்தல். (3) ஓநாய் கழுதை நொண்டுவதேன் எனக் கேட்டல். (4) கழுதை தன் பின்னங்கால் காயமடைந்திருப்பதாகக் கூறல். (5) அதைப் பார்ப்பதற்கு ஓநாய் கழுதையின் பின்னங்காலருகே செல்லுதல். (6) கழுதை ஓநாய்க்குப் பலமாக ஒரு உதை கொடுத்துவிட்டு ஓடுதல்.

10. தண்ணீர்

1. நாம் உலகத்தில் உயிரோடு வாழ்வதற்குச் சில பொருள்கள் முக்கியமானவை. நாம் சுவாசிப்பதற்குக் காற்று வேண்டும்; குடிப்பதற்குத் தண்ணீர் வேண்டும் ; உண்பதற்கு உணவு வேண்டும் ; உடுப்பதற்கு உடை வேண்டும்; வசிப்பதற்கு இடம் வேண்டும்.

இவற்றுள், நமக்குப் பலவகையிலும் உதவியாக இருப்பது எது? தண்ணீர் அல்லவா? தண்ணீர் பருகவும் சமையல் செய்யவும் உதவுகிறது. தண்ணீர் இல்லாவிட்டால் நமது உடையையும் உடம்பையும் சுத்தமாக வைத்துக்கொள்ள முடியுமா? பயிர் பச்சைகள் சாகுபடி செய்ய முடியுமா? முடியாது.

3. இவ்வளவு உபயோகமுள்ள தண்ணீர் நமக்கு எங்கிருந்து கிடைக்கிறது? ஆறு, குளம், குட்டை, கிணறு இவற்றிலிருந்து கிடைக்கிறது. சில ஊர்களில் குழாய்களிலிருந்தும் தண்ணீர் கிடைக்கும். இந்தக் குழாய்களில் வரும் தண்ணீரும் பெரிய கிணறுகள் அல்லது குளங்களிலிருந்தே வருகிறது. ஆனால் இவைகளில் எல்லாம் தண்ணீர் எப்படி வந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? இவற்றிலெல்லாம் தண்ணீர் இருப்பதற்கு மழைதான் காரணம். மழை இல்லாவிட்டால் ஒன்றிலும் தண்ணீர் இராது ; தானியங்கள் விளையா ; எங்கும் பஞ்சம் உண்டாகிவிடும்.

4. இம்மழை எவ்வாறு உண்டாகிறது என்று பார்ப்போம். கொஞ்சம் தண்ணீரை ஒரு கருங்கல்லில் தெளியுங்கள். சிறிது நேரம் கழித்து அங்குப் பார்த்தால் தண்ணீர் அப்படியே இருக்குமா? ஆடையைத் தோய்த்துப் பிழியும்போது ஆடை ஈரமாக இருக்கிறது. ஏன்? ஆடையில் தண்ணீர் இருப்பதனுல் அல்லவா? ஆடை காய்ந்தவுடன் தொட்டுப் பார்த்தால் ஈரம் தோன்றுகிறதா?

5. கல்லில் தெளித்த நீரும் ஆடையிலிருந்த நீரும் எங்கே போயிற்று? அவைகளிலிருந்த நீர் சூரியனுடைய வெப்பத்தால் ஆவியாக மாறிவிட்டது. சூரிய வெப்பம் காற்ருேடு கலந்திருக்கிறது. அதனுல் காற்றடித்தாலும் ஈரம் உலர்ந்து போகிறது. ஆகையால், நீர் சூரியவெப்பத்தால் ஆவியாக மாறும் என்று தெரிகிறது அல்லவா? இந்த ஆவிக்கு நீராவி என்று பெயர்.

6. கொதிக்கும் நீருக்குமேலே ஒரு கற்பலகையைப் பிடியுங்கள். சிறிது நேரத்தில் கற்பலகையில் சிறு நீர்த்துளிகளைக் காண்பீர்கள். இந்த நீர்த்துளிகள் எங்கிருந்து வந்தன? கொதிக்கும் நீரிலிருந்து உண்டான நீராவியே கற்பலகையில் படிந்து அதில் உள்ள குளிர்ச்சியால் நீர்த்துளிகளாக மாறிற்று. இதனுல் நீராவி குளிர்ந்தால் நீராக மாறும் என்று தெரிந்து கொள்ளுகிருேம்.

7. நீராவியை நாம் கண்ணுல் காணமுடியாது. ஆயினும், அது மிகவும் நுட்பமான நீர்த் துளிகளாக

இருக்கும்போது நாம் காணலாம். அடுப்பில் தண்ணீர் காயும்போதும், சோறு மிகவும் சூடாக இருக்கும் போதும் புகைபோல 'ஆவி' வருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். வெந்நீரிலும் சுடு சோற்றிலும் உண்டாகும் நீராவியே இவ்வாறு சிறு நீர்த்துளி களாகிப் புகைபோல் கண்ணுக்குத் தெரிகிறது.

8. சூரியன் பெரிய நெருப்பு உருண்டை என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? சூரிய வெப்பத்தால் சமுத்திரம், ஆறு முதலியவற்றில் உள்ள நீர் ஆவி யாகிக் கொண்டே இருக்கிறது. நீராவி காற்றைவிட இலேசானது; ஆகையால், மேலே செல்லுகிறது. மேலே சென்ற நீராவி குளிர்காற்றுப் பட்டவுடன் சிறு நீர்த்துளிகளாக மாறி ஒன்ருகச் சேருகிறது. அதைத் தான் நாம் மேகம் என்கிரும்.

9. மேகமும் காற்றைவிட இலேசானது. ஆத லால், அது ஆகாயத்தில் மிதக்கிறது; காற்று வீசுவ தனுல் பல திசைகளிலும் செல்லுகிறது; அவ்வாறு செல்லும்போது மிகுந்த குளிர்காற்றுப் பட்டவுடன் பெரிய நீர்த்துளிகளாகிக் கம்பிகள்போலக் கீழே விழுகிறது. அதுதான் மழை.

10. மழை பெய்யாவிட்டால் உலகத்தில் தண் ணீரே கிடைக்காது. ' தண்ணீர் இல்லாவிட்டால் மனி தர்களும் மற்றப் பிராணிகளும் உயிரோடு வாழ முடியாது; பயிர் பச்சைகள் விளையா. அதனுல்தான் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து முக்கியமான பொருள்களில் தண்ணீரையும்

ஒன்ருகச் சேர்த்திருக்கிறர்கள். இந்த ஐந்து பொருள் களுக்கும் **பஞ்சபூதங்கள்** என்று பெயர்.

உடு	ஆடை	இலேசு	கற்பலகை
பிழி	கம்பி	உலகம்	சமுத்திரம்
துளி	பருகு	நுட்பம்	பஞ்சபூதம்
ஆவி	குழாய்	சாகுபடி	பயிர்பச்சை
தோய்	மேகம்	காய்தல்	குளிர்காற்று
புகை			

அரும்பதவுரை

பஞ்சபூதம் - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பெரும்பொருள். பருகு - குடி. பஞ்சம் - உணவுப் பொருள் இல்லாமை. நுட்பமான - மிகச் சிறிய.

எதிர்ப்பதங்கள்

வெந்நீர் × தண்ணீர். வெப்பம் × குளிர்ச்சி. இலேசு × கனம்.

பயிற்சி

பொருத்தமாகச் சேர்த்துப் படி :

தண்ணீருக்குக் காரணம்	இலேசானது.
மழை இல்லாவிட்டால்	மழையாகப் பெய்கிறது.
நீராவி	மழை.
மேகமே	தானியங்கள் விளையா.

கேள்விகள்

1. நாம் உயிரோடு வாழ்வதற்கு வேண்டிய முக்கியமான மூன்று பொருள்கள் யாவை ?
2. பஞ்சபூதங்கள் என்பன யாவை ?
3. நீராவி என்ருல் என்ன ? மேகம் என்பது யாது?
4. மேகம் எப்பொழுது மழையாகப் பெய்யும்?
5. தண்ணீர் நமக்கு என்னென்ன விதங்களில் உபயோகப் படுகிறது ?

11. தமிழ் நாடு

1. காவிரி தென்பெண்ணை பாலாறு தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—என
மேவிய யாறு பலவோ டத்திரு
மேனி செழித்த தமிழ் நாடு.

2. முத்தமிழ் மாமுனி நீள்வரை யேநின்று
மொய்ம்புறக் காக்கும் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை உண்டு புவிமீதே அவை
யாவும் படைத்த தமிழ் நாடு.

3. கல்வி சிறந்த தமிழ் நாடு புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு.

4. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

—பாரதியார்

புவி	மேனி	மேவிய	வான்புகழ்
வரை	மணி	மாமுனி	மொய்ம்புற
பார்	ஆரம்	சாத்திரம்	முத்தமிழ்

அரும்பதவுரை

பொருனை - தாமிரபர்ணி. யாறு - ஆறு. முத்தமிழ் மாமுனி - அகத்தியர். வரை - பொதியமலை. மொய்ம்பு - வலிமை அல்லது செழுமை. வள்ளுவர் - திருவள்ளுவர். மணி ஆரம் - முத்து மாலை.

பயிற்சி

கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற சொற்களை வைத்துப் படி.

1. நாம் பேசும் ——— தமிழ்.
2. நாம் வசிப்பது ——— ———.
3. திருவள்ளுவர் ஒரு ——— ———.

கேள்விகள்

1. இப்பாட்டில் வரும் மலைகள், ஆறுகள் இவற்றின் பெயர்களைக் கூறு.
2. தமிழ் நாட்டில் பிறந்த சிறந்த புலவர்கள் யார் ?
3. பாரதியார் மணியாரம் என்று எதைப் புகழ்கிறார் ?



12. கோழி

1. கோழி என்பது வீட்டில் வளர்க்கக் கூடிய ஒரு பறவை. நீரில் வசிக்கும் ஒருவகைக் கோழி உண்டு. அதற்கு நீர்க்கோழி என்று பெயர். காட்டி லும் கோழி வசிக்கும். அதற்குக் காட்டுக் கோழி என்று பெயர். காட்டில் வசிக்கும் கோழிக்குக் கானக்கோழி என்றும் பெயர் வழங்குகிறது. வான் கோழி, நெருப்புக்கோழி என வேறு சில வகைக் கோழிகளும் உண்டு.

2. கோழியின் உடல் முழுவதும் இறகுகள் ஒன்றன்மேல் ஒன்றாக மூடியிருக்கும். அதற்கு இரண்டு இறக்கைகள் உண்டு. இறக்கைகளுக்குச் சிறகுகள் என்று பெயர். சிறகில் பல இறகுகள் உண்டு. இவை ஒன்றன்மேல் ஒன்றாக இருப்பதால் சிறகை விரிக்கும்போது அது ஒரு விசிறிபோல் தோன்றும். பிற பறவைகளை விடக் கோழி கன

மானது. ஆகையால், அதனால் அதிக உயரம் பறக்க முடியாது.

3. கோழியின் அலகுகள் மிகவும் குட்டையாக இருக்கும். மேல் அலகின் அடிப்புறத்தில் சிறிய மூக்குத் துவாரங்கள் உண்டு. கோழிக்கு வெளிக் காதுகள் இல்லை ; ஆனால் சிறிய காதுத் துவாரங்கள் மட்டும் உண்டு. இவை மெல்லிய இறகுகளால் மூடப் பட்டிருக்கும்.

4. கோழியின் பாதத்தில் உள்ள விரல்கள் முன்னால் மூன்றும் பின்னால் ஒன்றுமாக அமைந் திருக்கும். விரல்களின் நுனியில் உறுதியான வளைந்த நகங்கள் உண்டு. அந்த நகங்களால் தான் கோழி குப்பைகளைச் சீச்கிறது.

5. கோழியின் ஆகாரம் பூச்சி, புழு முதலி யவை. அது நெல் முதலிய தானியங்களையும் தின் னும். கோழி வளர்ப்பவர்கள் பிசைந்த தவிட்டையும் கொத்தின மாமிசத்தையும் அதற்கு உணவாக வைப் பார்கள்.

6. ஆண் கோழிக்குச் சேவல் என்றும் பெண் கோழிக்குப் பெட்டை என்றும் பெயர்.

7. சேவல் பார்வைக்கு மிகவும் அழகாய் இருக்கும். அதன் தலையில் சிவப்பு நிறமுள்ள சீப்புப் போன்ற சதை உண்டு. அதற்குக் கொண்டை என்று பெயர். அதன் வாயின் அடிப்புறத்தில் தாடைகள் தொங்கும். அவைகளும் சிவப்பு நிறம் உடையவை. சேவலின் வாலில் உள்ள இறகுகள்

நீண்டு வளைந்திருக்கும். அவை நீலநிறம் உள்ளவை; மிகவும் அழகாக இருக்கும்.

8. சேவல் விடியற்காலையில் கூவும். அது ஒவ்வொரு நாளும் சிறிதும் தவறுமல் ஒரே நேரத்தில் கூவுதல் மிகவும் வியக்கத்தக்க செய்தியாகும். கோழி கூவினவுடனே கிராமத்து மக்கள் எழுந்திருந்து தங்கள் தங்கள் வேலைக்குப் போவார்கள்.

9. பெட்டை சேவலைவிடக் குட்டையாக இருக்கும். அதன் கொண்டையும் வால் இறகும் மிகவும் குட்டையானவை. அதன் கால்களும் குறுகியவை.

10. பெட்டைக் கோழி தினம் ஒரு முட்டை யாகச் சுமார் இருபது முட்டைகள் இடும். கோழி வளப்பவர்கள் இந்த முட்டைகளைச் சேர்த்து வைப் பார்கள். பெட்டை முட்டையிடுதல் ஒய்ந்தவுடன் கொக்-கொக்-கொக் என்று கத்திக்கொண்டிருக்கும். இதற்குக் கொக்கரித்தல் என்று பெயர். அப்பொழுது முட்டைகளை எல்லாம் ஒரு கூடையில் பரப்பி அவற்றின்மேல் அந்தக் கோழியை உட்காரவைப் பார்கள். கோழியும் ஆவலோடு தன் இறகுகளால் முட்டைகளை மூடிக்கொண்டு அவற்றின்மேல் உட் கார்ந்திருக்கும். இதற்குத்தான் அடைகாத்தல் என்று பெயர்.

11. பெட்டைக்கோழி ஏறத்தாழ இருபது நாள் அடைகாக்கும். இதற்குள் முட்டையில் உள்ள கரு குஞ்சாகி வளர்ந்திருக்கும். அப்பொழுது கோழி

தன் அலகிஞல் முட்டைகளைக் கொத்தி உடைக்கும். உடனே குஞ்சுகள் வெளிவரும்.

12. பெட்டை தன் குஞ்சுகளை மிகவும் கவன மாகப் பாதுகாக்கும். கோழிக் குஞ்சுகள் மேய்ந்து கொண்டிருக்கும்போது பருந்து முதலிய பறவைகள் அவற்றின்மேல் பாய்ந்து கால்களால் பிடித்துக் கொண்டுபோவது உண்டு. அவ்வாறு பிடிக்க வருவ தைக் கோழி பார்த்தால் உடனே கொக்கரித்துக் குஞ்சு களைப் பக்கத்தில் வருவித்து அவற்றைத் தன் சிறகு களால் மூடிக்கொள்ளும்.

இறகு	தாடை	கொத்துதல்
சிறகு	பருந்து	கொக்கரித்தல்
அலகு	பற்றுதல்	குறுகியவை
கானம்	கிளம்புதல்	அடைகாத்தல்

அரும்பதவுரை

கிளம்புதல் - எழும்புதல். பற்றிக்கொண்டு - பிடித்துக் கொண்டு. ஆவல் - ஆசை.

பயிற்சி

1. கோழி என்பது ஒரு பிராணியின் பெயர். வீடு என்பது ஒரு இடத்தின் பெயர். அலகு என்பது ஒரு உறுப்பின் பெயர்.— இம்மாதிரி, பெயர்களைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப் படும்.

2. கோடுகள் உள்ள இடங்களில் ஏற்ற பெயர்ச் சொற்களை அமைத்துப் படி :

நான் ——— வளர்க்கிறேன்.

சேவலின் ——— கொண்டை உண்டு.

——— விளையாடுகிருன்.

——— அழுகிறது.

உபாத்தியாயர் ——— இருக்கிருர்.

கேள்விகள்

1. கோழியில் பல வகைகள் யாவை?
2. சிலர் சேவலை எதற்காக வளர்க்கிருர்கள்?
3. சேவலிடத்தில் உள்ள ஒரு வியக்கத்தக்க செய்கை என்ன?
4. கோழியின் விரல்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன?
5. அடைகாத்தல் என்ருல் என்ன?

13. வாசுகியம்மையார்

1. முற்காலத்தில் நமது தமிழ் நாட்டில் கல்வியில் தேர்ச்சி பெற்ற பல புலவர்கள் இருந்தார்கள். அவர்களுள் திருவள்ளுவர் மிகச் சிறந்தவர்.

2. திருவள்ளுவர் நமது தாய் மொழியாகிய தமிழில் ஒரு சிறந்த நூல் இயற்றினர். அதுதான் திருக்குறள் என்பது. அதனை நீங்கள் மேல் வகுப்பில் படிப்பீர்கள். திருக்குறள் மிக உயர்ந்த நூல். அதில் மக்கள் அறிய வேண்டிய எல்லாப் பொருள்களும் கூறப்பட்டுள்ளன. அதன் உயர்வை அறிந்த மேல் நாட்டார் அதனைத் தமது மொழியில் மொழி பெயர்த்துப் படித்துவருகின்றனர்.

3. சிறந்த புலவராகிய திருவள்ளுவர் நெசவுத் தொழிலையே மேலானது என்று கருதினர். அதனல், அத்தொழிலையே செய்து அதனல் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்துவந்தனர்.

4. அத்தகைய திருவள்ளுவருடைய மனைவியின் பெயரே வாசுகி அம்மையார். வாசுகியம்மை மிகச் சிறந்த பெண்மணி; கணவன் குறிப்பறிந்து ஒழுகுபவர்; கணவனுக்குச் செய்ய வேண்டிய பணிவிடையைத் தவருது செய்பவர்; நற்குணம் வாய்ந்தவர்; கற்பிற் சிறந்தவர். இத்தகைய மனைவியோடு திருவள்ளுவர் இல்லறத்தை மேற்கொண்டு இனிது வாழ்ந்து வந்தனர்.

5. வாசுகியம்மையாரது கற்பின் மேன்மையை அறியும் முனிவர்களும் அவரைப் போற்றுவார்கள். இதற்கு ஆதரவாக ஒரு வரலாறும் உண்டு.

6. ஒரு காட்டில் கொங்கணவர் என்ற பெயருள்ள ஒரு முனிவர் தவம் செய்துவந்தார். அவர் சில நாட்களில் உணவின் பொருட்டு ஊருக்குள் வந்து சில வீடுகளில் பிச்சைகேட்டு உணவு பெற்றுச் செல்வார்.

7. அம்முனிவர் ஒருநாள் காட்டைவிட்டு நாட்டுக்கு வந்தார். வரும் வழியில் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு கொக்கு அவர்மேல் எச்சம் இட்டது. உடனே, அவர் கோபங்கொண்டு மேலே பார்த்தார். அவர் பார்வையினாலேயே கொக்கு எரிந்து சாம்பலாயிற்று. பின்பு அவர் ஊருக்குள் வந்து வாசுகி அம்மையார் மனையை அடைந்து பிச்சை கேட்டார்.

8. அப்பொழுது அம்மையார் தம் கணவனாருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தார். ஆதலால், முனிவர் குரல் கேட்டவுடனேயே வராமல் சற்றுத் தாமதித்துப் பிச்சையிட வந்தனர். அதனால் முனிவர் கோபங்கொண்டு அம்மையாரை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தனர்.

9. உடனே வாசுகியம்மையார் அவரது செருக்கை அடக்க எண்ணிக் "கொக்கென்று நினைத்தனையோ, கொங்கணவா?" என்று கூறினர். அதைக் கேட்ட கொங்கணவர் திடுக்கிட்டார்; 'காட்டிலிருந்து

வரும் வழியில் நடந்த நிகழ்ச்சியை அம்மையார் வீட்டிலிருந்தே அறிந்து கொண்டதோடு வேறொரு வருக்கும் தெரியாத நமது பெயரையும் தெரிந்து கொண்டாரே !' என்று பெருவியப்படைந்தார். அத் தகைய சக்தி அம்மையாருக்கு உண்டானது அவரது கற்பினாலேயே என்றறிந்து பாராட்டினார். கடைசி யாக முனிவர் வாசுகி அம்மையாரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவரிட்ட பிச்சையைப் பெற்றுத் தம் இருப்பிடம் சென்றார்.

மொழி	ஊதியம்	ஏற இறங்க
தவம்	நிகழ்ச்சி	இல்லறம்
பிச்சை	வரலாறு	இருப்பிடம்
அச்சம்	செருக்கு	இயற்றினார்
எச்சம்	ஆதரவு	திடுக்கிட்டார்
சாம்பல்	மேன்மை	மேல் நாட்டார்
பார்வை	பணிவிடை	நெசவுத்தொழில்
முனிவர்	பெண்மணி	மொழிபெயர்த்தல்
சிறந்த	நற்குணம்	பாராட்டினார்

அரும்பதவுரை

அச்சம் - பயம். ஆதரவு - உதவி. ஊதியம் - வரும்படி. வரலாறு - கதை. செருக்கு - கர்வம். பணிவிடை - வேலை.

பயிற்சி

1. கொக்கு பறந்தது. இவ்வாக்கியத்தில் 'கொக்கு' என்பது பெயரைக் குறிக்கும் சொல். ஆனால் பறந்தது என்பது கொக்கின் செய்கையைத் தெரிவிக்கும் சொல். இம்மாதிரியே வந்தனர், செல்வார், பார்த்தார் - இவைகளும் செய்கையைக் குறிக்கும் சொற்கள். ஆகையால், செய்கையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் ஆகும். (வினை - செயல்.)

2. பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற வினைச்சொல்லைச் சேர்த்துப் படி:

1. திருவள்ளுவர் நெசவுத் தொழில் ——.
2. ஒரு கொக்கு கொங்கணவர் மேல் எச்சம் ——.
3. திருவள்ளுவர் திருக்குறள் ——.
4. உன் பாடங்களை நன்றாய் ——.
5. பெரியோர் சொல்வதை ——.

கேள்விகள்

1. திருவள்ளுவர் இயற்றிய நூல் எது?
2. வாசுகி அம்மையாரின் நல்லியல்புகளைப் பற்றி இரண்டு வாக்கியங்கள் எழுது.
3. கொங்கணவர் கொக்கை ஏன் எரித்தார்? எவ்வாறு எரித்தார்?
4. வாசுகி அம்மையாரின் சக்தியை கொங்கணவர் எப்படி அறிந்தார்?

14. இரயில் வண்டி

1. நாம் ஒரு ஊரிலிருந்து மற்ருெரு ஊருக்குச் செல்லவேண்டுமாளுல் என்ன செய்கிருேம்? சிலர் நடந்து செல்லுகிருேம்; சிலர் வண்டிகளில் செல்லு கிருேம்.

2. வண்டிகள் பலவகைப்படும். சில வண்டி கள் மாடுகளால் இழுக்கப்படும்; அவைகளுக்கு மாட்டுவண்டி என்று பெயர். சில வண்டிகள் குதிரை களால் இழுக்கப்படும். அவைகளுக்குக் குதிரை வண்டி எனப் பெயர். மோட்டார்கார் என ஒருவகை வண்டியும் உண்டு. அதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். அதை இழுப்பதற்கு மாடும் குதிரையும் வேண்டியதில்லை. அது ஒருவகை எந்திரத்திளுல் இழுக்கப்படுகிறது.

3. மேலே உள்ள படத்தில் இருப்பது இரயில் வண்டி. அந்த வண்டியின் முன்ளுல் புகை கிளம்புகிற தல்லவா? அதளுல் அதைப் 'புகை வண்டி' என்றும்

சொல்வதுண்டு. அதில்தான் தற்காலத்தில் மக்கள் மிகுதியாகப் பிரயாணம் செய்கிறார்கள்.

4. இரயில்வண்டி என்பது ஒரே வண்டி அல்ல; பல வண்டிகள் சங்கிலிபோல் ஒன்றோடு ஒன்று தொடர்ந்திருக்கும். ஆகையால் அதை 'வண்டித் தொடர்' என்று சொல்லவேண்டும். மற்ற வண்டிகள் எல்லாம் மண் தரைமீது ஓடுகின்றன; ஆனால், இரயில் வண்டியோ தண்டவாளத்தின்மேல்தான் ஓடும். தண்டவாளம் இரும்பினால் செய்யப்பட்டது. அதற்கு ஆங்கிலத்தில் 'ரயில்' என்று பெயர். ஆதலால், தண்டவாளத்தின் வழியே ஓடும் வண்டி 'ரயில் வண்டி' என்றும் சொல்லப்படுகிறது.

5. இரயில் வண்டியை இழுப்பது என்ன தெரியுமா? நீராவியே இரயில் வண்டியை இழுக்கிறது. நீர் ஆவியாக மாறும்போது ஒரு அளவுள்ள தண்ணீர் அதைப் போல அநேக மடங்குள்ள ஆவியாக மாறும். இந்த நீராவிக்கு மிகுந்த சக்தி உண்டு. அதனால்தான் மிக அதிக பளுவான இரயில் வண்டியை இழுக்க நீராவி உபயோகப்படுகிறது.

6. இரயில் வண்டித் தொடரில் முதலில் இருப்பது எஞ்சின். எஞ்சினுக்குத் தமிழில் எந்திரம் என்று பெயர். இதில் பெரிய சக்கரங்கள் இருக்கும்; தண்ணீரை நிரப்புவதற்கு ஒரு பெரிய குழாய் போன்ற தொட்டி உண்டு. அதில் தண்ணீரை நிரப்பிச் சூடுப் படுத்தினால் நீராவி உண்டாகும். இந்த நீராவியானது சக்கரத்தைத் தள்ளுவதற்கு ஏற்ற சில

ஏற்பாடுகள் எஞ்சினில் உண்டு. அதன்படி நீராவி சக்கரத்தைத் தள்ளும்போது சக்கரம் சுழன்று எஞ்சின் செல்லுகிறது. எஞ்சின் செல்லும்போது அதனோடு இணைக்கப்பட்ட மற்ற வண்டிகளும் செல்லுகின்றன.

7. நீராவியின் சக்தியால் சுழலக்கூடிய எஞ்சினை முதலில் அமைத்தவர் ஜேம்ஸ் வாட்டு என்ற ஆங்கில அறிஞர் ஆவர். நீராவி எந்திரத்தால் இரயில் வண்டிகளை ஓட்ட வழி கண்டுபிடித்தவர் ஜார்ஜ் ஸ்டீபன்சன் என்பவர். இவரும் ஒரு ஆங்கிலேயரே.

8. இரயில் வண்டி நிற்பதற்கு ஏற்பட்ட இடத்துக்கு ' ஸ்டேஷன் ' என்று பெயர். இரண்டு மூன்று பாதைகள் சந்திக்கும் ஸ்டேஷன் ' ஜங்ஷன் ' என்று சொல்லப்படும். ஸ்டேஷன் அதிகாரிக்கு 'ஸ்டேஷன் மாஸ்டர் ' என்று பெயர்.

9. எஞ்சினில் இருந்து வண்டியைச் செலுத்துகிறவர் ' எஞ்சின் டிரைவர் ' என்று கூறப்படுவார். வண்டித் தொடரின் கடைசி வண்டியில் ஒரு அதிகாரி இருப்பார். அவர் வண்டியின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டவர். அதனால், அவருக்குக் ' கார்டு ' என்று பெயர். அவர் டிரைவருக்கு உதவியாக இருப்பவர். டிரைவர் வண்டியை நிறுத்துவதற்கும் செலுத்துவதற்கும் கார்டின் உதவியும் அனுமதியும் வேண்டும்.

10. நாம் இரயில் பிரயாணம் செய்வதனால்

செலவு குறையும்; குறித்த இடத்துக்குச் சீக்கிரம் போய்ச் சேரலாம். நெல் முதலிய தானியங்களையும் ஆடு மாடு முதலிய மிருகங்களையும் மற்றும் பல பொருள்களையும் அதன் மூலமாக வேறு இடங்களுக்கு அனுப்பலாம். அவை குறைந்த செலவிலும் விரை வாகவும் குறித்த இடத்துக்குப் போய்ச் சேரும்.

எந்திரம்	பளுவான	தண்டவாளம்
சங்கிலி	அனுமதி	புகைவண்டி
அறிஞர்	பிரயாணம்	வண்டித்தொடர்

அரும்பதவுரை

அனுமதி - உத்தரவு, சம்மதம். நியமித்தல் - ஏற்படுத்தல். பளுவான - கனமுள்ள. பிரயாணம் - ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குச் செல்லுதல்.

பயிற்சி

பின்வரும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டு :

மோட்டார் கார், கிளம்புகிறது, தண்டவாளம், ஸ்டேஷன், எஞ்சின்.

கேள்விகள்

1. இரயில் வண்டி எதனால் ஓடுகிறது? எதன்மீது ஓடு கிறது?

2. இரயில் வண்டியைக் கண்டுபிடித்தவர் யார்?

3. இரயில் வண்டி ஏற்பட்டதால் நமக்கு உண்டாகும் நன்மைகள் யாவை?

4. 'கார்டு' என்பவரின் வேலை என்ன?



15. வழிப்போக்கன்

1. வழிப்போக்கன் ஒருவன் மிகக்
களைப்படைந்தே வழியில்
செழிப்பான ஆலின்கீழ்
சில நிமிடம் இருந்தான்.

2. இருந்தவனும் அதனடியில்
இளங்காற்று வீச
வருந்தியதன் களைப்பறவே
மகிழ்வாகப் படுத்தான்.

3. படுத்தவுடன் அம்மரத்தில்
பாங்கான கனிகள்

அடுத்தடுத்தே உள்ளவற்றை
அதிசயித்துப் பார்த்தான்.

4. “ இவ்வால மரத்தினுக்கே
ஏற்றவையாம் கிளைகள் ;
எவ்வாறும் பொருந்தியவே
இதனுடைய இலைகள்.

5. “ ஒருகுறைதான் இம்மரத்தில்
உளதாகும் ; அதுவும்
சிறுபழங்கள் பெருங்கிளையில்
சேரஇருப் பதுவே.

6. “ மிகப்பெரிய மரத்தினுக்கு
மிகச்சிறிய கனிகள்
தொகைப்படவே படைத்த இறை
சொற்ப அறிவுடையோன்,”

7. என்றுமிக இகழ்ந்துரைத்தே
இருக்கின்ற சமயம்
அன்றுமிகப் பழுத்தகனி
அவன் தலையில் விழவே ;

8. நோவடைந்தே, “ ஐயோ ! நான்
நுட்பஅறி வின்றி
ஆவதுணர் ஈசனையே
அதிகம் இகழ்ந் தேனே.

9. " சிறுபழத்தால் இவ்வளவு
வலியுளதேல், சிறியேன்
பெரும்பழமா யிருப்பின் அதன்
வலியும் பொறுப்பேனோ!

10. " யாவையும் அறிந்தவைக்கே
ஏற்றவகை யாக
யாவையும் படைத்தவற்றைக்
காத்திடுவான் இறைவன்,"

11. என்றுமிக அன்புடனே
ஈசனைத் துதித்தே
சென்றுதான் குறித்தஇடம்
செவ்விதாகச் சேர்ந்தான்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

குறை	களைப்பு	அதிசயித்து	அடுத்தடுத்து
சேர	சொற்பம்	படைத்தல்	வழிப்போக்கன்
நோவு	உளதேல்	செவ்விதாக	தொகைப்பட
ஈசன்	காத்திடல்	இளங்காற்று	இறை

அருப்பதவுரை

களைப்புற - களைப்பு நீங்க. இறை - இறைவன், கடவுள். நோவு - வலி. படைத்தல் - உண்டாக்குதல். நுட்பஅறிவு - புத்திக்கூர்மை. ஆவதுணர் ஈசன் - எதெது எவ்வாறு அமைய வேண்டுமென்பதை உணர்ந்த கடவுள்.

பயிற்சி

1. வழிப்போக்கன் சொல்லியது போல் வசனத்தில் சொல்லு :

(1) முதலில் அவன் கடவுளின் அறிவைப் பற்றி இகழ்ந்தது.

(2) பிறகு அவன் கடவுளைப் புகழ்ந்தது.

2. எதிர்ப்பதங்கள் கூறு :—சொற்பம், குறைவு, இகழ், சிறிய.

கேள்விகள்

1. வழிப்போக்கன் எதற்காக ஆலமரத்தின் கீழே தங்கினான்?

2. அவன் படுத்திருக்கும்போது என்ன நேர்ந்தது?

3. வழிப்போக்கன் தான் கடவுளை இகழ்ந்தது குற்றமென்று எவ்வாறு உணர்ந்தான்?

4. யாவையும் படைத்தவன் யார்? அவன் எவ்வாறு அவற்றைக் காப்பாற்றுகிறான்?



16. தென்னை

1. பிள்ளைகளே, நீங்கள் முன்னே நெற்பயிரைப் பற்றிப் படித்தீர்கள் அல்லவா ? அது போன்ற பயிர்கள் எல்லாம் ஒரு ஆண்டுக்கு மேல் உயிரோடு இரா. ஆனால், மரங்கள் பல ஆண்டுகள் உயிரோடிருக்கும். மரம் செடி கொடிகளும், பயிர் பச்சைகளும் உயிருள்ளவை. ஆயினும் அவை இடம்விட்டு இடம் நகரமாட்டா. அதனால், அவைகளுக்குத் ' தாவரம் என்று பெயர்.

2. தென்னை என்பது நீண்டு வளரும் மரம். இது பார்வைக்கு ஒரு பெரிய தூண்போலத் தோன்றும். பனை மரம், பாக்கு மரம், ஈச்ச மரம் இவைகள்

தென்னையின் இனத்தைச் சேர்ந்தவை. தென்னை மரம் சுமார் எழுபது அடி வரையில் உயர்ந்து வளரும்.

3. தென்னைக்குக் கிளைகள் இல்லை. அதன் உச்சியில் மட்டைகள் அடர்ந்திருக்கும். அவை நீண்டு வளைந்து நாலா பக்கத்திலும் பரவி யிருக்கும். தென்னமட்டை சுமார் ஆறு மாதங்களில் பழுத்து விழுந்துவிடும். மட்டை மரத்தோடு ஒட்டிக்கொண் டிருந்த இடம் பிறைபோலத் தோன்றும். பல மட்டை கள் விழுவதனால் இம்மாதிரியான பல வடுக்கள் உண் டாகுமல்லவா? அவைகளே தென்ன மரத்தின் அடி முதல் நுனிவரையில் வரிசையாகத் தோன்று கின்றவை.

4. தென்னம்பூ பாளை என்று கூறப்படும். பாளையிலிருந்து காய்கள் உண்டாகும். தேங்காய்கள் மரத்தின் உச்சியில் குலைகுலையாகக் காய்த்திருப்பது பார்வைக்கு மிக அழகாகத் தோன்றும். மரத்தி லிருந்து பறிக்கும் தேங்காய் கனமான நாரினால் மூடப் பட்டிருப்பதால் பெரிதாகத் தோன்றுகின்றது. கடை களில் விற்கப்படும் தேங்காய்கள் நார் உரித்தவை.

5. தேங்காய் நாரை உரித்தால் ஒரு கடினமான ஓடு தோன்றும். இந்த ஓட்டுக்குக் கொட்டங்கைச்சி என்று பெயர். அதன் உள்ளேதான் வெண்மையான பருப்பு இருக்கிறது. இந்தப் பருப்பையும் நாம் தேங் காய் என்றே சொல்லுகிறோம். முற்றின பருப்புக்குக் கொப்பரை என்று பெயர்.

6. இளந் தேங்காயில் நீர் நிரம்பி இருக்கும்.

அதற்கு இளநீர் என்று பெயர். இளநீர் இனிமையாக இருக்கும். அது நமக்குத் தாகத்தைத் தணித்துக்கொள்ள உதவும். இளநீர் உள்ள தேங்காயும் இளநீர் என்றே கூறப்படுகிறது. முற்றின தேங்காய்க்கு நெற்று என்று பெயர்.

7. தென்னை வளருவதற்கு நீர்வளம் உள்ள பூமி வேண்டும். அதனால், அது ஆற்றை அடுத்துள்ள இடங்களில் அதிகமாகப் பயிராகும். நன்செய் நிலங்கள் உள்ள கிராமங்களில் தென்ன மரங்கள் அடர்ந்த தோப்புக்களைக் காணலாம்.

8. தென்ன மரங்கள் பயிராக்குவது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா? பூமியில் குழிகள் தோண்டி அதில் தென்ன நெற்றுக்களை ஊன்றி நீர் வார்த்து வந்தால், நெற்றின் மேற்புறத்திலிருந்து முளை கிளம்பிக் குருத்துக்கள் உண்டாகி வளரும். இதுதான் தென்னங்கன்று. தென்னங்கன்றைத் தென்னம்பிள்ளை என்று சொல்லுவது வழக்கம். தென்னம் பிள்ளைகளைப் பெயர்த்தெடுத்து வரிசையாகத் தோண்டப்பட்ட குழிகளில் குழிக்கு ஒன்றாக நட்டு எருவிட்டுத் தண்ணீர் ஊற்றிவருவார்கள். தென்னம் பிள்ளையும் தூண்போல உயர்ந்து வளர்ந்து தென்ன மரமாகும். தென்னமரம் ஐந்தாவது ஆண்டுக்குமேல் காய்க்கத் தொடங்கும்.

9. தென்ன மரத்தில் மனிதருக்குப் பயன் படாத பாகம் ஒன்றுமே இல்லை. உணவில் தேங்காயைச் சேர்ப்பது உண்டு. தேங்காய் கலந்த பதார்த்தம்

சுவையாய் இருக்கும். கொப்பரைத் தேங்காயிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள்; அதற்குத் தேங்காய் எண்ணெய் என்று பெயர். தென்னை ஓலையைக் கீற்றாக முடைந்து வீட்டுக்கு மேல்கூரையாகப் போடுவார்கள். தேங்காய் நாரினால் கயிறு திரிக்கலாம். தேர்வடமும் தேங்காய் நாரினால் செய்யப்படுகிறது. ஓலையில் உள்ள ஈர்க்கு துடைப்பமாக உதவுகிறது. தென்ன மரத்தின் அடிப்பாகம் வீடு கட்டுவதற்குத் தூண்களாக உதவும்.

பாளை	நகர்தல்	பயிர்பச்சை
சீவி	தாவரம்	கொப்பரை
வடு	நெற்று	கடினமான
பிறை	குருத்து	கொட்டங்கைச்சி
ஈர்க்கு	துடைப்பம்	
பருப்பு	பதார்த்தம்	

அரும்பதவுரை

தாவரம் - மரம், செடி, கொடி, புல், பூண்டு. வடு - அடையாளம். பதார்த்தம் - சமைக்கப்பட்ட உணவுப் பொருள்.

பயிற்சி

1. தென்னமரத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.
2. இரு பொருள் கூறு :—திரி, வடு, கொப்பரை.
3. பொருள் மாறுபடுவதை விளக்கு :—கல், கள்; கரி, கறி; குழி, குளி.

கேள்விகள்

1. தென்னமரம் நமக்கு எந்தெந்த வகையில் உதவுகிறது?
2. பாளை என்பது என்ன?
3. இளநீர் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?

17. காந்தியடிகளும் குருடனும்

1. நமது நாடு இப்பொழுது சுதந்திரம் பெற்றுள்ளது. இதற்குக் காரணமா யிருந்தவர்களில் முதன்மையானவர் **மகாத்மா காந்தியடிகள்**. ஆகையால் காந்தியடிகளை நம் **தேசப்பிதா** என்று சொல்லுகிறோம்.

2. ஒரு சமயம் காந்தியடிகள் பீகாரில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். கிராமம் கிரமமாகச் சென்று கூட்டங்களில் பேசி மக்களுக்கு அவர்களுடைய கடமைகளை எடுத்துக் கூறிவந்தரர்.

3. ஒரு நாள் மாலை காந்தியடிகள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்துக்கு மோட்டார் வண்டி

யில் போய்க் கொண்டிருந்தார். வழியில் ஒரு சக்கரம் பழுதாகி வண்டி நின்று விட்டது. வண்டி யோட்டியும் காந்தியடிகளுடன் வந்த நண்பர்களும் சக்கரத்தைப் பழுதுபார்க்கும் வேலையில் ஈடுபட்டனர்.

4. காந்தியடிகள் வண்டியிலிருந்து இறங்கிச் சுற்று முற்றும் பார்த்தார். பாதையின் ஒரு ஓரத்தில் கையில் கோலூன்றிக் கொண்டு நின்ற ஒரு குருடன் மீது அவரது பார்வை விழுந்தது. அவனுக்கு ஏறத் தாழ எண்பது வயதிருக்கும். வழிப்போக்கர்களிடம் அவன் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தான். இரண் டொருவர் அவன் கேட்டதற்கு ஏதோ பதிலளித்தனர். பலர் அவன் கூறியதைக் கவனிக்காமல் தம் வழியே சென்றனர்.

5. அடிகள் அவனருகில் சென்று, "ஐயா, உமக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

6. அதற்குக் கிழவன், "மகனே! நான் பக் கத்துக் கிராமத்தில் வசிக்கிறேன். என் மனைவி மக்கள் எல்லாம் இறந்து விட்டார்கள். இப்பொழுது எனக்குக் கடவுள் ஒருவரே துணை. நான் மகாத்மாஜி யின் புகழைப் பற்றிக் கேள்விப்பட் டிருக்கிறேன். அவர் இந்த வழியாகச் செல்லப் போகிறார் என்று கிராமத்தில் பேசிக் கொண்டார்கள். அவர் போய் விட்டாரோ, இனிமேல்தான் வருவாரோ, தெரியவில்லை. இந்தச் சிறு மூட்டையில், எனது சேமிப்புப் பணம் எல்லாம் இருக்கிறது. அவரைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைக்குமானால் அவருடைய பாதங்களில்

பணிந்து இந்தக் காணிக்கையைச் செலுத்த வேண்டு மென்பது என் ஆசை,'' என்று கூறினுன்.

7. உருக்கமான அச்சொற்களைக் கேட்ட அடிகள், "ஐயா, தாங்கள் கூறியவற்றை இதுவரை எவன் கேட்டுக் கொண்டிருந்தானே, அவன்தான் காந்தி,'' என்ருர்.

8. இதைக் கேட்ட குருடன் மிக்க வியப்படைந் தான். உடனே அவன் அந்தப் பண முடிப்பை காந்தியடிகளின் கையில் கொடுத்துவிட்டு, அவரது பாதங்களில் பணிய விரும்பினுன். ஆனல், அடிகள் அவனைத் தம் மார்புடன் அணைத்துக் கொண்டார்.

9. இறைவனின் திருவிளையாட்டைப் பாருங் கள்! கண்ணிழந்த அந்தப்பக்தனின் கோரிக்கையை நிறைவேற்ற அல்லவா, அவன் நின்ற இடத்திற்கு அருகே காந்தியடிகள் சென்ற மோட்டார் வண்டியின் சக்கரம் பழுதடைந்தது!

முதன்மை	கேட்டவண்ணம்	கோரிக்கை
தேசப்பிதா	எஞ்சியுள்ள	நிறைவேற்ற
பழுதாகி	காணிக்கை	கோலூன்றி
சுற்றுமுற்றும்	பணிந்து	

அரும்பதவுரை

தேசப்பிதா - நாட்டின் தந்தை. பழுதாகி - கெட்டுப்போய். பேறு - நல்வினை. காணிக்கை - பெரியோருக்கு அல்லது தெய் வத்துக்கு நாம் அன்புடன் கொடுக்கும் பொருள். கோரிக்கை - விருப்பம்.

பயிற்சி

1. கொக்குப் பறந்தது. இவ்வாக்கியத்தில் கொக்கு என்பது பெயரைக் குறிக்கும் சொல். ஆனால் பறந்தது என்பது கொக்கின் செய்கையைத் தெரிவிக்கும் சொல். இம்மாதிரியே, வந்தனர், செல்வார், பார்த்தார்—இவைகளும் செய்கையைக் குறிக்கும் சொற்கள். ஆகையால், செய்கையைக் குறிக்கும் சொல் வினைச் சொல். (வினை - செயல்)

பின்வரும் வாக்கியங்களில் ஏற்ற வினைச் சொல்லைச் சேர்த்துப்படி.

(1) காந்தியடிகளை நம் தேசப் பிதா என்று ——.

(2) இந்தச் சிறு மூட்டையில் பணம் ——.

(3) இதைக் கேட்ட குருடன் மிக்க வியப்பு ——.

கேள்விகள்

1. காந்தியடிகள் சென்ற மோட்டார் வண்டி ஏன் நின்றுவிட்டது?

2. குருடன் காந்தியடிகளைச் சந்தித்து என்ன செய்ய விரும்பினான்?

3. இறைவனின் திருவிளையாட்டு எது?

18. தபாற் கடிதம்

[உரையாடல்]

தம்பி : அண்ணு! இதோ, தபாற்காரர் ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுத்தார்.

அண்ணன் : எங்கே பார்க்கலாம். இது பட்டணத்துக் கடிதம்; நமது மாமா நேற்று எழுதியிருக்கிருர்.

தம்பி : அண்ணு! மாமா எழுதி யாரிடம் கொடுத்தார்? தபாற்காரரிடமா?

அண்ணன் : இல்லை இல்லை. அவர் நேற்று எழுதி, மாலையில் சென்னையில் உள்ள எழும்பூர் தபாலாபீசில் போட்டிருக்கிருர். அது இன்று காலையில் 8-30 மணிக்கு நமது திருச்சிராப்பள்ளியில் உள்ள தெப்பக்குளம் தபாலாபீசில் வந்து சேர்ந்திருக்கிறது. அதைத்தான் தபாற்காரர் இப்போது கொண்டுவந்து கொடுத்தார்.

தம்பி : அண்ணு, இது என்ன ஆச்சரியமாய் இருக்கிறது! நீங்கள் இங்கிருந்து கொண்டே அதெல்லாம் எப்படித் தெரிந்து கொண்டீர்கள்?

அண்ணன் : இதில் ஒன்றும் வியப்பு இல்லை, தம்பி; இந்தக் கடிதத்தைப் பார்த்தே அதெல்லாம் தெரிந்து கொள்ளலாம். இதோ, பார்; இரண்டு முத்திரைகள் இருக்கின்றன. இவைகளில் ஒன்று எழும்பூரிலுள்ள தபாலாபீசில் போட்ட முத்திரை.

அதில் அந்தத் தபாலாபீசின் பெயரும், முத்திரை போட்ட தேதியும், நேரமும் குறிக்கப் பட்டிருக்கின்றன. மற்றென்று நமது ஊரில் தெப்பக்குளம் தபாலாபீசில் போட்ட முத்திரை. இதிலும் இந்தத் தபாலாபீசின் பெயரும் முத்திரை போட்ட தேதியும் நேரமும் குறிக்கப்பட்டுள்ளன.

தம்பி : அண்ணு, இந்தச் செய்தி இப்போது தான் தெரிந்தது. இது சரி; இந்தக் கடிதம் சென்னேயிலிருந்து நமது ஊருக்கு வந்து சேர்ந்திருக்கிறதென்று முன்னே சொன்னீர்களே; இதை அங்கிருந்து இங்கு கொண்டுவந்தவர் யார்?

அண்ணன் : சென்னேயிலிருந்து ஒருவர் இங்கு வரவேண்டுமானுல் எவ்வளவு செலவு பிடிக்கும்? இரயில் வண்டியில் ஏறிவந்தாலும் ஐந்தாறு ரூபாய் செலவாகுமே. இந்தக் கடிதத்திற்கு முக்காலணுதான் செலவு. இந்தச் செலவில் ஒருவர் அங்கிருந்து இங்கு வர முடியுமா?

தம்பி : பின்னே எப்படி அண்ணு, கடிதம் அங்கிருந்து இங்கு வந்தது?

அண்ணன் : தம்பி, சொல்கிறேன், கேள். இரயில் வண்டித் தொடரில் ஒரு வண்டி தபாலுக்காக ஏற்பட்டிருக்கும். அதற்கு 'மெயில்வான்' என்று பெயர். தபாலாபீசில் போடும் கடிதங்களே எல்லாம் தபாற் சேவகர்கள் முத்திரையிட்டு ஒன்று சேர்த்துப் பைகளில் போட்டுக் கட்டிக் கொண்டுபோய் அந்த வண்டியில் சேர்த்து விடுவார்கள்.

தம்பி: அந்த வண்டியிலிருந்து கடிதம் தபா லாபீசுக்கு எப்படி வரும்?

அண்ணன்: தம்பீ, அவசரப்படாதே. சொல்லு கிறேன்; கேள். அந்த 'மெயில்வானில்' சில உத்தி யோகஸ்தர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் போகவேண்டிய கடிதங்களைப் பிரித்துப் பைகளில் போட்டுக் கட்டி வைப்பார்கள். ஒவ்வொரு நிலையத்திலும் இரயில் வண்டி நிற்கும்போது அவர் கள் அந்த ஊர்ப் பையை அங்கு வந்திருக்கும் தபாற் சேவகரிடம் ஒப்படைப்பார்கள்.

தம்பி: அவர் அதை என்ன செய்வார்?

அண்ணன்: அவர் அம்மூட்டையை அவ் வூர்த் தபாலாபீசுக்குக் கொண்டுபோவார். அங்கு அதைப் பிரித்துக் கடிதங்களுக்கு முத்திரையிடு வார்கள். தபால்காரரர் கடிதங்களை மேல் விலாசப்படி அவரவர்கள் வீட்டில் கொண்டுபோய்க் கொடுப்பார்.

தம்பி: சரி, அண்ணு, இரயில் மூலமாகக் கடிதங்கள் போனல் இரயில் ஸ்டேஷன் உள்ள ஊர் களுக்குத்தானே தபால் போகும். இரயில் இல்லாத கிராமங்களுக்குக் கடிதம் எப்படிப் போய்ச் சேரும்?

அண்ணன்: கிராமங்களுக்கும் கடிதம் போகும். ஆனல், கொஞ்சம் நாளாகும். ஒவ்வொரு பெரிய கிராமத்திலும் தபாலாபீசு இருக்கும். நகரத்தில் உள்ள பெரிய தபாலாபீசிலிருந்து ஆள் மூலமாவது, வண்டிகள் மூலமாவது அந்தக் கிராமத் தபாலாபீ சுக்குக் கடிதங்கள் வரும். அங்கிருந்துதான் மற்றக்

கிராமங்களுக்குத் தபாற் சேவகர் கடிதங்களைக் கொண்டு போவார்.

கிராமம்	தேதி	தபாலாபீசு
பட்டணம்	ஒப்பித்தல்	வண்டித்தொடர்
நகரம்	மூலமாக	மேல்விலாசம்
சேவகர்	முத்திரை	நூற்றுக்கணக்கான
அவசரம்	தபாற்காரர்	குறிக்கப்பட்டுள்ள
பிரித்து		

அருஞ்பதவுரை

முத்திரை - அடையாளம். சேவகர் - வேலைக்காரர். சேவகம் - வேலை. மூலமாக - வழியாக. குறிக்கப்பட்டு - எழுதப் பட்டு.

பயிற்சி

கிராமம், பட்டணம், தபாலாபீசு இவைகளைப்பற்றி இரண்டிரண்டு வாக்கியங்கள் கூறு.

கேள்விகள்

1. 'மெயில்வான்' என்று எதற்குப் பெயர்?

2. தபால் முத்திரையில் என்னென்ன குறிக்கப்பட்டிருக்கும்?

3. இரயில் இல்லாத கிராமங்களுக்குத் தபாற்கடிதங்கள் எப்படிப் போய்ச் சேரும்?

19. ஒரு சாதுரியமான தீர்ப்பு

ஒரு சமயம் நான்குபேர் ஒன்றுகூடி ஒரு ஊரிலிருந்து மற்ருெரு ஊருக்கு நடந்து சென்று திரும்பி வந்து கொண்டிருந்தனர். வருகின்ற வழியில் ஓர் இடத்தில் ஒரு முடிச்சுக் கிடந்தது. அதனைக் கண்ட அவர்கள் அது என்ன முடிச்சு என்றறிய ஆவல் கொண்டு அங்கு நின்றனர். அவர்களில் ஒருவன் குனிந்து அதை எடுத்தான். முடிச்சு கனமாக இருந்தமையால் அவன், 'இது பண முடிச்சாக இருக்கும் போல் தோன்றுகிறது,' என்று கூறி அவிழ்க்கத் தொடங்கினுன். மற்றவர்களும், 'உள்ளே என்ன இருக்கிறது பார்ப்போம்,' என்று ஆவலுடன் அவனைச் சுற்றி நின்றுகொண்டு கவனித்தார்கள். முடிச்சில் நிரம்பப் பணம் இருந்தது.

பணம் என்ருல் யாருக்கும் ஆசை உண்டாகும் அல்லவா? அந்த நால்வரில் ஒவ்வொருவரும் அந்தப் பணம் முழுவதையும் தாமே அடையவேண்டும் என எண்ணினர். அவ்விதம் ஒருவர் அடைய மற்றவர்கள் விட்டுவிடுவார்களா? ஆதலால், அவர்கள் நால்வரும் அதனைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதெனத் தீர்மானித்தனர். ஆனுல், அவ்வாறு பங்கிட்டுக் கொள்வது தங்கள் ஊர் சேர்ந்ததும் நடைபெறவேண்டும் என முடிவு கட்டினர்.

பின்னர், அவர்கள் புறப்பட்டுத் தம் ஊரை நோக்கிச் சென்றுகொண் டிருந்தனர். சிறிது தூரம்

சென்றபின் அவர்களுக்குப் பசி எடுத்தது. ஆதலால், அவர்கள் வழியில் ஓர் சிற்றூரில் தங்கி, அங்கே இருந்த ஓர் கிணற்றில் இறங்கிக் கைகால் கழுவிக் கொண்டு உணவருந்தலாம் என எண்ணினர்கள். அந்தக் கிணற்றில் ஒவ்வொருவராகத்தான் இறங்குதல் கூடும். அதனால், அவர்கட்கு ஒருவரை விட்டு ஒருவர் பிரிய மனம் இல்லை. ஏன்? பணமுடிச்சின் மேலேயே ஒவ்வொருவருக்கும் கவனம் இருந்தது. கடைசியாக, அவர்கள் அருகில் இருந்த ஒரு கடைக்குச் சென்று கடைக்காரரிடம் பணமுடிச்சைக் கொடுத்து, "நாங்கள் நால்வரும் வந்து கேட்டால் இதைத் திருப்பிக் கொடுங்கள்," என்று கூறிக் கொடுத்துவிட்டுக் கிணற்றிற்கு வந்தனர். வந்தவர்கள் கிணற்றில் இறங்கிக் கைகால் கழுவிக்கொண்டு கரை ஏறிக் கட்டமுதை அருந்தினர்.

உடனே அவர்கள் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொள்ள எண்ணினர்கள்; அதனால் தங்களுள் ஒருவனைப் பார்த்து, "நீ அந்தக் கடைக்குச் சென்று, பண முடிச்சிலிருந்து ஒரு அணு எடுத்து வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு வா," என்று கூறினர். அவனும் சென்று பண முடிச்சைக் கொடுக்கும்படி கடைக்காரரைக் கேட்டான். கடைக்காரர், "மற்ற மூவருடனும் நீ வந்தால்தான் பண முடிச்சைக் கொடுப்பேன்" என்றார். அவன் "மூவரும்தான் என்னை அனுப்பினர்கள். வேண்டுமானல், அவர்களை அங்கிருந்தே சொல்லச் செய்கிறேன்," என்று சொல்

லிக் கடையில் நின்றபடியே அவர்களை நோக்கிக் "கடைக்காரர் தரமாட்டேன் என்கிருர்," எனக் கூவிஞன். அவர்கள், "ஐயா, கடைக்காரரே, கொடுங்கள், கொடுங்கள்," என்ருர்கள். எனவே, கடைக்காரர் முடிச்சை எடுத்துக் கொடுத்தார். அவன் அதனைப் பெற்றுக்கொண்டு மற்ற மூவரும் அறியாமல் மெல்ல நழுவி மறைந்து சென்றுவிட்டான்.

மூவரும் சற்று நேரம் காத்திருந்தனர். வெற்றிலை பாக்கு வாங்கச் சென்றவன் வரவில்லை. ஆதலால், அவர்கள் அந்தக் கடைக்குச் சென்று விசாரித்தனர். கடைக்காரர், "அவர் சற்று நேரத்திற்கு முன்பே இங்கிருந்து போய் விட்டாரே. நீங்கள் சொன்ன படியே பணமுடிச்சையும் அவரிடம் கொடுத்துவிட்டேனே," என்ருர். அவர்கள் "மோசம் போனேமே," என்று எண்ணி எண்ணி வருந்திச் சுற்றும் முற்றும் தேடினர். ஆள் அகப்படவில்லை. ஆதலால், கடைக்காரரே இதற்குப் பொறுப்பு என்று கருதி, அவ்வூர் நீதிபதியிடம் அவர்மீது வழக்குத் தொடுத்தனர்.

நீதிபதி இரு கட்சியாரையும் விசாரித்தார். வழிப்போக்கர் மூவரும் பணமுடிச்சின் வரலாற்றைக் கூறி, "நாங்கள் நால்வரும் கேட்டால்தான் கடைக்காரர் பணமுடிச்சைக் கொடுக்கவேண்டும். ஒருவரிடம் கொடுத்தது தவறு. ஆதலால் பணத்துக்குப் பொறுப்பு அவரே," என்ருர்கள். கடைக்காரரும் நடந்ததைக் கூறிஞர். நீதிபதி கடைக்காரர்மீது தவறில்லை என அறிந்துகொண்டார். ஆயினும்,

வழிப்போக்கர், ' நாங்கள் நால்வரும் சேர்ந்து கேட்கா திருக்க ஒருவர் கேட்டவுடன் கொடுத்தது கடைக்கார ரின் தவறே ' என்று வற்புறுத்திக் கூறினர். நீதிபதி சற்று ஆலோசித்து, " நீங்கள் நால்வருமாகப் போய்க் கடைக்காரரிடம் கேட்பீர்களானால் அவர் உங்களிடம் பணமுடிச்சைக் கொடுத்துவிடுவார்," என்று தீர்ப்புக் கூறினர்.

வழிப்போக்கர் திடுக்கிட்டனர்; நால்வரும் ஒரு சேரப் போய்க் கேட்பது எப்பொழுது? கடைக்கார ரிடமிருந்து பண முடிச்சைப் பெறுவது எப்போது? நீதிபதியின் சாதுரியமான தீர்ப்பினால் கடைக்காரர் சங்கடத்திலிருந்து விடுபட்டார். வழிப்போக்கர் மூவரும் **கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போனது**பற்றி வருந்தித் தம் வழியே ஏகினர்.

நழுவுதல்	முடிவுகட்டுதல்	குனிந்து
அருகில்	வற்புறுத்துதல்	கனமாக
ஒருசேர	வெற்றிலைபாக்கு	அவிழ்த்தல்
சாதுரியம்	கால் நடையாக	நிரம்ப
திடுக்கிடல்	கட்டமுது	விடுபடுதல்
தீர்மானித்தல்	கட்சிக்காரர்	

அரும்பதவுரை

சாதுரியம் - சாமர்த்தியம். வற்புறுத்துதல் - கட்டாயப் படுத்துதல். தீர்ப்பு - வழக்கைப்பற்றிய முடிபு. கட்டமுது - கட்டுச்சோறு.

பயிற்சி

1. ஆள், கை, கால்—இப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒரு ஆள், ஒரு கை, ஒரு கால் என ஒவ்வொரு பொருளையே குறிக்

கும். இம்மாதிரி ஒரு பொருளைக் குறிக்கும் பெயர் ஒருமைப் பெயர் ஆகும்.

2. ஆட்கள், கைகள், கால்கள்—இப்பெயர்கள் ஒவ்வொன்றும் பல ஆட்கள், பல கைகள், பல கால்கள் எனப் பல பொருள்களை, அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிக்கும். இவ்வாறு பல பொருள்களைக் குறிக்கும் பெயர் பன்மைப் பெயர் ஆகும்.

3. பெயர்ச்சொல்லைப் போலவே வினைச்சொல்லிலும் ஒருமை, பன்மை உண்டு. ஆள் நிற்கிறான். இதில் 'நிற்கிறான்' என்ற வினைச்சொல் ஒருவருடைய செயலைக் குறிக்கிறது. இம்மாதிரி ஒரு பொருளின் செயலைக் குறிக்கும் வினை ஒருமை வினை ஆகும்.

4. ஆட்கள் நிற்கிறார்கள். இதில் 'நிற்கிறார்கள்' என்ற வினைச் சொல் பலருடைய செயலைக் குறிக்கிறது. இம்மாதிரி பல பொருள்களின் செயலைக் குறிக்கும் வினை பன்மை வினை ஆகும்.

5. கீழ்க்கண்ட வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களையும், வினைச்சொற்களையும் தனித்தனியே எடுத்துக் காட்டி அவை ஒருமையா, பன்மையா என்பதையும் கூறுக :

(1) பணம் என்றால் எல்லாருக்கும் ஆசை உண்டாகும்.
(2) ஒருவன் முடிச்சுடன் ஓடிவிட்டான்.
(3) மூவரும் மோசம் போயினர்.
(4) நீ அவர்களைக் கூப்பிடு.
(5) கடைக்காரர் 'நான் கொடுக்கமாட்டேன்' என்றார்

கேள்விகள்

1. வழிப்போக்கர்கள் பண முடிச்சை யாரிடம் கொடுத்து வைத்தார்கள்? என்ன சொல்லிக் கொடுத்தார்கள்?

2. வெற்றிலை பாக்கு வாங்கச் சென்றவன் செய்த மோசம் யாது?

3. நீதிபதி என்ன முடிவு கூறினார்? ஏன் அவ்வாறு கூறினார்?

20. மழை

1. மழையே மழையே வருவாயே
வளரும் பயிரைத் தருவாயே.

2. மின்னி இடித்துப் பொழிவாயே
வீதிகள் எங்கும் வழிவாயே.

3. வானம் கருக்க வருவாயே
வந்தே வெள்ளம் தருவாயே.

4. தெருக்கள் நிறைய ஓடுவாயே
தெளிவாய்ப் பாட்டுப் பாடுவாயே.

5. வெயிலின் கொடுமை யொழியவே
மிகுந்த நீரைப் பொழிவையே.

6. ஆலங் கட்டி தருவாயே
ஆனந் தந்தந் தருள்வாயே.

7. கப்பல் செய்து விடுவேனே
கையால் மெல்லத் தொடுவேனே.

8. கப்ப லோடும் ஓடுவேன்
களிப்பாய்ப் பாடி ஆடுவேன்.

9. மெள்ள வெளியிற் குதிப்பேனே
விளையாட் டாக மிதிப்பேனே.

10. நனைந்து நனைந்து மகிழ்வேனே
நாளும் உனையே புகழ்வேனே.

11. மலையில் விழுந்து வழிவாயே
மக்கள் மகிழப் பொழிவாயே.

12. ஆற்றில் குளத்தில் நிறைவாயே
அடுத்த வயலில் நிறைவாயே.

—வித்வான் N. கனகராஜய்யர்

மின்னி	நனைந்து	தெளிவாய்	இடித்து
கொடுமை	அருள்வாய்	சுருக்க	களிப்பாய்
பொழிவாய்	வெள்ளம்	வழிவாய்	ஆலங்கட்டி

அரும்பதவுரை

களிப்பு - சந்தோஷம். இடித்து - இடியோசை செய்து. கொடுமை - கஷ்டம்.

பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் ஏற்ற பெயர்ச் சொற்களை அமைத்துப் படி :
   (1) ஆற்றில் ——— நிறைந்து ஓடுகிறது.
   (2) ——— மின்னுகிறது.
   (3) ——— இடிக்கிறது.

2. ஏற்ற வினைச் சொற்களை அமைத்துப் படி :
   (1) மழை ——. (2) வெயில் கொடுமையாக——.
   (3) வானம் ———.

கேள்விகள்:

1. மழை பெய்யும் போது சிறுவர்கள் என்னென்ன விளையாட்டு விளையாடுவார்கள் ?

2. மழையினால் உண்டாகும் நன்மைகள் என்ன ?

21. சிங்கமும் சுண்டெலியும்

படங்களைப் பார்த்துக் கதையைச் சொல்லு :



குறிப்பு : (1) ஒரு காட்டில் ஒரு சிங்கம் தூங்கிக் கொண்டிருத்தல். (2) ஒரு சுண்டெலி அதன் மீது ஓடுதல். (3) சிங்கம் விழித்துச் சுண்டெலியைப் பிடித்துக் கொள்ளுதல். (4) சிங்கம் தன்னைக் கொல்லாது விட்டால் அதற்குத் தகுந்த பதிலுபகாரம் தான் செய்யக்கூடுமெனச் சுண்டெலி சொல்லுதல். (5) சிங்கம் வலையில் அகப்பட்டுக் கொள்ளுதல். (6) சுண்டெலி வலையைக் கடித்து ஒரு பெரிய துவாரம் உண்டாக்குதல். (7) சிங்கம் வலையினின்று வெளிப்பட்டுச் சுயேச்சையாகத் திரிதல்.

22. பாரி

1. முற்காலத்தில் நமது தமிழ் நாட்டில் பாரி என்னும் சிற்றரசர் ஒருவர் இருந்தார். அவருக்கு வேள்பாரி என்றும் பெயர். வேள் என்ருல் உபகாரம் என்று பொருள். அவருடைய நாடு பறம்பு நாடு. பறம்பு நாடு என்பது தமிழ் நாட்டில் ஒரு சிறு பகுதி. அதில் முந்நூறு சிற்றூர்கள் இருந்தன.

அந்த நாட்டில் ஒரு மலை உண்டு. அதற்கும் பறம்பு மலை என்றே பெயர்.

2. வேள்பாரி பறம்பு மலையில் கோட்டை கட்டிக்கொண்டு அதிலிருந்து தமது முந்நூறு ஊர்களையும் ஆண்டு வந்தார். பாரி ஒரு சிறந்த வீரர்; தம் குடிகளிடம் மிகவும் அன்புடையவர்; கற்றவர்களிடம் மிகுந்த ஆசை உடையவர்; எல்லாப் பிராணிகளிடத்திலும் கருணை யுடையவர்; மரம் செடி முதலிய தாவரங்க ளிடத்திலும் இரக்கம் காட்டுவார்.

3. ஒரு சமயம் பாரி தேரில் ஏறிக்கொண்டு காட்டுக்குச் சென்றார். அங்கு ஒரு முல்லைக்கொடி வளர்ந்திருந்தது. கொடி படர்வதற்கு ஒரு கொம்பு வேண்டும் அல்லவா? முல்லைக்கொடி படர அங்கு யாதொரு கொம்பும் இல்லை. அதனால், அது ஆடி அசைந்துகொண் டிருந்தது. அதைக் கண்டு வேள் பாரி மிகவும் மனம் இரங்கினார்.

4. அவர், 'ஐயோ! இந்த முல்லைக் கொடி அசைந்து அசைந்து ஆடுகிறதே! படர்வதற்குக் கொம்பு இல்லாமல் இவ்வாறு செய்கிறது போல் இருக்கிறது,' என்று நினைத்தார்; தாம் ஏறி வந்த தேரை அதன் அருகே நிறுத்தி முல்லைக் கொடியை எடுத்துத் தேரில் விட்டு, 'இந்தத் தேரின்மேல் இக்கொடி படர்ந்து வளரட்டும்,' என்று கூறி மகிழ்ச்சி அடைந்தார். பின்பு அவர் தம் அரண்மனைக்கு நடந்து சென்றார்.

5. பாரியின் கருணையைப் பார்த்தீர்களா?

இத்தகைய அருள் மிகவும் சிறந்ததல்லவா? அதனால் அவருடைய புகழ் தமிழ்நாடு முழுதும் பரவியது. பல கல்விமான்கள் அவரிடம் வந்தார்கள். பாரி அவர்களுடைய கல்வி யறிவைக் கண்டு மகிழ்ந்து அவர்களுக்குத் தம் ஊர்களைப் பரிசாகக் கொடுத்து வந்தார்! நாளடைவில் முந்நூறு ஊர்களையும் பரி சிலர் பெற்றனர். என்ன கொடை! ஊர் ஊராகக் கொடுப்பது மிகவும் அருமையல்லவா? கொடையிற் சிறந்த பாரி, 'வள்ளல்' என்று பெயர் பெற்றார். சிறந்த கொடையாளிக்கு வள்ளல் என்று பெயர்.

6. பாரிக்கு இரண்டு பெண்மக்கள் இருந்தார் கள். அவர்கள் நன்றாகப் படித்தவர்கள். அவர் களுக்குப் '**பாரி மகளிர்**' என்றே பெயர் வழங்கியது.

7. கபிலர் என்னும் புலவர் பாரிக்குச் சிறந்த நண்பர். அவர் நமது வள்ளலுக்குத் துணையாகப் பலகாலம் அவரிடம் இருந்தனர். ஔவையாரும் பாரியினிடம் அடிக்கடி வருவது உண்டு. ஔவையா ருடைய கல்வியறிவையும் பெருமையையும் அறிந்து பாரி அவருக்கு மிகுந்த உபசாரம் செய்வார்; பரிசு அளிப்பார்.

8. பாரி இறந்த பின்பு பாரிமகளிரைக் கபிலர் சிலகாலம் ஆதரித்து வந்தார். பின்னர், ஔவையார் அவர்களை அழைத்துச் சென்று ஒரு சிறந்த அரச னுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

வேள்	கோட்டை	நாளடைவில்	பாரி
சிற்றூர்	வழங்கியது	மகளிர்	ஆதரித்து
கல்விமான்	கொடை	பரிசிலர்	உபகாரம்

அரும்பதவுரை

கொம்பு - சிறுகிளை. கொடை - பொருள் கொடுத்தல். மகளிர் - பெண்கள். வழங்கியது - சொல்லப்பட்டது.

பயிற்சி

1. இப்பாடத்திலுள்ள படத்தில் நீ பார்க்கும் செய்திகளைப் பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.

2. பாரி ஒரு சிறந்த வீரர்.—இது ஒரு வாக்கியம் அல்லவா? இவ்வாக்கியத்தின் முடிவில் ஒரு புள்ளி இருப்பதைக் கவனியுங்கள். இதற்கு முற்றுப் புள்ளி என்று பெயர். ஒரு வாக்கியத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

3. வாக்கியங்கள் முடியும் இடங்களில் முற்றுப்புள்ளிகள் வை :

அங்கு ஒரு முல்லைக்கொடி வளர்ந்திருந்தது அது படர்வதற்குக் கொம்பு இல்லை பாரி வள்ளல் தம் தேரை அக்கொடி படர்வதற்காக நிறுத்திவிட்டார்

கேள்விகள்

1. வேள்பாரி என்பவர் யார்? அவர் வள்ளல் என்று பெயர் பெற்றது எவ்வாறு?

2. பாரியின் நண்பர் யார்?

3. பாரி மகளிரைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

23. குடிசைத் தொழில்

குடிசைத் தொழில்களைச் செய்வோம்—நாட்டுக்
குடிகள் வளர்ந்து கொழித்திடச் செய்வோம்.

1. அடிமைத் தொழிலை மறப்போம்—நமக்
காக வுழைத்துப் பொருளாற் சிறப்போம் ;
மிடிமை பறந்திட வேண்டும்—நம்மை
வேறுள நாட்டவர் போற்றவும் வேண்டும்.

2. பருத்தியைத் திருத்தமாய் நூற்போம்—வரும்
பலவகை நூற்களாற் பலன்களை ஏற்போம் ;
பொருத்தமாய் ஆடைகள் நெய்வோம்—பிறர்
போர்க்க வுடுக்கப் புகழ்ந்திடச் செய்வோம்.

3. ஆடுமாடுகள் வளர்ப்போம்—அவை
அளித்திடும் பொருளாற் செல்வம் வளர்ப்போம்.
வாழ்வுறு தேனீ வளர்ப்போம்—அது
வழங்கிடும் தேனால் மருந்துகள் செய்வோம்.

4. பாய்களைப் பலபடி நெய்வோம்—பிறர்
பார்த்து மயங்கவே பலதொழில் செய்வோம் ;
நோய்களை வென்று நம் நாட்டில்—நாம்
நூற்றாண்டு வாழும் வழிகளைச் செய்வோம்.

தேனீ	ஆடைகள்	திருத்தமாய்
உடுக்க	போர்க்க	கொழித்திட
பலபடி	ஏற்போம்	பொருத்தமாய்
மிடிமை	நெய்வோம்	குடிசைத் தொழில்
குடிகள்	போற்றவும்	அடிமைத் தொழில்
மயங்கும்		

அரும்பதவுரை

மிடிமை - தரித்திரம். பலபடி - பலவிதமாக. நூற்றுண்டு- நூறு வருஷம். போற்ற - கொண்டாட. கொழித்திட - செழிக்க.

கேள்விகள்

1. கைத்தொழில் என்றுல் என்ன ?
2. கைத்தொழிலால் தேசத்துக்கு விளையும் நன்மை யாது?
3. உனக்குத் தெரிந்த குடிசைத் தொழில்களைக் கூறு.

24. கிராம அதிகாரிகள்

[கந்தனும் அவன் தந்தையும் வீதி வழியே போகின்றனர். அப்பொழுது கிராம முனிசீப்பு, தலையாரி, வெட்டியான் இவர்கள் ஓர் வீட்டின்முன் நிற்கின்றனர். அவர்களைச் சுட்டிக் கந்தன் கேட்கிறான்.]

கந்தன் : அப்பா, இவர்கள் யார் ?

தந்தை : கந்தா, இவர்களில், முன்னே நிற்பவர் கிராம முனிசீப்பு. அவருக்குப் பக்கத்தில் நிற்பவன் தலையாரி. கையில் தடி வைத்துக் கொண்டு நிற்பவன் வெட்டியான்.

கந்தன் : ஏன் அப்பா, இவர்கள் இங்கே நிற்கிறார்கள் ?

தந்தை : இவர்கள் வாயிதாப் பணம் வசூலிக்கின்றனர்.

கந்தன் : வாயிதாப் பணம் என்றால் என்ன?

தந்தை : நிலத்திற்கு வரி கொடுக்கிறோம் அல்லவா? அந்த வரிக்கு வாயிதாப் பணம் என்று பெயர்.

கந்தன் : நிலத்திற்கு ஏன் வரி கொடுக்க வேண்டும் ? நிலம் நம்முடையதுதானே.

தந்தை : நிலம் நம்முடையதுதான். ஆனால் நாம் நம்மை ஆளும் அரசாங்கத்துக்கு உட்பட்ட குடிகள். அரசியலார் நமக்காகப் பல காரியங்களைச் செய்கிறார்கள். நிலங்களுக்குத் தண்ணீர் பாய்வதற்கு வேண்டிய வசதிகள் செய்கிறார்கள்; திருடர் பயம் இல்

லாது பாதுகாக்கிறுர்கள். திருடர்களேயும் கலகம் செய்பவர்களேயும் தண்டிக்கிறுர்கள் ; தரும வைத்தியசாலே ஏற்படுத்தியிருக்கிறுர்கள். இன்னும், இதுபோன்ற பல நன்மைகளேச் செய்கிறுர்கள். இதற்கெல்லாம் பணம் வேண்டுமல்லவா ? நாம் அரசாங்கத்திற்குக் கொடுக்கும் வரிப்பணமே இதற்கெல்லாம் உதவுகிறது.

கந்தன் : சரிதான், அப்பா. இப்பொழுதுதான் நிலத்திற்கு வரிகொடுக்க வேண்டிய அவசியம் தெரிந்தது. ஆனுல், நிலவரிக்கு ஏன் வாயிதாப் பணம் என்று பெயர் ?

தந்தை : ஒரு ஆண்டுக்குள்ள நில வரியை நாலு தடவையாக வாங்குகிறுர்கள். தடவைக்கு வாயிதா என்பது பெயர். ஆதலால், ஒரு தடவையில் கொடுக்கும் பணத்திற்கு வாயிதாப் பணம் என்று பெயர் வழங்குகின்றது.

கந்தன் : கிராம முனிசீப்பு கையில் ஏதோ காகிதம் வைத்துக் கொண்டிருக்கிறுரே, அது என்ன ?

தந்தை : அதுதான் வரிக்கணக்கு. அதில் நிலத்துக்குரியவர் ஒவ்வொருவரும் கொடுக்க வேண்டிய வாயிதாப் பணம் இவ்வளவு என்று குறித்திருக்கும்.

கந்தன் : இன்னின்னுர் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று இவர் கணக்கு வைத்திருப்பாரா?

தந்தை : ஆமாம் ; ஆனுல், கணக்கு இவரால் தயாரிக்கப்பட்டதல்ல; கணக்கப்பிள்ளே தயாரித்தது.

கந்தன் : கணக்கப்பிள்ளே என்பவர் யார் ?

தந்தை : அவர் இங்கு இல்லை. அவர்தான் கிராமக் கணக்கைத் தயாரிப்பவர். அந்தக் கணக்கில் கிராமத்தில் இன்னின்னாருக்கு இவ்வளவு நிலம் உண்டு என்றும், அந்த நிலத்தில் இன்னின்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டதென்றும், அதற்கு வரி இவ்வள வென்றும் குறிக்கப்பட்டிருக்கும்.

கந்தன் : கிராம முனிசீப்பின் பக்கத்தில் தலையாரியும் வெட்டியானும் எதற்காக நிற்கிறார்கள்?

தந்தை : அவர்கள் கிராம முனிசீப்பு ஏவின வேலையைச் செய்பவர்கள். அதனால், அவர் வரி வசூலிக்க வரும்போது அவர்களும் கூட வருவார்கள்.

கந்தன் : இவர்களுக்குச் சம்பளம் உண்டா ?

தந்தை : இல்லாமல் என்ன ? உண்டு.

கந்தன் : அப்படியானால் இவர்களும் சர்க்கார் வேலைக்காரர்களா ?

தந்தை : ஆமாம் ; கிராம முனிசீப்பு, கணக்கப் பிள்ளை இவர்களைப் போலவே தலையாரியும், வெட்டியானும் சர்க்கார் வேலைக்காரர்களே. ஆனால், இவர்களில் கிராம முனிசீப்புக்கே பொறுப்பும் வேலையும் அதிகம்.

கந்தன் : என்ன வேலை? பணம் வசூலிப்பது தானே?

தந்தை : அதுமட்டுமா? அவர் ஒரு கிராமத்தில் வசூலிக்கப்பட வேண்டிய வரிப் பணம் முழுவதும் நிலுவையின்றி வசூலித்தாக வேண்டும். வசூலித்த

பணத்தை ஒழுங்காகச் சர்க்கார் கஜானுவில் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். கிராமங்களில் கலகம், களவு இவைகள் நடந்தால் அவற்றைக் கவனித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும். பொது வாக ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு கிராம முனிசீப் பின் மேற்பார்வையில் இருக்கும். அதனுல், அவருக் குக் கிராமத் தலைவர் என்றும் பெயர். அவருக்கு மதிப்பும் அதிகம்.

கந்தன் : சரி அப்பா, நாம் போகலாம் வாருங்கள்.

வரி	நிலுவை	அவசியம்	சர்க்கார்
வாயிதா	சாகுபடி	வசதிகள்	சம்பளம்
தடவை	குடிகள்	ஏவுதல்	இன்னின்னுர்
கஜானு	தலையாரி	பொறுப்பு	கணக்கப்பிள்ளை
வெட்டியான்	உட்பட்ட		

அருஞ்சொற்பொருள்

நிலுவை - பாக்கி நிற்கும் தொகை. அவசியம் - முக்கியம். கஜானு - சர்க்கார் பணம் வைத்திருக்கும் இடம். சாகுபடி - பயிர் செய்தல். ஏவுதல் - கட்டளையிடுதல், உத்தரவிடுதல். களவு - திருட்டு.

பயிற்சி

1. வரி, வசூல், தயாரிப்பார், கிராமம், அவசியம்—இச் சொற்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்துக் கூறு.

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களைச் சேர்த்துப் படி :

கிராம முனிசீப்பு கிராமத்திற்கு ——.

கிராம முனிசீப்புக்கு —— அதிகம்.

சர்க்கார் குடிகளுக்குப் பல —— செய்கிறுர்கள்.

குடிகள் —— வரிப்பணம் ——.

கேள்விகள்

1. கிராம முனிசீப்பின் வேலைகள் யாவை ?

2. கணக்கப்பிள்ளை என்னென்ன கணக்குகளைத் தயாரிப்பார் ?

3. குடிகள் சர்க்காருக்கு நிலவரி செலுத்துவது எதற்காக?

25. ஆத்தி சூடி

அறஞ்செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண்ணெழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டுண்.
ஒப்புர வொழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.
கண்டொன்று சொல்லேல்.
ஙப்போல் வளை.
சனி நீராடு.
ஞயம்பட வுரை.
தந்தை தாய்ப் பேண்.
நன்றி மறவேல்.
பருவத்தே பயிர்செய்.
மனம் தடுமாறேல்.
வஞ்சகம் பேசேல்.

இளமையிற் கல்.
காப்பது விரதம்.
குணமது கைவிடேல்.
கேள்வி முயல்.
கோதாட் டொழி.
செய்வன திருந்தச் செய்.
சேரிடம் அறிந்து சேர்.
சோம்பித் திரியேல்.
தெய்வம் இகழேல்.
நன்மை கடைப்பிடி.
நூல் பல கல்.
நோய்க்கு இடங்கொடேல்.
பெரியாரைத் துணைக்கொள்.
பொருள்தனைப் போற்றிவாழ்.
மீதூண் விரும்பேல்.
மூர்க்கரோடு இணங்கேல்.
மேன்மக்கள் சொற் கேள்.
மொழிவ தற மொழி.
வித்தை விரும்பு

அற	கோது	வஞ்சகம்	ஒழியேல்
வளை	கேள்வி	உத்தமன்	கரவேல்
பேண்	வித்தை	துயிலெழு	விலக்கேல்
ஐயம்	மீதூண்	உடையது	விளம்பேல்
சினம்	விரதம்	இயல்வது	தடுமாறேல்
அறம்	திருந்த	ஆறுவது	இணங்கேல்
ஈவது	காப்பது	ஔவியம்	கைவிடேல்
ஞயம்	வைகறை		

அரும்பதவுரை

அறம் - தருமம். ஆறுவது - தணியவேண்டியது. சினம் - கோபம். இயல்வது - செய்யக்கூடிய உதவி. கரத்தல் - ஒளித்தல். ஈவது - (பிறர் தருமமாகக்) கொடுப்பது. உடையது - பெற்றுள்ள பொருள். ஊக்கம் - விடா முயற்சி. எண் - கணக்கு. எழுத்து - தாய்மொழிப் பாடம். ஏற்பது - பிச்சை கேட்பது. ஐயம் - பிச்சை. ஒப்புரவு - உலக நடை. ஒழுகு - மேற்கொண்டு நட. ஔவியம் - பொறாமை. வளை - தழுவு. ஞயம்பட - இனிமை உண்டாகும்படி. பேண் - காப்பாற்று. பருவம் - ஏற்ற காலம். கல் - படி. காப்பது - (உயிர்களைக் கொல்லாமல்) காப்பாற்றுவது. கேள்வி - கற்றவர் கூறக் கேட்டல். கோது - குற்றம். ஆட்டு - விளையாட்டு.

26. கொன்றைவேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒருவனைப் பற்றி ஓரகத் திரு.
ஓதலின் நன்றே வேதியர்க் கொழுக்கம்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு.
கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை.
கிட்டா தாயின் வெட்டென மற.
குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க் கழகு.
சீரைத் தேடின் ஏரைத் தேடு.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
தீராக் கோபம் போராய் முடியும்.
தேடா தழிக்கின் பாடாய் முடியும்.
தையும் மாசியும் வையகத் துறங்கு.
தோழ னோடும் ஏழைமை பேசேல்.
நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.
நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நோன் பென்பது கொன்று தின்னாமை.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங் கென்பவை எல்லாம் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோ டுண்.
மாரி யல்லது காரியம் இல்லை.
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வளவன் ஆயினும் அளவறிந் தழித்துண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.

மாரி	சுருங்குதல்	அகம்	வெட்டென
சுற்றம்	கைப்பொருள்	ஏவா	கிட்டாது
வையம்	மெய்ப்பொருள்	கற்பு	ஏழைமை
திரை	பொல்லாங்கு	எண்ணி	காரியம்
எண்	தேம்பி	தவிர்	தேட்டு
புலை	திரவியம்	களவு	புகினும்
அன்னை	ஈன்றோர்	நீரகம்	வேதியர்
போர்	அல்லல்	சோம்பர்	ஆக்கம்
உண்டி	கருமம்	மந்திரம்	சாலவும்
முற்பகல்	நோன்பு	கேடு	மூவாமருந்து
பிற்பகல்	வளவன்	பாடு	இல்லறம்
திறம்பாமை	ஆலயம்	சான்றோர்	பிதா

அரும்பதவுரை

அன்னை - தாய். பிதா - தகப்பன். சாலவும் - மிகவும். தேட்டு - தேடிய பொருள், செல்வம். ஏவா - கட்டளையிடாமலே குறிப்பினால் அறிந்து ஒழுகுகின்ற. மூவா மருந்து - மூப்படையா மருந்து, தேவாமிர்தம். வேதியர் - வேதம் ஓதுபவர். திறம்பாமை - மாறாமை. தேம்பி - வருந்தி. மந்திரம் - உறுதிமொழி. திரை - அலை. திரவியம் - செல்வம். பாடாய் - கஷ்டமாய். வையகம் - வைக்கோல் வேய்ந்த வீடு. அல்லல் - துன்பம். பொல்லாங்கு - தீயவை. வளவன் - (சோழன்), பெருஞ்செல்வன். ஊக்கம் - முயற்சி. ஆக்கம் - செல்வம்.

பைந்தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி

'T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம் | 2/27, பிராட்வே
திருச்சிராப்பள்ளி | ஜி. டி., சென்னை

1954
[விலை அணா 10

பதிப்புரிமை]

முதற் பதிப்பு—நவம்பர், 1954

Kabeer Printing Works, Madras (2712)

முன்னுரை

ஒவ்வொரு நாட்டினரும் தமது தாய்மொழியைப் போற்றிப் பயிலவேண்டுவது இன்றியமையாத கடமையாகும். அதுபற்றியே நமது அரசியலாரும் ஆரம்ப பாடசாலைகளில் தாய்மொழிப் பயிற்சியை முதன்மையான பாடமாகவும் கட்டாய பாடமாகவும் அமைத்துள்ளார். நமது தாய்மொழியாகிய தமிழ் ஒரு இனிய மொழி. தமிழில், ஆரம்ப பாடசாலைப் பாட புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன வாயினும், தமிழ் வளர்ச்சி கருதி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எத்தனை புத்தகங்கள் வெளிவரினும் நலமே. ஆதலின், '**பைந்தமிழ் வாசகம்**' என்னும் பெயரால் இப் புதிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் வகுப்புக்கேற்ற வண்ணமும், மாணவர்கள் மேலும் மேலும் புதிய சொற்களைக் கற்பதற்கேற்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியைத் தருதலே பாட புத்தகத்தின் முக்கிய நோக்கமாதலின், அதற்குத் தக்கவாறு பயிற்சிகளும் கேள்விகளும் தரப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந்தாம் வகுப்புக்களில் அரும்பதவுரை கொடுக்கப்பட்டிருத்தலோடு அந்தந்த வகுப்புக்கேற்ற அளவு எளிய முறையில் பாட சம்பந்தமான உதாரணங்களைக்கொண்டு இலக்கண

விதிகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக்குச் சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ள கதைப் பாட்டுக்களும் உரையாடலும் அங்கங்கே வேண்டிய அளவு தரப்பட்டுள்ளன.

கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச்சாலை யாசிரியரும் இப்புத்தகங்களைத் தங்கள் கல்விச்சாலைகளில் பாட புத்தகமாக வைத்து ஆதரிப்பார்களென்று நம்புகின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை.

உள்ளுறை

பாடம்			பக்கம்
1.	அன்னையும் பிதாவும்	...	1
2.	நமது நாடு (செய்யுள்)	...	5
3.	யானை	...	8
4.	இளங்கோ	...	14
5.	ஊர்க்காவல் (உரையாடல்)	...	20
6.	அன்பின் அருஞ்செயல்	...	26
7.	கடிகாரம்	...	30
8.	பென்சில் சொல்லும் கதை	...	36
9.	ஆமையும் முயலும் (செய்யுள்)	...	41
10.	வீர சிதம்பரனார்	...	45
11.	தென்னை வருக்கம்	...	48
12.	மயில்	...	54
13.	தபால் வழியே பணம் அனுப்புதல்	...	59
14.	காகிதம்	...	65
15.	தாகூர்	...	71
16.	படம் பார்த்துக் கதை சொல்லல்	...	77
17.	கரும்பு	...	78
18.	அதியமான்	...	85
19.	வேடனும் புறக்களும் (செய்யுள்)	...	90
20.	படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல்	...	94
21.	கடிதம் எழுதுதல்	...	95
22.	கிளிக்கண்ணி	...	99
23.	பழமொழிகள்	...	101
24.	குமணன் (ஓர் நாடகம்)	...	103
25.	வெற்றிவேற்கை	...	110
26.	வாக்குண்டாம்	...	118

நான்காம் வகுப்பிற் குரியது

1. அன்னையும் பிதாவும்

1. நம்மைப் பெற்றவள் தாய். அவள் வயிற்றில் நாம் பத்து மாதம் இருந்தோம். அந்த நாளெல்லாம் நம்மைச் சுமந்துகொண்டிருந்த தாய் உரிய காலத்தில் ஈன்றாள். தான் ஈன்ற குழந்தையைக் கண்ட தாய்க்கு அதைத் தாங்கிய வருத்தமெல்லாம் பறந்து போகும்; அளவற்ற மகிழ்ச்சி உண்டாகும்.

2. கைக்குழந்தை தானாக ஆகாரத்தை உண்ண முடியுமா? உடம்பிலுள்ள அழுக்கைப் போக்கிக் கொள்ள முடியுமா? தனக்கு வேண்டிய மற்ற வசதிகளைச் செய்துகொள்ள முடியுமா? முடியாதல்லவா? ஆதலால், தாய் அதன் பசி யறிந்து பாலூட்டுவாள்; அழுக்கு நீக்கி நீராட்டுவாள்; தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவாள். இன்னும், தாய் உச்சிமோந்து முத்தமிடுவாள்; கொஞ்சி மகிழ்வாள்.

3. இவ்வாறு வளர்க்கின்ற தாயைக் குழந்தை அறிந்துகொள்ளும். தாய் தன் கணவனைக் குழந்தைக்குக் காட்டி 'இதோ, உன் அப்பா' எனக் கூறுவாள். இவ்விதம் தாய் காட்டிய பின்பே குழந்தை தந்தையை அறியும். ஆதலால், குழந்தை முதலில்

தாயையும் பின்பு தந்தையையும் அறிந்துகொள்ளு கிறது.

4. குழந்தையை வளர்ப்பதற்குத் தாய் படும் பாடு மிக அதிகம். நோயினுல் குழந்தை வருந்தும். அதைத் தாய் தாளுக அறிந்து சிகிச்சை செய்வாள்; பாலூட்டுகின்ற தானும் பத்தியமிருப்பாள். குழந்தையினிடம் ஈ, எறும்பு அணுகாமல் பாதுகாப்பாள். குழந்தையின் உடல்நிலை யறிந்து அதற்கு ஏற்ற வகையாக உணவு கொடுப்பாள்.

5. தாய் குழந்தையை இவ்விதம் அன்போடு வளர்ப்பதற்குத் தந்தையின் உதவியும் வேண்டும் அல்லவா? தந்தை, வேண்டிய பொருள் தேடிக் கொண்டு வருவார். குழந்தையின் வளர்ச்சியில் தந்தைக்கும் கருத்து இருக்கும். குழந்தை வளர்ந்து மழலைச்சொல் பேசும்போது அதைக் கேட்பதில் தாய் தந்தையர்க்கு அளவற்ற இன்பம் உண்டாகும். அதன் உடம்பைத் தீண்டித் தூக்கிக் கொஞ்சுவதில் பெற்றோர்க்கு உண்டாகும் இன்பமும் மிக அதிகம்.

6. ஐந்து வயதானதும் பிள்ளையைப் படிக்க வைக்க வேண்டு மல்லவா? அதற்காகப் பெற்றோர்கள் பிள்ளையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவார்கள்; உபாத்தியாயருக்குச் சம்பளம் கொடுப்பார்கள்; பிள்ளைக்குப் புத்தகம் முதலியவற்றையும் வாங்கி அளிப்பார்கள். ஆடை முதலியவற்றை வாங்கித் தருகின்றவர்களும் பெற்றோர்களே.

7. பிள்ளைகள் சில வேளைகளில் குறும்பு செய்

வார்கள். உங்களில் சிலரும் குறும்புக்காரர்களாக இருப்பீர்கள். குறும்பு தீங்கை உண்டுபண்ணும். ஆதலால், குறும்பு செய்வதைக் கண்டால் ஆசிரியர் கண்டிப்பார்; பெற்ரேர்களும் கண்டிப்பார்கள். ஆனாலும் தாய் அடிக்கும்போது தந்தை அணைப்பார்; தந்தை அடிக்கும்போது தாய் அணைப்பாள். பிள்ளை நன்ருகப் படித்து ஒழுங்குள்ளவனுகவும் நற்குணம் உள்ளவனுகவும் இருந்தால் பெற்ரேர்க்கு மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும். அதிலும் தாய் தான் பிள்ளையைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான மகிழ்ச்சி அடைவாள்.

8. பிள்ளைக்குப் பெற்ரேர் எவ்வளவு உபகாரம் செய்கிருர்கள்! வேறு யாரேனும் இவ்வளவு உதவி செய்வார்களா? உதவி செய்தவரை நாம் என்றும் மறத்தல் ஆகாது. பெற்ரேர்களைத் தெய்வமாகக் கொள்ள வேண்டும். அதனுல்தான் தாயார் என்றும் தந்தையார் என்றும் மரியாதையாய்க் கூறுகின்ரேம். நாம் பெற்ரேர்களிடம் அன்பு பாராட்டவேண்டும்; அவர்கட்கு அடங்கி நடக்கவேண்டும்; பணிவிடை செய்யவேண்டும்.

9. தாய்க்கு அன்னை என்றும் தந்தைக்குப் பிதா என்றும் பெயருண்டு. குழந்தை முதலில் அன்னையை அறிகின்றது. அதன் பின்பு பிதாவை அறிகின்றது. பெற்ரேர்கள்தான் நாம் முதலில் அறிந்த தெய்வங்கள்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஈன்ற	கொஞ்சு	சிகிச்சை	உடல் நிலை
உரிய	பத்தியம்	பணிவிடை	படும்பாடு
மழலை	அடங்கி	தாலாட்டு	பாலூட்டுதல்
முத்தம்	குறும்பு	நீராட்டு	கைக்குழந்தை
அழுக்கு	அணைத்தல்	உச்சி மோந்து	போக்கி

அரும்பதவுரை

ஈன்ற - பெற்ற. *சிகிச்சை* - வைத்தியம். *அணுகு* - நெருங்கு. **மழலைச் சொல்** - குழந்தைகள் கொஞ்சிப் பேசும் வார்த்தைகள். **பணிவிடை** - வேலை, தொண்டு.

பயிற்சி

1. *சிகிச்சை, தாலாட்டு, மழலைச்சொல், பத்தியம்,* ஒழுங்கு—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. வளர்ச்சி, கருத்து, மகிழ்ச்சி, வளர், கருது, மகிழ்—இவை ஒவ்வொன்றும் என்ன சொல் ?

கேள்விகள்

1. பிள்ளைக்குத் தாய் செய்யும் உதவி யாது ?

2. தந்தை எவ்வாறு குழந்தையை வளர்க்கிறார் ?

3. பெற்றோர்க்குப் பிள்ளைகளால் எப்பொழுது மகிழ்ச்சி உண்டாகும் ?

2. நமது நாடு

[இந்தியா என்பது நாம் வசிக்கும் நாடு. இதனை முற்காலத்தில் பல மன்னர்கள் ஆண்டு வந்தனர். அவர்களுள் மிகவும் முற்பட்டவன் துஷ்யந்தன் மகனாகிய பரதன் என்பவன். அதனால் இந்நாட்டுக்குப் பாரத நாடு என்று பெயர். நம்நாடு உயர்ந்த மலைகளும் சிறந்த ஆறுகளும் உடையது; நிலவளமும் நீர்வளமும் மிகுந்தது; மக்கள் வாழ்க்கைக்கு வேண்டிய நெல், பருத்தி முதலிய பொருள்களையெல்லாம் மிகுதியாகக் கொடுப்பது; மிகச் செழுமை வாய்ந்தது; கல்வி அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர் தோன்றியது; செங்கோல் மன்னர் அரசு செலுத்தியது; அடியார்கள் வாழ்ந்து வந்தது.]

1. பாரத நாடுநம் நாடு - தன்மை
ஓரின்எந் நாடுமே இல்லையோர் ஈடு.

2. இமயமென் பதுவுமோர் மலையாம் - புவியில்
அமைந்துள மலைகளில் அதுதானே தலையாம்.

3. கங்கையும் சிந்துவும் பாயும் - என்றும்
பங்கமில் காவேரி பண்புடன் பாயும்.

4. நெல்லும் கரும்பும்உண் டாகும் - நல்ல
பல்வித வாழை பலாவும்உண் டாகும்.

5. பருத்தி சணல்பயி ராகும் - நல்ல
குருத்துடைத் தென்னை பனைபயி ராகும்.

6. முத்தும் பவளமும் பொன்னும் - மணம்
மெத்தவு டையசந் தனமுமே மன்னும்.

7. கல்விக் கரைகண்டோர் பலரே - அவருள்
வள்ளுவர் வான்மீகர் கம்பர்ஓர் சிலரே.

8. உண்மை ஒழுக்கமும் உடையோர் - மக்கள்
திண்மை அருள்ஈகை செல்வமும் உடையோர்.

9. மன்னர்என் போர்மிகப் பலரே - குடிகட்
கன்னையும் அத்தனு மாக ஆள் பவரே.

10. கடவுள்உண் டென்னுமக் கொள்கை - உடைய
திடமன முடையோர் பண்பொண் ணுமோ சொல்கை.

11. நாயன்மார் ஆழ்வார்என் பவர்கள் - மனம்
தூயராய்த் தெய்வம்தொ ழுமடி யவர்கள்.

12. பாரத நாடுநம் நாடு - தன்மை
ஓரின்இ தற்கிணை இல்லைஓர் நாடு.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

தலை	அத்தன்	அடியார்கள்	முத்து
புவி	செழுமை	சந்தனம்	இணை
ஈடு	திண்மை	தூயராய்	குருத்து
ஈகை	மன்னும்	ஒண்ணுமோ	ஆழ்வார்
ஓரின்	பங்கம்	பாரதநாடு	நாயன்மார்
பண்பு	பவளம்	கல்விக்கரை	திடமனம்

அரும்பதவுரை

வளம் - செழிப்பு. புவி - பூமி. தலை - சிறந்தது, முக்கியமானது. பங்கம் - குறைவு. பண்பு - குணம். திண்மை - உறுதி. ஈகை - கொடை, தருமம். ஈ-கொடு. அத்தன் - தகப்பன். தூயராய் - பரிசுத்த முள்ளவர்களாய். தூய்மை - பரிசுத்தம். ஒண்ணுமோ - கூடுமோ. ஓரின் - ஆராய்ந்து பார்த்தால்.

பயிற்சி

நம் நாட்டின் சிறப்பைப்பற்றி இந்தப் பாடத்தில் படித்தோம் - நீ வசிக்கும் ஊரின் சிறப்பைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.

கேள்விகள்

1. நமது நாட்டில் உள்ள முக்கிய ஆறுகள் எவை? இமயமலையின் சிறப்பு என்ன?

2. நமது நாட்டில் தோன்றிய சிறந்த புலவர்கள் சிலரின் பெயரைக் கூறு.

3. நம் நாட்டு மன்னர்கள் குடிகளை எவ்வாறு ஆண்டு வந்தார்கள்?



3. யானை

1. பிள்ளைகளே, இந்தப் படத்தில் காணப்படும் பிராணியை நீங்கள் அடிக்கடி பார்ப்பதுண்டா? நாம் ஆடுமாடுகளை நாள்தோறும் காணுவதுபோல் இதனைக் காண முடியாது. இது குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் மிருக வருக்கத்தைச் சேர்ந்தது. ஆனால், மற்ற விலங்குகளுக்கு இல்லாததும் முகத்திலிருந்து நீண்டு தொங்குவதுமாகிய ஒரு உறுப்பு இதற்கு இருப்பதைக் காண்பீர்கள். அது என்ன?

2. யானை நிலத்தில் வசிக்கும் பிராணிகள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. யானை சுமார் பத்தடி உயரம் இருக்கும். ஆண் யானைக்குக் **களிறு** என்றும் பெண் யானைக்குப் **பிடி** என்றும் பெயர். இதன் அவயவங்களைப் பாருங்கள். அவை மிகவும் வியக்

கத் தக்கவை. இதற்குத் தூண் போன்ற கால்களும், முறம் போன்ற காதுகளும், பனந்துண்டு போலத் தொங்கும் கையும், பருத்த உடலும் அமைந்துள்ளன. இதன் கண்கள் மிகச் சிறியவை; வாலும் சிறிது. வாலின் நுனியில் தடித்த மயிர் உண்டு. ஆண் யானைக்கு நீண்ட வெண்மையான பெரிய தந்தங்கள் உண்டு. இத் தந்தங்கள் வாயின் மேல்தாடை யிலிருந்து நீண்டு வந்த பற்களே. யானையின் கால் களில் குட்டையான விரல்களும், விரல்களில் பெரிய நகங்களும் உண்டு.

3. யானையின் முகத்தினின்று தொங்கும் உறுப் பைத் தும்பிக்கை என்று சொல்லுகிறோம். யானைக் குத் **தும்பி** என்றும் பெயருண்டு. அதனால் இதன் கை தும்பிக்கை என்று சொல்லப்படுகிறது. ஆனால், அது உண்மையில் கை அன்று; அது மிகவும் நீள மாக உள்ள மூக்கே. அதில் மூக்குத் துவாரங்கள் அமைந்துள்ளன. மூக்கு என்பது முகத்தில் உள்ள உறுப்பல்லவா? ஆயினும், அது கை போல உதவு வதால் கை என்று சொல்லப்படுகிறது. அந்தச் சிறப்பான கை என்னும் அவயவம் இருப்பதனால் யானைக்குக் **கைம்மா** என்றும் பெயர் உண்டு. கைம்மா என்றால் கை உள்ள மிருகம் என்று பொருள். கையின் நுனியில் விரல் போன்ற ஒரு சிறு உறுப்பும் உண்டு. அதனால் யானை மிகச் சிறிய பொருளையும் பற்றி எடுக்கும்.

4. யானையின் ஆகாரம் நாணற்புல், தழைகள்,

இளங்கிளைகள், கரும்பு, மூங்கிற்குருத்து முதலியவை ஆகும். இது மிகவும் பருத்த உடல் உடையது. ஆத லால் அதற்கு மிகுந்த தீனி வேண்டும். அதனாலேயே "யானைக்குத் தீனி போடுவதுபோல்" என்னும் பழ மொழியும் வழங்கி வருகிறது. யானை தன் தும்பிக் கையினால் மரக்கிளைகளை வளைத்து, இலை தழைகளைப் பறிக்கும். கரும்பு முதலியவற்றையும் ஒரே சுற்றாகச் சுழற்றிப் பிடுங்கிவிடும். தும்பிக்கையில் எலும்பு இல்லை. அதனால், அதை யானை தன் விருப்பம்போல் வளைத்து ஆகாரத்தை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளும். தண்ணீரையும் அதில் உள்ள குழாய் போன்ற துவாரத்தில் உறிஞ்சிப் பின்பு வாயில் விட்டுப் பருகும். யானையின் கடைவாயில் மிகவும் கெட்டியான பெரிய பற்கள் உண்டு. அவைகளால் முழுத் தேங்காயையும் '**நொறு நொறு**' என்று கடித்துத் தின்றுவிடும்.

5. யானைகள் காட்டில் கூட்டம் கூட்டமாகச் சஞ்சரிக்கும்; ஓர் இடத்தினின்று மற்றோர் இடத் திற்குப் போகும்போது வயது சென்ற களிறுகள் முன்னும், பிடிகளும் கன்றுகளும் நடுவிலும், இளம் பருவமுள்ளவை பின்னும் செல்லும். யானை பெருந் தன்மையும் கூர்மையான அறிவும் உள்ள பிராணி. அதற்கு மிகுந்த ஞாபக சக்தியும் உண்டு. ஒருவர் தனக்குச் செய்த நன்மை தீமைகளை என்றும் மறக் காது. பிறர் செய்த தீமையைப் பல ஆண்டுகள் கழிந்தாலும் மறவாது நினைத்திருந்து சமயம் நேர்ந்த

பொழுது பழிவாங்கி விடும். ஆயினும், யானை தன்னை அன்போடு வளர்க்கும் பாகனுக்கு அடங்கி அவன் சொற்படி நடக்கும்.

6. யானை பெரிய உருவமுடையது; ஆயினும் அது நடக்கும்போது காலோசை கேளாது. ஆகை யால், அது வருவதை மனிதர்கள் தெரிந்து கொள்ளு வதற்காக அதற்கு மணி கட்டுவது வழக்கம். யானை பின்னே வரினும் அதன் மணியோசை அது வரு வதை முன்னே அறிவித்துவிடும். 'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' என்பது பழமொழி. யானை விரைவாக ஓட இயலாது. ஆயி னும், பெருநடையாக நடந்து மணிக்குப் பதினைந்து மைல் வீதம் செல்லும்.

7. மைசூர், திருவாங்கூர், பர்மா, இலங்கை முதலிய இடங்களில் உள்ள காடுகளிலும் ஆப் பிரிக்காக் கண்டத்தின் வனங்களிலும் யானை மிகுதி யாகக் காணப்படும். யானை நூறு வருஷம் வரை உயிரோடு வாழும். பழகிய யானைகளின் உதவியால் காட்டு யானைகளையும் யானைக் கன்றுகளையும் பிடித் துக் கொண்டுவந்து வளர்ப்பதுண்டு. அவ்வாறு வளர்க்கப்படும் யானைகளைப் பெரிய கோவில்களிலும், அரண்மனைகளிலும் பார்க்கலாம். 'சர்க்கஸ்' ஆட் டத்திலும் யானைகளைப் பழக்கிப் பல வேடிக்கைகள் காட்டுவார்கள்.

8. அலங்காரத்தின் பொருட்டுக் கோயில்களி லும், அரசர்கள் அரண்மனைகளிலும் யானை வளர்க்

கப்படுகிறது. காடுகளில் வெட்டப்பட்ட மரங்களைக் கொண்டு வருவதற்கு யானையை உபயோகிக்கிறார்கள். யானையின் தந்தம் மிக விலை உயர்ந்தது. தந்தத்தால் மிக நுட்பமான வேலைப்பாடு உள்ள சாமான்கள் செய்கிறார்கள். ஆதலால், தந்தத்திற்காகவும் யானையை வேட்டையாடுகிறார்கள். முற்காலத்தில் நமது நாட்டில் இருந்த நால்வகைப் படைகளில் யானைப்படை ஒரு வகை. அரசர்களும் மற்றைய பெரியோர்களும் சிற்சில காலங்களில் யானைமேல் அம்பாரி வைத்து அதன் மேல் ஏறி நகர் வலம் வருதல் உண்டு.

பிடி	இயலாது	நகர்வலம்	தாடை
களிறு	அம்பாரி	ஞாபகசக்தி	தடித்த
தந்தம்	அரண்மனை	பழிவாங்குதல்	உறுப்பு
கைம்மா	வருக்கம்	பெருநடை	குழாம்
அடிக்கடி	சஞ்சரித்தல்	அலங்காரம்	வேலைப்பாடு
உறிஞ்சுதல்	பெருந்தன்மை	ஒரே சுழற்றாக	பனந்துண்டு

அரும்பதவுரை

அவயவம் - உறுப்பு. பழிவாங்குதல் - தீமை செய்தவர்களுக்குப் பதில் தீங்கு செய்தல். நகர்வலம் - ஊரை வலமாகச் சுற்றி வருதல். இயலாது - முடியாது. அரண்மனை - அரசர் வசிக்கும் வீடு. கைம்மா - கையையுடைய மிருகம், யானை. வருக்கம் - இனம்.

பயிற்சி

இலக்கணம்

1. யானை மிகுந்த ஞாபக சக்தி உடையது.—இது ஒரு வாக்கியம் அல்லவா? இதில் பொருள் முடியும் இடம் எது? 'உடையது' என்பது பொருள் முடிவு பெற்று நிற்கும் இடம். பொருள் முடிவு பெற்று நிற்கும் இடம் பயனிலை எனப்படும்.

பயனிலை என்பது ஒரு வாக்கியத்தின் பொருளை முடித்து நிற்கும் சொல்.

2. 'உடையது' என்ற பயனிலைக்குமுன் யார் அல்லது எது என்னும் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால் 'யானை' என்ற விடை வரும். 'யானை' என்பது இவ்வாக்கியத்தின் எழுவாய். 'எழுவாய்' என்பதற்குத் தொழில் உண்டாகும் இடம் என்று பொருள்.

எழுவாய் என்பது தொழில் உண்டாவதற்குக் காரணமாக உள்ள கருத்தாவைத் தெரிவிக்கும் சொல்.

3. 'உடையது' என்ற பயனிலைக்குமுன் 'யாரை' அல்லது 'எதை' என்னும் சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால் 'ஞாபக சக்தி' என்ற விடை வரும். 'ஞாபக சக்தி' என்பது இவ்வாக்கியத்தின் செயப்படுபொருள் ஆகும்.

செயப்படுபொருள் என்பது கருத்தாவின் தொழிலை அடையும் பொருளைக் குறிக்கும் சொல்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பன ஒரு வாக்கியத்தின் முக்கியமான பாகங்கள் ஆகும்.

4. பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்துக் கூறு :

(1) யானை முழுத்தேங்காயை நொறுநொறு என்று கடித்துத் தின்றுவிடும்.

(2) நீ யானையைப் பார்த்திருக்கிறாயா ?

(3) யானை தன் தும்பிக்கையால் தழைகளைப் பறிக்கும்.

கேள்விகள்

1. யானையின் முகத்திலிருந்து தொங்கும் உறுப்புக்கு என்ன பெயர்? அது அதற்கு எவ்வாறு உபயோகப்படுகிறது?

2. யானையைப் பற்றிய பழமொழிகள் எவை?

3. யானையினால் மனிதருக்கு என்ன உபயோகம்?

4. யானையினிடத்தில் அமைந்துள்ள முக்கியமான குணம் என்ன?

5. யானைகள் எங்கே வசிக்கும்? மனிதர்கள் அவைகளை எவ்வாறு பிடித்து வளர்க்கிறார்கள்?

4. இளங்கோ

1. நாம் பேசும் பாஷை தமிழ். பாஷை, மொழி யென்றும் கூறப்படும். தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழ்நாடு. முற்காலத்தில் தமிழ்நாடு மூன்று பிரிவாக இருந்தது. அவைகள் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. இவற்றுள் **சேரநாடு** என்பது தென்னிந்தியாவின் மேற்குப் பகுதியே. இதில் பல மலைகள் உள்ளன. ஆதலால், சேர நாட்டுக்கு மலைநாடு என்றும் பெயர் உண்டு. சேர நாட்டின் தலைமை நகரம் **வஞ்சிமா நகர்** என்பது.

2. சேரநாட்டை ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் **சேரலாதன்** என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். தமிழ்நாட்டு மன்னனாகிய இச் சேரலாதன் புகழ் பாரதநாடு முழுதும் பரவியிருந்தது. இம்மன்னனுக்கு இவன் மனைவி **நற்சோணை** என்பவள் வயிற்றில் இரண்டு புதல்வர்கள் உதித்தனர். இவர்களில் மூத்தவன் பெயர் **செங்குட்டுவன்**; இளையவன் பெயர் **இளங்கோ**.

3. அரசகுமாரர்களில் மூத்தவனே தந்தைக்குப் பின் அரசாளும் உரிமையுடையோன். ஆதலின், அவ்வுரிமை தோன்ற அரசன் தன் மூத்த மைந்தனுக்குச் 'செங்குட்டுவன்' எனப் பெயரிட்டான். 'குட்டுவன்' என்பது சேர மன்னரின் பட்டப் பெயர்களில் ஒன்று. 'செங்குட்டுவன்' என்பதற்கு 'நல்ல சேர மன்னன்' என்பது பொருள். இளையவனும் அரச வமிசத்தில்

பிறந்தவனல்லவா? ஆதலின், அவனுக்கும் அச்சிறப்புத் தோன்ற 'இளங்கோ' என்று பெயர் வழங்கியது. இளங்கோ என்பதற்கு இளவரசன் என்று பொருள்.

4. இளங்கோ கல்வியில் தேர்ச்சி பெற்றவன்; தமிழில் பெரும்புலமை உடையவன்; நற்குணமும் நல்லொழுக்கமும் வாய்ந்தவன்; தெய்வபக்தி உள்ளவன்; அரசனுக்கு வேண்டிய அங்கலட்சணம் முழுதும் பொருந்தியவன்.

5. ஒரு நாள், சேரலாதன் தன் மக்களோடும், அமைச்சர், சேனைத் தலைவர் முதலியவரோடும் கொலுவிருக்கும்போது ஒரு நிமித்திகன் வந்தான். அவன் அரசன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்து அரச குமாரர்களை அடிமுதல் முடிவரையில்

சற்று நேரம் ஏற இறங்கப் பார்த்தான். பின்பு, 'இளங்கோ அரசாளும் தகுதியுடையவன்; ஆதலின் அவன் அரசுரிமை பெறுவான்,' எனக் கூறினான். அது கேட்ட அரசன் முதலியோர் திகைப் பெய்தினர்.

6. இளங்கோவோ அவனை வெகுண்டு நோக்கினான். ஏன்? செங்குட்டுவன் மூத்த புதல்வன். ஆதலால் அவனே தன் தந்தைக்குப் பின் அரசாளும் உரிமை உடையவன். ஆனால் நிமித்திகன் தமையன் இருக்கவும் தம்பிக்கு அரசுரிமை உண்டு என்று கூறினான். இது முறை தவறு அல்லவா? அதனால்தான் இளங்கோ அவனிடம் சினங்கொண்டான்.

7. இளங்கோ, நிமித்திகன் கூறியதைக் கேட்ட தன் தமையன் மிக்க வருத்தமடைவானே என எண்ணினான்; தமையன் மனத்தில் ஏற்படக்கூடிய ஐயத்தைப் போக்கவும் நிமித்திகன் சொல்லைப் பொய்யாக்கவும் கருதினான். உடனே, தன் ஆடை அணிகளையெல்லாம் கழற்றி வைத்துவிட்டுத் துறவுக்கோலம் பூண்டான்; இனி அரண்மனையைத் திரும்பிப் பார்ப்பதில்லை என்னும் உறுதியுடன் வஞ்சிமா நகரின் கிழக்கே உள்ள ஒரு கோயிலுக்குச் சென்று அங்கேயே வசித்து வரலானான். தமையனிடம் தம்பிக்கு உள்ள அன்பு எத்தகையது, பாருங்கள்! இளமைப் பருவத்தில் அரச போகத்தை நீத்துத் துறவியாதல் எல்லாருக்கும் எளிதில் இயலுமா?

8. இளங்கோவின் துறவைக்கண்ட அனைவரும்

அவரிடம் மிகுந்த அன்பும் பணிவும் உடையவர்கள் ஆனார்கள் ; அவர் துறவு பூண்டது முதல் அவரை யாவரும் ' இளங்கோ அடிகள் ' என அழைத்தார்கள். அடிகள் என்பது பெரியோர்களுக்கு வழங்கும் பட்டப் பெயர். அப்பூதியடிகள், பட்டினத்தடிகள், காந்தியடிகள் என வழங்கும் பெயர்களை நீங்கள் கேட்டிருப்பீர்கள்.

9. சேரலாதனுக்குப் பின் செங்குட்டுவன் அரசாட்சியை மேற்கொண்டு மிகச் சிறப்பாக ஆண்டு வந்தான். அப்பொழுது அவனுக்குச் சேரன் செங்குட்டுவன் என்று பெயர் வழங்கலாயிற்று. சேரன் என்பது குடிப்பெயர். அவன் தன் அருமைத் தம்பியாரிடம் அளவற்ற அன்பும் மதிப்பும் உடையவனாக இருந்தான்.

10. செங்குட்டுவன் காலத்தில் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் மதுரையில் அரசாட்சி செய்தான். அவன், சோழ நாட்டில் உள்ள காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து மனைவியின் சிலம்பை விற்க வந்த கோவலனை, அரண்மனைச் சிலம்பு திருடிய கள்வன் எனக் கருதி, அநியாயமாகக் கொலை செய்வித்தான். கோவலன் மனைவி கண்ணகி கற்பிற் சிறந்தவள். அவள் தன் கணவன் கள்வன் அல்லன் என அரசனுக்கு நிரூபித்துக் காட்டினாள். பாண்டியன் தன் பெரும்பிழையை அறிந்து அஞ்சி உயிர் துறந்தான். கண்ணகி மதுரை மாநகரைத் தீக்கிரையாக்கி வஞ்சிமாநகர் சென்று அங்கு ஆகாயத்திலிருந்து

விமானத்தில் தெய்வ வடிவோடு வந்த தன் கணவனுடன் தானும் சுவர்க்கம் சென்ருள்.

11. இவ் வரலாற்றைத் தமிழ்ப் பெரும்புலவராகிய நமது இளங்கோவடிகள் ஒரு சிறந்த காப்பியமாகச் செய்துள்ளார். அதற்குச் 'சிலப்பதிகாரம்' என்று பெயர். கோவலன் கொலையுண்டதற்குச் சிலம்பு ஒரு முக்கிய காரணம். ஆதலின் கோவலன் கண்ணகி இவர்கள் வரலாற்றைக் கூறும் நூலுக்குச் சிலப்பதிகாரம் எனப் பெயர் வழங்குகிறது. சிலப்பதிகாரம் மிகச் சுவையுள்ள நூல். அதைப் படிப்பதனுல் தமிழறிவு மிகும்; பல அருமையான செய்திகளை அறிந்து கொள்ளலாம். நீங்கள் பெரியவர்களான பிறகு அதைப் படிக்க வேண்டும்.

தகுதி	கள்வன்	வெகுண்டு	சினம்
கற்பு	போகம்	இளங்கோ	திகைப்பு
கொலு	விமானம்	நிமித்திகன்	அடிகள்
பாஷை	அடிகள்	நிரூபித்து	குடிப்பெயர்
உரிமை	ஆசனம்	பட்டினம்	மைந்தன்
புதல்வர்	வரலாறு	அநியாயம்	உதித்தனர்
குமாரர்	காப்பியம்	ஏற இறங்க	வழங்குதல்
சிலம்பு	சுவர்க்கம்	அங்கலட்சணம்	பட்டப் பெயர்
அரசுரிமை	வமிசம்	சேனைத் தலைவர்	வாய்ந்தவன்

அரும்பதவுரை

இளங்கோ - இளவரசன். கோ - அரசன். நிமித்திகன் - ஜோசியன். உரிமை - பாத்தியம். நிரூபித்து - விளக்கிக்காட்டி

சுவர்க்கம் - புண்ணியம் செய்தவர்கள் வாழும் உலகம். காப்பியம் - கதையாக உள்ள நூல். அங்கம் - உறுப்பு. இலட்சணம் - அழகு.

பயிற்சி

1. நெடுஞ்செழியன் கோவலனைக் கொலை செய்வித்தான்.

2. கண்ணகி மதுரைமா நகரைத் தீக்கிரையாக்கினாள்.

3. இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் எழுதினார்.—இவ் வாக்கியங்களை முறையே கோவலன், மதுரைமா நகர், சிலப்பதிகாரம் என்று தொடங்கும்படி மாற்றி எழுது.

கேள்விகள்

1. இளங்கோ துறவு பூண்டதற்குக் காரணம் என்ன?

2. அடிகள் என்னும் பட்டம் யாருக்கு உரியது?

3. இளங்கோவடிகள் செய்த காவியம் யாது? அதன் கதையைச் சுருக்கமாகச் சொல்லு.

5. ஊர்க் காவல்

[உரையாடல்]

மகன் : அப்பா, இவன் யார்? சாலையின் மத்தியில் அசையாமல் நின்று கொண்டிருக்கிறான்.

தந்தை : இவன்தான் போலீஸ்காரன்; வண்டிகள் இடது பக்கமாகப் போகவேண்டும்; வலது பக்கமாக வரவேண்டும். அவ்வாறு வண்டிகள் போகவும் வரவும் செய்வதற்கே இவன் சாலையின் நடுவில் நிற்கிறான்.

மகன் : சரிதான் அப்பா, அவனுக்கு ஏன் போலீஸ்காரன் என்று பெயர்?

தந்தை : போலீஸ் என்றால் ஊர்க்காவல் என்று பொருள். அது ஒரு ஆங்கிலச் சொல். இவன் செய்யும் வேலையும் ஊரைக் காவல் புரிவதே. அதனால் இவனுக்குப் போலீஸ்காரன் என்று பெயர்.

மகன் : இவன் என்ன ஊர்க்காவல் செய்கிறான்?

தந்தை : இப்பொழுது பார்; ஒரு கையைத் தூக்குகிறான்; இன்னொரு கையை ஒரு பக்கமாகத் திருப்புகிறான்; ஏன் இப்படிச் செய்கிறான் தெரியுமா? இவன் கையைத் தூக்கும் பக்கத்திலிருந்து ஒரு வண்டி வருகிறது. அதை வராமல் நிறுத்துவதற்குக் கையைத் தூக்குகிறான். மற்றொரு பக்கத்திலிருந்து இன்னொரு வண்டி வருகிறது. அது போகலாமென்

பதற்கு அது போகவேண்டிய பக்கமாகக் கையைத் திருப்புகிருன்.

மகன் : வண்டிகள் போகவேண்டிய பக்கம் இவனுக்கு எப்படித் தெரியும் ?



தந்தை : பொதுவாக வண்டிகள் சாலையில் இடது பக்கமாகப் போகவேண்டும்; வலது பக்கமாக வரவேண்டும். இது விதி. இவ்விதியை வண்டி ஓட்டு கிறவர்கள் அறிந்து விதி தவருமல் ஓட்டவேண்டும். முச்சந்தி, நாற்சந்திகளுக்கு வரும்பொழுது தம் வண்டி போகவேண்டிய திசை வலது பக்கம் அல்லது இடது பக்கம் என்பதைத் தங்கள் கைகளால் காட்டு வார்கள். அதைக்கொண்டு போலீஸ்காரன் அவ் வண்டிகள் போகவேண்டிய பக்கத்தைத் தெரிந்து கொள்வான்.

மகன் : போலீஸ்காரன் ஏன் ஒரு வண்டியை

நிறுத்துகிருன்; மற்ருெரு வண்டியை போகச்சொல்லு கிருன்?

தந்தை: சந்திகளில் சில வேளையில் மூன்று நான்கு பக்கங்களிலிருந்து ஒரே சமயத்தில் வண்டிகள் வந்து சேரும். அப்பொழுது அவை ஒன்ருேடொன்று மோதிக்கொள்ளாமல் இருப்பதற்காகவே போலீஸ்காரன் இவ்வாறு கைச் சாடையால் அவைகளை ஒழுங்குபடுத்திப் போகச் செய்கிருன்.

மகன்: சரி, இவன் நாள் முழுதும் இங்கேயே நிற்பாரு?

தந்தை: நாள் முழுதும் ஒரு ஆள் ஒரே இடத்தில் நின்று இவ் வேலையைச் செய்துகொண் டிருக்க முடியுமா? முடியாதல்லவா? மூன்று மணி நேரத்திற் கொருமுறை ஆட்கள் மாற்றப்படுவார்கள்.

மகன்: சரி, அப்பா, ஊர்க்காவல் செய்வது போலீசாரின் வேலை என்று சொன்னீர்களே! ஊர்க் காவல் என்பது இவ்வளவுதாரு?

தந்தை: ஊர்க்காவல் என்பது இதுமட்டுமா? இன்னும் எவ்வளவோ உண்டு. திருவிழாக்களிலும், வேடிக்கை நடக்கும் இடங்களிலும், சந்தைகளிலும் பெருங் கூட்டம் கூடுமல்லவா? அப்பொழுது ஜனங்கள் இடித்து மோதிக் கொள்ளாமல் அமைதியைப் பாதுகாக்க வேண்டும்; சமயம் பார்த்துக் கூட்டத்தில் முடிச்சவிழ்ப்பவர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்! சண்டை சச்சரவுகள் செய்பவர்களைப் பிடித்துக் கொண்டு போகவேண்டும்; கொலை செய்வோரையும்

களவாடுவோரையும் கண்டுபிடிக்க வேண்டும்; போலி நாணயம் செய்பவர்களையும், சூதாடுவோரையும் கண்டுபிடிக்க வேண்டும்; வழிநடைப் பாதைகளில் மலஜலம் கழிப்பவர்களைப் பிடிக்கவேண்டும். வழி தப்பிய குழந்தைகளைப் பாதுகாத்துச் சொந்தக்கார ரிடம் ஒப்புவிக்கவேண்டும். இராக்காலத்தில் தூங்குகிற மக்களை எச்சரித்துத் திருடர் நடமாடாமல் ஊரைப் பாதுகாக்க வேண்டும்.

மகன்: இத்தனை காரியங்களையும் செய்யப் போலீஸ்காரர் எவ்வளவோ பேர் வேண்டுமே!

தந்தை: ஆமாம். ஊரில் உள்ள ஜனத் தொகைக்குத் தகுந்தபடி போலீஸ்காரர்கள் இருப்பார் கள். சிறு ஊராய் இருந்தால் சுமார் பத்துப்பேர் இருப்பார்கள். பெரிய நகரமாக இருந்தால் நூறு பேருக்கு மேலும் இருப்பார்கள்.

மகன்: ஹெட்கான்ஸ்டேபிள் என்கிறார்களே, அவர் யார்?

தந்தை: அவரும் போலீஸ்காரர்தான். போலீஸ்காரனுக்குக் கான்ஸ்டேபிள் என்றும் பெயர் உண்டு. பல போலீஸ்காரருக்குத் தலைமையாய் உள்ள வர் ஹெட்போலீஸ் அல்லது ஹெட்கான்ஸ்டேபிள் என்று கூறப்படுவார்.

மகன்: சிறு கிராமங்களில் போலீஸ்காரர் இருப்பார்களோ?

தந்தை: ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கமாட் டார்கள். பல கிராமங்களுக்குப் பொதுவாக ஒரு

பெரிய கிராமத்தில் போலீசு ஸ்டேஷன் ஒன்று இருக்கும். போலீசு ஸ்டேஷன் என்பது போலீசார் இருக்குமிடம். அங்குள்ள போலீசார் தங்கள் பார்வைக்கு ஏற்பட்டுள்ள கிராமங்களில் ஊர்க்காவல் வேலையைச் செய்து வருவார்கள். போலீசார் தங்கள் கடமையைச் செய்வதற்கு உதவியாகக் கிராம முனிசீப்பும் அவர் சிப்பந்திகளும் வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும்.

சாடை	பொதுவாக	சிப்பந்தி	களவாடுவோர்
முடிச்சு	விதி	முச்சந்தி	ஊர்க்காவல்
இடித்தல்	சூதாடல்	சந்தி	மோதுதல்
சச்சரவு	வழிநடை	தலைமை	போலிநாணயம்
நடமாடுதல்	எச்சரித்தல்	நாற்சந்தி	ஒழுங்குபடுத்து.
நிர்வாகம்	ஜனத்தொகை	கண்டுபிடித்தல்	

அரும்பதவுரை

போலி நாணயம் - கள்ளத்தனமாகச் செய்யப்பட்ட நாணயம். எச்சரித்தல் - கவனமாக இருக்கச் செய்தல். நிர்வாகம் - ஆட்சி. சிப்பந்திகள் - கீழ் உத்தியோகஸ்தர்கள். சச்சரவு - வாய்ச்சண்டை.

பயிற்சி

1. போலீஸ் ஸ்டேஷன் என்பதைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.

2. எச்சரிக்கை, நடைபாதை, ஊர்க்காவல், ஒழுங்கு, சூது—இவ்வார்த்தைகளை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

இலக்கணம்

மெய் பேசு. இது ஒரு வாக்கியம். இதில் 'பேசு' என்பது பயனிலை. 'மெய்' என்பது செயப்படுபொருள். எழுவாய் எது? இவ்வாக்கியம் 'நீ மெய் பேசு' என்று விரியும். ஆதலால் 'நீ' என்பது எழுவாய். இவ்வெழுவாய் வெளிப்படையாகத் தோன்ருமல் மறைந்து நிற்கின்றது. ஆகையால், இது **தோன்ரு எழுவாய்** எனப்படும்.

ஒரு வாக்கியத்தில் எழுவாய் தோன்ருமல் மறைந்திருந்தால் அதற்குத் தோன்ரு எழுவாய் என்று பெயர்.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள தோன்ரு எழுவாய்களை எடுத்துக் கூறுக.

இந்தப் போலீஸ்காரனைப் பார். ஒரு கையைத் தூக்குகிருன்; இன்னொரு கையை ஒரு பக்கமாகத் திருப்புகிருன்.

கேள்விகள்

1. போலீஸ்காரன் என்பதற்குப் பொருள் என்ன?

2. சாலையில் நடக்கும்போது எந்தப் பக்கமாகப் போக வேண்டும்? எந்தப் பக்கமாக வரவேண்டும்?

3. போலீஸ்காரரின் வேலைகள் என்னென்ன?

6. அன்பின் அருஞ்செயல்

1. ஓர் ஊரை அடுத்துள்ள ஒரு காட்டில் ஒரு முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். அவரைத் தரிசிக்கப் பல அன்பர்கள் வருவதுண்டு. அவர்கள் அவருக்கு உணவு கொண்டுவருவார்கள். முனிவர் தமது நிஷ்டை கலைந்தபொழுது அங்கு உணவு இருந்தால் அதனை உண்பார். ஒருவரும் உணவு கொண்டு வராவிடில் அதைப்பற்றிக் கவலைகொள்ள மாட்டார். பல நாள் உணவில்லாவிடினும் வருத்தமின்றி யிருப்பார்.

2. ஒரு நாள் முனிவரைத் தரிசிக்கவந்த ஒருவர் ஒரு வெள்ளித் தட்டை முனிவரது ஆசிரம வாயிலில் வைத்துவிட்டுச் சென்றனர். அது முதல், அவரைத் தரிசிக்க வரும் அன்பர்கள் தாம் ஏதேனும் உணவு கொண்டுவந்தால் அதனை அத்தட்டில் இட்டுச் செல்வது வழக்கம். முனிவரும் உணவையுண்டு தட்டை வெளியிலேயே வைத்துவிடுவார்.

3. மற்றொரு நாள் அவ்வழியே ஒரு திருடன் வந்தான். அப்பொழுது முனிவர் ஆசிரமத்திற்குள் தியானத்தில் இருந்தனர். வெள்ளித் தட்டு இருந்த இடத்தில் ஒருவரும் இல்லாததைக் கண்டு அவன் அதனைக் கையில் எடுத்தான். அதே சமயத்தில் முனிவர் நிஷ்டை கலைந்து வெளியே வந்தார். அவரைக் கண்ட திருடன் அஞ்சித் தட்டைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான்.

4. முனிவர் அத்தட்டைக் கையிலெடுத்துக் கொண்டு அவனைப் பின் தொடர்ந்தார். முனிவர் தன்னைப் பிடிக்க வருகிறார் என்று கருதித் திருடன் விரைவாக ஓடத்தொடங்கினான். முனிவரும் விரைந்து பின்சென்றார். இவ்வாறு இருவரும் ஒருவர் பின் ஒருவராக நீண்ட தூரம் ஓடினர். கடைசியாக முனிவர் திருடனைப் பிடித்துவிட்டார். திருடன் 'இனி நமக்கு நிச்சயமாகத் தண்டனை கிடைக்கும்' என்று கருதி நடுங்கினான்.

5. ஆனால், முனிவர் அவனை நோக்கி, "அப்பா, அஞ்சாதே! இந்தத் தட்டை விரும்பி எடுத்த நீ ஏன் அதை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவந்தாய்? எனக்கு இவ்வளவு சிரமம் கொடுக்க

லாமா? நான் துறவி; எனக்கு வெள்ளித்தட்டு எதற்காக? நீயே இதனை எடுத்துக்கொள்,'' என்று கூறித் தட்டைக் கொடுத்தார்.

6. திருடன் முனிவர் கூறியதை நம்பாமல், ''சுவாமி, நான் செய்தது பிழை; என்னை மன்னிக்க வேண்டும்; தட்டு உங்களுடையது; எனக்கு வேண்டாம்,'' என்று மொழிந்தான். முனிவர் மீண்டும் அவனை நோக்கி, ''நான் கூறுவது உண்மை; அப்பா, எனக்கு இந்தத் தட்டினுல் ஒரு பயனுமில்லை. ஆனுல் நீ இதைக் கொண்டுபோனுல் இதை விற்று வயிறு வளர்ப்பாய். ஆதலால் நீ இத்தட்டை எடுத்துக்கொண்டுதான் போகவேண்டும்,'' என்று வற்புறுத்திக் கூறினுர்.

6. திருடனுக்கு அப்பொழுதுதான் முனிவர் கருத்துப் புலப்பட்டது. முனிவர் உள்ளபடியே வெள்ளித் தட்டைத் தனக்கு அன்போடு கொடுக்க எண்ணுகின்ருர் என்பதை அறிந்து ஆச்சரியமடைந்தான். திருட்டுத்தொழில் புரியும் நம்மிடத்தில் இவ்வளவு அன்புள்ளவர் மற்றவர்களிடம் எவ்வளவு அன்பு வைத்திருப்பார் என எண்ணி எண்ணிப் பெருவியப் புற்ருன். அந்தக் கணத்திலேயே அவன் மனம் மாறிவிட்டது.

7. அவன் தான் மேற்கொண்டுவந்த திருட்டுத் தொழிலை அன்றுமுதல் அறவே ஒழித்துவிட்டான். முனிவரது அன்பு அவனது தீயமனத்தைத் தூய்மையாக்கி விட்டது. அவனும் தனது ஆசையை எல்லாம்

ஒழித்து ஒரு சிறந்த துறவியானன். இது அன்பின் அருஞ் செயல் அன்றோ ?

அன்பர்	அறவே	மொழிந்தான்	அடுத்துள்ள
நிஷ்டை	புரிதல்	நிச்சயம்	பின்தொடர்தல்
சிரமம்	தரிசிக்க	தியானம்	அருஞ்செயல்
கலைதல்	நோக்கி	ஆசிரமம்	வயிறுவளர்த்தல்
துறவி	வற்புறுத்தி	தூய்மை	மேற்கொள்ளுதல்
கணம்			

அரும்பதவுரை

துறவி - சந்நியாசி. புரிதல் - செய்தல். தரிசிக்க - பார்க்க. மொழிந்தான் - சொன்னான். தூய்மை - பரிசுத்தம். கணம் - நிமிஷம். சிரமம் - கஷ்டம். ஆசிரமம் - துறவிகளின் இருப்பிடம்.

பயிற்சி

1. தரிசிக்க, மொழிந்தான், நோக்கி, கருதி—இவைகளைப் பெயர்ச் சொற்களாக மாற்று.

2. இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது :—

ஒரு நாள் முனிவரைத் தரிசிக்க வந்த ஒருவர் ஒரு வெள்ளித் தட்டை முனிவரது ஆசிரம வாயிலில் வைத்து விட்டுச் சென்றார்.

அவனும் தனது ஆசையை எல்லாம் ஒழித்து ஒரு சிறந்த துறவியானன்.

3. ஒரே வாக்கியமாகச் சேர்த்துப் படி :—

அவரைக் கண்ட திருடன் அஞ்சினன். தட்டைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான்.

முனிவரும் விரைந்து பின் சென்றார். கடைசியாகத் திருடனைப் பிடித்துவிட்டார்.

கேள்விகள்

1. திருடன் ஏன் ஓடினன் ?
2. முனிவர் பின்தொடர்ந்து சென்றது ஏன் ?
3. திருடன் எத்தகைய மாறுதலை அடைந்தான் ?
4. இப்பாடத்தினல் நீ அறிந்துகொள்வது யாது ?

7. கடிகாரம்

1. நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு காலம் ஏற்பட்டிருக்கிறது. உணவு கொள்ளுதல், வேலைசெய்தல், உறங்குதல் ஆகிய இவற்றிற்கு வெவ்வேறு காலம் ஏற்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். குறித்த வேலையைக் குறித்த காலத்தில் செய்தலே சிறப்புடையது. அவ்வாறு செய்வதற்குக் கால அளவைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

2. சூரிய உதயம் முதல் அத்தமனம் வரையில் உள்ள காலம் பகல்; சூரிய அத்தமனம் முதல் மீண்டும் சூரியோதயம் ஆகும் வரையில் உள்ள காலம் இரவு. பகலும் இரவும் சேர்ந்தது ஒரு நாள். ஏழு நாள் கொண்டது ஒரு வாரம். முப்பது நாள் கொண்டது ஒரு மாதம். பன்னிரண்டு மாதம் கொண்டது ஒரு வருடம். மாதங்களில் சிலவற்றிற்கு முப்பத்தொரு நாளும் உண்டு. ஒரு மாதத்துக்கு இருபத்தெட்டு அல்லது இருபத்தொன்பது நாட்களுமுண்டு. ஒரு ஆண்டுக்கு முந்நூற்று அறுபத்தைந்து நாட்கள் ஆகும்.

3. நமது முன்னோர்கள் ஒரு நாளை அறுபது நாழிகைகளாகப் பிரித்திருக்கிறார்கள்; பகல் முப்பது நாழிகை; இரவு முப்பது நாழிகை. ஒரு நாழிகை அறுபது விநாடிகளாப் பிரிக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் பகலில் சூரியகதியைக் கொண்டும் இரவில்

நட்சத்திரங்களின் போக்கைக் கொண்டும் ஒரு நாளில் இவ்வளவு நாழிகை கழிந்தது எனக் கணக்கிட்டனர். ஆயினும், இவ்வாறு கணக்கிடுதல் எல்லாராலும் முடியாது ; மாரிக் காலத்தில் இடைவிடாது மழை பெய்யும் பொழுது மாலை நேரத்தில் பூக்கும் பூவைக் கொண்டும் காலத்தை ஒருவாறு கணக்கிடுவார்கள். இதெல்லாம் எவ்வளவு சிரமம் பாருங்கள் ! இதனால் நாழிகை அளவைத் திட்டமாக அறிவதற்குப் பல காலங்களில் பல பல கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகள் எல்லாவற்றிலும் நாம் இப்போது பார்க்கும் கடிகாரமே மிகச் சிறந்த கருவியாகும்.

4. நாழிகைக்குக் கடிகா என்று பெயர் ; அதனால் நாழிகை அளவைக் காட்டும் கருவியைக் கடிகாரம் என்று வழங்குகிறோம். ஒரு நாளை நம் முன்னோர் அறுபது நாழிகையாகப் பிரித்திருக்கிறார்கள் ; ஆனால் மேல் நாட்டார் இருபத்துநான்கு மணிகளாகப் பிரித்திருக்கிறார்கள். பகல் பன்னிரண்டு மணி; இரவு பன்னிரண்டு மணி. ஒரு மணிக்கு அறுபது நிமிஷம் ; ஆகையால், ஒரு நாழிகைக்கு இருபத்து நான்கு நிமிஷமாகும் ; இரண்டரை நாழிகை கொண்டது ஒரு மணி ஆகும். ஒரு பகலும் இரவும் கொண்டது ஒரு நாள். ஆயினும் மேல் நாட்டார் ஒரு நாள் நள்ளிரவிலிருந்து மறுநாள் நள்ளிரவுவரை ஒரு நாளின் அளவாகக் கணிக்கிறார்கள். அதனால் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட கடிகாரத்திலும் அம்முறையிலேயே மணிக்கணக்குக் குறிக்கப்பட்டிருக்கிறது.

5. கடிகாரத்தைப் பாருங்கள். அதில் முன் பக்கத்தில் பன்னிரண்டு எண்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை உங்களுக்குத் தெரிந்த எண்ணுகை இல்லாமல் வேறு எண்ணுகையும் இருக்கும். அவற்றை **1-I; 2-II; 3-III; 4-IV; 5-V; 6-VI; 7-VII; 8-VIII; 9-IX; 10-X; 11-XI; 12-XII** என்று



இவ்வாறு அறிந்து கொள்ள வேண்டும். கடிகாரத்தில் இரண்டு முட்கள் உள்ளன. அவைகளில் ஒன்று பெரிய முள்; மற்றொன்று சிறிய முள். பெரிய முள் நிமிஷம் காட்டும் முள்; சிறிய முள் மணி காட்டும் முள். பெரிய முள் ஒரு எண்ணிலிருந்து அடுத்த எண்ணுக்கு வர ஐந்து நிமிஷ நேரம் ஆகும். சிறிய முள் அவ்வாறு வர அறுபது நிமிஷம் அல்லது ஒரு மணி நேரம் ஆகும். ஆகையால், சிறிய முள் ஒரு எண்ணிலிருந்து மற்றொரு எண்ணுக்கு வருவதற்குள் பெரிய முள் பன்னிரண்டு எண்களையும் ஒரு முறை கடந்துவிடும். சிறிய முள் பன்னிரண்டு எண்களையும் ஒரு முறை சுற்றி வருவதற்குள் பெரிய முள் அவைகளைப் பன்னிரண்டு முறை சுற்றி வந்துவிடும்.

6. ஒரு நாளுக்கு இருபத்து நான்கு மணி. ஆயினும் கடிகாரத்தில் குறிக்கப்பட்டிருப்பது பன்னிரண்டு மணியே. நள்ளிரவிலிருந்து காலம் குறிக்கப்

படுவதால் சூரியோதயம் ஆகும்போது மணி ஆறு ஆகும் ; நடுப்பகலில் மணி பன்னிரண்டு ஆகும் ; சூரிய அத்தமனத்தில் மணி ஆருகும் ; நள்ளிரவில் மணி பன்னிரண்டாகும். சிறிய முள் மணி காட்டும் ; பெரிய முள் நிமிடம் காட்டும் ; ஆகையால் நேரத்தை அறிய வேண்டுமாஞல் மணிக்குச் சிறிய முள்ளேயும் நிமிடத்துக்குப் பெரிய முள்ளேயும் கவனிக்க வேண்டும். ஒரு எண்ணின் மத்தியில் சிறிய முள் இருந்தால் பெரிய முள் பன்னிரண்டாவது எண்ணில் இருக்கும். அப்பொழுது சிறியமுள் எந்த எண்ணி லிருக்கிறதோ அத்தனை மணி என்று அறிய வேண்டும். சிறிய முள் தானிருக்கும் எண்ணே விட்டுச் சிறிது நகர்வதற்குள் பெரிய முள் சில எண் களைக் கடந்து விடும். சிறியமுள் மூன்ருவது எண் ணைக் கடந்தும் பெரிய முள் ஐந்தாவது எண்ணிலும் இருந்தால் அப்பொழுதைய நேரம் மூன்று மணியும் இருபத்தைந்து நிமிடமும் ஆகும். ஒரு நிமிடத் துக்கு அறுபது செக்கண்டு ; ஆகையால் கடிகாரங் களில் செக்கண்டைக் காட்டும் மிகச் சிறிய முள்ளும் இருக்கும்.

7. கடிகாரம் இக்காலத்தில் பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் இருக்கும். பள்ளிக்கூடங்கள், நீதி மன்றங்கள், புகைவண்டி நிலையங்கள் முதலிய இடங் களில் கடிகாரம் எப்பொழுதும் இருக்கும். சில பெரிய நகரங்களில் எல்லாரும் பார்க்கக் கூடியவாறு பெரிய தூபியின் உச்சியில் நான்கு பக்கங்களிலும் தெரியக்

கூடிய பெரிய கடிகாரம் வைக்கப்பட்டிருக்கும். அதற்கு மணிக்கூண்டு என்று பெயர். மனிதர்களுக்கு மிகவும் உபயோகப்படும் கருவிகளுள் கடிகாரம் ஒன்றல்லவா? அதனால், அதைக் கண்டு பிடித்த பெரியாருக்கு நாம் நன்றி செலுத்துவோமாக!

கதி	நாழிகை	நீதி
மணி	விநாடி	முள்
நன்றி	மன்றம்	கடத்தல்
தூபி	சூழ்ந்து	நிமிஷம்
எண்கள்	நிலையம்	மாரிக்காலம்
சிரமம்	கணித்தல்	கால அளவை
கடிகா	நள்ளிரவு	நட்சத்திரம்
கடிகாரம்	உறங்குதல்	

அரும்பதவுரை

கதி - செல்லுகை, போக்கு. நள்ளிரவு - நடு ராத்திரி. நிலையம் - நிற்கும் இடம். தூபி - கோபுரம். நீதிமன்றம் - நியாய சபை, கோர்ட்டு. சிரமம் - பிரயாசை, கஷ்டம். கணித்தல் - கணக்கிடுதல்.

பயிற்சி

உங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள கடிகாரத்தைப்பற்றிச் சில வாக்கியங்கள் கூறு.

இலக்கணம்

1. மனிதர்கள், கண்ணன், சுந்தரி—இவைகள் பெயர்ச் சொற்கள். இவைகள் மனிதர்களின் பெயரைக் குறிக்கின்றன. மனிதர்களின் பெயரைக் குறிக்கும் சொற்கள் உயர்திணை எனப் படும்.

கல், மரம், பறவைகள், சூரியன்—இவைகள் மனிதரல்லாத உயிருள்ளவைகளையும் உயிரில்லாதவைகளையும் குறிக்கின்றன. இவ்வகள் அஃறிணை எனப்படும்.

திணை, உயர்திணை அஃறிணை என இருவகைப்படும்.

2. கடிகாரம், வண்டி, குதிரைகள், பையன்கள், பெண்கள், இவன், இவள், உபாத்தியாயர், புறா, பாம்பு—இச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன திணை?

கேள்விகள்

1. முற்காலத்தில் கால அளவை எவ்வாறு கண்டறிந்தனர்?

2. கடிகாரம் என்ற பெயர் எப்படி ஏற்பட்டது?

3. மூன்றே கால் மணி, ஆறரை மணி, ஒன்பதே முக்கால் மணி—இந்நேரங்களில் கடிகாரத்தின் முட்கள் எங்கெங்கே இருக்கும்?

8. பென்சில் சொல்லும் கதை



1. "காகிதத்தில் கணக்குப் போடப் பென்சில் இல்லையே, அப்பா!" என்று கேட்கிறீர்கள். உங்கள்

தந்தையார் கொடுக்கும் மூன்று அல்லது நான்கு அணுவைப் பெற்றுக்கொண்டு கடைக்கு ஓடுகிறீர்கள். விலைக்குத் தகுந்த பென்சிலை, உங்களுக்குப் பிடித்த நிறத்திலும் வடிவத்திலும், வாங்கிக் கொள்கிறீர்கள். ஒரு முனையைச் சீவி எழுதத் தொடங்குகிறீர்கள். அவ்வளவுதான். காகிதப் பென்சில்களாகிய நாங்கள் எவ்வளவு அற்புதமான பொருள்கள் என்பதைப் பற்றியாவது, எங்கெங்கு கிடைக்கும் பொருள்களை எல்லாம் சேர்த்து எங்களை உண்டாக்குகிறார்கள் என்பதைப் பற்றியாவது நீங்கள் சிந்தித்துப் பார்த்ததுண்டா? உங்கள் நாட்டில் சென்னையில் ஒரு பென்சில் தொழிற்சாலை இருப்பதையாவது கேள்விப் பட்டிருக்கிறீர்களா? மலிவான பென்சில்களைப் பற்றி உங்களுக்கு ஏது அத்துணைக் கவலை!

2. நாங்கள் மலிவாக இருந்தாலும், எங்களை அமைப்பதற்கான பொருள்கள் வெவ்வேறு கண்டங்களிலிருந்து கடல்களைக் கடந்து தொழிற்சாலைகளுக்கு வருகின்றன. தெற்கு ஆப்பிரிக்காவில் கென்யா என்ற ஒரு தேசமிருக்கிறது. அங்குள்ள அடர்ந்த காடுகளில் மிருதுவான சில மரங்கள் வளர்கின்றன. அவை பென்சிலை அமைக்க ஏற்றவை. அந்த மரங்களை வெட்டி, சட்டங்களாக்கிப் பென்சில் தொழிற்சாலைகளுக்கு அனுப்புகிறார்கள். எழுத உதவும் கரிய கம்பியை அமைக்கக் கிராபைட்டு என்ற ஒருவகைக் கரியும் களிமண்ணும் தேவை. அமெரிக்காவிலும், இலங்கையிலும் இந்தக் கரி

கிடைக்கிறது. இது சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுக்கப்படுகிறது. கிராபைட்டைத் தொட்டால் மிகவும் மெதுவான மெல்லிய தூளாகக் கையில் ஒட்டிக் கொள்ளும். இதனுடன் கலக்கத் தகுந்த களிமண் கோதாவரி நதிப் படுகையில் கிடைக்கிறது. இந்தப் பொருள்களெல்லாம் பென்சில் தொழிற் சாலேக்கு வந்து சேருகின்றன.

3. கிராபைட்டுத் தூளேயும் களி மண்ணேயும் சேர்த்துச் சிறிது நீருடன் நன்ருக அரைக்கிருர்கள். பசை போலுள்ள இந்தக் கலவையை ஒரு எந்திரத் தில் வைத்து அழுத்தி மெல்லிய உருளேக் கம்பிகளாக இழுக்கிருர்கள். கிராபைட்டு, களிமண் இவற்றின் விகிதத்துக்குத் தகுந்தபடி கம்பிகள் மிருதுவாகவோ கடினமாகவோ அமையும். கம்பிகளே உலர்த்தித் தரம் தரமாகப் பிரித்து வைக்கிருர்கள்.

4. காடி போன்ற பள்ளங்கள் உண்டாகுமாறு தகுந்த கனமுள்ள மரச்சட்டங்களே இழைத்து, வச்சிரப் பசை பூசுகிருர்கள். இவற்றில் கரிய பென் சில் 'லெட்' கம்பிகளேப் பொருத்தி ஒட்ட வைத்து, பள்ளங்களுள்ள மரச் சட்டங்களே மேலேயும் பொருத்துகிருர்கள். மரச் சட்டங்களிலுள்ள பள்ளங் கள் சமதூரத்தில் இருக்குமாதலால், இரு சட்டங் களும் கரிக்கம்பிகளேப் பிணேத்துக் கொண்டு நன்கு பொருந்திவிடும். இந்த மரச் சட்டங்களே ஒரு எந்திரத் தில் கொடுத்துத் தனித்தனிப் பென்சில்களாக அறுக் கிருர்கள். இப்பொழுது தான் பென்சில்களாகிய

எங்களுடைய வடிவம் உருண்டையாகவோ அறு கோணமாகவோ அமைகிறது. பிறகு எங்களை ஒரே அளவாக வெட்டுகிறார்கள்.

5. மற்றொரு எந்திரத்தின் உதவியால் எங்களுக்கு நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள் முதலிய வர்ணங்களைப் பூசுகிறார்கள். இப்பொழுது நாங்கள் அழகான தோற்றம் பெறுகிறோம். பிறகு வேறொரு எந்திரத்தில் எங்களைக் கொடுத்து, எங்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயரோடு, செய்யப்பட்ட தொழிற்சாலையின் பெயரை அல்லது நாட்டின் பெயரை அச்செழுத்துக்களில் பொறிக்கிறார்கள். நாங்கள் மிருதுவான பென்சில்களா, கடினமானவையா என்பது போன்ற விவரக் குறிப்புக்களும் பொறிக்கப்படுகின்றன.

6. இவ்வளவும் செய்த பிறகு, எங்களை டசன் டசனாகக் கட்டி, அழகிய அட்டைப் பெட்டிகளில் பன்னிரண்டு பன்னிரண்டு கட்டுகளாக வைக்கிறார்கள். பிறகு நாங்கள் கடைகளுக்கு அனுப்பப் படுகிறோம். கடைகளிலிருந்து நீங்கள் விலைக்கு வாங்கிக் கொள்கிறீர்கள்.

7. எங்களுடைய மதிப்பை அறியாமல் கோபத்தில் எங்களை உடைப்பதும், சீவிச் சீவிப் போடுவதும் உங்களுக்குத் தினசரி வழக்கமாயிருக்கிறது. உங்களுடைய கல்விக்கு நாங்கள் .எத்துணை உதவி புரிகிறோம் என்பதை எண்ணிப் பார்த்து, இனியேனும் எங்களிடம் சிறிது நன்றியறிதலுணர்ச்சிகாட்டுங்கள்.

சிந்தித்து	கிராபைட்டு	அறுகோணம்
மலிவு	படுகை	எத்துணை
அத்துணை	காடி	புரிகிறோம்
பொறி	விகிதம்	

அரும்பதவுரை

சிந்தித்து - எண்ணி. மலிவு - விலை குறைவு. விகிதம் - அளவு. காடி - கால்வாய் போன்ற பள்ளம். தோற்றம் - உருவம். பொறிக்கிறார்கள் - பதியச் செய்கிறார்கள். எத்துணை - எவ்வளவு. புரிகிறோம் - செய்கிறோம். நன்றியறிதல் - செய்த உதவியை மறவாதிருத்தல்.

கேள்விகள்

1. பென்சில் செய்வதற்குத் தேவையான பொருள்கள் என்ன ?

2. பென்சில்களில் உள்ள கரிக்கம்பிகள் எவ்வாறு செய்யப் படுகின்றன ?

3. பென்சில்களை எந்த வடிவத்தில் அமைக்கிறார்கள் ?

4. பென்சில்களின்மீது என்ன என்ன விவரங்கள் பொறிக் கப்படுகின்றன ?

9. ஆமையும் முயலும்

1. ஆமையொன்று வழியில் செல்ல
அதனைக் கண்டு முயலுமே
தீமை யில்லா ஆமை யோடு
திறமும் பேச முயலுமே.

2. ‘குறுந டைகொண் டென்ன செய்வாய்
குவல யத்தில் நீயுமே ;
பெருந டைகொள் என்னைப் போலப்
பெருமை கொள்ளச் சாயுமோ.’

3. என்று முயலும் கர்வம் கொள்ள
எதிர்உ ரைக்கும் ஆமைதான்
‘நன்று நினது பெருமை தன்னை
நானும் காண்பேன் வாய்மைதான்.’

4. என்று சொல்ல முயல்வெ குண்டே
 'என்ந டையோ டுன்னடை
ஒன்று மென்ன ஒருவரும்மே
 உரையார் நீயும் பின்னடை,'

6. எனப்பு கன்ற முயலை நோக்கி
 'எதற்கு வாயின் வாதமே?
தனித்த னியே நமது வலிமை
 தன்னைக் காட்டல் போதுமே.

6. 'இருவ ரும்ஓர் இடத்தில் நின்றே
 ஏகு வோம்ஓர் இடத்திற்கே;
மருவு கின்றோர் எவரோ முன்பு
 பார்ப்போம் வெற்றி கிடைத்தற்கே.'

7. என்றே ஆமை உரைக்கக் கேட்ட
 எளிய முயலும் ஓதுமே
'நன்றே, ஆயின் சான்று கூற
 நரியும் நமக்குப் போதுமே.'

8. என்று கூற நின்ற நரியும்
 'இதற்கோ இல்லை தடையுமே
நன்றே காட்டும் உங்கள் இருவர்
 நளின பாத நடையுமே.'

9. என்று சொல்ல இரண்டும் வந்தோர்
 இடத்தில் நின்று கிளம்பவே
'ஒன்றி ரண்டு மூன்'றென் றதுவும்
 உரத்த குரலில் விளம்பவே.

10. பெரிய முயலும் விரைந்து சென்று
பெயர்ந்த துவே வெகுதூரம் ;
சிறிய ஆமை நகர்ந்து நகர்ந்து
சென்ற துவே சிலதூரம்.

11. ஆமை நடையென் றுலகோர் சொல்லும்
நடையை முயலும் நோக்கிற்றே ;
' தீமை அதற்கே ' என்றூேர் புதரில்
துயின்று நேரம் போக்கிற்றே.

12. அதற்குள் ஆமை குறித்த இடத்தை
அடைந்து சிறப்பாய் நின்றதே ;
புதர்க்குள் துயின்ற முயல்வி ழித்தே
' மோசம் போனேன் !' என்றதே.

13. என்றே வருந்த நரியும் கூறும்
' ஏன்உ னக்கு வருத்தமே ;
நன்றே பெய்யும் முயற்சி யினுல்
நலமுண் டாகும் பொருத்தமே.'

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

உரை	முயலும்	தடை	திறம்
சாயுமோ	தீமை	எதிர்	துயின்று
செல்ல	ஓது	வாதம்	மருவுதல்
சான்று	வாய்மை	குறுநடை	புகன்ற
ஒன்றும்	பெருநடை	ஒன்றுதல்	நளினம்
குவலயம்	ஏகுதல்	துயின்று	பெருமை

அரும்பதவுரை

திறம் - சாமர்த்தியம், வல்லமை. குவலயம் - பூமி. உரை - சொல். வாய்மை - உண்மை, நிச்சயம். மருவுதல் - போய்ச் சேர்தல். ஓது - சொல்லு. சான்று - சாட்சி. துயின்று - தூங்கி. குறுநடை - மெதுவான நடை. நளின பாதம் - மென்மையான பாதம். பெயர்ந்தது - சென்றது.

பயிற்சி

1. இக்கதையை வசனத்தில் எழுது.

2. ஆமையும் முயலும் பேசிக்கொண்டது போல் சில வாக்கியங்கள் கூறு.

கேள்விகள்

1. முயல் ஆமையைப் பார்த்துக் கர்வமாக என்ன சொல்லிற்று ? அதற்கு ஆமை சொல்லிய பதில் என்ன ?

2. முயலுக்கும் ஆமைக்கும் ஏற்பட்ட பந்தயம் என்ன ?

3. எது வெற்றியடைந்தது ? எப்படி ?

4. எது தோல்வியடைந்தது ? ஏன் ?

5. இக்கதையினுல் நாம் அறிந்து கொள்ளக்கூடிய உண்மை யாது ?

10. வீர சிதம்பரனார்

நம் நாட்டு விடுதலைப் போரில் ஈடுபட்ட தமிழ் வீரர்களில் வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒருவர். இவரது நாட்டுப் பற்றும் வீரமும் நமக்கெல்லாம் எடுத்துக் காட்டாக விளங்குவனவாம்.

தூத்துக்குடிக்கு அருகேயுள்ள ஓட்டப்பிடாரம் என்ற கிராமத்தில் சிதம்பரனார் பிறந்தார். உலகநாத பிள்ளையும் பிரமாயி அம்மையும் இவருடைய பெற்றோர் ஆவர்.

சிதம்பரனார் பள்ளியில் படித்து மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறிய பிறகு வழக்கறிஞர்

தொழிலுக்காகப் படித்தார். பிறகு தூத்துக்குடியில் வழக்கறிஞர் அலுவலைச் செய்து வந்தார். இவர் அத் தொழிலை நேர்மையாகச் செய்து புகழ் பெற்ருர். தொழில் செய்யும் பொழுதே, இவர் சிறந்த தமிழ் நூல்களைக் கற்றுத் தமிழில் நல்ல புலமை பெற்ருர்.

திலகரும், காந்தியடிகளும் நம் நாட்டு விடுதலைப் போருக்குத் தலைமை தாங்கி நடத்திய காலங்களில் சிதம்பரனுர் அந்த இயக்கத்தில் முழுமனத்துடன் சேர்ந்து கொண்டார். தமிழ் நாட்டில் பல கூட்டங் களில் பேசி மக்களின் உள்ளத்தில் நாட்டுப் பற்றைத் தோற்றுவித்தார்.

ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்ட காலத்தில், நம் நாட்டின் கப்பல் வியாபாரமெல்லாம் அவர்க ளுடைய ஆதிக்கத்தில் இருந்தது. இதைக் கண்ட சிதம்பரனுரின் மனம் கொதித்தது. பண்டைத் தமிழர் கப்பல்களில் சென்று அயல் நாடுகளுடன் வியாபாரம் செய்தார்கள்; அவர்களைப் போலவே சிதம்பரனுர் தாமும் செய்ய ஆவல் கொண்டார். சில நண்பர் களுடைய உதவியுடன் இவர் தாமே ஒரு கப்பல் கம்பனி அமைத்து, கப்பல் வாங்கி ஓட்டிச் சிலகாலம் வியாபாரம் செய்தார். ஆங்கில அரசாங்கத்தாரின் எதிர்ப்பினுல், அந்த முயற்சி கடைசியில் தோல்வி யுற்றது.

விடுதலைப் போரில் இவர் தீவிரமாக ஈடுபட்டதால், அரசாங்கத்தார் இவரைச் சிறை செய்தனர். சிறை யில், இவர் கடுமையாக நடத்தப்பட்டார். ஆயினும்

இவருடைய நாட்டுப் பற்று, எவ்விதத் துன்பங் களையும் பொறுத்துக் கொள்ளும் சக்தியை இவருக்கு அளித்தது. 1872-ம் ஆண்டில் பிறந்த சிதம்பரனார் 1936-ம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பல் கம்பனி நடத்திய இவருடைய வீரமும், நாட்டின் விடுதலைக் காக எல்லாத் துன்பங்களையும் ஏற்றுக்கொண்ட இவருடைய பொறுமையும் நாம் என்றும் மறக்க முடியாதவை.

நாட்டுப்பற்று	வழக்கறிஞர்	நீத்தார்
எடுத்துக் காட்டு	தோற்றுவி	கடுமையாக
மெட்ரிக்குலேஷன்	ஆதிக்கம்	கம்பனி

அரும்பதவுரை

நாட்டுப் பற்று - தேச பக்தி. எடுத்துக் காட்டு - உதா ரணம். வழக்கறிஞர் - வக்கீல். புலமை - அறிவு. ஆதிக்கம் - அதிகாரம். ஆவல் - ஆசை. கம்பனி - வியாபாரச் சங்கம். கடுமையாக - இரக்கமில்லாமல்.

கேள்விகள்

1. வீர சிதம்பரனாரின் பெற்றோர் யாவர்? இவர் பிறந்த ஊர் எது?
2. சிதம்பரனார் பள்ளிப் படிப்புக்குப் பிறகு என்ன தொழில் செய்யத் தொடங்கினார்?
3. சிதம்பரனாருக்கு நாட்டுப் பற்று ஏற்படக் காரணமா யிருந்தோர் யாவர்?
4. சிதம்பரனார் ஆங்கிலக் கம்பனிக்கு எதிராக வியாபாரக் கப்பல் ஓட்டிய வரலாற்றைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
5. நம் நாட்டு விடுதலைப் போரில் சிதம்பரனார் ஈடு பட்டதைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

11. தென்னை வருக்கம்

1. மரம் செடி கொடிகள் பெரும்பாலும் கிளைகள் உடையவை. ஆனால் மரங்களில் சிலவற்றிற்குக் கிளைகள் இல்லை. அவைகள்தான் தென்னை, பனை, கமுகு, ஈந்து என்பவை. ஈந்து என்பது ஈச்சமரம்; கமுகு என்பது பாக்குமரம். இந்த நான்கு வகையான மரங்களும் தூண்கள் போல வளரக்கூடியவை. ஆதலின், இவைகள் ஒரே இனத்தைச் சேர்ந்தவை.

2. தேங்காய், நுங்கு, பாக்கு, ஈச்சம்பழம் இந்த நான்கு பொருள்களையும் நீங்கள் தின்றிருப்பீர்கள். இந் நான்கு பொருள்களும் முறையே தென்னை, பனை, கமுகு, ஈந்து இம்மரங்களினின்று கிடைப்பவை.

3. இவற்றுள், தென்னை நீர் வளமுள்ள இடங்களில் நன்கு வளரும். ஆற்றோரங்களிலும் நன்செய் நிலங்களை அடுத்தும் தென்னந் தோப்புகள் இருப்பதைக் காணலாம். மரமடர்ந்த தென்னஞ் சோலைகள் காட்சிக் கினிமையாக இருக்கும். தென்னை நெற்றுக்களிலிருந்து தென்னம் பிள்ளைகள் உண்டாகும். தென்னம் பிள்ளை வளர்ந்து மரமாகும். தென்னம் பிள்ளைகளைச் சிறிது சிரமப்பட்டு வளர்த்து மரமாக்கி விட்டால் அவை மிகுந்த பயனைத் தரும். மரமாக வளர்ந்த பின்னர் அதிகக் கவனம் செலுத்த வேண்டுவதில்லை. தென்ன மரத்தில் காய் முதல் ஈர்க்கு வரையில் எல்லாப் பாகங்களும் மனிதருக்குப் பயன்

படும். மனிதருக்குப் பயன்படாத பாகம் தென்னையில் யாதுமில்லை. இலங்கை, மலையாளம் முதலிய இடங்களில் தென்னமரங்கள் மிகுதியாக வளர்கின்றன.

தென்னைமரம்

பனைமரம்

4. பனைமரம் வளர்வதற்கு மிகுந்த நீர்வளமுள்ள பூமி வேண்டுவதில்லை. தென்னையை வளர்ப்பதுபோல் மிகுந்த கவனத்துடனும் அதை வளர்க்க வேண்டுவதில்லை. மேட்டுப் பாங்கான இடங்களிலும் சிறிது மணற்பாங்கான இடங்களிலும் குழிகள் தோண்டிப் பனங்கொட்டைகளைப் போட்டுவிட்டால் அவை தாமே வளரும். பனைமரத்தினின்று நுங்கும் இனிய பதநீரும் நமக்குக் கிடைக்கின்றன. வீடு

வேயப் பனையோலை உதவும். முற்காலத்தில் பனை யோலைகளில் தான் பெரிய பெரிய நூல்களெல்லாம் எழுதப்பட்டன. அவற்றிற்கு ஏட்டுச் சுவடி என்று பெயர். பனைமரம் மிகவும் அழுத்தமானது. ஆதலின், கட்டட வேலைகளுக்கு உதவும்.

5. கமுகமரம் வளர்வதற்கு மிகுந்த நீர்வளமும் செழுமையும் உள்ள பூமிவேண்டும். பாக்கு நெற்றுக் களைப் பாத்தியில் விதைத்து நாற்றுக்களாக்கிப் பிடுங்கிப் பின்பு வேறு இடங்களில் நடுவார்கள். கமுகங் கன்றுகளை மிகவும் போற்றி வளர்க்க வேண்டும். கமுகு வளர்வதற்கு மிகுந்த நீர் வேண்டும். அதனால் தான் மழை மிகுதியாகப் பெய்யும் மலையாளம், திருவாங்கூர் முதலிய இடங்களில் கமுகமரங்கள் ஏராள மாகப் பயிராகின்றன. கமுக மரத்தினின்று நமக்குக் கிடைக்கும் உபயோகமான பொருள் பாக்கே. பாக்கு, கொட்டைகளாகவும் சிறு சிறு துண்டுகளாகவும் விற்கப்படுகிறது; பாக்கை மெல்லிய துண்டுகளாகச் சீவி விற்பதும் உண்டு. கொட்டையாக உள்ளது கொட்டைப்பாக்கு என்றும் சீவிய துண்டுகள் சீவல் என்றும் பெயர் பெறும்.



கமுகமரம்

6. ஈந்து, பனைமரம் போலவே நீர்வளம் மிகுதி

யாக இல்லாத பூமியிலும் நன்கு வளரும். நமது நாட்டில் சிற்சில இடங்களில் ஈச்சமரத்தைக் காண லாம். ஆயினும், அரேபியா முதலிய இடங்களிலுள்ள பாலைவனங்களில் 'ஓயஸிஸ்' என்னும் நீர்நிலைகளைச் சுற்றி ஈச்சமரங்கள் மிகுதியாக வளர்ந்திருக்கும். ஈச்சமரத்தி லிருந்து நமக்கு ஈச்சம்பழம் கிடைக்கிறது. நமது நாட்டில் உள்ள ஈந்தின் பழம் சிறியது. அரேபியா, பாரசீகம் முதலிய இடங்களில் உள்ள ஈந்தின் பழங் கள் பெரியவையாக இருக்கும். ஆதலால், அவற்றிற்குப் பேரீச்சம் பழம் என்று பெயர். கடைகளில் நாம் வாங்கும் பேரீச்சம்பழம் மிக இனிமையாக இருப்பதை நீங் கள் சுவைத்து அறிந்திருப்பீர்கள்.

ஈச்சமரம்

அது தேன்கலந்து பதம் செய்யப்பட்டது. அராபியர் கள் பேரீச்சம் பழத்தை உணவாகக் கொள்ளுகிறார் கள். ஈந்தின் ஓலை மிகச் சிறியது. அதனால் ஒரு வகைப் பாய் பின்னுகிறார்கள். அதற்கு ஈச்சம்பாய் என்று பெயர்.

7. தென்னை வருக்கமாக உள்ள நால்வகை மரங்களில் கமுகுக்கு மிகவும் பாடுபட வேண்டும். கமுகுக்கு வேண்டுவதுபோல அவ்வளவு கவனம் தென்னைக்கு வேண்டுவதில்லை. ஆயினும், பிள்ளை மர

மாகும் வரையில் அதனையும் சிறிது போற்றி வளர்க்க வேண்டும். பனைக்கு அது முளைக்கிறவரையில் கவனம் செலுத்தினால் போதும். ஈந்துக்கு நமது கவனமே வேண்டுவதில்லை; தானாகவே வளரும். எனினும், இந் நால்வகை மரங்களும் மனிதருக்கு மிகுந்த பயன் தருகின்றவை.

8. இவற்றுள் நமது நாட்டிலேயே வளர்ந்து மக்களுக்குப் பயன் தரும் மரங்கள் மூன்று; அவை பனை, தென்னை, கமுகு என்பன. இவற்றுள் பனை, மக்களின் மிகுந்த முயற்சியில்லாமலே பயன் தரும்; தென்னை சிறிது முயற்சி செய்தால்தான் பயன்தரும்; கமுகு பயன்தர மிகுந்த முயற்சி வேண்டும். இதனால், இவை மூன்றும் உத்தமர், மத்திமர், அதமர் இவர்கள் ஈகைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

உத்தமர் தாம் ஈயுமிடத் தோங்குபனை போல்வாரே;
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே;—முத்தலரும்
ஆங்கமுகு போல்வார் அதமர்; அவர்களே
தேங்கதலி யும் போல்வார் தேர்ந்து.

சீவல்	வருக்கம்	கவனம்
கமுகு	நெற்று	நீர்நிலை
நுங்கு	ஏராளம்	மானுவர்
பதநீர்	உத்தமர்	பாலைவனம்
ஈந்து	அதமர்	பெரும்பாலும்
தோப்பு	மத்திமர்	காட்சிக்கினிமை

அரும்பதவுரை

வருக்கம் - இனம், வகை. ஏராளமாக - மிகுதியாக. கமுக மரம் - பாக்கு மரம். உத்தமர் - மிகச்சிறந்தவர். அதமர் - மிகவும்

கீழானவர். மத்திமர் - நடுத்தரமானவர். உத்தமம், மத்திமம், அதமம் - தலை, இடை, கடை. பாலைவனம் - நீரும் நிழலுமற்ற மணல்வெளி. மானுவர் - ஒத்திருப்பார்.

பயிற்சி

1. நூல்கள், காட்சிக் கினிமையாக, வேய, பதம்—இச் சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் ஏற்றவாறு சேர்த்துப் படி.

(1) பனையோலை, வீடு —— உதவும்.

(2) தென்னஞ் சோலைகள் —— இருக்கும்.

(3) ஈச்சம்பழங்களைத் தேன் கலந்து —— செய்வார்கள்.

(4) முற்காலத்தில் பனையோலைகளில் —— எழுதப்பட்டன.

2. தென்னை, பனை முதலியன ஒரே இனத்தைச் சேர்ந்த மரங்கள்.

ஒரே இனத்தைச் சேர்ந்த இரண்டு மிருகங்களும், இரண்டு பறவைகளும் சொல்லு.

கேள்விகள்

1. தென்னை வருக்கத்தைச் சேர்ந்த மற்ற மரங்கள் எவை? அவைகளை ஒரே இனமாகக் கூறுவது ஏன்?

2. இந்நால்வகை மரங்களில் மிகுந்த கவனமாக வளர்க்கப் படவேண்டியது எது? மக்களின் கவனமே இல்லாமல் வளரக் கூடியது எது?

3. உத்தமர் ஈகைக்கு உவமையாவது எது? ஏன்?

12. மயில்

1. பறவைகளுள் மிக்க அழகுள்ளவை மயிலும் கிளியும் ஆகும். இவற்றுள் மயில் கிளியைவிட அழகிற் சிறந்தது. மயிலுக்கு மிகுந்த அழகைக் கொடுப்பது எது? அதன் தோகையே.

2. மயில் கோழியை விடப் பல மடங்கு பெரியது. அதற்கு நீண்ட உறுதியான கால்களும் பெரிய இறக்கைகளும் நீண்ட கழுத்தும் உண்டு. அதன் அலகுகள் மிக உறுதியானவை. ஆண் மயிலுக்குத் தலையில் கொண்டையும் வாலில் நீண்ட தோகையும் உண்டு. தோகை என்பது வால் இறகுகளால் ஆனது. உங்களில் சிலர் காகிதத்தால் பல மடிப்புகளுடன் செய்யப்பட்ட விசிறியைப் பார்த்திருப்பீர்கள். இவ் விசிறியை வேண்டும்போது விரிக்கலாம்;

வேண்டாதபோது சுருக்கிவிடலாம். மயிலின் தோகையும் இவ்விசிறியைப்போல் விரிக்கவும் சுருக்கவும் கூடியது.

3. மேகத்தைக் கண்டால் மயில் தன் தோகையை விரித்து ஆடும். ஏன் அவ்வாறு ஆடுகிறது? மேகம் ஆகாயத்தில் தோன்றும்போது காற்றுக் குளிர்ந்து விடும். குளிர் காற்று மயிலுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும். அதனால்தான் மயில் மேகத்தைக் கண்டதும் மிக மகிழ்ந்து தோகையை விரித்து ஆடுகிறது. மகிழ்ச்சி உண்டானால் சில வேளைகளில் நீங்களும் ஆடுவீர்களல்லவா? மயில் தன் தோகையை விரித்து ஆடும்போது மிக அழகாகத் தோன்றும். அதற்கு அழகைக் கொடுப்பவை தோகையில் உள்ள கண்களும் பீலிகளும் ஆகும். கண்கள் என்றால் பார்க்கக்கூடிய கண்களல்ல; கண்கள் போன்ற உருவம் உடைய புள்ளிகள். தோகையில் பல கண்கள் இருக்கும். இக் கண்கள் பல அழகிய நிறங்கள் உடையவை. மயில் இறகில் உள்ள பீலிகள் பசுமையும் நீலமும் கலந்த மினுமினுப்பான நிறமுடையவை. ஆகையால்தான் மயில் இவ்வளவு அழகாகத் தோன்றுகிறது.

4. மயிலின் உணவு பூச்சி புழுக்களும் இறைச்சியும் ஆகும். மயில் வளர்ப்பவர்கள் தவிட்டையும் அதற்கு ஆகாரமாக வைக்கிறார்கள். காட்டில் மயில்கள் பெரிய மரக்கிளைகளில் வசிக்கும். பெண் மயில் முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும். மயிற்குஞ்சு

களில் முதலில் பொறித்த ஆண் குஞ்சுக்கே சிறந்த அழகான தோகை உண்டாகும் என்று கூறுகின்றனர். மயிலின் உடம்பு மிகவும் கனமுள்ளது. ஆதலால், அது தனது கனத்த உடலைத் தூக்கிக்கொண்டு ஆகாயத்தில் பறக்க இயலாது; எனினும், பூமியிலிருந்து மரக்கிளைக்கும் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்குமாகச் சிறிது தூரம் பறந்து செல்லும்.

5. மயில் நாகப் பாம்பைக் கண்டால் எளிதில் விடாது. அதைக் கொத்திக் கொன்று விட்டுத்தான் மறுவேலை பார்க்கும்; நாகமும் தன்னைப்போல ஆடுகிறது என்று பொறாமை கொண்டே இவ் வண்ணம் செய்கிறது போலும். மயில் முப்பது ஆண்டுகள் வரை உயிரோடு வாழும்.

6. மயிலை அதன் அழகுக்காகச் சிலர் வளர்க்கிறார்கள். மயில் அழகிற் சிறந்தது. காட்டில் வாழும் வேடர்கள் மயில்களைப் பிடித்து அதன் தோகை இறகுகளைப் பிடுங்கி ஒன்று சேர்த்து நாட்டிற்குக் கொண்டுவந்து விற்கிறார்கள். மயிற்றோகை அழகாக இருப்பதால் அதிக விலை கொடுத்தும் மக்கள் அதை வாங்குகிறார்கள். மயில் தோகையால் அழகிய விசிறி செய்வது உண்டு. மயில் இறகை வலிந்து பிடுங்குவதுபற்றி ஒரு பழமொழியும் வழங்குகிறது. அது "மயிலே, மயிலே, இறகுபோடு என்றால் போடுமா?" என்பது. மயிலின் இறைச்சியையும் சிலர் தின்கிறார்கள்.

7. மயில் வெப்பமான தேசங்களில் வசிக்கும். நமது இந்திய நாட்டின் தென் பகுதி மிகவும் வெப்பமானது. இத் தென் பகுதியே தமிழ் நாடாகும். தமிழ் நாட்டில் மயில்கள் மிகுதியாக உண்டு. தமிழ் நாட்டிலிருந்து பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னேயே மயிலும் மயில் தோகையும் வேறு நாடுகளுக்குக் கொண்டு போகப்பட்டன.

8. வான்கோழி என்ற ஒருவகைக் கோழி உண்டு. அதுவும் தன் வால் இறகுகளை விரித்தாடும். ஆயினும், அதன் இறகுகள் விகாரமானவை; மயிலின் தோகையைப்போல் அழகுடையவை அல்ல. அதனால் வான்கோழி இறகை விரித்தாடினாலும் அழகாகத் தோன்றுதல்லவா? ஆகையால், இச்செய்தி, நன்றாகப் படிக்காதவன் படித்தவன்போல் பாவனை பண்ணுவதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

பீலி	பகுதி	விரித்தல்
தவிடு	கானம்	பொறித்தல்
வேட்டர்	போலும்	மறுவேலை
தோகை	பொறுமை	வான்கோழி
வலிந்து	படிப்பு	இவ்வண்ணம்
பொல்லா	பாவனை	மினுமினுப்பு

அருஞ்பதவுரை

உவமை - ஒப்பு. வலிந்து - பலங்கொண்டு. கானம் - காடு. பொல்லாச் சிறகு - அழகில்லாத சிறகு.

பயிற்சி

1. இயலும்; இயலாது. முடியும்; முடியாது. தெரியும்; தெரியாது. உண்டு; இல்லை—என்று முடியும்படியாக ஒவ்வொரு வாக்கியம் எழுது.

2. 'போல' 'விட' என்ற சொற்கள் இடையில் வரும்படி மும்மூன்று வாக்கியங்கள் கூறு.

(உ - ம்.) கோழி மயிலைப்போல் அவ்வளவு பெரியது அல்ல. மயில் கோழியை விட உருவத்தில் பெரியது.

3. மயிலைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.

கேள்விகள்

1. தோகை என்பது என்ன?

2. மயில், மேகத்தைக் கண்டால் தோகையை விரித்து ஆடுவதற்குக் காரணம் என்ன?

3. மயிலினால் என்ன உபயோகம்?

4. தமிழ் நாட்டில் மயில் மிகுதியாகக் காணப்படுவது ஏன்?

5. மயில் சம்பந்தமாக வழங்கும் பழமொழி யாது?

13. தபால்வழியே பணம் அனுப்புதல்

[உரையாடல்]

இராமன் : மாமா, இதோ தபால்காரன் வந்திருக்கிறன்; உங்களுக்கு ஏதோ மணியார்டர் வந்திருக்கிறதாம்.

மாமன் : சரி; அவனை உள்ளே வரச்சொல்லு.

[இராமன் தபாற்காரனை உள்ளே வரச் சொல்கிறன். அவன் உள்ளே வந்து இராமனுடைய மாமனிடம் பணத்தைக் கொடுத்து மணியார்டர் பாரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு பாரத்தின் ஒரு பகுதியைக் கிழித்துக் கொடுத்துவிட்டுச் செல்கிறன்.]

இராமன் : மாமா, பணம் எங்கிருந்து வந்தது?

மாமன் : இராமு, டில்லியிலிருந்து உனது அம்மாஞ்சி (அம்மான் சேய்) கந்தசாமி நூறு ரூபாய் அனுப்பியிருக்கிறன்.

இராமன் : அம்மாஞ்சி யாரிடம் கொடுத்தனுப்பிஞர்? தபால்காரனிடமா? தபாற்காரன் இந்த ஊர்க்காரனுச்சே!

மாமன் : இராமு, கந்தசாமி பணத்தை யாரிடமும் கொடுத்தனுப்பவில்லை; பணம் அனுப்புவதற்கென ஒரு பாரம் உண்டு. அதற்கு மணியார்டர் பாரம் என்று பெயர். அந்தப் பாரத்தில் தன் விலாசமும் என் விலாசமும் எழுதிப் பணம் இவ்வளவு எனக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டு அதை டில்லித் தபாலாபீசில் கொடுத்திருப்பான்;

பணத்தையும் தபாலாபீசில் கட்டியிருப்பான். அதற்குத் தான் மணி ஆர்டர் என்று பெயர். ஆங்கிலத்தில் 'மணி' என்ருல் பணம் என்று அர்த்தம். 'ஆர்டர்' என்ருல் இன்னுருக்குக் கொடு என்று கூறுதல். அதனுல்தான் தபாற்காரன் மணியார்டர் வந்திருக்கிறது என்ருன்.

இராமன் : சரிதான் மாமா, இப்பொழுது தான் 'மணியார்டர்' என்பதற்குப் பொருள் தெரிந்தது. ஆனுல், அம்மாஞ்சி டில்லியில் தானே பணத்தைக் கொடுத்திருப்பார். அதை அங்கிருந்து நமது ஊருக்குக் கொண்டு வந்தது யார்?

மாமன் : டில்லியிலிருந்து பணத்தை நமது ஊருக்கு ஒருவரும் கொண்டுவரவில்லை. கந்தசாமி மணியார்டர் பாரத்தில் எழுத வேண்டியவற்றை எழுதி டில்லித் தபாலாபீசில் கொடுத்திருப்பான் என்று நான் முன்னே சொன்னேன் அல்லவா? அந்தப் பாரம் இந்த ஊர்த் தபாலாபீசுக்கு வந்திருக்கும். தபாலாபீசு தலைவர் அதில் கண்ட தொகையைத் தபால்காரனிடம் கொடுத்தனுப்பியிருக்கிருர்.

இராமன் : இந்த ஊர்த் தபாலாபீசில் பணம் ஏது? டில்லியில் கொடுத்த பணம் இங்கு வந்தால் தானே இவர் பணம் கொடுக்க முடியும்?

மாமன் : இராமா! அப்படியல்ல; தபாலாபீசுகள் எல்லாம் சர்க்காருடையவைதானே. அந்தந்தத் தபாலாபீசில் பணம் அனுப்புவோர் கட்டும் பணம் அங்கங்கேயே இருக்கும். இன்னும் தபாலாபீசில்

சர்க்கார் பணமும் இருக்கும். மணியார்டர் பாரத்தில் உள்ளபடி பணத்தைக் கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்துவிட்டுக் கணக்கு வைத்துக் கொள்ளுவார்கள்.

இராமன் : சரிதான் மாமா, இப்பொழுதுதான் எனக்கு இது தெரிந்தது. நீங்கள் பாரத்தில் என்னவோ எழுதினீர்களே அது என்ன ?

மாமன் : நான் பணம் பெற்றுக்கொண்டதற்கு அடையாளமாகக் கையெழுத்துப் போட்டேன். ஒரு கையெழுத்து அல்ல; இரண்டு கையெழுத்துப் போட்டேன். ஒன்றைத் தபாலாபீசில் வைத்துக் கொள்வார்கள். மற்றொன்றைப் பணம் அனுப்பியவருக்குத் திருப்பி அனுப்பிவிடுவார்கள். அதைப் பார்த்து அவர் 'பணம் நாம் அனுப்பியவருக்குப் போய்ச் சேர்ந்து விட்டது' என்று தெரிந்துகொள்வார்.

இராமன் : இது சரி, மாமா; அவன் அந்தப் பாரத்திலிருந்து ஒரு பாகத்தைக் கிழித்துக் கொடுத்தானே ; ஏன் ?

மாமன் : அதில் பணம் அனுப்பியவர் பணம் பெறுவோருக்கு ஏதேனும் செய்தி எழுதியிருப்பார். அதைத் தபாற்காரன் கிழித்துக் கொடுத்துவிட வேண்டும். இதற்கு ஆங்கிலத்தில் 'கூப்பன்' என்று பெயர்.

இராமன் : அப்படியானல், மணியார்டர் பாரம் எந்தத் தபாலாபீசிலிருந்து வந்ததோ அங்கு அது முழுதாய்ப் போய்ச் சேராதே !

மாமன் : சேராது ; அந்தப் பாரம் மூன்று பகுதியாகக் கிழிக்கப்படும். ஒரு பகுதியைத் தபால் காரனே கிழித்துப் பணம் பெற்றுக் கொள்பவரிடம் கொடுப்பான். அதுதான் கூப்பன் என்று நான் முன்னே சொன்னது. இன்னொரு பகுதியைத் தபாலா பீசார் கிழித்துப் பணம் அனுப்பியவருக்குத் திருப்பி விடுவார்கள். இதில் பணம் பெற்றுக் கொண்டவர் கையெழுத்து இருக்கும். இதற்குப் பற்றுச்சீட்டு என்று பெயர். ஆங்கிலத்தில் இது 'அக்நாலெட்ஜ் மெண்ட்' என்று கூறப்படும். மற்றொரு பகுதியைத் தபாலாபீசிலேயே வைத்துக் கொள்வார்கள். இதிலும் பணம் பெற்றுக் கொண்டவர் கையெழுத்து இருக்கும்.

இராமன் : சரி மாமா, தபாலாபீசார் இத்தனை காரியமும் சும்மாவா செய்கிறார்கள் ?

மாமன் : சும்மா செய்வார்களா? தபாலாபீசில் எத்தனை உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் ? அவர் களுக்கெல்லாம் சம்பளம் கொடுக்க வேண்டாமா? அதற்காகப் பணம் அனுப்புகிறவர்கள் கூலி கொடுக்க வேண்டும். அதற்கு 'மணியார்டர் கமிஷன்' என்று பெயர். இவ்வளவு தொகைக்கு இவ்வளவு கூலி என்று கணக்கு உண்டு. அந்தக் கணக்கின்படி, பணம் கட்டும் போதே கூலியையும் கொடுத்துவிட வேண்டும்.

கையெழுத்து	சும்மா	தொகை
பற்றுச்சீட்டு	ஏதோ	அர்த்தம்
அம்மான்சேய்	விவரம்	கட்டுதல்
அடையாளம்	உட்பட்டு	உத்தியோகஸ்தர்

அரும்பதவுரை

உத்தியோகம் - வேலை. உத்தியோகஸ்தர் - வேலை செய்கிற வர். சும்மா - ஒன்றுமில்லாமல். உட்பட்டு - அடங்கி, குறைவாக. அம்மான்சேய் - மாமன் மகன்.

பயிற்சி

பொருத்தமாகச் சேர்த்துப் படி.

1. தபாலாபீசுகள்	கமிஷன் உண்டு.
2. கூப்பனில் ஏதேனும்	ரூபாய் மணியார்டர் செய்தார்.
3. மணியார்டருக்கு	சர்க்காரைச் சேர்ந்தவை.
4. மாமா எனக்கு நூறு	செய்திகள் எழுதலாம்.

இலக்கணம்

1. ஒருமை பன்மைச் சொற்களைப்பற்றி முன் புத்தகத்தில் படித்திருக்கிறீர்கள். எண்கள் ஒருமை, பன்மை என இரண்டு வகைப்படும். ஒன்றைக் குறிப்பது ஒருமை. பலவற்றைக் குறிப்பது பன்மை.

2. நான் ஓடுகிறேன். நாங்கள் ஓடுகிறோம். நீ ஓடுகிறாய். நீங்கள் ஓடுகிறீர்கள். நாம் நம்மைக் குறித்துப் பேசும்போது 'நான்' அல்லது 'நாங்கள்' என்று சொல்லுகிறோம். முன்னால் நிற்பவரைச் சுட்டிப் பேசும்போது 'நீ' அல்லது 'நீங்கள்' என்று சொல்லுகிறோம்.

நான், நாம், நாங்கள் என்பன தன்மை இடம்.

நீ, நீர், நீங்கள் என்பன முன்னிலை இடம்.

மற்ற எல்லாச் சொற்களும் படர்க்கை இடம்.

தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூன்று வகைப் படும்.

3. பின் வரும் பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம் கூறுக.

பெயர்ச்சொற்கள்	திணை	பால்	எண்	இடம்
தபால்காரன்				
பென்சில்				
கம்பிகள்				
மனிதர்கள்				
செடிகள்				
பெண்கள்				
கந்தன்				
வள்ளி				

கேள்விகள்

1. மணியார்டர் என்பதற்குப் பொருள் என்ன? கூப்பன் என்றால் என்ன?

2. மணியார்டர் பண்ணவேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்?

3. நாம் ஒருவருக்கு மணியார்டர் மூலமாக அனுப்பும் பணம் அவருக்கு எப்படிப் போய்ச் சேருகிறது?

14. காகிதம்

1. பிள்ளைகளே, நீங்கள் படிக்கும் புத்தகம் எதனால் செய்யப்பட்டது? காகிதத்தினால் அல்லவா? ஆனால், வெறும் காகிதம் மட்டும் புத்தகம் ஆகுமா? காகிதத்தில் எழுத்துக்கள் அச்சடிக்கப் பட்டிருக்கின்றன. அதனோடு மேலே கெட்டியான அட்டை போட்டுத் தைக்கப்பட்டும் இருக்கிறது. இப்புத்தகங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன, பாருங்கள்!

2. முற்காலத்தில் உங்களைப்போல் படித்தவர்களுக்கும் இம்மாதிரியான புத்தகங்கள் இருந்திருக்கும் என்று நீங்கள் நினைப்பீர்கள். முற்காலத்தில் படித்தவர்களுக்கு இத்தகைய புத்தகம் இல்லை. ஏன்? அக்காலத்தில் காகிதமும் இல்லை; அச்சும் இல்லை. ஆனால் அவர்கள் எப்படிப் படித்தார்கள்? காய்ந்த பனையோலைகளில் எழுதப்பட்ட பாடங்களைப் படித்தார்கள். அப் பனையோலைகள் சுமார் ஒரு அடி நீளம் உள்ளவையாக நறுக்கப்பட்டிருக்கும். அவ்வாறு நறுக்கப்பட்ட ஓலைக்கு ஏடு என்று பெயர். அவ்வேடுகளில் கயிறு நுழையும்படி துவாரம் செய்யப்பட்டிருக்கும். கயிற்றில் எல்லா ஏடுகளையும் கோத்து ஒழுங்குபடுத்திக் கட்டிவிடலாம். இதற்கு ஓலைச்சுவடி அல்லது ஏட்டுச்சுவடி என்று பெயர். ஓலையில் நீளமான ஆணியினால் எழுதுவார்கள். அதற்கு எழுத்தாணி என்று பெயர்.

3. நீங்கள் காகிதத்தில் எவ்வளவு சுலபமாக எழுதுகிறீர்கள்! இவ்வளவு எளிதாக ஓலையில் எழுத முடியுமா? ஓலையில் எழுத்தாணி கொண்டு எழுத வேண்டும். அவ்வாறு எழுத மிகுந்த பழக்கம் வேண்டும். ஓலையில் நன்றாக எழுதக் கூடியவர்கள் மிகச் சிலரே இருப்பர். ஆதலால், ஓலைச்சுவடியை இப்பொழுது நீங்கள் புத்தகம் விலைக்கு வாங்குவது போல அவ்வளவு எளிதாக வாங்க இயலாது. இக் காலத்தில் காகிதத்தால் ஆக்கப்பட்ட புத்தகத்தை எவ்வளவு எளிதாக வாங்கிப் படிக்கிறீர்கள்! புத்தகத்துக்குக் காகிதம் உபயோகப்படுகிறது அல்லவா? பாடம் எழுததுல், கணக்குப் போடுதல், காப்பி எழுதுதல் முதலியவற்றிற்கும் காகிதம் உதவு கின்றது. இவ்வளவு உபயோகமுள்ள காகிதம் எவ் வாறு செய்யப்படுகிறது? அது செய்யப்படும் விதத்தை நீங்கள் அறிந்தால் மிகவும் வியப்படை வீர்கள்.

4. காகிதம் செய்வதற்கு உபயோகமாகும் பொருள்கள் என்னென்ன வென்று பாருங்கள். கந்தைத் துணிகள், கிழிந்த கோணிப்பைகள், நாணல் போன்ற புற்கள், மிருதுவான கட்டையுள்ள மரங்கள் ஆகிய இவை யாவும் காகிதம் செய்ய உதவுகின்றன. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன் வரையில் கந்தை களே காகிதம் செய்வதற்கு மிகவும் உபயோகப் பட்டு வந்தன.

5. நாம் வேண்டாதவை எனக் கருதி எறியக்

கூடிய கந்தைகளையெல்லாம் விலை கொடுத்து வாங்கிக் கொண்டு போவார்கள். அவைகளைச் சுத்தம் செய்து தண்ணீரோடு கலந்து எந்திரங்களைக் கொண்டு நைய அரைத்து ஒருவகைக் கூழ்போல ஆக்கு வார்கள். பிறகு இக்கூழை, அடிப்புறத்தில் நுண்ணிய இரும்பு வலை உள்ள மரச்சட்டத்தில் முகந்து சிறிது



காகிதக்கூழ் தயார் செய்தல்

நேரம் கையில் வைத்திருந்தால் கூழில் உள்ள தண்ணீர் வலையின் வழியே கீழே வடியும்; கூழ் மெல்லிய ஆடைபோல் மேலே தங்கிவிடும். இத்தகைய பல ஆடைகளை மரப்பலகைகளுக் கிடையில் வைத்து அழுத்தி நீரையெல்லாம் போக்கி உலர வைத்தால்

அவை காகிதத் தாள்கள் ஆகிவிடும். இதுவே கையினுல் காகிதம் செய்யும் முறையாகும்.

6. ஆனுல், தற்காலத்தில் இந்த முறையில் காகிதம் செய்யப்படவில்லை. ஏன்? காகிதம் புத்தகங்களுக்கும், நோட்டுகளுக்கும், தினசரிப் பத்திரிகை



காகிதம் உருளையில் சுற்றிக்கொள்ளுதல்

களுக்கும் மிக அதிகமாக வேண்டியிருக்கிறது. இவ்வளவுக்கும் வேண்டிய காகிதத்தை முன் சொன்ன மாதிரி கையினுல் செய்ய இயலுமா? இயலாதல்லவா? ஆகையால் காகிதம் செய்வதற்கென பெரிய ஆலைகள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஆங்கிலத்தில் 'பேப்பர் மில்ஸ்' என்று பெயர். அவ்வாலைகளில் பெரிய பெரிய எந்திரங்கள் இருக்கும்.

முன்னே மனிதன் கையினுல் செய்த வேலைகளை யெல்லாம் அவ்வெந்திரங்களே செய்கின்றன.

7. எந்திரங்களில் கந்தைகளைக் கூழாகச் செய்தல் இப்பொழுது மிகுதியாக நடைபெறுவதில்லை. ஒரு வகை மரத்தின் மென்மையான கட்டைகளும் மூங்கில் போன்ற மென்மையான கழிகளுமே இப் பொழுது கூழாகச் செய்யப்படுகின்றன. இக் கூழுக்கு ஆங்கிலத்தில் 'வுட் பல்ப்' என்று பெயர். இம்மரக் கூழே பலவகையான அழகிய காகிதமாக ஆகிவிடு கிறது. இஃது என்ன வியப்பு! நீங்கள் பல வர்ணக் காகிதங்களையும் பார்த்திருப்பீர்கள். வர்ணக் காகிதம் வேண்டுமானுல் மரக் கூழிலேயே வர்ணத்தைச் சேர்ப்பார்கள். காகிதம் செய்யும் ஆலைகள் கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி முதலிய மேல் நாடுகளில் அதிகம். இப்பொழுது நம் இந்திய நாட்டிலும் பல இடங்களில் காகிதம் செய்யும் ஆலைகள் ஏற்பட்டிருக் கின்றன. காகித ஆலைகளில் சில, ஒரு நிமிஷத் துக்கு ஒரு மைல் நீளம் காகிதம் உற்பத்தி செய் கின்றன.

8. காகிதத்துக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர் என்று கேட்டால் நீங்கள் 'பேப்பர்' என்று உடனே சொல்லுவீர்கள். 'பேப்பர்' என்று அதற்குப் பெயர் வந்தது ஏன்? எகிப்து என்னும் நாட்டில் முற்காலத் தில் 'பாபிரஸ்' என்னும் ஒரு வகைச் செடியிலிருந்து காகிதம் செய்தார்கள். அச்செடியின் பெயரே சிறிது மாறிப் 'பேப்பர்' எனக் காகிதத்துக்கு வழங்குகிறது.

'காகிதம்' என்று நாம் வழங்கும் பெயர் உருது மொழிப் பெயராகும். தமிழில் இதனைத் தாள் என்று சொல்லலாம்.

அச்சு	கந்தை	முகந்து	பத்திரிகை
காகிதம்	கோத்து	சுலபம்	ஆக்கப்பட்ட
அட்டை	அதிருஷ்டம்	இடையில்	கோணிப்பை
ஆலை	எழுத்தாணி	சுவடி	வேண்டாதவை
நைய	நறுக்கு	வெறுமை	உற்பத்தி செய்தல்
தாள்			

அரும்பதவுரை

சுவடி - ஓலைப் புத்தகம். நைய - நன்ருக அழியுமாறு. உற்பத்தி செய்தல் - உண்டுபண்ணுதல்.

பயிற்சி

கேட்டவாறு மாற்றிப் படி :

1. இவ்வளவு உபயோகம் உள்ள காகிதம் எவ்வாறு செய்யப்படுகிறது?—'செய்கிருர்கள்' என்ற சொல் பயனிலையாக வரும்படி.

2. மரக்கூழே பலவிதமான அழகிய காகிதமாக ஆகிவிடுகிறது—'மரக்கூழினுல்' என்று தொடங்கும்படி.

கேள்விகள்

1. பேப்பர் என்று பெயர் உண்டாவதற்குக் காரணம் என்ன?

2. காகிதம் செய்வதற்கு உபயோகப்படும் பொருள்கள் எவை?

3. கையினுல் காகிதம் செய்யும் முறை எப்படி?



15. தாகூர்

1. நமது பாரத நாட்டில் சமீப காலத்தில் சிறந்து விளங்கிய புலவர்கள் பலர். அவர்களில் தலை சிறந்தவர் தாகூர் ஆவார். அவரது முழுப் பெயர் **இரவீந்திரநாத தாகூர்** என்பது.

2. இரவீந்திரர்' 1861-ஆம் ஆண்டில் வங்க மாகாணத்தில் உள்ள **கல்கத்தா** நகரில் ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்தார். அவர் தமது இளம் பருவத் திலேயே தாயாரை இழந்தார். அவர் தந்தையாரும் அடிக்கடி குடும்பத்தை விட்டு யாத்திரையாக வேறு

ஊர்களுக்குச் சென்றுவிடுவார். ஆதலால் தாகூர் தமது சகோதரர்கள் மேற்பார்வையில் குடும்ப வேலைக்காரர்களால் வளர்க்கப்பட்டு வந்தார்.

2. தாகூர் உரிய பருவத்தில் பள்ளிக்கூடம் சென்று சில ஆண்டுகள் படித்து வந்தார். அவர் பள்ளிக்கூடப் படிப்பை நீண்ட காலம் விரும்பவில்லை. ஆயினும் அவருக்குப் படிப்பில் விருப்பம் மிகுந்திருந்தது. அவர் கூர்மையான அறிவுள்ளவர். ஆதலால், வீட்டிலேயே தக்க ஆசிரியர் உதவியால் கல்வி பயின்று வந்தார்; மிக விரைவில் தமது தாய் மொழியாகிய வங்க மொழியிலும், ஆங்கில மொழியிலும் தேர்ச்சி பெற்றார்.

4. இரவீந்திரர் தமது பன்னிரண்டாவது வயதிலேயே கவி பாடத் தொடங்கிவிட்டார். ஆயினும் அவரது பதினைந்தாவது ஆண்டிலிருந்துதான் நல்ல பாடல்கள் வெளியாயின.

5. தாகூருக்கு இருபத்திரண்டாவது வயதில் திருமணம் நடைபெற்றது. அவர் தமது மனைவியுடன் இல்வாழ்க்கையை மேற்கொண்டு இனிது வாழ்ந்து வந்தனர். எனினும் அவர் தமது வாழ்நாளில் பெரும் பகுதியைச் சிறந்த நூல்களைப் படிப்பதிலும், புதிய பாடல்களும் நவீனக் கதைகளும் இயற்றுவதிலும் கழித்தார்.

6. அவரது முப்பதாம் ஆண்டில் அவர் குடும்பத்துக்குச் சொந்தமான நிலபுலங்களைக் கவனிக்கும் பொருட்டுக் கிராம வாழ்க்கையை மேற்கொண்டார்.

அப்பொழுதுதான் அவர் கிராம மக்களின் உண்மை யான ஊழியத்தையும் உழைப்பையும் கண்ணுரைக் கண் டார். ஆதலால் அவர்கள் நல்வாழ்வு பெற்றுச் சுகமாக மாக இருக்கவேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை கொண்டார்.

7. தாகூருக்குத் தம் காலத்தில் நடத்தப்பெற்ற கலாசாலைகளின் கல்விமுறை பிடிக்கவில்லை. இயற் கைக் காட்சி நிரம்பிய இடத்தில் இயற்கையோடு ஒட்டிய கல்விமுறையே சிறந்தது என அவர் எண் ணினுர். ஆதலால், தமது மாகாணத்தில் போல் பூருக்கு அருகே உள்ள ஒரு சிற்றூரில் ஒரு சிறு கல்விச்சாலையை ஏற்படுத்திஞர். அதுவே இப்பொ ழுது விசுவ பாரதி என்னும் பெயருள்ள ஒரு பெரிய கல்லூரியாக வளர்ந்துள்ளது.

8. இரவீந்திரர் பலமுறை ஐரோப்பா, அமெ ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்குச் சென்று பல அருமையான விரிவுரைகள் செய்தார். அவரது கல்விச் சிறப்பையும் பிரசங்கம் செய்யும் ஆற்றலையும் அறிந்த அறிஞர்கள் அவரைக் கொண்டாடிஞர்கள்.

9. தாகூர் இயற்றிய பாடல்களும் எழுதிய நவீன நூல்களும் மிகப் பலவாகும். ஆதலால் அவரைக் **கவியரசர்** என்றே வழங்கி வருகிருர்கள். நமது கவி யரசர் தமது தாய்மொழியாகிய வங்கமொழியில் அளவற்ற பற்றுள்ளவர். அவர் முதலில் தாய்மொழி யில் செய்யுள்கள் இயற்றுவார். பின்னர், வேண்டும் போது அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து

வெளியிடுவார். தாகூர் ஆங்கிலத்திலும் நிரம்பிய பயிற்சி யுடையவராதலின், ஆங்கிலத்திலும் பல பாடல்கள் பாடியுள்ளார். ஆதலின் அவர் புகழ் எங்கும் பரவியது; அவர் உலகம் போற்றும் புலவ ராக ஆனார். அதனாலேயே ஏறத்தாழ ஒரு லட்ச ரூபாய் பெறுமானமுள்ள நோபல் பரிசு என்னும் ஒரு சிறந்த பரிசு சுவீடன் தேசத்து அரசாங்கத்தா ரால் அவருக்கு வழங்கப் பெற்றது.

10. உலக மக்கள் எல்லோரும் ஒற்றுமை யாகச் சகோதர பாவனையுடன் இன்புற்று வாழ வேண்டும் என்பது தாகூரின் எண்ணம். அதனா லேயே தாம் தோற்றுவித்த கலாசாலைக்கு 'விசுவ பாரதி' என்று பெயர் வைத்துள்ளார். விசுவ பாரதி என்றால் 'உலக முழுதுக்கும் அறிவு புகட்டுவது' என்று பொருள்.

11. விசுவ பாரதியின் வளர்ச்சியிலும் பாதுகாப் பிலும் தாகூர் கண்ணும் கருத்துமாக இருந்தார். தமது குடும்பச் சொத்தில் தமக்குள்ள பங்கை விசுவ பாரதிக்கு உரிமையாக்கி உள்ளார். இவர் வங்கமொழி யில் எழுதியுள்ள நூல்களினால் வரும் ஊதியமும் விசுவபாரதிக்கே உரிமையாக்கப்பட்டுள்ளது.

12. இத்தகைய சீரும் சிறப்பும் பெற்ற இரவீந் திரநாத தாகூர் தமது எண்பதாம் ஆண்டில் (7-8-1941) இவ்வுலக வாழ்வை நீத்தார். அச்செய்தி கேட்ட அறிஞர் அனைவரும் வருந்தினர். உலக முழுதும் பேர்பெற்ற ஒரு கவியரசர் இறப்பது அனை

வருக்கும் வருத்தம் தரக்கூடியதன்றோ? எனினும், அவர் இயற்றிய நூல்களாலும் அவர் ஏற்படுத்திய கல்லூரியாலும் அவரது பேர் அழியாது நீண்டகாலம் நிலவியிருக்கும்.

உரிமை	யாத்திரை	நிலபுலம்	பேர்பெற்ற
ஆற்றல்	நவீனம்	கலாசாலை	உலகவாழ்வு
மேஞடு	திருமணம்	கல்லூரி	தலைசிறந்தவர்
பயிற்சி	வெளிநாடு	பிரசங்கம்	சகோதர பாவம்
விரிவுரை	வாழ்நாள்	மிகப்பல	அறிவு புகட்டும்
மாகாணம்			

அரும்பதவுரை

ஆற்றல் - வல்லமை. புலம் - வயல். புகட்டுதல் - ஊட்டுதல், கற்பித்தல். மாகாணம் - பல ஜில்லாக்கள் கொண்ட இராஜ்யப் பிரிவு. கலாசாலை - பள்ளிக்கூடம். சகோதர பாவனை-உடன் பிறந்தவர்களைப் போல் கருதுவது.

பயிற்சி

இலக்கணம்

1. அவன், இவள், பையன்கள், பெண்கள், அவர்கள்— இவைகள் உயர்திணைப் பெயர்ச் சொற்கள் அல்லவா? 'அவன்' என்பது ஒரு ஆணைக் குறிக்கிறது. 'இவள்' என்பது ஒரு பெண்ணைக் குறிக்கிறது. 'பையன்கள்' என்பது பல ஆண்களைக் குறிக்கிறது. 'பெண்கள்' என்பது பல பெண்களைக் குறிக்கிறது. 'அவர்கள்' என்பது பொதுவாகப் பலரைக் குறிக்கிறது.

உயர்திணையில் ஒரு ஆணைக் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறிப்பது **பெண்பால்** எனப்படும்.

உயர்திணையில் பலரைக் குறிப்பது **பலர்பால்** எனப்படும்.

1. பசு, ஆடுகள், பழம், பழங்கள்—இவைகள் அஃறிணைப் பெயர்கள் அல்லவா ? இவற்றுள் 'பசு', 'பழம்' என்பன ஒன்றைக் குறிக்கும் சொற்கள். 'ஆடுகள், பழங்கள்' என்பன பலவற்றைக் குறிக்கும் சொற்கள்.

அஃறிணையில் ஒன்றைக் குறிப்பது **ஒன்றன்பால்** எனப்படும்.

அஃறிணையில் பலவற்றைக் குறிப்பது **பலவின்பால்** எனப்படும்.

ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் எனப் பால் ஐந்து வகைப்படும்.

3. தாகூர், மனைவி, புலவர்கள், சகோதரி, சகோதரர்கள், தவளை, பசு, எருதுகள், மரங்கள்—இப்பெயர்ச் சொற்கள் ஒவ்வொன்றும் என்ன பால் ?

கேள்விகள்

1. தாகூர் எப்படிப்பட்ட கல்வி முறையை விரும்பினார் ?
2. அவர் ஏற்படுத்திய கல்விச்சாலையின் பெயர் என்ன ? அது எங்கே உள்ளது ? இப்போது அதற்கு ஏற்பட்டுள்ள பெயர் என்ன ?
3. தாகூர் பெற்ற சிறந்த பரிசு யாது ? அப்பரிசு யாரால் வழங்கப்பட்டது ? எதற்காக வழங்கப்பட்டது ?
4. 'விசுவபாரதி' என்பதற்குப் பொருள் என்ன ?
5. தாகூர் தம் சொத்தை எந்தத் தருமத்திற்கு உரிமையாக்கினார் ?

16. படம் பார்த்துக் கதை சொல்லல்—I

பின்வரும் படங்களைப்பார்த்துக் கதையைச் சொல்லு :—

17. கரும்பு

1. நீங்கள் கரும்பை விரும்பித் தின்பீர்கள். கரும்பு தின்னக் கூலி கேட்க மாட்டீர்களல்லவா? அதனால் தான் ' கரும்பு தின்னக் கூலியா?' என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

2. கரும்பு இவ்வாறு யாவராலும் விரும்பப்படுவதற்குக் காரணம் என்ன? அதிலுள்ள இனிமையான சாறே. கரும்பை வாயிலிட்டு மென்று சாற்றை உட்கொண்டு சக்கையை உமிழ்ந்து விடுகின்றோம். வெல்லம், சர்க்கரை, கற்கண்டு இவைகளும் இனிப்பான பொருள்களல்லவா? இவைகளெல்லாம் பெரும்பாலும் கருப்பஞ் சாற்றிலிருந்தே உண்டானவை. சிறுபான்மை பனஞ்சாற்றிலிருந்து வெல்லமும் கற்கண்டும் செய்வது உண்டு; அவைதான் பனவெல்லம், பனங்கற்கண்டு என்பவை.

3. கரும்பு புல்லினத்தைச் சேர்ந்தது. அது ஒரு அங்குலம் முதல் மூன்று அங்குலம் வரையில் கனமுள்ளதாக இருக்கும்; ஆறடி முதல் பதினைந்தடி உயரம் வரையில் ஓங்கி வளரும். கரும்பு நீண்டு திரண்டு மூங்கிற்கழிபோல் இருக்கும். அதனால் கரும்பைக் கருப்பங்கழி என்று கூறுவார்கள். கரும்பில் பல கணுக்கள் உண்டு. ஒவ்வொரு கணுவிலிருந்தும் ஒரு இலை தோன்றி அடுத்த கணு வரையில் கழியைச் சூழ்ந்து அதன் பிறகு தென்னை ஓலைபோல் வளரும். கரும்பின் இலைக்குக் கருப்பந் தோகை என்று பெயர்.

கரும்பு முதிர்ந்தால் அதன் நுனியில் பட்டுப்போன்ற வெண்மையான பூ கற்றையாகப் பூத்திருக்கும்.

4. கரும்பில் வெண்கரும்பு, செங்கரும்பு, நாமக் கரும்பு, ரஸ்தாளிக்கரும்பு, நாணற்கரும்பு எனப் பல வகை உண்டு. இவற்றுள் நாணற்கரும்பில் சாறு சிறிதே இருக்கும்; அதுவும் சுவையற்றது. நாணற் கரும்பைப் பேய்க்கரும்பு என்றும் சொல்வது உண்டு. நாமக்கரும்பு, ரஸ்தாளிக்கரும்பு இவற்றில் சாறு நிரம்ப இருக்கும்; இனிப்பாகவும் இருக்கும். ஆனால் செங்கரும்பு, வெண்கரும்பு இவற்றின் சாறுதான் மிகவும் இனிமையானது. இவ்வினிமைக்குக் காரணம் சாற்றில் சர்க்கரைச் சத்து அதிகமாக இருப்பதே. ஆதலால், இவ்வகைக் கரும்புகளே சர்க்கரை செய்ய மிகுதியும் உபயோகப் படுகின்றன.

5. கரும்பின் அடிப்பாகம் மிக இனிமையாக இருக்கும்; மேலே போகப் போக இனிமை குறைந்து உவர்ப்பு மிகுந்திருக்கும். நுனியிலுள்ள கொழுத் தாடையில் இனிப்பே இராது; உப்புக்கரிக்கும். கரும் பின் இத்தன்மை நல்லோர் தீயோர் இவர்கள் நட்புக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. தீயோர் சிநேகம் கரும்பை அடியிலிருந்து நுனிப்பக்கமாகத் தின்பது போலாகும். நல்லோர் சிநேகம் கரும்பை நுனியிலிருந்து அடிப்பக்கமாகத் தின்பதுபோல் ஆகும். இந்த உவமையால் நல்லோர் சிநேகம் நாளுக்கு நாள் இன்பம் தரும் என்பதும் தீயோர் நட்பு நாளு க்குநாள் துன்பம் தரும் என்பதும் தெரிகின்றன.

6. கரும்பு செழுமையான நீர்வளமுள்ள பூமியில் நன்கு பயிராகும். கரும்பு பயிரிடுவதற்கு மிதமான வெப்பமுள்ள பிரதேசமே சிறந்தது. கரும்பு விதையிலிருந்து முளைப்பதில்லை; கணுவிலுள்ள முளையிலிருந்தே முளைக்கிறது. கரும்பை ஒவ்வொரு துண்டிலும் ஒரு கணு இருக்கும்படி துண்டு துண்டாக வெட்டிக் கணு பூமியில் பதியும்படி பாத்திகளில் நடுவார்கள். ஒவ்வொரு கணுவிலுமுள்ள முளை முளைத்துக் கரும்பாக வளரும். கரும்பு வளரும் நிலத்தைக் கருப்பங் கொல்லை என்றும் கூறுவார்கள்.

7. முதிர்ந்த கருப்பங் கழிகளின் அடியில், வாழைக்கன்று முளைப்பதுபோல, குருத்துகள் முளைத்திருக்கும். ஆதலின் அவைகளையே அடுத்த ஆண்டின் பயிராக வளர்ப்பதும் உண்டு. இவ்விதம் இரண்டு மூன்றாண்டுகள்வரை, புதிது புதிதாக நடாமல் அங்குள்ள குருத்துகளையே பயிராக வளர்க்கலாம். ஆயினும், அவ்வாறு பயிராகும் கரும்பின் செழுமை வரவரக் குறைந்துவிடும்.

8. கரும்பு முற்றிப் பூக்கும் பருவம் அடையச் சுமார் ஒன்பது மாதம் செல்லும். அப்பருவம் தொடங்கும் பொழுது கருப்பங்கழிகளை வெட்டி ஆலைக்குக் கொண்டுபோவார்கள். ஆலை இருக்கும் இடம் ஆலைக் கூடம் என்று கூறப்படும். ஆலை இரும்பு உருளைகளால் ஆகியது. அவ்வுருளைகளோடு சம்பந்தப்பட்ட நீண்ட விட்டத்தை மாடுகள் இழுப்பதால் உருளைகள் சுழலும். அவ்விதம்

சுழலும் உருளைகளுக்கிடையில் தோகை கழித்த கருப்பங்கழிகளைத் துண்டுதுண்டாகக் கொடுப்பார்கள். உருளைகள் கரும்பை நசுக்கிச் சாற்றைப் பிழியும். இச்சாறு சிறிது தடிப்பாகவும் மங்கிய

வெண்மை நிறமாகவும் இருக்கும். ஆலையிலிருந்து வெளிப்படுஞ் சாறு அடியில் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்தில் வடியும். இவ்விதம் வடியும் சாற்றைச் சேகரித்துப் பெரிய இருப்புக் கொப்பரைகளில் விட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சுவார்கள்.

9. காய்ச்சும்பொழுது சிறிது சுண்ணும்பு நீரைச் சேர்ப்பார்கள். இதனுல் கருப்பஞ்சாற்றில் சம்பந்தப் பட்டுள்ள அழுக்கு வெளிப்பட்டு நுரை போல் மேலே மிதக்கும். அதை வழித்து எறிந்து விடுவார்கள். .சாறு சுண்டிப் பதமானுல் பாகு

என்ற பெயர் பெறும். இப்பாகை மரத்தொட்டி களில் ஊற்றி ஒரு விதத் துடுப்பினுல் ஆற்றுவார்கள். ஆற்ற ஆற்றப் பாகு இறுகும். அப்பொழுது மரக் கட்டையினுல் இரண்டொரு முறை தேய்த்தால் சர்க் கரை ஆகிவிடும். பாகு நன்கு இறுகுவதற்குள் மர அச்சுக்களில் ஊற்றினுல் அது இறுகி வெல்லமாகி விடும். இவ்வெல்லமும் சர்க்கரையும் பழுப்பு நிறமாக இருக்கும்.

10. பழுப்புச் சர்க்கரையை நீரில் கரைத்து வடி கட்டி மீண்டும் காய்ச்சி வெள்ளைச் சர்க்கரை ஆக்கு கிருர்கள். வெள்ளைச் சர்க்கரையினின்று கற்கண்டு செய்யப்படுகிறது.

11. கிராமங்களில் மாடுகளால் இழுக்கப்படும் சிறிய ஆலைகளில் கருப்பஞ்சாறு எடுக்கப்படுகிறது. ஆயினும் கரும்பு மிகுதியாகப் பயிராகும் இடங்களில் இப்பொழுது பெரிய கரும்பாலைகள் ஏற்படுத்தப்பட் டிருக்கின்றன. அவைகளில் மிக விரைவில் ஏராள மான கரும்புகள் எந்திரங்களின் உதவியால் நசுக்கிப் பிழியப் படுகின்றன. அதனுல் கருப்பஞ்சாறு மிக அதிகமாகக் கிடைக்கிறது. அவ்வாலைகளிலேயே எந்திரங்களைக் கொண்டு வெல்லம், சர்க்கரை, கற்கண்டு இவைகளும் மிகுதியாகச் செய்யப்படு கின்றன.

கூலி	உருளை	பாத்தி
பிழி	சக்கை	வெல்லம்
சாறு	இறுகுதல்	திரண்டு
பாகு	நடுதல்	குருத்து
நுரை	பதிதல்	முதிர்ந்தால்
கழி	நசுக்கல்	உட்கொண்டு
முனை	மங்கிய	கற்கண்டு
ஆலை	சுண்டுதல்	பிரதேசம்
ஓங்கி	உமிழ்ந்து	சேகரித்தல்
துடுப்பு	அங்குலம்	கொழுத்தாடை

அரும்பதவுரை

கொழுத்தாடை - கரும்பின் நுனிப்பாகம். பிரதேசம்-இடம். சேகரித்தல் - சேர்த்தல். முதிர்ந்த - முற்றின. நட்பு - சிநேகம்.

பயிற்சி

1. விரும்பு, கவனி, உண், கட, பேசு—இவைகளைப் பெயர்ச் சொற்களாக மாற்று.

2. இனிமை, உமிழ், செய்வது, புல், அடி, இராது, நல்லோர், வெட்டி—இவைகள் ஒவ்வொன்றும் என்ன சொல்?

3. கரும்பு + சாறு = கருப்பஞ்சாறு—இதுபோல், கரும்பு + கொல்லை, கரும்பு + கழி, இவைகளைச் சேர்த்து எழுது.

4. வெண்மை + கரும்பு = வெண்கரும்பு—இதுபோல், செங்கரும்பு, செம்மண், கருங்குரங்கு, நுண்ணறிவு—இவைகளைப் பிரித்துக் கூறு.

5. 'கரும்பு' என்பதைப்பற்றி ஒரு கட்டுரை எழுது.

இலக்கணம்

கரும்பு என்பது பெயர்ச் சொல். இது ஒரு பொருளின் பெயர். இலை, வேர், கை, கால் இவைகளும் பெயர்ச் சொற்கள்.

இவைகள் உறுப்பு அல்லது பாகத்தின் பெயர்கள். இம்மாதிரியே நிலம், வீடு இவைகள் இடத்தின் பெயர்கள். இனிப்பு, உவர்ப்பு, வெண்மை என்பன குணத்தின் பெயர்கள். செய்தல், உமிழ்தல், ஓட்டம் என்பன தொழிலின் பெயர்கள். ஆண்டு, மாதம், நாள், காலை, மாலை இவைகள் காலத்தின் பெயர்கள்.

பெயர்ச்சொற்கள் பொருட்பெயர், இடப்பெயர், காலப் பெயர், சினைப்பெயர் (சினை - உறுப்பு), குணப்பெயர் (குணம்- பண்பு), தொழிற்பெயர் என ஆறு வகைப்படும்.

வாய், புல், நுனி, அடி, செம்மை, நாணல், நட்பு, முளை, உருளை, அடுப்பு, மரம், மனிதர், பள்ளிக்கூடம், வைகாசி, பல்— இப் பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் எந்த வகையைச் சேர்ந்தவை?

கேள்விகள்

1. 'கரும்பு தின்னக் கூலியா?' இப்பழமொழியை விளக்கு.
2. கரும்பு தாவர வகையில் எந்த இனத்தைச் சேர்ந்தது? கரும்பில் என்னென்ன வகை உண்டு?
3. நட்பிற்குக் கரும்பு உவமையாகும்—எப்படி?
4. கரும்பைப் பயிரிடுவது எப்படி? கரும்பு பயிராக எத்தனை மாதம் செல்லும்?
5. கரும்பிலிருந்து வெல்லமும் சர்க்கரையும் செய்வது எவ்வாறு?

18. அதியமான்

1. நமது தமிழ் நாட்டில் பல வள்ளல்கள் இருந் திருக்கிறார்கள். வள்ளல் என்பது சிறந்த கொடை யாளிக்குப் பெயர். எவ்வளவு சிறந்த பொருளாக இருப்பினும் வள்ளல்கள் அதைப் பிறர்க்குக் கொடுக்கப் பின் வாங்க மாட்டார்கள். **அதியமான்** என்பவன் அத்தகைய சிறந்த வள்ளல்களில் ஒருவன்.

2. தமிழ்நாடு முற்காலத்தில் சேரநாடு, சோழ நாடு, பாண்டியநாடு என மூன்று பகுதியாக இருந் தது. இளங்கோ அடிகள் சேர நாட்டில் இருந்தவர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா ? அதியமானும் சேரநாட்டில் இருந்தவனே.

3. சேரநாட்டில் **தகடூர்** என்னும் ஒரு ஊர் உண்டு. சேலம் ஜில்லாவில் உள்ள தர்மபுரி என்னும் ஊர் முற்காலத்தில் தகடூர் என்று வழங்கியது எனக் கூறுகின்றனர். அதியமான் அவ்வூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்த ஒரு சிற்றரசன். அதிய மான் சிற்றரசனாயினும் பெரிய வீரன்; சிறந்த வள்ளல்; 'பிறர் நலம்' கருதும் தன்மையுடையவன்; கல்வியில் மிகுந்த ஆர்வமுடையவன்; கற்றோர்களை ஆதரிப்பவன். ஆதலால், அதியமானைப் பெரிய அரசர்களும் மதித்தார்கள்; புலவர்களும் போற்றி னார்கள்.

4. ஔவையாரைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். ஔவையார் பெரும் புலவர் அல்லவா? ஆதலின், அவரை அதியமானும் ஆதரித்து வந்தான்; அவரிடத்தில் மிகுந்த அன்பும் மதிப்பும் உடையவனு யிருந்தான். ஔவையாரும் பல முறை அதியமானிடம் சென்று அளவளாவி வருவார்; நற்புத்தி புகட்டுவார்.

5. ஒரு சமயம் **காஞ்சி** நகரத்தில் இருந்த **தொண்டைமான்** என்னும் அரசனுக்கும் அதியமானுக்கும் பகைமை உண்டாயிற்று. அப்பொழுது அதியமான் ஔவையாரைத் தொண்டைமானிடம் தூது அனுப்பினுன். ஔவையார் தொண்டைமானிடம் சென்ருர். தொண்டைமான் தனது பெருமையை ஔவையாருக்குக் காட்டக் கருதி படைக்கலச் சாலைக்கு அழைத்துச் சென்று அங்குள்ள வாள், வேல் முதலிய ஆயுதங்களைக் காட்டினுன்.

6. ஔவையார் நுண்ணறிவு உடையவரல்லவா? அதனுல், அவன் கருத்தை எளிதில் அறிந்துகொண்டார். அவன் செருக்கை அடக்க எண்ணி "இந்த ஆயுதங்களெல்லாம் எண்ணெய் பூசப்பெற்று, இருந்த இடம்விட்டு மாருமலும் கூர் மழுங்காமலும் இரத்தக் கறையின்றிப் பளபளப்போடு அழகாக இருக்கின்றன; ஆனுல், அதியமான் ஆயுதங்களோ கூர் மழுங்கி இரத்தக் கறை உடையனவாய், பளபளப்பின்றிக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன," என்று கூறினுர். ஔவையார் இவ்வாறு கூறியதன் கருத்தென்ன?

தொண்டைமான் ஆயுதங்களைக் கையாண்டு போர் செய்தலில் அநுபவமில்லாதவன் என்பதும், அதிய மான் ஆயுதங்களைக் கையாண்டு போர் செய்தலில் அநுபவமுள்ளவன் என்பதும் அல்லவா? ஔவை யாரின் கருத்தறிந்த தொண்டைமான் செருக்கடங்கி, ஔவையாரைப் போற்றி அதியமானிடம் தனக்கிருந்த பகைமையை ஒழித்தான்.

7. அதியமானுக்கு ஒரு சமயம் ஒரு கரு நெல்லிக்கனி கிடைத்தது. அது அமுதம் போன்றது; எளிதில் கிடைக்கக் கூடியதன்று. அதனை உண்போர் நீண்ட நாள் உயிரோடிருப்பர். அத்தகைய கனி யைப் பெற்ற அதியமான் அதனைத் தானுண்டு நீண்ட காலம் வாழ விரும்பவில்லை. கல்வியிற் சிறந்த பெரும் புலவராகிய ஔவையார் அதனை உண்டு நீண்ட ஆயுளோடிருந்து மக்களுக்கு நல்லறிவு புகட்ட வேண்டுமென்று எண்ணினான். அவ்வாறே அந் நெல் லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்தான்.

8. இத்தகைய கொடை மிகச் சிறந்த தல்லவா? நீண்ட ஆயுளைத் தரும் அருமையான கனியைப் பெற்றும் அதனைத் தாம் உண்ணுமல் பிறருக்குக் கொடுக்கும் எண்ணம் எல்லோருக்கும் உண்டாகுமா? உண்டாகாது; சிறந்த வள்ளல்களுக்குத்தான் உண் டாகும். அதியமான் ஒரு சிறந்த வள்ளல்; ஆகை யால்தான், தான் பெற்ற கனியை ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையாரும் அதனை உண்டு நெடுங் காலம் வாழ்ந்திருந்தார்.

9. அதியமானின் கொடைத் திறத்தையும் வீரத்தையும்பற்றி ஔவையார் பல அருமையான பாடல்கள் பாடியுள்ளார். அவைகள் 'புறநானூறு' என்னும் நூலில் உள்ளன.

தூது	செருக்கு	உலைக்களம்	மழுங்காமல்
வீரம்	அடிகள்	பிறர்நலம்	மதித்தார்கள்
ஆர்வம்	தலைநகர்	பின்வாங்குதல்	ஆதரித்தல்
ஆயுள்	நுண்ணறிவு	அளவளாவுதல்	கொடையாளி
தன்மை	படைக்கலம்		

அரும்பதவுரை

படைக்கலம் - போர்க்கருவி. நுண்ணறிவு - கூர்மையான புத்தி. செருக்கு - கர்வம். தூது - ஒருவர் கூறும் செய்தியை அவர் உத்தரவுப்படி மற்றவரிடம் போய்ச் சொல்லும் செயல். தூதர் - தூது சொல்லச் செல்பவர். அளவளாவுதல் - மனம் கலந்து பேசுதல். தன்மை - குணம்.

பயிற்சி

இலக்கணம்

1. அதியமான் கருநெல்லிக்கனியை ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையார் பாடிய பல பாடல்கள் 'புறநானூறு' என்ற நூலில் இருக்கின்றன. நான் நாளைக்குச் சென்னை செல்வேன்—இம்மூன்று வாக்கியங்களின் இறுதியிலுள்ள கொடுத்தான், இருக்கின்றன, செல்வேன் என்ற வினைமுற்றுக்களைக் கவனி. 'கொடுத்தான்' என்பது செயல் முன்னமே நடந்ததைத் தெரிவிக்கிறது. 'இருக்கின்றன' என்பது இப்பொழுது செயல் நிகழ்வதைக் குறிக்கிறது. 'செல்வேன்' என்பது செயல் இனிமேல் நிகழும் என்பதைக் குறிக்கிறது.

இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் (வருங்காலம்) எனக் காலம் மூன்று வகைப்படும்.

இறந்த காலம் என்பது சென்ற காலம்.

நிகழ் காலம் என்பது இப்பொழுது நடக்கிற காலம்.

எதிர் காலம் என்பது இனிமேல் வருங்காலம்.

2. காட்டினான், வருவாள், ஓடுகிறார், படிப்பான், உண்டான், தூங்குகிறான்—இவ் வினைச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன காலம்?

3. பின் வரும் கட்டத்தில் கோடு உள்ள இடங்களைப் பூர்த்தி செய்:

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
படித்தேன்	——	——
——	——	வருவார்
——	ஓடுகிறது	——
——	போகிறாய்	——
விளையாடினார்கள்	——	——
——	——	கொடுப்பீர்களா

கேள்விகள்

1. வள்ளல் என்று யாருக்குப் பெயர்? மூன்று வள்ளல்களின் பெயர்களைச் சொல்லு.

2. தொண்டைமானின் ஆயுதங்கள் எவ்வாறு இருந்தன? ஏன்?

3. அதியமானின் ஆயுதங்களைப்பற்றி ஔவையார் என்ன கூறினார்? அவ்வாறு கூறியதன் கருத்து என்ன?

19. வேடனும் புருக்களும்

பஞ்ச தந்திரக் கதை

வனம்ஒன்றில் ஒருவேடன்
வளர்குருவிக் கூட்டினொடும்
இனம்ஒன்று வேட்டைக்கரு
விகளும்எடுத் தேதிரியக்
கனம்இருண்டு மழைபெய்யக்
காற்றெழும்ப-அவனடுங்கி
மனம் இருண்டோர் மரத்தின்கீழ்
வந்திருந்தான் ;அப்போது, 1.

தங்கும் அதன் மேலிருந்த
புருவொன்று தன்பேட்டை
'எங்ககன்றதோ! வனத்தில்
யாரேனும் பிடித்தாரோ!
மங்கியதோ! எனப்புகல,
அதுகேட்டு வனசரன்றன்
அங்கையுறு கூட்டில்உற்ற
பெண்புரு அழுதுசொலும்: 2.

'முன்வினையால் இதுபெற்றேன்;
ஆயினும்நின் முனம்அடைந்த
இன்னவனுக் குபசாரம் புரி'
எனலும் எரிகொளுவி
அன்னவனை அழைத் 'துடலின்
குளிர்போக்கி ஆகாரம்
என்னைநீ அருந்தென்று
வீழ்ந்திறக்க இவன்நோக்கி 3.

'அன்பினல் நம்பொருட்டு
வீழ்ந்த இதை அருந்தியிடில்
துன்பம்வரும்'. எனப்பேட்டை
விடுத்திடலும் சூழ்ந்ததுவும்
தன்புருடன் பிரிவதனல்
வீழ்ந்திறக்கத் தகுமிரண்டும்

இன்பமுறு தெய்வவுரு
எய்திவா னுலகடைந்த
இரக்கமொடு வேடுவனும்
எரிவீழ்ந்து கதியடைந்தான். 4.

—வீர மார்த்தாண்ட தேவர்

புரு	எழும்ப	இன்னவன்	தெய்வவுரு
வினை	பேடு	அன்னவன்	அருந்துதல்
எரி	சூழ்ந்து	வனசரன்	அகன்றதோ
கதி	மங்கியது	முன்வினை	வானுலகம்
கனம்	அங்கை		

அரும்பதவுரை

அங்கை - உள்ளங்கை. முனம் - முன்னே. வனசரன் - வேடன். பேடு - பெண் பறவை. எரி கொளுவி - நெருப்பு உண்டாக்கி. கனம் - மேகம். மனம் இருண்டு - மனம் வருந்தி. மங்கியதோ - இறந்ததோ. அருந்து - உண். அடைந்த - அடைந்தன. எரி - நெருப்பு.

பயிற்சி

1. வேடன், மேகம், புரு, காற்று, மழை - என்று தொடங்கி ஒவ்வொரு வாக்கியம் கூறு.

2. இறந்தது, அடைந்தான், திரிகிறது—என்று முடியும்படியாக ஒவ்வொரு வாக்கியம் கூறு.

3. சொல்லும், திரிகிறான், அடைந்தன—இவ்வினைமுற்றுக்களுக்கு மற்ற இரண்டு காலங்கள் கூறு.

இலக்கணம்

1. . இது முற்றுப்புள்ளி. வாக்கியத்தில் கருத்து முடியும் இடத்தில் இக்குறி வைக்கப்படும். அதுபோலவே வினாப் பொருள்

உள்ள இடத்தில் ? இக்குறி வைக்கப்படும். , இது காற் புள்ளி பொருளை நோக்கி இடையில் சிறிது நேரம் நிறுத்தவேண்டிய இடத்தில் இப்புள்ளி வைக்கப்படும். " " இவ்வாறு அமைக் கப்படும் புள்ளிகள் நேர்கூற்றுக் குறி எனப்படும். நேர்கூற்றுக் குறியை மேற்கோள் குறி என்றும் சொல்லலாம். இவை தமக்கு இடையில் உள்ள பகுதி முன்னே ஒருவரால் கூறப்பட்டது என விளக்கும்.

(உ - ம்.) கண்ணன், "நாளைக்கு வருகிறேன்," என்று சொன்னான்.

2. ஏற்ற நிறுத்துக் குறிகளை வை.
இளநீர் சுவை உள்ளது உனக்கு இளநீர் வேண்டுமா தம்பி எனக்கு நுங்கு வேண்டும் என்று கேட்கிறான்.

கேள்விகள்

1. இந்தப் பாட்டுக்களில் அடங்கியுள்ள கதை என்ன?
2. இக்கதையினால் அறிந்துகொள்ளக்கூடிய நீதிகள் யாவை?
3. பேடையைக் காணாத ஆண்புறா எவ்வாறு வருந்திற்று?
4. வேடன் கையில் அகப்பட்ட பெண் புறா ஆண் புறாவைப் பார்த்து என்ன சொல்லிற்று?
5. ஆண்புறா வேடனை எவ்வாறு உபசரித்தது?

20. படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல்

மேலே உள்ள படங்களை வரிசையாகப் பார்த்து, பாலிலிருந்து நெய் தயாரித்தல் என்பதைப் பற்றி ஒரு கட்டுரை எழுது :—

21. கடிதம் எழுதுதல்

1. பிள்ளைகளே, நீங்கள் தபாற்காரரைப்பற்றிப் படித்திருக்கிறீர்கள் அல்லவா? தபாற்காரர் என்ன செய்கிருர்? தபாற்காரர் நமக்கு வேருெரு ஊரிலிருந்து வரும் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுக்கிருர்.

2. தூரத்தில் உள்ளவர்களுக்கு நாம் ஏதேனும் செய்தி தெரிவிக்க வேண்டுமாளுல் கடிதம் எழுதுகிருேம். அவர்களும் நமக்குச் செய்தி தெரிவிக்க வேண்டுமாளுல் கடிதம் எழுதுகிருர்கள். கடிதம் தபால் வழியே ஒரு ஊரிலிருந்து மற்ருெரு ஊருக்கு வருகிறது. அவ்வாறு வரும் கடிதத்தில் உள்ள மேல் விலாசத்தைக் கொண்டு தபாற்காரர் அதை உரியவரிடம் கொடுக்கிருர்.

3. கடிதம் எழுதும்போது, முதலில் கடிதத்தின் தலைப்பில் வலது கைப்பக்கத்தில் நாம் எங்கிருந்து கடிதம் எழுதுகிருேமோ அந்த ஊரின் பெயரும் தேதியும் எழுதவேண்டும். அதன் கீழ் இடது கைப்புறத்தில் நாம் யாருக்குக் கடிதம் எழுதுகிருேமோ அவருக்குரிய முறைப்படி, 'என் அன்புள்ள தம்பி,' 'எனது அருமை நண்பா,' 'எனது பிரியமுள்ள தந்தையீர்,' 'அன்பார்ந்த ஐயா,' என்றிவ்வாறு எழுதவேண்டும். பிறகு அடுத்த வரியில் நமது வணக்கத்தையும் நலத்தையும் குறிக்கலாம். அதன் பின்பு, செய்தியை எழுதவேண்டும். கடிதம்

எழுதி முடிந்த பின்னர் வலது கைப்பக்கத்தில் நமது கையொப்பம் இடவேண்டும். கையொப்பம் இடுவதற்கு முன் 'அன்புள்ள,' 'உண்மையுள்ள,' 'கீழ்ப்படிதலுள்ள,' என்பவற்றுள் ஏற்றதொன்றை யெழுதி அதன் பிறகே கையொப்பம் இடவேண்டும்.

4. கடிதத்தில் விலாசத்துக்குரிய இடத்தில் நாம் யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ அவருடைய விலாசத்தை எழுதவேண்டும்.

5. கீழே இரண்டு கடிதங்கள் உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளன :

1. முருகன் தனக்குப் பணம் அனுப்புமாறு தன் தந்தைக்கு எழுதிய கடிதம்

உறையூர்,
13—10—1954.

எனது அன்புள்ள தந்தையீர்,

உங்களுக்கு எனது அன்பார்ந்த வணக்கம். இங்கு நான் சௌக்கியமாக இருக்கிறேன். அங்கு எல்லா ருடைய சௌக்கியத்தையும் அறிய விரும்புகிறேன்.

எனக்குக் கணக்குப் புத்தகம் ஒன்று வேண்டும். என் செலவுக்கும் கொஞ்சம் பணம் வேண்டும். ஆகையால், எனக்கு மூன்று ரூபாய் பணம் அனுப்ப வேண்டுகிறேன். நான் கவனமாகப் படித்து வரு கின்றேன்.

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ள
முருகன்.

2. கந்தன் தன் வீட்டில் நடக்கும் விருந்துக்கு வருமாறு தன் நண்பன் ஒருவனுக்கு எழுதிய கடிதம்

சின்னக்கடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி.
1—11—1954.

எனதன்பார்ந்த நண்பா,

இங்கு யாவரும் நலம்; அங்கு உனது நலத்தையும் மற்ற நண்பர்கள் நலத்தையும் அறிய விரும்புகின்றேன்.

எங்கள் வீட்டில் அடுத்த புதன்கிழமை காலை ஒரு விருந்து நடக்கப் போகிறது. அது என் தமக்கையின் கலியாணத்தைக் குறித்து நடத்தப்படுவதாகும். அதற்கு நீ அவசியம் வருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
உனதன்புள்ள
கந்தன்.

வரி	நலம்	முறைப்படி	கையொப்பம்
தேதி	கடிதம்	அவசியம்	கீழ்ப்படிதலுள்ள
தலைப்பு	ஏற்றது	தூரம்	மேல் விலாசம்
வணக்கம்	உரியவர்	சௌக்கியம்	

அரும்பதவுரை

நலம் - க்ஷேமம், சுகம். முறைப்படி - ஒழுங்காக, கிரமப்படி. கையொப்பம் - கையெழுத்து. அவசியம் - கட்டாயம்.

பயிற்சி

1. உனக்கு வேண்டிய ஏதாவது ஒரு பொருள் வாங்கி யனுப்பும்படி உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.

2. உங்கள் ஊர்த் திருவிழாவுக்கு வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

கேள்விகள்

1. கடிதம் எழுதும்போது தலைப்பில் குறிக்க வேண்டியவை எவை?

2. எங்கே கையொப்பம் இடவேண்டும்?

3. உன்னுடைய உபாத்தியாயருக்கு எழுதும் கடிதத்தை எவ்வாறு தொடங்குவாய்?

22. கிளிக் கண்ணி

[போலிப் பக்தர்கள்]

1. நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை சொல்வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி.

2. கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்றல் அன்றி
நாட்டத்திற் கொள்ளாரடி—கிளியே
நாளில் மறப்பாரடி.

3. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றும் இல்லா
மாக்களுக் கோர்கணமும்—கிளியே
வாழத் தகுதி யுண்டோ?

4. மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தன்னில்—கிளியே
இருக்க நிலைமை யுண்டோ?

5. சொந்தச் சகோத ரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை யிரங்காரடி—கிளியே
செம்மை மறந்தாரடி.

—பாரதியார்

உரம்	வஞ்சனை	நாட்டம்
பற்று	மானம்	பிதற்றல்
ஈனர்	சிந்தை	உள்வலி
தகுதி	செம்மை	வாய்ச்சொல்
கணம்	மாக்கள்	நேர்மைத்திறம்

அரும்பதவுரை

பற்று - ஆசை. உரம் - உறுதி, வன்மை. சிந்தை - மனம். நாட்டம் - கருத்து. நேர்மை - ஒழுங்கு. மாக்கள் - அற்ப மனிதர்கள். ஈனர் - தாழ்ந்தவர். கணம் - நிமிஷம்.

பயிற்சி

நின்று, சொல்வார், பிதற்றல், கூடி, உண்டோ, உரம், எண்ணி, எண்ணும், இருக்க, துன்பம்—இவைகள் ஒவ்வொன்றும் என்ன சொல்?

கேள்விகள்

1. பாரதியார் யாரை ஈனர் என்று சொல்லுகிறார்?
2. செம்மை மறந்தவர் யார்?
3. இப்பாட்டிலிருந்து, நாம் எப்படி வாழவேண்டுமென்று தெரிகிறது?

23. பழமொழிகள்

நூற்றுக்கு மேல் ஊற்று.

பாடமேறினும் ஏடது கைவிடேல்.

பெற்றமனம் பித்து ; பிள்ளை மனம் கல்லு.

முயற்சியுடையார் இகழ்ச்சி யடையார்.

எருதுப் புண் காக்கை அறியுமா ?

உள்ளத்தைச் சொன்னால் உடம்பெரிச்சல்.

அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடல் ஆகுமா?

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.

பூவோடு சேர்ந்த நாறும் மணம் பெறும்.

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.

ஆறிலும் சாவு; நூறிலும் சாவு.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.

எய்தவன் இருக்க அம்பை நோவலாமா?

ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா ?

பலாப் பழத்துக்கு ஈப்பிடித்து விடவேண்டுமா ?

கரும்பு கட்டோடு இருந்தால் எறும்புதானேவரும்.

காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்.

பழகப் பழகப் பாலும் புளிக்கும்.

நிறைகுடம் நீர் தளும்பாது.

ஊற்று	மூர்க்கன்	கைவிடேல்
பித்து	அம்பலம்	கெட்டகுடி
கன்னம்	தளும்பாது	தூற்றிக்கொள்

அரும்பதவுரை

கைவிடேல் - விட்டு விடாதே. பித்து - பைத்தியம். அம்பலம் - சபை, கூட்டம், கெட்டகுடி - வாழ்வு அழிந்த குடும்பம்.

பயிற்சி

I. வினாக்குறியை நீக்கி, முற்றுப்புள்ளி வரும்படி வாக்கியங்களை மாற்றி வாசி.

1. எருதுப்புண் காக்கை அறியுமா?
2. அன்னம் இட்ட வீட்டில் கன்னம் இடலாமா?
3. ஏழை பேச்சு அம்பலம் ஏறுமா?

II. முற்றுப்புள்ளியை நீக்கி, வினாக்குறி வரும்படி வாக்கியங்களை மாற்றி வாசி.

1. நிறை குடம் தளும்பாது.
2. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
3. முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

கேள்விகள்

1. கெட்ட குடியே கெடும் - எதைப்போல்?
2. அம்பலத்தில் ஏறாது - எது?
3. பாலும் புளிக்கும் - எப்போது?
4. இகழ்ச்சி யடையார் - யார்?

24. குமணன்

[ஓர் நாடகம்]

காட்சி 1

இடம் : குமணன் அரண்மனை.

பாத்திரங்கள் : குமணன், அமணன்.

குமணன் : தம்பி அமணா, நீ ஏன் சிறிது முக வாட்டத்தோடு இருக்கிறாய்?

அமணன் : அண்ணா, வேறொன்றுமில்லை. நீங்கள் நமது பொருளையெல்லாம் புலவர்களுக்கும் இரவலருக்கும் வாரி வாரிக் கொடுக்கிறீர்களே. அதை நினைக்கும்போது எனக்கு மிக்க கவலை ஏற்படுகிறது.

குமணன் : ஏன் கவலைப்பட வேண்டும்? பொருளை நாம் பிறக்கும்போது கொண்டு வந்தோமா? இறக்கும்போது கொண்டு போவோமா? அழியுந் தன்மையுள்ள பொருள் படைத்ததன் பயன் புலவர்களுக்கும் இரப்போர்க்கும் கொடுத்து அழியாத புகழைப் பெறுவதன்றோ?

அமணன் : அண்ணா, என்ன புகழ் வேண்டியிருக்கிறது! புலவர்க்கும் இரப்போர்க்கும் பொருளைக் கொடுப்பதனால் நாம் அவர்களைச் சோம்பேறிகளாக ஆக்குகிறோம். அதனோடு நமது பொருளும் போய் விடுகிறதே!

குமணன் : புலவர்களா சோம்பேறிகள்! அவர்கள் தம் வாழ்நாள் முழுவதையும் கல்விப் பயிற்சியிலேயே கழிப்பவர்கள் ஆயிற்றே. அவர்கள் நம்

போன்றவர்களுக்குப் பல நீதிகளைத் தங்கள் அரிய பாடல்கள் மூலம் புகட்டி வருகின்றவர்கள். அவர்களை நாம் ஆதரிக்காவிடில் வேறு யாவர் ஆதரிப்பார்? இரவலரும் பொருளீட்ட இயலாதவர்கள். அவர்களை ஆதரிப்பதும் நமது கடமையாகும்...ஆ, இதோ ஒரு புலவரும் வருகிறார்.

[பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் பரிசில் பெறக் குமண வள்ளலிடம் வருகின்றார்.]

குமணன் : புலவர் பெருமானே, வருக வருக. உங்கள் வரவு நல்வரவாகுக.

பெருஞ்சித்திரனார் : குமண வள்ளலே, நீண்ட நாளாக உங்களைக் காண விரும்பியதுண்டு. எனினும் இன்று தான் காண நேர்ந்தது. உங்களைக் கண்டமையால் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

குமணன் : புலவரே, யானும் உங்களைக் கண்டமையால் மகிழ்ச்சியுற்றேன். சரி, ஏதேனும் செய்தி உளதோ?

பெருஞ்சித்திரனார் : செய்திக்கு என்ன குறைவு? யானும் எனது மனைவி மக்களும் பசியால் வாடி வருந்துகின்றோம். சோறு கண்டு பல நாட்களாயின.

குமணன் : அப்படியா! இதோ, இந்தப் பொருளையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய் உங்கள் வறுமையைப் போக்கிக் கொள்ளுங்கள்.

[குமணன் ஏராளமாகப் பொருளை வாரிப் புலவருக்கு வழங்குகின்றான். அதைக் கண்டு அமணன் மனம் மிகவும் புழுங்குகின்றான்.]

அமணன் : இது என்ன அறியாமை! இப்படிப் பொருளை வாரி வாரி வீசிக்கொண்டிருந்தால் அரண்மனைப் பொன்னறை காலியாகி விடுமே! பொருளில்லாவிடில் அரசாட்சி எவ்வாறு நடைபெறும்? நாடும் விரைவில் அழிந்து விடுமே!

குமணன் : தம்பி, நீ கொடையின் பெருமை அறியாது ஏதேதோ கூறுகிறாய்; பொருளையே பெரிதாக நினைத்துக்கொண்டிருக்கிறாய். சரி, இந்த நாட்டை நீயே ஒப்புக்கொள். யான் இன்றே காடு செல்லுகின்றேன்.

[குமணன் காடு செல்ல, அமணன் நாட்டைக் கைப்பற்றி அரசனாகித் தன் அண்ணன் உயிரோடிருக்கும் வரை நாடு சொந்தமாகாது என்னும் கருத்துடையவனாய், குமணனின் தலையைக்கொண்டு வருகின்றவருக்குப் பதினாயிரம் பொன் பரிசில் தருவதாகப் பறை அறைவிக்கிறான்.]

காட்சி 2

இடம் : காடு.

பாத்திரங்கள் : பெருந்தலைச் சாத்தனாரும் குமணனும்.

[குமணனைக் காண எண்ணிய பெருந்தலைச் சாத்தனார் அவன் காடு சென்றிருக்கும் செய்தியை யறிந்து தாமும் காடு சென்று தேடிக் குமணன் இருப்பிடத்தை அடைகின்றார்.]

குமணன் : சாத்தனாரே, வருக. ஏது இவ்வளவு தூரம்?

சாத்தனார் : குமண வள்ளலே, யான் உங்களைப் பார்க்கும் பொருட்டு உங்கள் ஊர் செல்லக் கருதினேன். எனினும், நீங்கள் நாட்டை விட்டுக்

னாட்டுக்கு வந்திருக்கும் செய்தி யறிந்து உங்களைக் காண வேண்டும் என்னும் அவாவினால் இங்கு வந்தேன்.

குமணன் : புலவரே, நல்லது. இப்பொழுது எது கருதி வந்தீர்கள் ?

சாத்தனார் : வள்ளலே, எனது மனைவியும் குழந்தையும் உணவின்றி வருந்துகின்றனர். குழந்தை பசிக் கொடுமையால் தாய் முகம் நோக்க, அவள் என் முகம் நோக்கினள். அதனால், யான் இங்கு வந்து உங்கள் முகம் நோக்குகின்றேன்.

குமணன் : புலவரே, யான் நாட்டில் இருக்கும் காலத்தில் வந்திருந்தால் வேண்டுவதெல்லாம் பெற லாம். அப்பொழுது வராமல் இப்பொழுது இங்கு வந்து உங்கள் வறுமையைத் தெரிவிக்கின்றீர்களே ! யான் யாது செய்வேன் ?

சாத்தனார் : அரசே, ஆறு நீர்ப்பெருக்கு அற்ற காலத்திலும் ஊற்று நீரால் உலகத்தார்க்கு உபகாரம் செய்யுமன்றோ ?

குமணன் : (சிறிது யோசித்து) சாத்தனாரே, சரி. என் தம்பியாகிய அமணன் என் தலையைக் கொண்டு வருவோர்க்குப் பதினாயிரம் பொன் தருவதாகக் கூறி யிருக்கிறான். இதோ, இந்த வாளினால் என் தலையைக் கொய்து கொண்டுபோய் என் தம்பி கையிற் கொடுத் துப் பொன் பெற்று, உங்கள் வறுமை நோயைப் போக்கிக் கொள்ளுங்கள்.

[குமணன் வாளை நீட்டுகின்ருன். புலவர் வியப்பும் திகைப்பும் உடையவராய்ச் சற்று யோசித்து அவ்விடம் விட்டு நீங்கி ஒரு சிற்பியினிடம் சென்று குமணன் தலைபோல் ஒரு பொய்த் தலை செய்து கொண்டு அமணன் அரண்மனை அடைகின்ருர்.]

காட்சி 3

இடம் :—அரண்மனையும் அரச வீதியும்.

பாத்திரங்கள் :—அமணன், சாத்தனுர், குமணன்.

[அமணனுக்கு இளங்குமணன் என்னும் பெயரும் உண்டு.]

சாத்தனுர் : இளங்குமணரே, இதோ உங்கள் தமையன் தலையைக் கொண்டு வந்திருக்கிறேன்.

[பொய்த்தலையைக் காட்ட, அமணன் அதை உண்மைத்தலையென்றே கருதுகின்ருன்.]

அமணன் : ஆ! அண்ணு, அண்ணு, என்ன செய்வேன்! ‘ அண்ணு ’ என்று இனி யாரை அழைப்பேன். ஐயோ! உங்கள் பெருமையை அறியாமல் உங்களைக் கொல்லத் துணிந்தேனே! யான் ஒரு பெரும் பாவி அல்லவா? உங்களை மீண்டும் எப்பொழுது காண்பேன். எனக்கு இனி நல்வாழ்வு ஏது?

சாத்தனுர் : இளங்குமணரே, வருந்த வேண்டாம்; வருந்த வேண்டம். உமது அண்ணனை யான் உயிர்ப்பித்துக் காட்டினுல் எனக்கு என்ன கொடுப்பீர்?

அமண்ன் : புலவரே, உயிர்ப்பித்துக் காட்டுவீர்களா? என் அருமை அண்ணனை உயிர்ப்பித்தால் கோடி பொன் தருவேன். இன்னும் என் உயிரையும் கொடுப்பேன்.

சாத்தனார் : சரி, இதோ சென்று குமணனை உயிரோடு அழைத்துக் கொண்டு வருகின்றேன்.

[புலவர் காடு சென்று குமணனிடம் செய்தி அறிவித்து அழைத்துக் கொண்டு வருகிறார். அமணன் ஏவலரால் தன் தமையன் வருவதறிந்து எதிர்கொண்டு சென்று அரசவீதியில் காண்கின்றான்.]

அமணன் : எனதருமை அண்ணா, வருக வருக. சிறியேன் செய்த பெரும்பிழையைப் பொறுத் தருள வேண்டும்.

[அமணன் கீழே விழுந்து குமணனை வணங்குகின்றான். குமணன் தம்பியை எடுத்து மார்போடு தழுவிக் கொள்ளுகிறான்.]

குமணன் : தம்பி வருந்தாதே; உன் அறி யாமையால் முன்பு என்னை வெறுத்தாய். இப்பொழுது உனக்கு அறிவு வந்தமையாலும் சகோதர அன்பா லும் என்னை விரும்புகின்றாய். இது நலமே. நடந்த காரியத்தைப் பற்றி, இனி யாதும் நினைக்க வேண்டாம்.

[அனைவரும் அரண்மனை அடைகின்றார்கள்.]

அமணன் : அண்ணா, எனக்கு, இனி நாடு வேண்டாம்; நீங்களே முன்போல அரசராக இருங்கள்.

குமணன் : தம்பி, உன் விருப்பப் படியே ஆகட்டும். ஆனால், நீ இளவரசனாக இரு.

அமணன் : நீங்கள் விரும்புகிற படியே ஆகட் டும், அண்ணா.

குமணன் : (சாத்தனரை நோக்கி), புலவர் பெரு மானே, இதோ இந்தப் பொருள்களே யெல்லாம் எடுத் துக் கொள்ளுங்கள். உங்கள் சூழ்ச்சித் திறத்திஞல் என் தம்பி இளங்குமணன் நல்லுணர்வு பெற்ருன். யான் மீண்டும் அரசஞகிப் புலவரைப் போற்றும் புண்ணியம் பெற்றேன்.

[புலவர் பொருள் பெற்றுக் குமணனே வாழ்த்திச் செல் கின்ருர்.]

25. வெற்றிவேற்கை

வெற்றிவேற்கை என்பது ஓர் நீதி நூல். இது "நறுந்தொகை" என்றும் கூறப்படும். இந்நூல் 'வெற்றிவேற்கை வீரராமன்' என்று தொடங்கிப் பாடப்பெற்றமையால் இதற்கு 'வெற்றிவேற்கை' என்னும் பெயர் வழங்கப் பெறுகின்றது. இந்நூலைப் பாடியவர் அதிவீரராம பாண்டியன் என்னும் அரசர். அவர் பாண்டிய நாட்டில் உள்ள கொற்கை நகரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தவர்.

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கை யாளி குலசே கரன்புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றம் களைவோர் குறைவிலா தவரே.

ஆசிரியர் பெருமை

1. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.

அழகு செய்பவை

2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னவர்க்கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொ ருளுரைத்தல்.
6. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
8. குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்.
9. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

பெருமையும் சிறுமையும்

10. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே.

11. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.

12. பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.

13. சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.

14. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.

15. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.

16. அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.

17. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.

18. கலக்கினும் தண்கடல் சேறா காது.

19. பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

பிழை பொறுத்தல்

20. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.

21. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

நட்பு

22. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.

கல்விச் சிறப்பு

24. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

25. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

26. நாற்பாற் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.

27. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர்.

28. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

இன்னார்க்கு இது இல்லை எனல்

29. யானைக் கில்லை தானமும் தருமமும்.

30. பூனைக்கில்லை தவமும் தயையும்.

31. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.

32. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

33. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.

34. கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.

நிலையாமை

(1) செல்வமும் வறுமையும்

35. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
36. குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
37. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
38. எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.
39. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
40. பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
41. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே.
42. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

(2) யாக்கை

43. மணவணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி அணிந்ததம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

இதற்கு இது அஞ்சும் எனல்

44. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

45. குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன்தலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.

இதனினும் இதுநன்று எனல்

46. கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.
47. சான்றோர் இல்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

பதர்

48. காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.
49. குடியலைத் திரந்துவெங் கோலொடு நின்ற
முடியுடை இறைவனும் மூர்க்கனும் பதரே.
50. முதலுள பண்டம் கொண்டுவா ணிபம் செய்து
அதன்பய னுண்ணு வணிகரும் பதரே.
51. வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.
52. தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

பொய்யும் மெய்யும்

53. பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
54. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

55. இருவர்தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரை யாராயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மருகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாளா கும்மே.

பழிச்சொல்

56. பழியா வருவது மொழியா தொழிவது.

பிரயாணம்

57. துணையோ டல்லது நெடுவழி போகேல்.
58. புணைமீ தல்லது நெடும்புனல் ஏகேல்.
59. வழியே ஏகுக வழியே மீளுக.

வாழ்த்து

60. வாழிய நலனே வாழிய நலனே.

ஆ	முறைமை	வேதியர்	அடினும்
அணி	ஆண்மை	வணிகர்	பிணவணி
மறை	உண்டி	தந்திரி	புன்தலை
பழி	வறுமை	தறுகண்	சான்றோர்
புணை	செம்மை	அறிஞர்	தொல்பதி
தேன்	திரள்	• வறிஞர்	குறவர்
படு	கயம்	கொழுநன்	ஏய்த்து
கிளை	புரவி	தெள்ளிய	கார்வார்
கசடு	அருது	நுண்ணிது	செழுங்கிளை
வேதம்	அகில்	அண்ணல்	தாங்குதல்
ஒளி	ஒழுக்கம்	உணர்ந்து	அடங்கல்

பிழை	பதர்	புகினும்	பொல்லாங்கு
தயை	தானம்	குஞ்சம்	பொறுத்தல்
ஞானி	தவம்	பெற்றம்	குலநலம்
பாழ்	நாணம்	பொற்றொடி	நலிந்தோர்
பொலி	உடைமை	மைந்தர்	சொல்வன்மை
கோடி	தேயும்	செறிந்து	வரும்பொருள்
ஊடே	புனல்	மணவணி	சொலமாட்டாமை
கேண்மை	கமழாது	குலமகள்	அறக்கூழ்ச்சாலை

அரும்பதவுரை

எழுத்து - கல்வி. அறிவித்தவன் - கற்றுக் கொடுத்தவர் (ஆசிரியர்). கசடு - குற்றம், பிழை. செழுங்கிளை - நெருங்கிய சுற்றத்தார். தந்திரி - சேனைத்தலைவன். தறுகண் - அஞ்சாமை. கொழுநன் - கணவன். செம்மை - ஒழுக்கம் கெடாமல் இருத்தல்.

தேம்படு - கள் உண்வாகும். தெண்ணீர்க் கயம் - தெளிவாகிய நீரையுடைய குளம். சினை - முட்டை. அண்ணல் - பெருமை பொருந்திய. அணி - அழகிய. புரவி - குதிரை. அடினும் - காய்ச்சினாலும். பொல்லாங்கு - தீமை. தண்கடல் - குளிர்ச்சி பொருந்திய கடல்.

தான்தர - தானே தனக்குத் தந்துகொள்ள. கடன்-கடமை. கேண்மை - நட்பு. இருநிலம் - பெரிய பூமி. வேர்வீழ்க்கும் - வேரூன்றும், உறுதிப்படும்.

குலநலம் - தான் பிறந்த குலத்தின் சிறப்பு. அரசனும் விரும்பும் - அரசனும் விரும்புவான்.

நாணம் - வெட்கம். நலிந்தோர் - மெலிந்தோர், நோயாளிகள். கெட்டோர் - செல்வம் குன்றியவர்கள்.

உடைமை - செல்வம். குஞ்சரம் - யானை. நண்ணினும் - அடைந்தாலும். நண்ணுவர் - அடைவர். அறக்கூழ்ச்சாலை - தருமத்திற்குச் சோறுபோடும் சத்திரம். பெற்றம் - எருது. பொற்

றெடி (பொன் + தொடி) தங்கவளையல்களை யணிந்தவள். உடையோர் - செல்வம் படைத்தவர்கள்.

மணவணி - கலியாணக்கோலம். அணிந்த - பூண்ட. கோடி - புதுத்துணி.

நெடுங்காடூடே - பெரிய காட்டினுள்ளே. புன்தலை - சிறிய தலை. புல்வாய் - மான்.

சான்றோர் - பெரியோர். தொல்பதி - பழைய நகர். குறவர்- மலைநாடுகளில் வாழும் மக்கள்.

குடியலைத்து - குடிகளை வருத்தமுறச் செய்து. இரந்து - வரிவாங்கி. சொல்வன்மை - பேசும் சாமர்த்தியம். சொல மாட்டாமை - சாமர்த்தியமாகப் பேசமுடியாமை. புணை - தெப்பம். புனல் - நீர்.

26. வாக்குண்டாம்

வாக்குண்டாம் என்பது ஒரு நீதிநூல். இதற்கு மூதுரை என்றும் பெயர் உண்டு. இந்நூலின் முதற்பாட்டு 'வாக்குண்டாம்' என்று தொடங்குதலால் இதற்கு வாக்குண்டாம் என்னும் பெயர் முதற்குறிப்பாக வழங்கி வருகிறது. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்களை இயற்றிய ஔவையாரே இந்நூலையும் இயற்றியவர் ஆவார்.

1. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

2. நன்றி யொருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

3. நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

4. தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் தீது.

5. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

6. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

7. நற்று மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

8. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேசம் அல்லாற் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

9. சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

ஆ	போலும்	பாவித்து	சாந்தனையும்
மார்	அன்னம்	வான்கோழி	ஆந்தனையும்
தாள்	நின்று	பொசியும்	கற்பிலா
பிணம்	கரவு	கரவார்	காமுறுவர்
திரு	வாக்கு	தருங்கொல்	கரவிலா
துப்பு	நோக்கு	உளரேல்	திருவற்ற
கயம்	ஈர்வது	சென்றவிடம்	நல்லார்
தெங்கு	முகப்பர்	சீர்தூக்கின்	தீயார்
நன்றி	முதுகாடு	நுடங்காது	மாமலராள்
தளரா	உகக்கும்	சார்வார்	தும்பிக்கையான்
தேவர்	மனுமுறை	குறைத்தல்	தப்பாமல்
தொல்லுலகு			

அரும்பதவுரை

வாக்கு - படிப்பு, சொல்வன்மை. நல்லமனம் - பரிசுத்த மான மனம். மாமலராள் நோக்கு - செந்தாமரை மலரில் வீற் றிருக்கின்ற சீதேவியின் திருவருட்பார்வை. (அதாவது செல் வம்). மேனி - உடல். நுடங்காது - பிணி முதலியவற்ருல் வாடாது. துப்பு ஆர் - பவளத்தைப்போன்ற. தும்பிக்கையான்- தும்பிக்கையையுடைய விநாயகக் கடவுள். சார்வார் தமக்கு - பூசிப்பவர்களுக்கு.

என்று தருங்கொல் - எப்பொழுது திருப்பிச் செய்வார்களோ. நின்று - நிலைபெற்று. தளரா - சோர்வடையாமல். தாளுண்ட - தன் அடியினலே உண்ட. தலையாலே - தன்முடியினலே.

நயமிக்க - நன்மைமிகுந்த. திருவற்ற - சிறப்பில்லாத. இணங்கி - சேர்ந்து. பொசியும் - கசிந்து ஊறும். தொல்லுல கில் - பழமையான உலகத்தில். கானம் - காடு. பாவித்து - தன் மனத்திற்குள் தானே எண்ணிக்கொண்டு. பொல்லா - அழகில்

லாத. கல்லாதான் - முறையாகப் படிக்காதவன். கற்ற-அதாவது அரைகுறையாகப் படித்தவனுடைய. கவி - படிப்பானது. காமுறுவர் - விரும்புவர். கற்பிலா - கல்வி அறிவில்லாத. முகப் பர் - விரும்பிச் சேர்வர். முதுகாடு - சுடுகாடு. உகக்கும் - விரும்பும்.

மாசற - (மாசு+அற) பிழையற. சிறப்பு - மேன்மை, மதிப்பு. சாந்தனையும் - சாகும் வரையில். ஆந்தனையும்-ஆகு மளவும், முடிந்த வரையில். மாந்தர் - மனிதர்கள். குறைக்குந் தனையும் - வெட்டுமளவும்.

பைந்தமிழ் வாசகம்

ஐந்தாம் வகுப்பிற் குரியது

[புதிய பாடதிட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது]

ஆசிரியர் :

வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,

திருச்சிராப்பள்ளி

T. G. கோபால் பிள்ளை

பதிப்பாளர்

தெப்பக்குளம் | 2/27, பிராட்வே

திருச்சிராப்பள்ளி | ஜி. டி., சென்னை

பதிப்புரிமை] 1954 [விலை அணு 12

முதற் பதிப்பு—நவம்பர், 1954

முன்னுரை

R.B

ஒவ்வொரு நாட்டினரும் தமது தாய்மொழியைப் போற்றிப் பயிலவேண்டுவது இன்றியமையாத கடமை யாகும். அதுபற்றியே நமது அரசியலாரும் ஆரம்ப பாடசாலைகளில் தாய்மொழிப் பயிற்சியை முதன்மை யான பாடமாகவும் கட்டாய பாடமாகவும் அமைத்துள் ளார். நமது தாய்மொழியாகிய தமிழ் ஒரு இனிய மொழி. தமிழில், ஆரம்ப பாடசாலைப் பாட புத்தகங்கள் பல வெளிவந்துள்ளன வாயினும், தமிழ் வளர்ச்சி கருதி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எத்தனை புத்தகங் கள் வெளிவரினும் நலமே. ஆதலின், '**பைந்தமிழ் வாசகம்**' என்னும் பெயரால் இப் புதிய பாட புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இப் புத்தகங்களிலுள்ள பாடங்கள் வகுப்புக்கேற்ற வண்ணமும், மாணவர்கள் மேலும் மேலும் புதிய சொற் களைக் கற்பதற்கேற்றவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மொழிப் பயிற்சியைத் தருதலே பாட புத்தகத்தின் முக்கிய நோக்கமாதலின், அதற்குத் தக்கவாறு பயிற்சிகளும் கேள்விகளும் தரப்பெற்றுள்ளன. மூன்று, நான்கு, ஐந் தாம் வகுப்புக்களில் அரும்பதவுரை கொடுக்கப்பட்டிருத்த லோடு அந்தந்த வகுப்புக்கேற்ற அளவு எளிய முறையில் பாட சம்பந்தமான உதாரணங்களைக்கொண்டு இலக்கண விதிகள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மாணவர்களுக் குச் சுவை பயக்கும் வகையில் அமைந்துள்ள கதைப் பாட்டுக்களும் உரையாடலும் அங்கங்கே வேண்டிய அளவு தரப்பட்டுள்ளன.

கல்வி இலாகா அதிகாரிகளும் கல்விச்சாலை யாசிரி யரும் இப்புத்தகங்களைத் தங்கள் கல்விச்சாலைகளில் பாட புத்தகமாக வைத்து ஆதரிப்பார்களென்று நம்பு கின்றேன்.

ம. பெரியசாமிப் பிள்ளை.

Kabeer Printing Works, Madras (2729)

உள்ளுறை

	தேசீயகீதம்		1
1.	கரிகாற்சோழன்	...	2
2.	பயிர்த்தொழில்	...	8
3.	கம்பர்	...	14
4.	உப்பு	...	21
5.	பாரிமகளிர்	...	26
6.	வீரபாண்டிய கட்டபொம்மன்	...	32
7.	ஒரு பாலைநிலப் பறவை	...	36
8.	உண்மை உயர்வளிக்கும் (செய்யுள்)	...	41
9.	பத்திரிகைச் செய்திகள்	...	45
10.	விவேகானந்தர்	...	48
11.	பஞ்சாயத்து (உரையாடல்)	...	56
12.	உல்லாசப் பிரயாணம்	...	62
13.	செந்தமிழ் நாடு (செய்யுள்)	...	68
14.	வானொலி	...	70
15.	உதயணன் சிறைப்படல்	...	76
16.	பரதனும் குகனும் (உரையாடல்)	...	83
17.	பருத்தி	...	88
18.	நடுநிலைமை குன்றுமை	...	95
19.	தீப்பெட்டி செய்தல்	...	99
20.	தசரதர் (ஒரு நாடகம்)	...	104
21.	தேனீ வளர்த்தல்	...	112
22.	பஞ்சதந்திரக் கதைகள்	...	117
23.	நல்வழி	...	121
24.	நன்னெறி	...	123

ஐந்தாம் வகுப்பிற் குரியது

தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா !
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா,
திராவிட உத்கல வங்கா,
விந்த்ய ஹிமாசல யமுநா கங்கா
உத்கல ஜலதி தரங்கா.

தவசுப நாமே ஜாகே !
தவசுப ஆசிஷ மாகே !
காஹே தவஜய காதா !
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே, ஜயஹே, ஜயஹே,
ஜய ஜய ஜய ஜயஹே!

1. கரிகாற் சோழன்

1. நமது தமிழ் நாடு முற்காலத்தில் மூன்று பெரும் பிரிவாக இருந்தது. அப்பிரிவுகள் சோழநாடு, சேரநாடு, பாண்டிய நாடு என்பன. இவற்றுள், சோழ நாடு என்பது இப்பொழுது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னூர்க்காடு என்று பெயர் வழங்கி வரும் மூன்று மாவட்டங்களும் ஆகும்.

2. சோழ நாட்டின் சிறந்த தலைநகரங்களாக இருந்தவை உறையூரும் காவிரிப்பூம்பட்டினமும் ஆகும். இவற்றுள், உறையூர் என்பது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளது. காவிரிப்பூம்பட்டினம் என்பது காவிரியாறு கடலோடு கலக்குமிடத்தில் இருந்தது; இப்பொழுது இல்லை; ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பே கடலால் கொள்ளப்பட்டுவிட்டது. இவ்விரு நகரங்களில் ஒவ்வொன்றை ஒவ்வொரு காலத்தில் தலைநகராகக்கொண்டு ஆண்ட முற்காலச் சோழ மன்னர்கள் பலர். அவர்களுள் கரிகாற்சோழன் என்பவன் மிகச் சிறந்த மன்னன் ஆவான்.

3. கரிகாற்சோழன் ஏறத்தாழ ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்பு இளஞ்சேட்சென்னி என்னும் சோழ மன்னனுக்கு மகனாகப் பிறந்தவன். அவன் இளமைப் பருவத்திலேயே தந்தையை இழந்தான். தனக்கு உரிமையாக உள்ள சோழ நாட்டை அரசாளத் தொடங்கியபோது அந்நாட்டைக் கைப்பற்றக் கருதியிருந்த சில பகைவர்கள் அவனைச் சிறையி லடைத்துச் சிறைக்கூடத்திற்குத் தீ வைத்தனர். அதனை அறிந்த அவன் மிக்க வீரங்கொண்டு அச்சிறையினின்று தப்பி

வரும்பொழுது தீயினால் அவன் கால் கரிந்தமையால் அவனுக்குக் கரிகால் சோழன் எனப் பெயர் வழங்கியது.

4. கரிகாற் சோழன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு சில காலம் அரசியற்றினன். அப்பொழுது உறையூர் அரண்மனையும் மதிலும் பெரிய வீதிகளும் உடைய அழகிய நகரமாக இருந்தது. பின்னர், அவன் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செய்தான். காவிரிப்பூம்பட்டினம் என்பது ஒரு துறைமுகப்பட்டினம். அப்பட்டினம் மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு பகுதியாக இருந்தது. அப்பட்டினத்தில் கப்பல் வாணிபம் மிகுதியாக நடைபெற்றதால் பல பொருள்கள் ஏற்றுமதியாக வேற்று நாட்டுக்கு அனுப்பப்பட்டன. அயல் நாடுகளிலிருந்து பல பொருள்கள் இறக்குமதியாக அந்நகருக்கு வந்தன. கடற்கரையில் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருந்தது. ஏற்றுமதி இறக்குமதிச் சரக்குகளுக்குச் சுங்கம் விதிப்பதுண்டு. அதற்கெனச் சுங்கச் சாவடிகளும் இருந்தன.

5. பற்பல தொழிலாளர் வசித்தற்குத் தனித்தனி வீதிகளும் பற்பல மரபினருக்கெனத் தனித்தனியான தெருக்களும் இருந்தன. பல பொருள்கள் விற்பனையாதற்குரிய பல கடைத்தெருக்கள் இருந்தன. அழகிய பூஞ் சோலைகளும் வாவிகளும் இருந்தன. இத்தகைய சிறந்த நகரத்தின் நடுவில் கரிகாற்சோழன் அரண்மனையமைந்து அந்நகருக்குப் பேரழகைக் கொடுத்தது.

6. கரிகாற்சோழன் சிறந்த வீரன்; பல மன்னர்களைப் பல இடங்களில் போரில் தோல்வியுற்றுப் புறங்காட்டி ஓடச்செய்து தமிழ் நாடு முழுவதையும் தனதாக ஆக்கிக் கொண்டான். வடநாட்டின்மீது படையெடுத்துக்

கங்கையைக் கடந்து சென்று இமயமலையில் தனது புலிக் கொடியை நாட்டி மீண்டான். அவன் வீரம் எத்தகையது பாருங்கள் !

7. கரிகாலன் தனது நாட்டை வளம்படுத்தி மிகமேன்மையுறச் செய்தான். காவிரியாற்றின் இரண்டு பக்கத்திலும் கரை போட்டவன் கரிகாலனே. காவிரியாறு சுமார் நானூறு மைல் நீளம் உள்ளது. அதற்குக் கரைபோடுவதென்றால் அது எவ்வளவு அருமையான செயல்! பயிர்த் தொழில், சிற்பம், இசைக்கலை, கைத்தொழில், வாணிபம் முதலிய யாவும் அவனால் விருத்தி செய்யப்பட்டன.

8. கரிகாலன் சிறந்த கல்விமான். கற்றறிந்த புலவர்களைப் பொன்னேபோல் போற்றி அவரவர்க்குத் தகுந்த பரிசில் அளித்துப் பாராட்டும் இயல்புடையவன். அக்காலத்தில் ஆண்மக்களே யன்றிப் பெண்மக்களும் கல்வியிற் சிறந்தவர்களாக இருந்தார்கள். கரிகாலன் மகளாகிய **ஆதிமந்தி** என்பவள் சிறந்த தமிழ்ப் புலமையுடையவள். முடத்தாமக் கண்ணியார் என்னும் ஒரு பெண் புலவர் 'பொருநராற்றுப்படை' என்னும் ஒரு பாட்டில் கரிகாலனது நாடு, அரசாட்சி முதலியவற்றைப் பற்றிப் பாடியிருக்கின்றார்.

9. உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் 'பட்டினப்பாலை' என்னும் ஒரு பாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றியும் கரிகாலனைப்பற்றியும் மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார். அப்பாட்டைக் கேட்ட கரிகாலன் அப்பாட்டின் அருமையை அறிந்து, அப்புலவருக்குப் பதினாறு லட்சம் பொன் பரிசிலாகக் கொடுத்து அவரைப் பாராட்டினான். கல்வியினிடத்தும் கற்றோரிடத்தும் அவனுக்கிருந்த அன்பும் மதிப்பும் எத்தகையது பாருங்கள் !

10. கரிகாலன் நீதி செலுத்துதலில் மிக வல்லவன்.

தன்னிடத்தில் வழக்குரைக்க வருகின்றவர்கள் சொல்லைக் கொண்டே 'உண்மை இதுதான்' எனக்கண்டறிந்து அவர்கள் மகிழுமாறு முடிவு கூறும் ஆற்றலும் அறிவும் உடையவன்.

11. கரிகாலனது இளமைப் பருவத்தில் அவன் அரசாட்சிக்கு வந்ததும் ஒரு நாள் இரண்டு முதியவர்கள் தங்கள் வழக்கை உரைக்க அவனிடம் வந்தனர். அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருந்தான். அவனைக் கண்டவுடன் அம்முதியோர் 'இவன் இளம் பருவமுடையவனாக இருக்கின்றான்; அனுபவமில்லாதவன்; இவன் எங்ஙனம் நமது வழக்கைக் கேட்டு நீதி செலுத்தப் போகின்றான்!' எனக் கருதினர். அவர்கள் கருத்தைக் குறிப்பால் உணர்ந்த மன்னன் உடனே ஆசனம் விட்டெழுந்து உள்ளே சென்று, நரைமுடித்து முதுமைக் கோலத்துடன் வந்து மீண்டும் அரியணையில் அமர்ந்தான். அவனைப் பார்த்த அம்முதியோர் 'இம்முதுமைப் பருவமுள்ளவன்தான் அரசன் போலும்' எனக் கருதி அவனிடம் தங்கள் வழக்கை உரைத்தனர். அவர்கள் சொன்ன சொற்களைக் கொண்டே வழக்கின் உண்மை அறிந்து, அவ்விருவரும் மகிழுமாறு முடிபு கூறினன். அரச குலத்தில் பிறந்த கரிகாலன் அனுபவம் பெறாத இளமைப் பருவமுடையவனாக இருந்தும், அரச நீதி செலுத்தும் தன்மை அவனிடத்தில் செம்பாகமாக அமைந்திருந்ததென்பது இவ் வரலாற்றினால் தெரிகின்றது. இச்செய்தியை அறிவிக்கும் பாட்டு,

> " உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
> நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
> சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
> கல்லாமற் பாகம் படும்,"

என்பது.

12. இத்தகைய சிறப்புகளெல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற சோழன் கரிகாலனைப் பாராட்டிப் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். அவர்கள் பாடிய பாட்டுக்களி லிருந்தே செங்கோல் வழுவாத பேரரசனாகிய இவனது சரித்திரம் நமக்கு ஒருவாறு தெரிகின்றது.

மரபு	விச்சை	புறங்காட்டல்
முடிபு	வழுவாத	ஏற்றுமதி
வாவி	இச்சை	இறக்குமதி
நரை	வழங்கிவருதல்	அரியணை
சுங்கம்	இசைக்கலை	கலங்கரை விளக்கம்
நாட்டி	பாகம் படுதல்	முறை செய்தல்

அரும்பதவுரை

வாவி - குளம். மரபு - குலம். முறை செய்தல் - நீதி தவறாது தீர்ப்புச் செய்தல். புறங்காட்டல் - முதுகு காட்டி ஓடுதல். பட்டி னம் - கப்பல்கள் தங்கக்கூடிய துறைமுகமுள்ள கடற்கரை ஊர். முதுமக்கள் - பெரியோர். இச்சை - விருப்பம். விச்சை - வித்தை. பாகம் படும் - பாதி உண்டாகும்.

பயிற்சி

1. எதிர்ப்பதம் கூறு : தோல்வி, இளமை, நீதி, உண்மை.
2. பொருள் மாறுவதை விளக்கு : கரை, கறை. கரி, கறி. துரை, துறை. மைல், மயில்.

இலக்கணம்

1. முதியவர்கள், கரிகாலன், ஆதிமந்தி—இச் சொற் களுக்குத் திணை, பால், எண், இடம் கூறு.

2. கேட்டவாறு மாற்று :

கரிகாலன் காவிரியாற்றின் இரண்டு பக்கத்திலும் கரை போட்டான்—'போடப்பட்டது' என்பது பயனிலையாக வரும்படி.

கரிகாலன் இமயமலையில் தனது புலிக்கொடியை நாட்டினான்—'புலிக்கொடி' என்பது எழுவாயாக வரும்படி.

அவன் வீரம் எத்தகையது !—முற்றுப்புள்ளி வரும்படி.

கேள்விகள்

1. கரிகாலன் என்று பெயர் ஏற்பட்ட காரணம் யாது?

2. கரிகாலன் அடைந்த வெற்றிகள் யாவை? அவன் நாட்டிற்குச் செய்த நன்மைகள் யாவை?

3. சோழன் 'நரை முடித்துச் சொல்லான் முறை செய்தான்.' எப்போது? ஏன்? எவ்வாறு?

4. குறிப்பு வரைக : காவிரிப்பூம்பட்டினம், பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை.

2. பயிர்த் தொழில்

1. பயிர்த்தொழில் என்பது பயிர் செய்யும் தொழில் ஆகும். இது விவசாயம் என்றும் கூறப்படும். பயிர்த் தொழில் செய்பவன் குடியானவன் என்றும் விவசாயி என்றும் கூறப்படுவான். குடியானவன் என்று பெயர் வரக் காரணம் என்ன? ஒரு ஊரில் நிலேத்த குடியாக இருந்து அவ்வூரில் நடைபெறும் முக்கியமான தொழிலாகிய பயிர்த்தொழிலேச் செய்து வந்தமையால் பயிர்த் தொழில் செய்பவனுக்குக் குடியானவன் எனப் பெயர் வந்திருக்க வேண்டும். விவசாயி என்னும் பெயர் விவசாயமாகிய தொழிலேச் செய்வதனுல் வந்ததாகும்.

2. நமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களுள் நான்கு இன்றியமையாதவை. அவைகள் காற்று, நீர், உணவு, உடை என்பன. இவைகளுள் காற்றையும் நீரையும் கடவுளே ஏராளமாகப் படைத்திருக்கின்ருர். இவைகளே மனிதன் செய்தல் இயலாத காரியம். ஆனுல், உணவுக்கு வேண்டிய நெல், கம்பு முதலியவற்றையும் உடைக்கு வேண்டிய பருத்தி முதலியவற்றையும் மனிதனே பயிராக்கிக் கொள்ளுகின்ருன். உணவும் உடையும் இன்றி மக்கள் வாழமுடியாதல்லவா? மக்கள் வாழ்க்கைக்கு மிக மிக அவசியமான இவ்விரண்டுக்கும் காரணமான பயிர்த்தொழில் எவ்வளவு சிறப்புடையது என்று எண்ணிப் பாருங்கள்.

3. பயிர் நன்செய்ப் பயிரென்றும் புன்செய்ப் பயிரென்றும் தோட்டப்பயிர் என்றும் மூவகைப்படும். நன்செய் என்ருல் உயர்ந்த அல்லது செழுமையான நிலம் என்றும், புன்செய் என்ருல் தாழ்ந்த அல்லது செழுமையற்ற நிலமென்றும் பொருள். நன்மையான செய் நன்

செய்; புன்மையான செய் புன்செய். செய் என்பது நிலம். நன்செய் நிலங்களில் விளையும் பயிர், நன்செய்ப் பயிர். அவை நெல், வாழை, கரும்பு என்பன. புன்செய்

நிலங்களில் விளையும் பயிர் புன்செய்ப் பயிர். அவை கம்பு, சோளம், கேழ்வரகு, பருத்தி முதலியன. தோட்டப் பயிர் மிளகாய், அவரை, புடல், கத்திரி முதலியன.

4. நன்செய் நிலங்கள் ஆற்றின் இருகரைகளையும் அடுத்துச் சில மைல் தூரம் வரையில் பரவியிருக்கும். ஆற்றினின்று கால்வாய்களின் வழியாக அந் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும். அதனால், புது வெள்ளம் வரும்போதெல்லாம் அதில் கலந்துள்ள வண்டல், நிலங்களில் படிந்து படிந்து அந்நிலங்களை மிக உரமுள்ளதாகவும், கொழுமையாகவும் ஆக்கும். சில ஏரிகளை அடுத்தும் நன்செய் நிலங்கள் உண்டு. நன்செய்ப் பயிர்களில் முக்கியமானது நெற்பயிர்.

5. நெற்பயிர் செய்தலுக்கு மிகுந்த உழைப்பு வேண்டும். நிலத்தில் நீர் பாய்ச்சிப் பதப்படுத்த வேண்டும்; அதனை நன்ருகப் பலமுறை உழுது சேருக்க வேண்டும்; பறம்படிக்கவேண்டும்; விதை தெளிக்கவேண்டும்; நாற்றைப் பிடுங்கி நடவேண்டும்; களை பறிக்கவேண்டும். அடிக்கடி நீர் பாய்ச்ச வேண்டும். சில நிலங்களுக்கு எருவும் போடவேண்டும். இங்ஙனம் பலவகையான உழைப்பினுல் ஆகிய பயிரானது பச்சைப் பசேரென்று பசும்பட்டு விரித்தாற்போன்று கண்ணுக்கினிய காட்சியளிக்கும். பயிர் கதிர்விட்டு முற்றிப் பழுத்துத் தலை சாய்ந்து அறுக்கும் பருவம் வந்தவுடன் அறுத்துக் களத்திற்குக் கொண்டுபோய் அடித்து, நெல் வேருகவும் வைக்கோல் வேருகவும் பிரிக்கவேண்டும். நெல்லைக் குவியல் குவியலாகக் காணும்போது உண்டாகும் மகிழ்ச்சி அளவற்றதாகும்.

6. புன்செய்ப் பயிர்களில் துவரை, கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய இவைகளும் பருத்தியும் முக்கியமானவை. கம்பு, கேழ்வரகு முதலிய தானியங்கள் உணவுக்கும், பருத்தி உடைக்கும் பயன்படுகின்றன. கம்பும், சோளமும் சற்று மணற்பாங்கான நிலத்திலும், கேழ்வரகு சற்றுக் களிப்பு மண் உள்ள நிலங்களிலும், பருத்தி கரிசல் மண்ணுள்ள நிலங்களிலும் பயிராகும். கரிசல் நிலம் என்பது கருநிறமுள்ள களிப்பு நிலமே. புன்செய்ப் பயிருக்கு நீர் மிகுதியாக வேண்டுவதில்லை; நிலத்தை இரண்டொரு முறை உழுதால் போதும். புன்செய் நிலத்தைப் பெரும்பாலும் புழுதியாகவே உழுவார்கள். மழை பெய்தவுடன் அந்த ஈரத்திலேயே நிலத்தை உழுது விதை தெளித்து விடுவார்கள். மழையின் ஈரத்தைக் கொண்டே விதை முளைத்து வளரும். பயிர் வளரும்போது இரண்

டொருமுறை நல்ல மழை பெய்தால், அந்த மழை நீரே வளர்ச்சிக்குப் போதுமானதாக இருக்கும்.

7. தோட்டப் பயிர்களில் மிளகாயும், கத்திரி, அவரை, புடல் முதலியவைகளும் முக்கியமானவை. தோட்டப் பயிர் செய்வதற்குப் புன்செய்ப் பயிர் செய்வதைக் காட்டிலும் சற்று மிகுந்த உழைப்பு வேண்டும். தோட்டங்களை மண்வெட்டியினால் கொத்தியாவது, கலப்பைகொண்டு உழுதாவது மண்ணை மிருதுவாக்கி, மிளகாய், கத்திரி இவற்றின் நாற்றுக்களை நடுவார்கள். அவரை, புடல் முதலியவைகளைக் குழிகள் தோண்டி அவற்றில் விதை விதைத்துப் பயிராக்குவார்கள். இவற்றிற்குத் தண்ணீர் புன்செய்ப் பயிருக்கு வேண்டுவதை விட அதிகம் வேண்டும்.

8. உரிய காலத்தில் மழை பெய்தால் மேற்கூறிய மூவகையான பயிரும் மிகச் செழிப்பாக வளர்ந்து நல்ல பலனைத் தரும். 'மாரியல்லது காரியம் இல்லை' என்னும் வாக்கியம் இதுபற்றியே உண்டானது. இன்னும், அம் மூவகையான பயிர்களையும் அதற்குரிய பருவத்திலே பயிர் செய்யவேண்டும். பருவம் தப்பினால் நல்ல விளைவு உண்டாகாது. இதனாலேயே 'பருவத்தே பயிர்செய்' என்னும் முதுமொழியும் தோன்றியது.

9. பயிர்த்தொழிலுக்கு உழவு முக்கிய மாகையால், அது உழுதொழில் என்றும் கூறப்படும். அத்தொழிலைச் செய்வோர் உழவர் என்றும் உழுதுண்டு வாழ்வோர் என்றும் கூறப்படுவர். வேறே எந்தத் தொழில் நடைபெறினும் உழு தொழில் இல்லையானால் மக்கள் உயிருடன் வாழ முடியாதன்றோ? இன்னும், உழுதுண்டு வாழ்வோர் பிறரிடம் பணிந்து சேவகம் செய்யவேண்டிய அவசியமின்று. இதனால்தான் 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்

மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்' என்றும் 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை' என்றும் மூதறிஞர்கள் கூறியுள்ளனர்.

10. நமது இந்திய நாட்டில் உள்ள மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளே. அதனால் நமது நாட்டுக்கு விவசாய நாடு என்று பெயர். நமது தமிழ்நாட்டு மக்களில் பயிர்த்தொழில் செய்வோருக்கு முற்காலத்திலேயே வேளாளர் என்று பெயர் ஏற்பட்டுள்ளது. வேளாண்மை என்னும் சொல்லுக்கு உபகாரம் என்று பொருள். பயிர்த் தொழில் செய்வோர், தமது தொழிலால் விளைந்த பொருளைத் தாம்மட்டும் பயன்படுத்திக் கொள்ளாமல், பிறருக்கும் கொடுத்து உதவுகிறார்கள். அது சிறந்த உபகாரமன்றோ? ஆதலால், வேளாண்மையைச் செய்யும் மக்களுக்கு வேளாளர் என்று பெயர் வழங்கலாயிற்று. இன்னும், இந்த உபகாரத்துக்குக் காரணமான பயிர்த் தொழிலுக்கே 'வேளாண்மை' என்று ஒரு பெயரும் உண்டு.

11. இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த பயிர்த் தொழிலைப் போற்ற வேண்டுவது கற்றோர் கல்லாதோர் ஆகிய யாவருடைய கடமையும் ஆகும்.

உரம்	கொழுமை	பறம்படித்தல்
மாரி	முதுமொழி	தலைசாய்ந்து
புழுதி	மூதறிஞர்	வேளாண்மை
குவியல்	விவசாயம்	வேளாளர்

அரும்பதவுரை

உரம் - சத்து. களை - பயிருக்கு ஆகாத புல் செடி முதலியவை; பிடுங்கி எறியக் கூடியவை. முதுமொழி - பழமொழி. மூதறிஞர் - முதிர்ந்த அறிவுடையவர்கள். கொழுமை - செழிப்பு.

பயிற்சி

1. பச்சைப்பசேர்—இம்மாதிரி நிறத்தைப்பற்றிய வேறு மூன்று சொற்றொடர்கள் சொல்லு.

2. உழவுத் தொழிலின் மேன்மையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு.

3. விவசாயம் செய்கிறவன் விவசாயி—இம்மாதிரி பின் வருபவைகளையும் முடி :

வேளாண்மை செய்கிறவன் ——— .
வியாபாரம் செய்கிறவன் ——— .
தொழில் செய்கிறவன் ——— .

இலக்கணம்

1. தெளித்து, போய், உழுவார்கள், முடியாது, மிகுந்த—இவைகள் ஒவ்வொன்றும் என்ன சொல் ?

2. மற்றக் காலங்களைக் கூறு :—இருக்கும், பார்த்தேன், செய்கிறான்.

கேள்விகள்

1. குடியானவன் என்று பெயர் வரக் காரணம் என்ன ?
2. தொழுதுண்டு பின் செல்பவர் யாவர் ?
3. மூன்று வகைப் பயிர்கள் யாவை ? ஒவ்வொரு வகைக்கும் சில உதாரணங்கள் கூறு.
4. வேளாண்மை என்ற சொல்லுக்குப் பொருள் என்ன?
5. வேளாளர் உலகிற்குச் செய்யும் சிறந்த உதவி யாது?

3. கம்பர்

1. நாம் பேசுவது தமிழ். தமிழ் நமது தாய்மொழி. தமிழில் பல சிறந்த நூல்கள் உள்ளன. அவற்றை நன்கு படித்துத் தேர்ச்சி பெற்றவர் தமிழ்ப்புலவர் ஆவர். புலவர்கள் தாம் சுயமாகவே பாடல்கள் பாடி நூல் இயற்றுவர். ஔவையார், அதிவீரராம பாண்டியர், பாரதியார் முதலிய புலவர்கள் பாடியுள்ள சிறந்த பாடல் களை நீங்கள் படித்திருப்பீர்கள். இராமாயணத்தைத் தமிழில் பாடிய ஒரு பெரும்புலவரும் உண்டு. அவர்தான் கம்பர்.

2. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் சோழ நாட்டில் திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் கம்பர் பிறந்தார். அவர் பிறந்த குடும்பம் ஒரு எளிய குடும்பம். அவர் தந்தையார் ஆதித்தன் என்பவர். கம்பர், 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க, இளம் பருத்திலேயே புத்திக்கூர்மையும் மிக்க சுறுசுறுப்பும் உடையவராக விளங்கினர். ஆயினும், அவர் இளைஞரா யிருக்கும்போதே தம் பெற்றோரை இழந்தமையால் தம்மை ஆதரிப்பார் இல்லாது வருந்தினர்.

3. அப்பொழுது திருவெண்ணெய் நல்லூரில் சடை யப்பர் என்னும் பெயருள்ள ஒரு பெருஞ்செல்வர் இருந் தார். அவர் ஒரு வள்ளல். ஆதலால், அவருக்குச் சடையப்ப வள்ளல் என்றே பெயர் வழங்கியது. அவர் தற்செயலாகக் கம்பரைப்பற்றி அறிந்து விரவழைத்துத் தம் பிள்ளைகளோடு அவரையும் ஒரு பிள்ளையாகக் கருதி வளர்த்து வந்தார். சடையப்பர் கம்பரது நுண்ணறி வையும் ஊக்கத்தையும் கண்டு அவரிடத்தில் மிகுந்த அன்பு கொண்டார்; அவரைத் தம் பிள்ளைகளோடு

பள்ளிக்கனுப்பிக் கல்வி பயிலச் செய்தார். கம்பரும் கல்வியில் மிக்க ஊக்கம் உடையவராய் மிக விரைவாகப் பல நூல்களைக் கற்றுத் தமிழில் தேர்ச்சி பெற்றுப் புலவ ரானார். சடையப்ப வள்ளல் தம்மால் வளர்க்கப்பெற்ற கம்பர் கல்வியில் தேர்ந்து சிறந்த புலவரானமை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தார். பிற அறிஞர்களும் கம்பரது கல்வித்திறத்தை அறிந்து அவரை நன்கு மதிக்க லானார்கள்.

4. அக்காலத்தில் சோழநாட்டை ‘இரண்டாம் குலோத்துங்க சோழன்’ என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி வழுவாது செங்கோல் செலுத்தித் தனது குடிகளைத் தன் உயிர்போலப் பாதுகாப்பவன்; தமிழில் மிக்க பற்றுடையவன்; தமிழ்ப் புலவர்களை ஆதரிப்பவன். அவன் தனது சபையிலேயே சில புலவர்களை இருக்கச் செய்து அவர்கள் மூலமாகத் தமிழைப் போற்றிவந்தான். அத்தகைய குலோத்துங்கன் நமது கம்பரைப்பற்றிக் கேள்வியுற்று வரவழைத்து அவருடன் உரையாடினன். உடனே, அவர் சிறந்த தமிழ்ப்புலவர் எனவும், தனது சபைப் புலவர்கள் அனைவரிலும் மேலானவர் எனவும் அறிந்து, அவரைத் தனது அவையின் முதற்புலவராக அமர்த்திக் கொண் டான்.

5. இங்ஙனம் கம்பர் சோழ மன்னனால் சிறப்புப் பெற்ற செய்தியை அறிந்த வள்ளல் பெரியதோர் இன்பம் உற்றார். ஆயினும், அவர் கம்பரது கல்வித்திறமை பிற்காலத்து மக்களுக்கும் பயன்பட வேண்டும் என்று எண்ணினார். அதனால், கம்பரை ஒரு பெரிய நூல் பாடச் செய்யவேண்டும் என்னும் விருப்பம் அவருக் குண்டா யிற்று.

6. கம்பர் வடமொழியில் உள்ள இராமாயணத்தில் கூறப்படும் கதையை அறிந்து மிக்க இன்பமடைந்தனர். இராமாயணம் என்பது இராமர் சீதை முதலியோர் வரலாற்றைக் கூறும் அருமையான பெரிய காவியம். அதனை முதன் முதலாக வடமொழியிற் செய்தவர் வான்மீக முனிவர். அந்த இராம கதையில் கம்பருக்கு ஆர்வம் மிக்கது. அக்கதையைத் தமிழிலும் ஒரு காவிய மாகப் பாடினுல் தமிழ் மக்களும் அதனைப் படித்து இன்ப முறுவர் எனக் கருதினர். சடையப்ப வள்ளலும் தமது விருப்பத்தை வெளியிட்டனர். ஆதலால், கம்பர் இராமா யணத்தைத் தமிழில் பாடுவதென முடிவு செய்தார். இச்செய்தி யறிந்த சோழ மன்னனும் மிக்க மகிழ்வோடு கம்பருக்கு விடை கொடுக்க, அவர் திருவெண்ணெய் நல்லூர் வந்து இராமாயணத்தைப் பாடத் தொடங்கினர்.

7. கம்பர் இரவெல்லாம் சம்ஸ்கிருத வித்வான் களுடன் வடமொழி நூல்களில் உள்ள இராமகதையை ஆராய்ந்து பகற்பொழுதில் இராமாயணப் பாடல்களைப் பாடுவர். அவர் ஒரு நாளைக்கு எழுநூறுபாடல் வீதம் பதினைந்து நாளில் இராமாயணத்தைத் தமிழில் பாடி முடித்தார்! ஒரு நாளைக்கு எழுநூறுபாடல் பாடுவது அருஞ்செயலல்லவா? ஆதலால், சடையப்ப வள்ளலும் அரசனும் மற்றும் பல அறிஞர்களும் இச்செய்தியறிந்து பெருவியப்பும் அளவற்ற மகிழ்ச்சியும் உடையவராயினர்.

8. கம்பர் தாம் பாடிய இராமாயணத்தை அரங் கேற்ற எண்ணித் திருவரங்கம் அடைந்து, வித்வான் களும் பக்திமான்களும் அடங்கிய ஒரு பெரிய சபை கூட்டினர். அவ்வரங்கில், தாம் பாடிய இராமாயணத்தில் உள்ள பல பாடல்களைப் படித்துக் காட்டிப் பொருள் விளக்கினர். அதனைக் கேட்ட புலவர்பெருமக்கள் பெரு

மகிழ்ச்சி யடைந்தார்கள். ஆயினும், சிலர் சிற்சில கேள்விகள் கேட்டனர். அவற்றிற் கெல்லாம் கம்பர் தக்க விடை கூறவே, இராமாயணம் அரங்கேறியது. அச் சபையில் இருந்த பெரியோர்கள் கம்பரது கல்விப் பெருமையை அறிந்து, அவரைக் 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்று கொண்டாடினர்; அதனோடு அவருக்குக் '*கவிச் சக்கரவர்த்தி*' என்னும் பட்டமும் வழங்கினர்.

9. கவிச்சக்கரவர்த்தி யாகிய கம்பர் தாம் பாடிய நூலுக்கு '*இராமாவதாரம்*' என்றே பெயரிட்டனர்; ஆயினும், அப்பெயர் வழங்காது, 'ராமாயணம்' என்னும் பெயரே கம்பர் என்னும் பெயருடன் சேர்க்கப்பட்டுக் 'கம்ப ராமாயணம்' என்று வழங்கி வருகிறது. கம்பர் பாடிய வேறு சில சிறு நூல்களும் உண்டு. அவை சடகோ பரந்தாதி, சரசுவதியந்தாதி, ஏரெழுபது முதலியன.

10. கம்பர் தாம் பாடிய இராமாயணத்தில், தம்மை இளமைப் பருவத்தில் போற்றி வளர்த்துக் கல்வி பயில் வித்த சடையப்ப வள்ளலைப் பத்து இடத்தில் குறித்திருக் கின்றார். இது கம்பருக்குச் சடையப்ப வள்ளலிடமிருந்த என்றும் மாறாத நன்றியறிவைத் தெரிவிப்பதாகும். சோழ மன்னனும் சடையப்ப வள்ளலும் கம்பர் இயற்றிய இராமா யணம் அரங்கேறிய செய்தியறிந்து பேருவகை யுற்றனர்.

11. கம்பராமாயணம் படிக்கப் படிக்க இன்பம் தரும் ஒரு சிறந்த காவியம். அதிலிருந்து பல அரிய நீதிகளையும் உயர்ந்த அறங்களையும் அறிந்துகொள்ளலாம். தமிழ் கற்போர் அனைவரும் கம்பராமாயணம் படிக்காதிருக்க இயலாது. நீங்களும் பெரிய வகுப்புக்களில் கம்பராமா யணச் செய்யுட்களைப் படித்து இன்பம் அடைவீர்கள்.

ஆர்வம்	பற்று	பேருவகை
பட்டம்	அவை	விளக்குதல்
உவகை	உரையாடல்	பக்திமான்
மாருத	அமர்த்துதல்	பயில்வித்தல்
சான்று	அளவற்ற	முடிவு செய்தல்
வடமொழி	வித்வான்	அரங்கேற்றுதல்
காவியம்	சுயமாக	கவிச்சக்கரவர்த்தி

அரும்பதவுரை

உவகை - மகிழ்ச்சி. அவை - சபை. உரையாடல் - ஒருவரோடொருவர் பேசுதல். வித்வான் - புலவர். கவிச்சக்கரவர்த்தி - புலவர்களிற் சிறந்தவர். அரங்கேற்றுதல் - ஒரு புலவர் தாம் இயற்றிய நூலை வித்வான்கள் கூடிய சபையில் படித்துக்காட்டி அவர்கள் ஒப்பம் பெறுதல்.

பயிற்சி

1. புலவர், வள்ளல், அரசன், காவியம்—இச்சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமாகச் சேர்த்துக் கூறு.

சடையப்பர் ஒரு ——.
குலோத்துங்கன் ஒரு ——.
கம்பர் ஒரு ——.
இராமாயணம் என்பது ஒரு ——.

2. குலம், நுண்ணறிவு, தேர்ச்சி, இளைஞர், முதுமொழி, திருவரங்கம்—இச்சொற்களைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

இலக்கணம்

கம்பர் ஒரு சிறந்த புலவர்.—இது ஒரு வாக்கியம் அல்லவா? இவ்வாக்கியத்தில் நான்கு சொற்கள் இருக்கின்றன. இச்சொற்களில் பல எழுத்துக்கள் இருக்கின்றன. தமிழ் எழுத்துக்

களை ஆரம்ப வகுப்பிலேயே கற்றுக்கொண்டீர்கள். தமிழ் எழுத்துக்கள் என்னென்ன வகைப்படும்? மொத்தம் எத்தனை?

(1) அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—ஆகிய பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள் எனப்படும்.

(2) க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இப்பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள் எனப்படும்.

(3) க முதல் னௌ வரையில் உள்ள எழுத்துக்களை எண்ணினால் 216 எழுத்துக்கள் ஆகும். அவை உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும்.

(4) ஃ என்பது ஆய்தவெழுத்து எனப்படும்.

எனவே தமிழ் எழுத்துக்கள் மொத்தம் 247 ஆகும்.

நங்கை, இவர், உரிய, அன்பு, அப்பம்—இச்சொற்களிலுள்ள எழுத்துக்கள் ஒவ்வொன்றும் எந்த வகையைச் சேர்ந்தது?

கேள்விகள்

1. கம்பர் பிறந்த ஊர், குலம் இவைகளைக் கூறு.
2. கம்பர் சடையப்பரிடம் தாம் கொண்டிருந்த நன்றியறிவை எவ்வாறு காட்டியுள்ளார்?
3. கம்பர் இராமாயணம் பாடிய வரலாற்றினைக் கூறு.
4. கம்பராமாயணம் எங்கே அரங்கேற்றப்பட்டது?
5. கம்பராமாயணத்தின் சிறப்புக்கள் யாவை?

4. உப்பு .

1. ‘உப்பிட்டவரை உள்ளளவும் நினை’ என்பது ஒரு பழமொழி. இதன் பொருள் உப்பிட்டு உணவு அளித்த வரை என்றும் மறத்தலாகாது என்பதே. நமது உணவுக்கு வேண்டிய சுவைகள் ஆறு. அவை கைப்பு, கார்ப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு என்பன. இவ்வாறு சுவைகளில் உவர்ப்பைத் தவிர மற்ற எந்தச் சுவை இல்லாவிடினும் நமது உணவை ஒருவாறு உட்கொள்ளலாம். ஆனால் உவர்ப்புச் சுவை இல்லாவிடின் உணவை உட்கொள்ள முடியாது. உவர்ப்புச் சுவையைத் தருவது உப்பு. ஆதலால் உப்பு நமது உணவுக்கு இன்றியமையாத பொருள் ஆகும்.

2. உப்பு வெண்மையான படிகக் கற்கள் போன்ற ஒரு பொருள். அது எல்லா ஊர்களிலும் கடைகளில் விலைக்குக் கிடைக்கும். உப்பு எங்கிருந்து எவ்வாறு எடுக்கப் படுகின்றது எனப் பார்ப்போம்.

3. சில கிணற்று நீர் உவர்ப்பாக இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கிணற்று நீர் உப்பாக இருப்பதேன்? கிணற்று நீர் உப்பு மண்ணில் இருந்து ஊறி வருகின்றது. அதனால்தான் அந்நீர் உவர்ப்பாக இருக்கிறது. ஆதலால், பூமியில் உப்பு இருக்கிறதென்று அறிகின்றோம். கடல்நீர் உப்பு நீரே. கடல் நீரில் ஒரு சிறு துளியைச் சுவைத்துப் பார்ப்பினும்· அது நாம் தாங்க முடியாதபடி அவ்வளவு உவர்ப்பாக இருப்பதைக் காணலாம். ஆதலால், கடல் நீரில் உப்பு ஏராளமாகக் கலந்திருக்கின்றது என்று அறிகின்றோம் அன்றோ? கடல்நீர் உவர்ப்பாக இருப்பதால் கடலுக்கு ‘உவரி’ என்ற ஒரு பெயர் உண்டு. நமக்கு

வேண்டிய உப்பெல்லாம் கடல் நீரினின்றே எடுக்கப் படுகிறது.

4. கடற்கரையில் சில இடங்களில் பூமி நீண்ட தூரம் சமமாக இருக்கும். அவ்விடங்களில் பெரிய பெரிய பாத்திகள் கட்டி அவற்றில் கடல்நீரை இறைத்துத் தேங்க வைத்திருப்பார்கள். அப்பாத்திகளில் உள்ள நீர் சூரிய வெப்பத்தால் ஆவியாகிவிடும். நீர் ஆவியாக ஆக அதில் கலந்துள்ள உப்பு அடியில் குழம்பு போல் தங்கி நிற்கும். இந்தக் குழம்பில் உள்ள நீர் முழுவதும் ஆவியாகி வற்றிய பின் உப்புச் சிறு சிறு படிகக் கற்கள் போன்ற வடிவமடைந்து பொரிந்து கிடக்கும். இங்ஙனம் ஆதல் 'உப்பு விளைதல்' என்று கூறப்படும்.

5. உப்பு விளைவித்தல் ஆண்டு முழுவதும் நடைபெறாது. மழைக்காலத்தில் உப்பு விளைவிக்க இயலாது. கோடைக்காலத்தில் பங்குனி மாதம் முதல் ஆவணி மாதம் வரை உள்ள பருவமே உப்பு விளைவுக்கு ஏற்ற பருவம். கோடைக்காலத்திலும் கடல்நீர் பாய்ச்சிய பாத்திகளில் ஒரு மழை பெய்யவேண்டும். அதன் பின்புதான் உப்பு நன்கு விளையத் தொடங்கும். இங்ஙனம் உப்பு விளைவதற்கு ஏறத்தாழப் பதினைந்து நாள் செல்லும். உப்பு விளைந்த பிறகு அதனைத் திரட்டிக் குவியல் குவியலாகக் குவித்து விற்பனைக்கு அனுப்புவார்கள். உப்பு விளையும் நிலத்திற்கு 'உப்பளம்' என்று பெயர்.

6. உள்நாட்டில் சில இடங்களில் உப்பு மண் உண்டு. வண்ணான் துணிகளை வெளுப்பதற்கு உபயோகிக்கும் மண்ணாகிய உவர்மண் என்பது உவர்ப்புள்ள மண்ணே. உப்பு மண்ணைத் தண்ணீரில் கரைத்து அந்நீரைக் காய்ச்சி உப்பெடுப்பதும் உண்டு. பூமியில் சில இடங்களில் உப்புப் பாறைகள் உண்டு. அப்பாறையினின்று

வெட்டி எடுக்கப்படும் உப்புக்கு ' இந்துப்பு ' என்று பெயர் வழங்குகின்றது. இது அருமையாகக் கிடைப்பதால் விலை யுயர்ந்ததாக இருக்கிறது. மண்ணுப்பையும் பாறையுப் பையும் எளிதாகவும் வேண்டிய அளவும் பெற இயலாது. ஆதலால், கடல் நீரினின்று எடுக்கப்படும் உப்பையே நாம் உபயோகிக்கின்றோம். உப்பை விளைவிக்கும் உரிமை அரசியலாருடையது. நாம் நமது விருப்பம் போல் உப்பை விளைவித்து உபயோகித்தல் கூடாது. அரசிய லார் உத்தரவு பெற்று, அவர்கள் மேற்பார்வையிலேயே உப்பு விளைவித்தல் வேண்டும். அதற்கென ஒரு பிரிவு உத்தியோகஸ்தர் இருக்கின்றனர். அந்தப் பிரிவுக்கு ' உப்பிலாக்கா ' என்று பெயர். அரசியலார் உத்தரவின்றி யும் அவர்கட்குத் தெரியாமலும் உப்பெடுத்தல் குற்ற மாகும். அதற்குத் தண்டனையும் உண்டு.

7. பூமியில் உப்பு இருக்கிற தென்று முன்பு அறிந் தோம். ஆனால், உப்பு மிகுதியாக உள்ள இடத்தில்தான் நமக்கு வெளிப்படையாகத் தோன்றும் ; மற்ற இடங்களில் தோன்றாது. ஆயினும் உப்புச்சத்து பூமியில் எங்கும் இருக்கும். அதனால், பூமியில் தோன்றும் மரஞ் செடி கொடி முதலிய தாவரங்களிலும் அவற்றில் உண்டாகும் காய் முதலியவற்றிலும் உப்புச் சத்து இருக்கிறது. புல் பூண்டு முதலியவற்றை உண்டு வாழும் ஆடு மாடு முதலிய மிருகங்களின் உடம்பிலும் உப்புச்சத்து இயற்கையாக அமைந்து விடுகிறது. இதனோடு நமது உணவில் நாம் தனியாக உப்பைச் சேர்க்க வேண்டியிருப்பதால், நமது உடம்பில் உப்புச் சத்து நிரம்ப இருக்கின்றது. உடம்பி லுள்ள எலும்பு முதலிய பொருள்களுக்குப் பலத்தையும் உறுதியையும் கொடுப்பது உப்பே.

8. உப்புச் சேர்க்கப்பெற்ற பண்டம் நீண்ட நாள்

கெடாமல் இருக்கும்; விரைவில் அழுகிப் பதனழியாது. அதனால்தான் மாங்காய், நாரத்தங்காய் முதலியவற்றைப் பிளந்து உப்பைத் திணித்து வைக்கிறார்கள். ஊறுகாய் என்பது உப்பு நீரில் ஊறுங்காயே. இறைச்சி, மீன் இவற்றையும் உப்புச் சேர்த்துப் பதனாக்கி நீண்ட நாள் வரை வைத்திருந்து உணவாகக் கொள்கின்றனர். இவ் விதம் பண்டங்கள் கெடாமல் நீண்ட நாள் காப்பாற்று வது உப்பாகையால் 'உப்பில்லாத பண்டம் குப்பையிலே' என்னும் பழமொழியும் வழங்குகிறது.

9. வெடி மருந்து செய்வதற்கும் ஒரு வகையான உப்பு உபயோகப்படுகிறது. அதற்குப் 'பொட்டிலுப்பு' அல்லது 'வெடியுப்பு' என்று பெயர்.

10. நமது உணவுக்கு உப்பு இன்றியமையாத தாயினும் அதனை அளவோடு சேர்த்தால்தான் சுவை தரும். அளவுக்கு மீறினால் சுவை தராது. நமது நாட்டில் நாம் உண்ணும்போது உண்கலத்தில் உப்பைத் தனியாக வும் சிறிது வைப்பதுண்டு. அங்ஙனம் வைப்பது உணவு களில் உப்புக் குறைவாக இருந்தால் அவற்றோடு அதனைச் சேர்த்துக் கொள்வதற்காகவே.

11. மக்கள் யாவருக்கும் இன்றியமையாது வேண்டப் படும் பொருள் உப்பாகையால் அது கடல் நீரில் ஏராள மாகக் கிடைக்குமாறு இயற்கையில் அமைக்கப்பட் டுள்ளது போலும்.

உவர்மண்	திரட்டுதல்	வருமானம்
உப்பளம்	படிகக்கல்	தேங்கவைத்தல்
இந்துப்பு	மேற்பார்வை	பொட்டிலுப்பு
மணங்கு	ஊறுகாய்	வெடிமருந்து
பொரிதல்	பண்டங்கள்	இன்றியமையாதது
வற்றுதல்	வெடியுப்பு	உப்பிட்டவர்

அரும்பதவுரை

இன்றியமையாதது - இல்லாமல் முடியாதது; அவசியமானது. திரட்டுதல் - சேர்த்தல். பண்டங்கள் - பொருள்கள். உண்கலம் - உணவு உண்ணும் பாத்திரம்.

பயிற்சி

1. உப்பு என்பதைப்பற்றி ஒரு வியாசம் எழுது.

2. ஏற்றவாறு சேர்த்துப் படி :—

உப்பு ஒரு	தருவது உப்பு.
உப்பு விளையும்	நிலம் உப்பளம்.
உப்பு விளைவிக்கும் உரிமை	நீண்ட நாள் கெடாது.
உவர்ப்புச் சுவையைத்	இன்றியமையாத பொருள்.
உப்புச் சேர்த்த பண்டம்	அரசாங்கத்தாருக்கு உரியது.

இலக்கணம்

1. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுது :—

(1) இந்தப் பள்ளிக்கூடத்தில் முன்னூறு மாணவர்கள் படிக்கிறார்கள்.

(2) அவன் கல்லை எரிந்தான்.

(3) அம்மியின் மீது குளவி உருளுகிறது.

(4) சுவற்றில் பல்லி ஓடுகிறது.

2. தமிழ் மொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

கேள்விகள்

1. கடல் நீரிலிருந்து எப்படி உப்பு எடுக்கிறார்கள்?
2. இந்துப்பு என்பது என்ன?
3. உப்பின் உபயோகங்களில் இரண்டு கூறு.

5. பாரி மகளிர்

1. முற்காலத்தில் நமது தமிழ்நாட்டின் ஒரு பகுதியாகிய பறம்பு நாட்டில் வேள்பாரி என்னும் சிற்றரசன் அரசுபுரிந்து வந்தான். வேள்பாரி சிறந்த வீரன்; பேரிரக்கம் உடையவன்; இரவலர்க்கு வரையாது வழங்கும் வள்ளல்; கொழுகொம்பில்லாது தளர்வுற்ற ஒரு முல்லைக்கொடி படர்வதற்குத் தான் ஊர்ந்துவந்த தேரை அதனருகே நிறுத்தித் தான் நடந்து சென்றவன். அவன் பெரும் புலவராகிய கபிலரைத் தன் உயிர்த் துணைவராகக் கொண்டிருந்தான்.

2. இத்தகைய பெருமை வாய்ந்த பாரி நங்கையென்னும் பெயருள்ள ஒரு நங்கையை மணந்தான். அவனுக்கு இரண்டு பெண்கள் பிறந்தனர். அவன் அவர்களுக்கு அங்கவை என்றும் சங்கவை என்றும் பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான்; உரிய பருவத்தில் கபிலரைக் கொண்டு கல்வி கற்பித்தான். பெண்கள் இருவரும் கல்வியில் தேர்ச்சி பெற்றனர். பிற்காலத்தில் அப்பெண்கள் இருவர்க்கும் 'பாரிமகளிர்' என்ற பெயரே நிலைபெறுவதாயிற்று.

3. பறம்பு நாட்டில் பறம்பு மலை என்னும் ஒரு மலை உண்டு. அதிற் சிறந்த அரண் கட்டப்பட்டிருந்தது. பாரி அம்மலையைத் தன் அரசிருக்கையாகக் கொண்டு செங்கோல் செலுத்திவந்தான்.

4. ஒரு சமயம் முடியுடை வேந்தர் மூவர் பறம்புநாட்டின் மீது படையெடுத்து மலையரணை முற்றுகை இட்டனர். இச் செய்தியறிந்த பாரி மிகவும் வெகுண்டு தானும் போர்க் கோலங்கொண்டு தன் படைகளுடன் காவல் புரிந்தான். இருதிறத்தாரும் நீண்டகாலம் போர் புரிந்தனர்.

எனினும், பறம்பரணைக் கைப்பற்ற மூவேந்தரால் ஆக வில்லை. ஆயினும், அம்மன்னர்கள் ஒரு சூழ்ச்சியால் பாரியைக் கொல்லக் கருதிப் பரிசிலர் வேடம் பூண்டு அவன் தன்னையே பரிசலாகத் தரவேண்டுமென யாசித்த னர். இல்லையென்று சொல்லும் வழக்கம் இல்லாத வள்ள லாகிய பாரியும் அவர்கள் வசம் ஆக, அவ் வன்கண்ணர் அவனைக் கொலை செய்வித்தனர்.

5. இச்செய்தியறிந்த நங்கை தன் கணவனை இழந்த பின் உயிர்வாழ மனம் பொருதவளாய்த் தீக்குளித்தனள். பாரிமகளிர் இருவரும் தாய்தந்தையரை இழந்த துக்கம் தாங்க மாட்டாதவராய் அழுது புலம்பினர். கபிலரும் தமது ஆருயிர் நண்பனுகிய பாரி கொலையுண்டமை குறித் துப் பெரிதும் வருந்தினராயினும், அவ்வருத்தத்தை அடக்கிக்கொண்டு பாரிமகளிரைத் தமது இன்னுரை களால் தேற்றினர். பின்னர், பறம்பரண் பகைவர்வசமாய் விட்டமையால், கபிலர் பாரிமகளிரை உடன் அழைத் துக் கொண்டு பறம்பு நாட்டை விட்டகன்றனர்.

6. கல்வியும் ஒழுக்கமும் அழகும் நிரம்பப்பெற்று மணப்பருவம் எய்திய பாரிமகளிர், கபிலருடன் செல்லுங் கால் தமது பெற்றோரையும் பறம்பு நாட்டையும் நினைந்து நினைந்து மனமுருகி வருந்தினர். புலவர் பெருமானுகிய கபிலர் தமது இனிய மொழிகளால் அவர்கள் வருத்தத்தை ஒருவாறு நீக்கினர்.

7. கபிலர் இவர்கட்குத் தக்க மணமகனைத் தேடித் திருமணம் செய்துவைத்தற் பொருட்டே இவர்களைத் தம் முடன் அழைத்து வந்தனர். ஆதலின், மகதநாட்டை ஆண்ட விச்சிக்கோன் என்னும் அரசன்பால் சென்று பாரிமகளிரை மணஞ்செய்து கொள்ளுமாறு மொழிந்த னர். அவன் யாது காரணத்தாலோ உடன்படவில்லை.

பின்னர், அரையம் என்னும் ஊரில் இருந்த இருங்கோ வேள் என்னும் அரசனை அணுகி, அவர்களை மணம்புரிந்து கொள்ளுமாறு கூறினர். அவனும் அதற்குடன்படாது மறுத்துவிட்டான்.

8. கபிலர் என் செய்வார்! தாம் செய்த முயற்சி பயனளிக்காமையை எண்ணி மிக்க வருத்தமுற்றூர். பின்பு, அம்மகளிருடன் திருக்கோவலூரை யடைந்து, அங்குள்ள தம் நண்பராகிய ஒரு பார்ப்பனரைக் கண்டு, அளவளாவி அவரிடம் பாரிமகளிரை ஒப்பித்து அவர்களைப் பாதுகாக்குமாறு வேண்டிக்கொண்டனர். தாம் பாரியின் பிரிவாற்ருதவராய்ப் பெண்ணையாற்றங்கரையில் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

9. பெற்ருேரையே யன்றி அருந்துணைவராக இருந்த கபிலரையும் இழந்த பாரிமகளிர் மிக வருந்தி, அவ்வந்தணர் தேற்றத் தேறி, அவர் பாதுகாப்பில் இருந்தனர். அவ்வாறிருக்குங்கால் திருக்கோவலூருக்கு வந்த ஔவை யார் தற்செயலாக அப்பார்ப்பனர் வீட்டை அடைந்தனர். அடைந்தவர் அங்குப் பாரி மகளிரைக் கண்டு செய்தி யறிந்து அவர்கள் நிலைமையைக் குறித்து மனம் நொந்து வருந்தினர். ஔவை மூதாட்டியை முன்னமே அறிந்துள்ள பாரிமகளிர் மிக்க அன்புடன் அவரை வரவேற்று உபசரித்தனர்.

10. பாரிமகளிரைத் தக்கார்க்கு மணம்புரிந்து நன்னிலையில் நிறுத்தவேண்டும் என்னும் எண்ணம் ஔவை யாருக்கு உண்டாயிற்று. ஆதலின், அவ்வூர் அரசனுகிய தெய்வீகன் என்பானிடம் சென்று, "மன்னு, நீ என் சொல்லை மறுக்காது பாரிமகளிரை மணஞ்செய்துகொள்ளல் வேண்டும்" என்று கூறினர். அதுகேட்ட தெய்வீகன் "பிராட்டியே, இவர்கள் மூவேந்தருக்கும் பகைவராகிய

பாரியின் மகளிர். இவர்களை மணந்துகொண்டால் மூவேந் தரும் என்னிடம் பகைமை கொள்வர். ஆதலால், அம் மூவேந்தரும் வந்திருந்து மணம் நடத்திவைப்பாராயின் யான் இவர்களைத் திருமணஞ் செய்துகொள்ளத் தடை யில்லை'' என மொழிந்தனன். ஔவையாரும் ''யான் நீ மொழிந்தவண்ணமே மூவேந்தரும் வந்திருந்து திரு மணத்தை நடத்துமாறு செய்கிறேன்'' எனக் கூறித் திருமணநாள் குறித்து மூவேந்தருக்கும் மணவோலை போக்கினர்.

11. திருமணவோலை கண்ட மூவேந்தரும், ஔவை யாரிடம் மிக்க மதிப்புடையவராதலின், தத்தம் பரிவாரங் களுடன் குறித்த நாளில் திருக்கோவலூர் சேர்ந்து ஔவையாரைக் கண்டு அளவளாவினர். திருமணமும் குறித்த வேளையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருமண விழாவுக்கு வந்த அனைவருக்கும் சந்தனம், பூ முதலியன வழங்கல், விருந்தளித்தல் முதலிய உபசாரங் கள் தக்கவாறு நடைபெற்றன. திருமணத்துக்கு வந் திருந்த அனைவரும் ஔவையாருக்கிருந்த மதிப்பைக் குறித்து அவரைப் புகழ்ந்து கொண்டாடித் தத்தம் இருப் பிடம் சென்றனர். மூவேந்தரும் தமது பரிவாரங்களுடன் தம்மூர் மீண்டனர். ஔவையாரும் சிலநாள் அங்கிருந்து பின்னர் வேறிடம் சென்றனர்.

12. தெய்வீகன் பாரிமகளிருடன் இல்லற வாழ்க் கையை மேற்கொண்டு இனிது வாழ்ந்து வந்தனன்.

முல்லை	சூழ்ச்சி	புலம்புதல்
நங்கை	பாதுகாப்பு	பரிவாரம்
வேடம்	இரவலர்	மணவோலை
பூண்டு	பரிசிலர்	இருக்கை
வசம்	பெருமான்	தீக்குளித்தல்
அணுகி	ஆருயிர்	படையெடுத்தல்
தேற்ற	வரையாது	உயிர்த்துணைவர்
இழந்த	அளவளாவி	போர்க் கோலம்
வேந்தர்	மூதாட்டி	இருதிறத்தார்
இன்னுரை	மணமகன்	வன்கண்ணர்

அரும்பதவுரை

நங்கை - பெண். வேந்தர் - அரசர். சூழ்ச்சி - தந்திரம். இரவலர் - இரப்பவர் ; யாசிப்பவர். பரிவாரம் - ஏவலாளர் முதலியோர். இரு திறத்தார் - இருபக்கத்தினர் ; இரண்டு கட்சியினர். வன்கண்ணர் - இரக்கமற்றவர்கள். இன்னுரை - (இனிமை + உரை). இனிய சொற்கள்

பயிற்சி

1. கால், முடி, போர், கரும்பு, கொடி, உரை, கூறு, மணம்—இச்சொற்களை வெவ்வேறு பொருளில் வரும்படிஅமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் கூறு.

2. பாரியின் கொடைத்திறம் விளங்கக்கூடிய செய்தி ஒன்று கூறு.

இலக்கணம்

1. உயிரெழுத்துக்களுள் அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் குறுகிய ஓசை உள்ளவை. ஆதலால், இவைகளுக்குக் குறில் அல்லது குற்றெழுத்து என்று பெயர்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் நீண்ட ஓசை உள்ளவை. ஆதலால், இவைகளுக்கு நெடில் அல்லது நெட்டெழுத்து என்று பெயர்.

2. உயிர்மெய்யெழுத்துக்களில், க, கி, கு, கெ, கொ, ங, ஙி, ஙு, ஙெ, ஙொ......ன, னி, னு, னெ, னொ ஆகிய 90 எழுத்துக்களும் உயிர்மெய்க் குறில் எனப்படும்.

கா, கீ, கூ, கே, கை, கோ, கௌ, ஙா, ஙீ, ஙூ, ஙே, ஙை, ஙோ, ஙௌ......னு, னீ, னூ, னே, னை, னோ, னௌ ஆகிய 126 எழுத்துக்களும் உயிர் மெய் நெடில் எனப்படும்.

3. நாடு, பேசு, விளை, எளிய, ஐயா—இவ்வார்த்தைகளில் குறுகிய ஓசையுள்ள எழுத்துக்கள் எவை? நீண்ட ஓசையுடைய எழுத்துக்கள் எவை?

கேள்விகள்

1. வேள்பாரி ஆண்டுவந்த நாட்டின் பெயர் என்ன? அவனிடம் விளங்கிய சிறந்த தன்மைகள் யாவை?

2. மூவேந்தர்கள் பாரியை எவ்வாறு கொன்றனர்?

3. கபிலர் ஏன் உயிர் துறந்தார்? அப்போது பாரிமகளிரை யாருடைய பாதுகாப்பில் விட்டார்?

4. ஔவையார் பாரிமகளிருக்குத் திருமணம் செய்து வைத்த வரலாறு யாது?

6. வீரபாண்டிய கட்டபொம்மன்

1. ஏறத்தாழ நூற்றறுபது ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாடு பல சிறு பகுதிகளாகப் பிரிந்திருந்தது. இவை பாளையப்பட்டுக்கள் என்று பெயர் பெற்றிருந்தன. ஒவ்வொரு பாளையப்பட்டின் தலைவருக்கும் பாளையக்காரர் என்று பெயர். இவர்கள் எல்லோரும் ஆர்க்காட்டு நவாபுக்கு அடங்கியவர்களாகக் கருதப்பட்டார்கள்.

2. திருநெல்வேலி ஜில்லாவிலிருந்த பாஞ்சாலங்குறிச்சி இத்தகைய பாளையப்பட்டுக்களில் ஒன்று. அதை வீரபாண்டிய கட்டபொம்மன் ஆளத் தொடங்கினான். அப்பொழுது வியாபாரிகளாக வந்த ஆங்கிலேயர் நம் நாட்டில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினார்கள். ஆர்க்காட்டு நவாப் அவர்களிடம் பெருந்தொகை கடன் வாங்கிக்

கொண்டு, பாளையக்காரரிடம் கப்பம் வாங்கும் உரிமையை அவ்வாங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார்.

3. பாளையக்காரர்களில் பெரும்பாலோர் ஆங்கிலேயருக்குப் பணிந்து அவர்களிடம் கப்பம் செலுத்தத் தொடங்கினார்கள். ஆனால் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயருக்குப் பணிய மறுத்துவிட்டான். இதனால் ஆங்கிலேயருக்கும் வீரபாண்டியனுக்கும் போர் மூண்டது.

4. ஆங்கிலேயர் பெரும்படையுடனும் பீரங்கிகளுடனும் சென்று பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைத் தாக்கினார்கள். பீரங்கிக் குண்டுகளால் கோட்டைச் சுவரைச் சில இடங்களில் தகர்த்து ஆங்கிலப் படைகள் உள்ளே நுழைய முயன்றன. முதலில் நுழைந்தவர்களை உள்ளேயிருந்த பாஞ்சாலங்குறிச்சி வீரர் கொன்று குவித்தனர். ஆகையால், பின்னிருந்த ஆங்கிலப் படையினர் கோட்டைக்குள் நுழையாமல் பின்வாங்கினர்.

5. அன்று இரவு கட்டபொம்மனும் அவனுடைய இரு தம்பிமாரும் வேறு சில முக்கிய வீரர்களும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை விட்டு வெளியேறினர். வீரபாண்டியன் தப்பிவிட்டதை மறுநாள் அறிந்த ஆங்கில தளபதி, அவனைப் பிடிக்கத் தீவிரமான முயற்சிகளைச் செய்தான். கட்டபொம்மனைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைப்பதில் சில பாளையக்காரரும் உதவி செய்தனர்.

6. பாஞ்சாலங்குறிச்சியைவிட்டு வெளியேறிய கட்டபொம்மன் கோலார்ப்பட்டி பாளையக்காரரின் அரண்மனையில் ஓய்வெடுக்கத் தங்கினான். இந்தச் செய்தி தெரிந்த எட்டயபுரத் தலைவன் தன் படைகளுடனும், சில ஆங்கிலப் படைகளுடனும் விரைந்து சென்று, கட்டபொம்மனிருந்த அரண்மனையைச் சூழ்ந்துகொண்டான்.

7. வீரபாண்டியன் இந்த நிலையைக் கண்டு அஞ்ச

வில்லை. தன்னுடன் வந்த தம்பியரும் சில வீரர்களும் துணை நிற்க, எதிரிப் படையைத் தாக்கிப் பலரை எமனுல குக்கு அனுப்பினுன். முடிவில் வீரபாண்டியனும் இரு தம்பிகளும் வேறு மூன்று வீரர்களும் எதிரிப் படைக ளிடையே வழி செய்துகொண்டு தப்பி யோடிவிட்டனர்.

8. இதன் பிறகு வீரபாண்டியன் சென்னை செல்லக் கருதி, துணைவருடன் வடக்கு நோக்கிச் சென்ருன். வழியில் புதுக்கோட்டை அரசனைக் காண எண்ணி அவனது அரண்மனை சென்ருன். புதுக்கோட்டை அரசன் ஆங்கிலேயரின் நன்மதிப்பைப் பெறுவதற்கு அதுவே தருணம் என்று மகிழ்ந்து, உடனே ஆங்கில தளபதிக்குச் செய்தி அனுப்பிவிட்டான். ஆங்கிலப் படைகள் புதுக் கோட்டைக்கு விரைந்து சென்றன. கையில் ஆயுத மில்லாத சமயத்தில் வீரபாண்டியனை அப்படைகள் சூழ்ந்தன. வீரபாண்டியனும் அவனுடனிருந்தோரும் சிறைப்பட்டனர்.

9. ஆங்கிலேய தளபதி, வீரபாண்டியனைக் கயத்தாறு என்ற ஊருக்குக் கொண்டுசென்று அவன்மீது பல குற் றங்கள் சாட்டி விசாரணை செய்தான். ஆங்கிலேயருக்குப் பணிய மறுத்த வீரனை கட்டபொம்மன் அரசாங்கத் துரோகி என்று குற்றஞ் சாட்டப்பட்டான்; விசாரணை யில் அவன் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது; தூக்கு தண்டனையும் விதிக்கப்பட்டது.

10. வீரபாண்டியன் தூக்குமரத்தில் மாண்டாலும் அவனது சுதந்திர தாகத்தினுல் விளைந்த உயிர்த் தியாகம் வீண்போகவில்லை. பிற்காலத்தில் இந்தியாவின் விடுதலைக் காகப் போராடிய வீரர்களுக் கெல்லாம் அவனது சுதந் திரப் போர் ஒரு வழிகாட்டியாய் முதற்போராக அமைந்து ஊக்கமளித்தது.

பாளையப்பட்டு	சாட்டி	ஆதிக்கம்
பாளையக்காரர்	தூக்கு தண்டனை	ஒப்படை

அரும்பதவுரை

ஆதிக்கம் - அதிகாரம். ஒப்படை - சேர்ப்பி ; கொடுத்துவை. சாட்டு - காரணம் கற்பித்துக் கூறு.

பயிற்சி

1. கடுமை + கோபம் = கடுங்கோபம். இம்மாதிரி பின் வருபவைகளைப் பிரித்துக் கூறு :

செம்மண், வெண்ணிலா, பசும்புல், நுண்ணறிவு, கருங்குரங்கு.

2. சேர்த்து எழுது :—

காடு + பூனை. வீடு + மிருகம். ஆடு + குட்டி. மாடு + வண்டி.

இலக்கணம்

1. கருணை, கோபம், அழித்தல், வேட்டை, காடு, புலி, இரவு—இவை ஒவ்வொன்றும் எந்தவகைப் பெயர்ச் சொற்கள் ?

2. உயிர்மெய்க் குறில், உயிர்மெய் நெடில், இவை ஒவ் வொன்றுக்கும் நான்கு உதாரணங்கள் தருக.

கேள்விகள்

1. கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியை ஆளத்தொடங் கியபொழுது,, நம் நாட்டு நிலைமை எவ்வாறிருந்தது ?

2. பாஞ்சாலங்குறிச்சியில் ஆங்கிலேயருடன் கட்டபொம் மன் செய்த போரை விவரி.

3. கோலார்ப்பட்டியில் கட்டபொம்மன் எவ்வாறு தப்பி ஞன் ?

4. கட்டபொம்மனின் தியாகம் ஏன் வீண்போகவில்லை ?

7. ஒரு பாலை நிலப் பறவை

1. பறவைகளில் மிகச் சிறியது சிட்டுக்குருவி. மிகப் பெரிய பறவை எது எனக் கேட்டால் நீங்கள் கழுகு என்று கூறுவீர்கள். கழுகினும் பெரிய பறவை ஒன்று உண்டு. அது பாலை நிலத்தில் வசிக்கக் கூடியது. அதற்கு ஆங்கிலத்தில் 'ஆஸ்டிரிச்சு' எனப் பெயர். விலங்குகளில் யானை எங்ஙனம் எல்லாவற்றினும் பெரியதோ அது போலப்பறவைகளில் ஆஸ்டிரிச்சே யாவற்றிலும் பெரிது. ஆஸ்டிரிச்சு நம் நாட்டில் காணக்கூடிய பறவை அன்று; ஆப்பிரிக்காவிலும் அரேபியாவிலும் உள்ள பாலை நிலங்களில் வசிப்பது. ஆதலின் அதற்குத் தமிழ்ப் பெயர் இல்லை. ஆயினும், இதனைத் தீப்பறவை அல்லது நெருப்புக் கோழி எனக் கூறுகின்றனர்.

2. இப்பறவையின் தோற்றமும் பருமனும் பழக்க வழக்கங்களும் மிகவும் வியக்கக் கூடியவை. கால் முதல் தலை வரை இது எட்டடி உயரம் உள்ளது. ஒரு மனிதனைத் தன் முதுகில் சுமந்து செல்லத்தக்க வலிமையுள்ளது. இதன் கழுத்து மட்டும் மூன்றடி நீளமானது; தலை மிகச் சிறியது. இதன் தலையும் கழுத்தும் நிமிர்ந்த வண்ணமாக இருக்கும். அங்ஙனம் வைத்திருத்தல் இதற்குக் கம்பீரமான தோற்றத்தைக் கொடுக்கின்றது. இதன் கால்கள் மூன்றடி

உயரமும் உறுதியும் மிகுந்த வலிமையும் உள்ளவை. இப் பறவை தன் கால்களினுலே தன் பகைவரைப் பலமாக உதைத்துக் கீழே தள்ளிவிடும். கழுத்திலும் கால்களிலும் இறகுகள் இல்லே. இதற்குப் பெரிய இறக்கைகள் உண்டு. ஆயினும், அவற்ருல் பறத்தல் இயலாது. ஏன்? அதன் உடம்பு மிகவும் பளுவானது; முந்நூறு நானூறு பவுண்டு கனமுடையது. இவ்வளவு கனமுள்ள உடலேத் தூக்கிக் கொண்டு பறத்தல் எளிதன்றல்லவா? ஆகையால் தான் இப்பறவை பறப்பதில்லே. ஆயினும் ஒரு மணிக்கு 25 மைல் வீதம் மிக விரைவாக ஓடும். இதன் ஓட்டத் துக்கு, விரைவாகச் செல்லும் குதிரையின் ஓட்டமும் ஈடா காது. இப்பறவை ஓடும்போது இரண்டு இறக்கைகளேயும் விரித்துக் கொண்டு ஓடுதலே இவ்வளவு விரைவுக்குக் காரணம்.

3. இதன் இறக்கை இறகுகளும் வாலிறகுகளும் மிக அழகான தோற்றமுடையவை; மிகவும் மென்மை யானவை. மேல் நாட்டில் செல்வச் சீமாட்டிகள் இந்த இறகுகளேத் தங்கள் தொப்பிகளில் செருகி அழகு செய்து கொள்வார்கள். ஒரு இறகைச் சில சமயங்களில் 2 அல்லது 3 பவுன் விலே கொடுத்தும் வாங்குவார்கள். இப்பறவை யின் முட்டை ஒரு பெரிய தேங்காயைப்போலப் பருத்திருக் கும். நம் நாட்டில் கோழி முட்டையும், வாத்து முட்டை யும் சிலருக்கு உணவாக உதவுவது போல ஆஸ்டிரிச்சின் முட்டையும் ஆப்பிரிக்கர்களுக்கு உணவாக உதவுகிறது.

4. இப்பறவை இரை கொள்ளுதல் மிகவும் விசித்திர மானது. இது புல், பூண்டு, இலே, காய், பூச்சி, புழு, சிறிய பறவை, பாம்பு, பல்லி ஆகிய எவற்றையும் உண்ணும். இவையெல்லாம் வயிற்றில் ஜீரணிக்கக் கூடியவை. ஆனுல் ஜீரணிக்கக் கூடாத கல், கண்ணுடி,

ஆணி முதலியவற்றைக் காணின் அவைகளையும் விழுங்கி விடும். இவைகளை விழுங்குவதால் சில வேளையில் இப் பறவைக்கு மரணம் நேர்ந்து விடுவதுண்டு.

5. பொதுவாகப் பறவைகளில் பெண் பறவையே அடை காக்கும். ஆனால் தீப் பறவைகளில் ஆண் பறவையும் அடைகாக்கும். இரையின் பொருட்டு வெளியே செல்லும்போது முட்டைகளை மணலில் மூடிவிட்டுச் செல்லும். தன் முட்டைகளைப் பாதுகாத்தலில் இதற்குள்ள கவனத்தைப் பாருங்கள்!

6. இப்பறவை மிகவும் வேகமாக ஓடக் கூடியதாயினும் தன்னை வேட்டையாடுவோர் கையில் எளிதாக அகப்பட்டுக் கொள்ளுகின்றது. அதற்குக் காரணம் இது ஓடுகிற முறையே. இது நேராக ஓடாமல் வளைந்து வட்டமாக ஓடுகின்றது. அதனால் வேட்டையாடுவோர் குறுக்கே சென்று இதனைப் பிடித்து விடுகின்றனர். இப் பறவைக்கு இன்னொரு வழக்கம் உண்டென்றும் கூறுகின்றனர். தன்னைப் பிடிக்க வருவோரைக் கண்டதும் மணலில் தலையைப் புதைத்துக் கொண்டால் தன்னை அவர்கள் காணமாட்டார்கள் என்று கருதி, அங்ஙனமே தன் தலையை மறைத்துக் கொள்ளுமாம்.

7. தீப்பறவை ஆப்பிரிக்கர்களுக்கு மிகவும் பயன் தரத்தக்கது. இதன் முட்டை அவர்களுக்குச் சிறந்த உணவாகிறது. முட்டையின் ஓட்டினைப் பாத்திரமாக உபயோகிக்கின்றனர். இப்பறவைகளைப் பெரிய மந்தையாக வளர்த்து, இவற்றின் இறகை விற்பனை செய்து ஊதியம் அடைகின்றனர். இதன் இறைச்சியையும் உண்கின்றனர்.

8. பறவை யினத்தில் மிக விசித்திரமான பழக்க வழக்க முடையதும் மற்றவைகள் யாவற்றினும் பெரிதாக

இருப்பதும் பாலைநிலப் பறவையாகிய தீப்பறவையே ஆகும்.

ஈடு	சீரணித்தல்	பாலை நிலம்
கழுகு	செருகுதல்	சிட்டுக்குருவி
சீமாட்டி	உதைத்தல்	விசித்திரமான
மென்மை	வன்மை	தீப்பறவை
புதைத்தல்	எங்ஙனம்	நெருப்புக் கோழி
மாத்திரம்	நிமிர்ந்த	பழக்க வழக்கம்

அரும்பதவுரை

சீமாட்டி - சிறப்புடையவள். சீமான் - சிறப்புடையவன். பாலைநிலம் - நீரும் நிழலுமற்ற மணல் வெளி. பவுண்டு - 40 ரூபாய் எடையுள்ள நிறை அளவு. ஈடு - ஒப்பு, சமானம்.

பயிற்சி

1. பறவைகளில் யாவற்றிலும் தீப்பறவை பெரிது—இம் மாதிரி வாக்கியத்தின் இடையே யாவற்றிலும் என்று வரும்படிப் பின்வரும் வாக்கியங்களை முடி :

செல் எறும்பு..................
சிட்டுக்குருவி..................
ஆலமரம் மரங்கள்..................

2. குதிரை எருதைவிட வேகமாக ஓடும்—இம்மாதிரி பின்வரும் வாக்கியங்களை முடி :

இவன் அவனைவிட..................
மயில் கோழியைவிட..................
நீ என்னைவிட..................

இலக்கணம்

1. மெய்யெழுத்துக்களுள்,

க், ச், ட், த், ப், ற் என்னும் ஆறும் வலிய ஓசை உடையவை. ஆதலால், இவைகளுக்கு **வல்லினம்** அல்லது **வல்லெழுத்து** என்று பெயர்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லிய ஓசை உடையவை. ஆகையால், இவைகளுக்கு **மெல்லினம்** அல்லது **மெல்லெழுத்து** என்று பெயர்.

ய், ர், ல், வ், ழ், ள், என்னும் ஆறும் இடைத்தரமான ஓசை உடையவை. ஆதலால், இவைகளுக்கு **இடையினம்** அல்லது **இடையெழுத்து** என்று பெயர்.

2. கோடுள்ள இடங்களில் ஏற்ற வல்லெழுத்தைச் சேர்த்துப் படி: ப—பு, தா—கு, பூ—டு.

கோடுள்ள இடங்களில் ஏற்ற இடையெழுத்தைச் சேர்த்துப் படி: பா—. கா—. தே—.

கேள்விகள்

1. தீப்பறவை எங்கே வசிக்கும்?
2. தீப்பறவையைப் பிடிப்பது எவ்வாறு?
3. தீப்பறவையால் மனிதருக்கு என்ன உபயோகம்?
4. தீப்பறவை விசித்திரமான பழக்கவழக்கம் உடையது—எவ்வாறு?

8. உண்மை உயர்வளிக்கும்

[அரசனும் கைதிகளும்]

1. பாண்டி நாடெனும் பைந்தமிழ் நாட்டிலே
ஈண்டு மக்களை என்மக்க ளாமென
நீண்ட நாளர சாட்சிசெய் மன்னனும்
பூண்ட பேருடைப் புண்ணியன் என்பவன்.

2. ஆங்கோர் நாள்சிறைச் சாலையை அண்மியே
பாங்க தாகமேற் பார்வையிட் டேகுவோன்
தீங்கி ழைத்தவ ராய்த்தளை பூண்டவர்
பாங்கில் நிற்பவ ரைவரைப் பார்த்தனன்.

3. பார்த்த வேந்தனும் "பண்பது கெட்டுநீர்
ஆர்த்த காற்றளை யோடிங் கழுங்குவீர்,
சீர்த்த காரியஞ் செய்திலீ ரோ?" வெனப்
பார்த்தி வன்றனக் கன்னவர் பகர்வரே.

4. அவர்க ளுள்முத லாமவன் "ஐயனே
எவர்க ளுக்குமோர் தீங்குமி ழைத்திலேன்
கவர்வ தேபுரி காவலர் தம்கள
வவர்கள் மேலுரு தென்னதா ஆக்கினர்.

5. என்ன லும்மரசன் வியப் பெய்தியே
"அன்ன தா" வென்ற டுத்தவர் பார்த்துமே
"என்ன உன்குற்றம்" என்றுவி னுவலும்
மன்ன னேளென மற்றவன் கூறுவான்.

6. "குற்றம் ஒன்றும்நான் செய்திலேன் கொற்றவ!
குற்றம் செய்பவர் கூட்டத்திற் சேர்ந்ததே
குற்றம் என்றுசி றைதனிற் கூட்டினர்
குற்றம் கண்டிடுங் கொள்கையர் என்றனன்.

7. அடுத்து ஜோன்றனை அரசனும் " உன்பிழை
எடுத்தி யம்புவாய் " என்னலும் " ஏந்தலே
அடுத்து வீட்டுள ஆகாதோர் சான்றினால்
கொடுத்த தண்டனை யா"மெனக் கூறினான்.

8. பின்னு ஜோனைப்பின் மன்னவன் " உன்பிழை
என்ன?" என்ன, " விறைவனே யான்செய்த
தென்ன வென்றறி யேனுண்மை யீதெனச்
சொன்ன சொல்மதி யாதொறுத்தா " ரென்றான்.

9. இன்ன வாறந்த நால்வரும் மெய்ம்மைபோல்
சொன்ன சொற்களைக் கேட்டபின் மன்னனும்
" என்ன உன்செய்தி?" என்னலும் அன்னவர்
பின்னர் நின்றவன் பேசுவா னாயினான்.

10. " வறுமை நோயினால் வாடியும் வேந்தனே
பொறுமை யோடுபன் னாட்களைப் போக்கினேன்
சிறுமை கள்பல தீர்க்கும்வ கையின்றிப்
பெருமை யில்கள வென்பதைப் பேணினேன்.

11. " ஆத லாலிங் கடைந்தனன் யானுமே
ஈத லாதுவே றில்லைபொய் யாவதும்
ஓதும் புன்மை யொருசிறி தும்மிலேன்
தீதினால் வந்த திச்சிறை வாசமே."

12. என்று கூறலும் மன்னவன் " குற்றமே
ஒன்றும் செய்தறி யாருடன் ஒன்றுதல்
நன்றன் றிச்சிறை வாசம் தவிர்ந்துநீ
இன்று நீங்குவாய் " என்று விடுத்தனன்.

13. விடுத்த லோடவன் வேண்டும் பொருளெலாம்
கொடுத்து " யாதுங்கு றைவின்றி வாழ்வதாய்
எடுத்த பொய்யினும் மெய்ம்மையே இன்பமா
நடத்து மென்பதை நன்கறி " கென்றனன்.

—வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

ஈது	சிறுமை	பேணுதல்	அன்னது
ஈண்டு	விடுத்தல்	அன்னவன்	பன்னுள்
பூண்ட	பகர்வது	ஒறுத்தல்	புண்ணியன்
பண்பு	கவர்வது	ஒன்றுதல்	கொற்றவன்
பாங்கு	அண்மி	இழைத்தல்	அழுங்குதல்
ஏந்தல்	சீர்த்த	ஏகுவான்	சிறைச்சாலை
புன்மை	கொள்கை	காவலர்	

அரும்பதவுரை

அண்மி - அடைந்து; நெருங்கி. பாங்கதாக - முறையாக. தளை - விலங்கு. ஆர்த்தல் - ஒலித்தல். அழுங்குதல் - வருந்துதல். புன்மை - சிறுமை; அற்பத்தனம். பைந்தமிழ் - நல்ல தமிழ். பண்பு - குணம். சீர்த்த - நல்ல. அடுத்தவற் பார்த்து - அடுத்தவனைப் பார்த்து.

பயிற்சி

1. புண்ணியனுக்கும் கைதிகளுக்கும் நடந்த உரையாடலை வசன நடையில் எழுது.

2. அரசன் என்னும் பொருளைத் தரும் வேறு மூன்று சொற்கள் கூறுக.

இலக்கணம்

1. அ, இ, உ இம்மூன்று எழுத்துக்களும் சுட்டுப் பொருளில் வந்தால் சுட்டெழுத்து என்று கூறப்படும்.

(உ-ம்.) அவன், இவள், அவர்கள்.

2. எ, யா, ஆ, ஓ, ஏ இந்த ஐந்தெழுத்துக்களும் வினாப் பொருளில் வந்தால் வினாவெழுத்து என்று கூறப்படும்.

(உ-ம்.) எவன்? யாவர்? வந்தானா? நீயோ? மன்னனே!

3. கீழ்க்கண்ட சொற்களில் சுட்டெழுத்து, வினாவெழுத்து இவற்றைக் குறிக்க :

அணில், அவள், இடையன், இவர்கள், எறும்பு, எவன், கனா, போ, ஏணி, யாவன், யானை, படித்தாயா, ஏன்.

கேள்விகள்

1. புண்ணியன் அரசாட்சி எத்தகையது ?

2. ஐந்தாவது கைதி கூறியதற்கும் மற்றக் கைதிகள் கூறியதற்கும் என்ன வேறுபாடு ?

3. இந்தக் கதையினால் நீ அறிந்து கொள்வது யாது ?

9. பத்திரிகைச் செய்திகள்

(மௌன வாசிப்பு)

1. பம்பாயில் பெருந்தீ

பம்பாய்,
அக்டோபர் 1, 1954.

இன்று அதிகாலையில் பம்பாய் நகரத்தின் மத்தியிலிருந்த சில தொழிற்சாலைகளில் தீப்பற்றிக்கொண்டது. பம்பாய் நகரத்திலுள்ள தீயணைக்கும் படையில் பெரும் பகுதி அந்தத் தீயுடன் இரண்டு மணிநேரம் போராடிய பிறகே தீயை அடக்க முடிந்தது. எனினும், இரண்டு பட்டு நெசவாலைகள் முழுவதும் எரிந்து நாசமாகி விட்டன ; இரண்டு சாயத் தொழிற்சாலைகள் பெரும்பகுதி சேதமாயின.

செய்தி கிடைத்த பத்து நிமிஷங்களுக்குள் பதினேழு தீயணை எஞ்சின்கள் தலத்துக்கு விரைந்தன. ஆனால் அதற்குள் இரண்டு பட்டு நெசவாலைகளையும் தீ சூழ்ந்து கொண்டது. அருகிலிருந்த அச்சுத் தொழிற்சாலைகளுக்கும் சாயத் தொழிற்சாலைகளுக்கும் தீ பரவிவிடும் நிலைக்கு வந்துவிட்டது.

ஒரு நெசவாலையில் இரவு முறையில் வேலையில் ஈடுபட்டிருந்த 200 தொழிலாளர் முதலில் தீப்பிடித்தபொழுது அதை அணைக்கப் பெருமுயற்சி செய்தனர். வடகிழக்குக் காற்றினால் வீசப்பட்ட அந்தத் தீ விரைவில் பரவியதால் அவர்களது முயற்சி வீணாகியது.

இரண்டு பட்டு நெசவாலைகளையும் காப்பாற்ற முடியாதெனக் கண்ட தீயணைக்கும் படையினர், அருகிலிருந்த கட்டடங்களுக்குத் தீ பரவாமல் காப்பதில் முனைந்தனர்.

எனினும் இரண்டு சாயத் தொழிற்சாலைகள் இருந்த ஒரு கட்டடத்தில் தீப்பற்றி அரைகுறைச் சேதம் ஏற்பட்டது.

இரண்டரை மணி நேரம் முழுமுயற்சியுடன் தீயோடு போராடிய பிறகுதான், தீ அணைக்கப்பட்டது. நெசவாலைகளுக்கும் கட்டடங்களுக்கும் ஏற்பட்ட நஷ்டம் சுமார் ஏழு லட்சம் ரூபாய் இருக்குமென மதிப்பிடப் படுகிறது.

2. இந்தியாவுக்காகக் கட்டப்படும் இரண்டு கப்பல்கள்

பம்பாய்,
செப்டம்பர் 29உ 1954.

பத்தாயிரம் டன் எடையுள்ள இரண்டு கப்பல்கள் இந்தியாவுக்காக ஜெர்மனியில் ஹாம்பர்க் துறைமுகத்தி லுள்ள கப்பல் கட்டும் தொழிற்சாலையில் கட்டப்படு கின்றன. அவை இவ்வருடம் நவம்பர் மாதத்தில் கடலில் மிதக்க விடப்படும்.

இந்தியா நீராவிக் கப்பல் கம்பனியின் தலைவரான ஸர் ஏ. ராமசாமி முதலியார், நவம்பர் மாதம் 5-ஆம் தேதி ஹாம்பர்க் துறைமுகத்திலுள்ள ஹோவால்டு கப்பல் தொழிற்சாலையில் அந்தக் கப்பல்களைக் கடலில் செலுத்து வார். அந்தக் கப்பல்களுக்கு "இந்தியாவின் நம்பிக்கை" "இந்தியாவின் புகழ்" என்று பெயர் சூட்டப்படும். இவை இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே சாமான் களை எடுத்துச் செல்லும் வியாபாரக் கப்பல்களாக இயங்கும். அடுத்த வருஷம் ஜனவரி மாதத்தில் இவை முதன் முதல் இந்தியாவுக்கு வந்து சேரும்.

நெசவாலை	முனைந்தனர்	நம்பிக்கை
சேதமாயின	நஷ்டம்	சாமான்
விரைந்தன	டன்	இயங்கும்

அரும்பதவுரை

சேதமாயின - அழிந்தும் கெட்டும் போயின. விரைந்தன - வேகமாகச் சென்றன. முனைந்தனர் - முன்னின்று செய்தனர். டன் - 2240 ராத்தல் கொண்ட எடை.

இலக்கணம்

1. தோன்றும், கருதி, பொருந்தாது, பிரித்து, காண்— இவைகளைப் பெயர்ச் சொற்களாக மாற்றி எழுது.

2. இவை ஒவ்வொன்றும் என்ன சொல் :—
திங்கள், வெளிச்சம், பார்த்தால், ஆற, உண்டு, இல்லை.

கேள்விகள்

1. முதல் செய்தியிலிருந்து நீ தெரிந்துகொண்டதைப் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுது.

2. இரண்டாம் செய்தியில் குறிக்கப்படும் கப்பல்களின் பெயர்கள் யாவை? அவை எங்கே கட்டப்படுகின்றன? எந்த நாட்டுக்காகக் கட்டப்படுகின்றன?

10. விவேகானந்தர்

1. ஏறத்தாழ எழுபது ஆண்டுகளுக்கு முன் வங்க நாட்டில் கல்கத்தா நகரில் விசுவநாத தத்தர் என்னும் பெரியார் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த கல்விமான்; வக்கீல் தொழில் புரிந்து மிக்க பொருள் ஈட்டியவர். அவர் புவனேசுவரி என்னும் உத்தம நங்கையை மணந்து இல்லறம் நடத்திவந்தார். அவர்களுக்கு 1863-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12-ஆம் நாளில் ஒரு ஆண் மகவு பிறந்தது. பெற்ருேர் அக்குழந்தைக்கு நரேந்திரநாதன் எனப் பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தனர். நரேந்திர நாதரே பிற்காலத்தில் விவேகானந்தர் என்னும் பெயருடன் விளங்கிஞர்.

2. நரேந்திரர் இளம்பருவத்திலேயே சுறுசுறுப்பும் துடுக்கும் உடையவராக இருந்தார். அவர் செய்த குறும்புச் செயல்களுக்கு அளவே இல்லை. எனினும் அவ்

விளைமையிலேயே சாதுக்களையும் வறியோர்களையும் கண்டால் அவர்களிடத்து மிக்க அன்பு காட்டுவர். அவர்கள் விரும்பிய பொருள் எதுவாக இருப்பினும் அதனை வீட்டினின்று எடுத்துக் கொடுத்துவிடுவர்.

3. நரேந்திரர் உரிய பருவத்தில் கல்வி பயிலத் தொடங்கினர். நரேந்திரரது தாயார் கல்வியறிவு உடையவராக இருந்தமையால் அவரே தம் மைந்தருக்கு முதன் முதலாகக் கல்வி பயிற்றுவித்தார்.

4. பின்பு நரேந்திரர் ஒரு நல்லாசிரியரை அடைந்து அவரிடம் கல்வி பயின்றார். ஆசிரியர் பாடம் கற்பிக்கும் போது அவர் மிக்க கவனமாகக் கேட்பர். ஆயினும், அவர் அப்பொழுதெல்லாம் கண்ணை மூடிக்கொண்டிருப்பர். அதனால், ஆசிரியர் நரேந்திரரைத் 'தூங்கு மூஞ்சிப் பயல்' எனக் கருதிவந்தார். ஒருமுறை நரேந்திரர் அவ்வாறு கண்ணை மூடிக்கொண்டிருக்கும்போது ஆசிரியர் கோபங்கொண்டு அவரைத் தட்டி எழுப்பினர். நரேந்திரர் விழித்துப் பார்த்தார்; ஆசிரியர் கோபமாயிருப்பதையும் அதற்குக் காரணத்தையும் அறிந்து கொண்டார். தாம் தூங்கவில்லை என்பதை ஆசிரியருக்கு அறிவிக்க எண்ணி, அதற்குமுன் ஒரு மணி நேரமாக ஆசிரியர் சொல்லி வந்ததை யெல்லாம் ஒன்றுவிடாமல் அப்படியே ஒப்பித்தார். ஆசிரியர் நரேந்திரரது ஞாபக சக்தியையும் கவன மிகுதியையும் அறிந்து வியப்புற்றனர்.

5. நரேந்திரர் நாளடைவில் தமது தாய்மொழியாகிய வங்க மொழியையும் சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய இவற்றையும் நன்கு கற்றுத் தேர்ச்சி பெற்றார்; சிறந்த சொல்வன்மையும் உடையவரானார். அவருக்கு இசையிலும் நல்ல பயிற்சி உண்டு.

6. இத்தகைய கல்வியாளராகிய நரேந்திரர் கடவுளைப் பூசிப்பதிலும் தியானம் செய்வதிலும் மிகுந்த பற்றுடையவராக இருந்தார். ஆயினும், இந்து மதத்தின் அடிப்படையான உண்மைகளை அறியவேண்டும் என்னும் அவா அடிக்கடி அவர் மனத்தில் எழுந்தது. ஆதலால், இந்துசமய உண்மையைத் தமக்குத் தெரிவிக்கத் தக்க குருநாதனை எதிர்நோக்கி யிருந்தனர்.

7. அப்பொழுது கல்கத்தாவின் அருகேயுள்ள தட்சிணேசுவரம் என்னும் ஆலயத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சர் என்னும் ஒரு பெரியார் இருந்தனர். நரேந்திரர் அவரைப்பற்றிக் கேள்வியுற்று அவரிடம் சென்றார்; அவர் பெருமையையும் அறிந்தார். இராமகிருஷ்ணரும் இவரது பக்குவநிலையை அறிந்து அருள் கூர்ந்து இவருக்கு உபதேசம் செய்து இவருக்கிருந்த ஐயங்களை யெல்லாம் போக்கினர். நரேந்திரரும் தமது ஐயம் நீங்கப்பெற்றுச் சிறந்த விவேகம் உடையவரா யினர். அதுமுதல் நரேந்திரருக்கு விவேகானந்தர் எனப் பெயர் வழங்கலாயிற்று.

8. விவேகானந்தர் கல்வியில் தேர்ச்சியுடையவரா யிருந்தமையோடு பி. ஏ. பட்டமும் பெற்று விளங்கினர். ஆகையால், அவர் மிக எளிதாக உத்தியோகம் பெற்று மிக்க பொருள் ஈட்டலாம். ஆயினும், அவர் மனம் அதிற் செல்லவில்லை. அவர் மத ஆராய்ச்சியிலும் தியானத்தி லும், தம் காலத்தைப் போக்க எண்ணினார்; எல்லா மக்க ளுக்கும் இந்துசமய உண்மைகளை அறிவுறுத்தவேண்டும் என்று விரும்பினார். ஆதலால், நமது விவேகானந்தர் துறவுக்கோலம் பூண்டு இந்திய நாட்டின் பல பகுதிகளி லும் சஞ்சாரம் செய்தார்; விரிவுரைகளாலும், உரையாட லாலும் மக்களுக்கு இந்துமதக் கொள்கைகளைப் புகட்டி

னர். இங்ஙனம், அவர் சுற்றுப்பிரயாணம் செய்தபொழுது நமது தமிழ் நாட்டிற்கும் வந்தார்.

9. அப்பொழுது, அமெரிக்காவில் 'சர்வமத மகா நாடு' நடைபெறப் போகும் செய்தி இங்குள்ள அறிஞர் சிலருக்குத் தெரிந்தது. அவர்கள் அந்த மகாநாட்டுக்கு இந்து சமய உண்மைகளை எடுத்துரைக்க வல்ல ஒருவரை அனுப்பவேண்டும் என்று விரும்பினர்; விவேகானந்த சுவாமிகளே அதற்குத் தக்கவரென அறிந்து அவரை அமெரிக்கா போகுமாறு வேண்டினர். சுவாமிகளும் அதற்கிணங்கவே, மிக விரைவில் வழிச் செலவுக்கு வேண்டிய பணம் சேகரிக்கப்பட்டது. குறித்த நாளில் விவேகானந்தர் பம்பாயிலிருந்து புறப்பட்டுக் கடல் கடந்து அமெரிக்காவை அடைந்தனர்.

10. அமெரிக்காவில் ஒரு பெரியார் நட்புச் சுவாமி களுக்குக் கிடைத்தது. அதன் மூலம் அவர் சர்வமத மகாநாடு நடைபெறும் இடம் சென்றனர். மகாநாட்டுத் தலைவர் சுவாமிகளை வரவேற்று இருக்கை அளித்து உபசரித்தார். மகாநாடு தொடங்கியது. ஏறக்குறைய பதினாயிரம் மக்கள் விரிவுரைகளைக் கேட்கக் கூடியிருந் தனர். சிறந்த பிரசங்கியார் பலர் முறை முறையாக வந்து பேசினர். இறுதியில் விவேகானந்தரும் பேச அழைக்கப்பட்டார்.

11. அவர் எழுந்து நின்று பேசத் தொடங்கி, முதலில் 'அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே, சகோதரர்களே' எனச் சபையோரை விளித்தனர். அது கேட்டுச் சபை யோர் அனைவரும் பெருமகிழ்ச்சிகொண்டு காது செவிடு படும்படி கரகோஷம் செய்தனர். அதுவரையில் பேசிய வர்கள் 'சீமாட்டிகளே, சீமான்களே', என்று தொடங்கி னர்கள். ஆனால், விவேகானந்தரோ 'சகோதரிகளே,

சகோதரர்களே ' என விளித்துத் தமக்குள் சகோதர பாவத்தை வெளிப்படுத்தினர். அதுவே சபையோர் அடைந்த பெருமகிழ்ச்சிக்குக் காரணம். விவேகானந்தர் இந்து சமயக் கொள்கைகளை எடுத்துத் தெள்ளத்தெளிய விளக்கினர். அவையோர் அனைவரும் மிகக் கவனமாகக் கேட்டுப் பரவசமடைந்தனர்.

12. சுவாமிகள் இரண்டாண்டுகள் அமெரிக்காவில் தங்கிச் சமயப் பிரசாரம் செய்தார். பின்னர், இங்கிலாந்து, ஜர்மனி முதலிய நாடுகளுக்கும் சென்று பல விரிவுரைகள் செய்து தமது தாய்நாடு திரும்பினர்.

13. விவேகானந்த சுவாமிகள் மேனாட்டில் சமயப் பிரசாரம் செய்து பெரும் புகழோடு தமது தாய்நாட்டுக் குத் திரும்பி வருகிறார் என்னும் செய்தி அறிந்த நம் இந்திய மக்கள் பெருமகிழ்வோடு சுவாமிகளை வரவேற் றனர். சுவாமிகள் கொழும்பில் இறங்கிப் பாம்பன், திருச்சி முதலிய ஊர்களின் வழியே சென்னை சென்றார். அங்குச் சில நாள் தங்கிப் பிறகு தமது சொந்த ஊராகிய கல்கத்தா அடைந்தனர்.

14. சுவாமிகள் கல்கத்தாவில் தமது சகோதர சீடர் களுடன் கலந்து ஆலோசித்துத் தமது குருநாதர் இராம கிருஷ்ணர் பெயரால் ஒரு மடம் நிறுவத் தீர்மானித்தார். பிற்காலத்திலும் மடம் நன்கு நடைபெறுதற்குரிய சட்ட திட்டங்களை வகுத்தார். சுவாமிகள் மடம் கட்டவேண்டு மென்ற தமது கருத்தை வெளியிடவே அவர் சீடர்களும் பிறரும் முன்வந்து தாராளமாகப் பொருளுதவி புரிந் தனர். கல்கத்தாவுக்கருகே கங்கை நதிக்கரையில் பேலூர் என்னும் சிற்றூரில் ஒரு பெரிய அழகிய மடம் கட்டப்பட் டது. அதுவே இப்பொழுது உலகத்தின் பற்பல பாகங்

களில் உள்ள இராமகிருஷ்ண மடங்களுக்கெல்லாம் தலைமை இடமாக விளங்குகிறது.

15. விவேகானந்தர் மீண்டும் ஒருமுறை மேல்நாடு சென்று சமயப் பிரசாரம் செய்து பல அறிஞர்களைச் சீடர்களாக்கித் தம் தாய்நாடு திரும்பினர்.

16. இங்ஙனம், நம் நாட்டிலும் பிறநாட்டிலும் மக்களுக்கு இந்துமத உண்மைகளைப் புகட்டி நல்வாழ்வு பெறச் செய்த சுவாமிகளின் வாழ்நாள் முடியுங்காலம் எய்தியது. சுவாமிகள் நான்காண்டுகளுக்கு முன்னரே தமது வாழ்நாள் இன்ன நாளில் முடியும் என அறிந்து வெளியிட்டிருந்தனர்; அவ்வண்ணமே, 1902-ம் ஆண்டு ஜுலை மாதம் நாலாம் நாளில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

17. விவேகானந்த சுவாமிகள் இந்து மதத்தின் உண்மைக் கொள்கைகளை உலகமுழுதும் பரப்பிய பெரியார் ஆவர். அவர் மேற்கொண்ட கொள்கைகளுள் முக்கியமானவை; சாதி வேற்றுமை பாராட்டுதலாகாது. ஏழை மக்களுக்கு உதவி செய்தல் வேண்டும். மக்கள் அனைவருக்கும் கல்வி இன்றியமையாதது. மக்களில் ஒவ்வொருவரும் மனோதிடமும் உடல் நலமும் உடையவராக இருத்தல் வேண்டும். ஒவ்வொருவரும் நேர்மையான வஞ்சகமற்ற வழியில் தமது வாழ்க்கையை நடத்தல் வேண்டும். மக்கள் தமது தாய்மொழியிலும் தாய்நாட்டிலும் பற்றுடையவராக இருக்கவேண்டும். ஒவ்வொருவரும் பிற சமயத்தில் வெறுப்பின்றித் தத்தம் மதத்தின் உண்மைக் கொள்கைகளைக் கடைப்பிடித்தொழுக வேண்டும்.

மடம்	பூசிப்பது	ஐயம்
சீடர்	சாதுக்கள்	துடுக்கு
குருநாதன்	சுவாமிகள்	சேஷ்டை
பக்குவம்	நீத்தல்	சீமான்

மகாநாடு	பிரசங்கி	விளித்தல்
பரவசம்	விரிவுரை	கல்வியாளர்
மேனுடு	பிரசாரம்	சபையோர்
இருக்கை	அறிவுறுத்தல்	உலகவாழ்வு
நிறுவுதல்	அடிப்படையான	ஞாபகசக்தி
சேகரித்தல்	கரகோஷம்	இந்துமதம்
வரவேற்றல்	தூங்குமூஞ்சி	துறவுக்கோலம்

அருஞ்பதவுரை

விவேகம் - அறிவு. பக்குவம் - தகுதி. சீடர் - மாணுக்கர். மகாநாடு - பெருங்கூட்டம். பூசிப்பது - வழிபாடு செய்வது. பிரசங்கி - பிரசங்கம் செய்வோர். பிரசங்கம் - விரிவுரை. விரிவுரை - ஒரு குறிப்பிட்ட பொருளேப்பற்றி விளக்கமாகப் பேசுதல். பரவசம் - கருத்து ஊன்றி விடுதல்; தன்னே மறந்துவிடுதல்.

பயிற்சி

1. விவேகானந்தரின் பெருமையைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. துறவுக்கோலம், பிரசங்கம், மகாநாடு, ஞாபகசக்தி, சுற்றுப் பிரயாணம், தாராளமாக—இச்சொற்களேத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

இலக்கணம்

1. விவேகானந்தர் உத்தியோகத்தை விரும்பவில்லே—இவ் வாக்கியத்தில் விவேகானந்தர் உத்தியோகத்தை என்பன பெயர்ச்சொற்கள். ஆனுல், 'விவேகானந்தர்' என்ற சொல் கருத்தாப் பொருளில் வந்தது. 'உத்தியோகத்தை' என்பது செயப்படு பொருளில் வந்தது. இங்ஙனம் பொருள் வேறுபடுவது வேற்றுமை. வேற்றுமை எட்டு வகைப்படும். வேற்றுமையைக் காட்டும் குறியாக வருகின்ற சொல் வேற்றுமை உருபு ஆகும்

(1) முதல் வேற்றுமைக்குத் தனியாக உருபு இல்லே. பெயர்ச்சொல் யாதொரு மாறுதலும் அடையாமல் கருத்தாப் பொருளில் வரும்போது முதல் வேற்றுமை ஆகும்.

(உ - ம்.) விவேகானந்தர் உத்தியோகத்தை விரும்பவில்லே.—விவேகானந்தர் : முதல் வேற்றுமை.

(2) இரண்டாம் வேற்றுமை உருபு ஐ என்பது.

(உ - ம்.) விவேகானந்தர் தாய் மொழியை நன்கு கற்ருர். தாய்மொழியை: இரண்டாம் வேற்றுமை.

(3) மூன்ரும் வேற்றுமைக்கு ஆல், ஆன், ஒடு, ஓடு, கொண்டு, உடன் என்பன உருபுகளாம்.

(உ - ம்.) விவேகானந்தர் பெரும்புகழோடு தாய் நாடு திரும்பினுர்—பெரும் புகழோடு : மூன்ரும் வேற்றுமை.

(4) நான்காம் வேற்றுமைக்கு உருபு கு என்பது.

(உ - ம்.) இராமகிருஷ்ணர் விவேகானந்தருக்கு உபதேசம் செய்தார்—விவேகானந்தருக்கு : நான்காம் வேற்றுமை.

2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களுக்கு வேற்றுமை கூறு.

விவேகானந்தர் துறவை மேற்கொண்டார்.

சுவாமிகள் சீடர்களோடு ஆலோசித்தார்.

இவன் கூலிக்கு வேலை செய்கிருன்.

கந்தன் நாயைக் கல்லால் அடித்தான்.

கேள்விகள்

1. விவேகானந்தர் பிறந்த ஊர், அவருடைய பெற்ருேரின் பெயர், குருவின் பெயர், அவர் வாழ்ந்த காலம் இவைகளைக் கூறு.

2. விவேகானந்தரிடம் இளமையிலேயே விளங்கிய குணங்கள் யாவை?

3. ஆசிரியர் அவரைத் 'தூங்குமூஞ்சிப் பயல்' என்று அழைக்கக் காரணம் என்ன?

4. விவேகானந்தர் என்னும் பெயர் எப்பொழுது உண்டாயிற்று?

5. விவேகானந்தர் எந்தெந்த நாடுகளுக்குச் சென்று வந்தார்? அங்கே அவர் செய்த வேலை யாது?

6. விவேகானந்தர் தம் குருவின் ஞாபகார்த்தமாகச் செய்துள்ள பணி யாது?

11. பஞ்சாயத்து

[கண்ணனும் அவன் அண்ணனும் உரையாடல்]

[கண்ணனும் அவன் அண்ணனும் வீதிவழியாகப் போகும் போது ஒரு சத்திரத்தைக் காண்கிருர்கள்.]

கண்ணன் : அண்ணு, ஏன் இந்தச் சத்திரத்தில் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிருர்கள்?

அண்ணன்: இங்கு, இன்று பஞ்சாயத்துக் கோர்ட்டு நடக்கிறது. அதனுல்தான் ஜனங்கள் கூட்டமாய் இருக்கிருர்கள்.

கண்ணன் : பஞ்சாயத்துக் கோர்ட்டு என்ருல் என்ன?

அண்ணன் : கோர்ட்டு என்ருல் உனக்குத் தெரியுமா?

கண்ணன் : தெரியுமே! அன்ருெருநாள் அப்பா எனக்குக் கோர்ட்டைக் காண்பித்து 'இதுதான் கோர்ட்டு, இங்கு வழக்குகளை விசாரித்து முடிவு செய்வார்கள்' என்று கூறிஞரே.

அண்ணன் : சரி, இதுவும் அதுபோல வழக்குகளை விசாரித்து முடிபு கூறும் இடம்தான். அதனுல்தான் இதற்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டு என்று பெயர்.

கண்ணன் : அது சரி அண்ணு! இதற்குப் **பஞ்சாயத்துக்** கோர்ட்டு என்று ஏன் பெயர் வந்தது?

அண்ணன் : பஞ்சாயத்து என்பதற்கு ஐந்து பேர் அடங்கிய கூட்டம் என்று பொருள். 'பஞ்சாயம்' என்ற சொல்லே பஞ்சாயத்து என்று வழங்குகிறது. கோர்ட்டு என்பது ஆங்கிலச் சொல். அதைத் தமிழில் 'நீதிமன்றம்' என்று கூறலாம். கோர்ட்டில் பலவகை உண்டு.

அவை ஜட்ஜு கோர்ட்டு, முனிசீப்பு கோர்ட்டு முதலியன வாம். ஜட்ஜு என்னும் உத்தியோகஸ்தர் வழக்கு விசாரிக்கும் இடம் ஜட்ஜு கோர்ட்டு. முனிசீப்பு என்னும் உத்தியோகஸ்தர் வழக்கு விசாரிக்கும் இடம் முனிசீப்புக் கோர்ட்டு. இது பஞ்சாயத்தார் வழக்கு விசாரிக்கும் இடம். ஆதலால் இதற்குப் பஞ்சாயத்துக் கோர்ட்டு என்று பெயர். ஆயினும், பஞ்சாயத்தார் இப்போது ஐந்து பேராக மட்டும் இருப்பதில்லை. ஏழு பேர், ஒன்பது பேர் என்றிப்படி அதிகத் தொகையினராக உள்ளவர்களையும் பஞ்சாயத்தார் என்றே வழங்குகிறார்கள். ஆதலால், இக்காலத்தில் பஞ்சாயத்து என்பதற்குப் பலபேரடங்கிய சபை என்றே பொருள் கொள்ளவேண்டும்.

கண்ணன் : இவர்கள் என்ன விசாரணை செய்வார்கள் ?

அண்ணன் : இவர்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஐம்பது ரூபாய்க்கு உட்பட்ட சிறு வழக்குகளை விசாரிப்பார்கள். ஆனால் வாதி பிரதிவாதி இருவரும் சம்மதித்தால் இருநூறு ரூபாய்க்கு உட்பட்ட வழக்குகளையும் விசாரிக்க இவர்களுக்கு அதிகாரம் உண்டு.

கண்ணன் : இந்தப் பஞ்சாயத்துச் சபை எல்லா ஊர்களிலும் இருக்குமா ?

அண்ணன் : எல்லா ஊர்களிலும் உண்டு. ஆனால், நகரங்களில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் மட்டும் உண்டு. கிராமங்களில் ‘கிராமப் பஞ்சாயத்து’ என்று மற்றொரு சபையும் உண்டு.

கண்ணன் : அது என்ன அண்ணா ?

அண்ணன் : கிராமப் பஞ்சாயத்து என்பது கிராமத்தில் உள்ள பஞ்சாயத்து. அதுவும் பலபேர் அடங்கிய சபைதான். அதற்குப் பஞ்சாயத்து போர்டு என்று

பெயர். ஆனால், பஞ்சாயத்துக் கோர்ட்டுக்குள்ள வழக்கு விசாரணை செய்யும் அதிகாரம் இந்தப் பஞ்சாயத்துப் போர்டுக்கு இல்லை.

கண்ணன் : அப்படியானால், இந்தப் பஞ்சாயத்து எதற்காக?

அண்ணன் : இந்தப் பஞ்சாயத்தார் சில முக்கிய மான வேலைகளைக் கவனிக்கிறார்கள். கிராமத்திலுள்ள வீதிகள் சுத்தமாய் இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார்கள். வீதிகளில் இராக்காலத்தில் விளக்கு எரியவும், ஜனங்களுக்குத் தண்ணீர்க் கஷ்டமில்லாமல் இருக்கக் கிணறுகள் வெட்டவும் ஏற்பாடு செய்கின்றார்கள். இவர்கள் ஆரம்ப பாடசாலைகள் வைத்து நடத்தலாம்; தொத்து நோய் பரவாமல் தடுப்பதற்கு வேண்டிய ஏற் பாடுகள் செய்யலாம். இன்னும் சுகாதாரத்துக்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் செய்யலாம்.

கண்ணன் : இதற்கெல்லாம் பணம் வேண்டுமே?

அண்ணன் : கிராமத்தார்களிடமிருந்து சிறு சிறு தொகை வரியாக வசூல் செய்வார்கள். சர்க்காரும் பண உதவி செய்வார்கள்.

கண்ணன் : இந்தப் பஞ்சாயத்தாரை நியமிப்பது யார்? சர்க்காரா?

அண்ணன் : பஞ்சாயத்தார்களைச் சர்க்கார் நிய மிப்பது இல்லை. பஞ்சாயத்தில் உறுப்பினராக இருக்க விருப்பமுள்ளவர்களைத் தேர்தல் மூலமாக ஜனங்களே தெரிந்தெடுக்கிறார்கள். அந்தத் தேர்தலுக்குத்தான் ஆங்கி லத்தில் 'எலெக்ஷன்' என்று பெயர். பொதுமக்களே பஞ்சாயத்தின் தலைவரையும் தேர்ந்தெடுக்கிறார்கள்.

கண்ணன் : ஏன் அண்ணா இப்படிச்செய்ய வேண்டும்? சர்க்காரே நியமித்தால் என்ன?

அண்ணன் : ஜனங்களுடைய குறைகளும் அவர் களுக்கு வேண்டிய சௌகரியங்களும் ஜனங்களுக்குத் தானே நன்றாய்த் தெரியும். அதனால், ஜனங்களின் சௌ கரியத்தில் அக்கரையுள்ளவர்கள் இத்தகைய பஞ்சா யத்தில் வரவேண்டுமென்றே தேர்தல் மூலமாகப் பஞ்சா யத்து அமைக்கப்படுகிறது.

கண்ணன் : இது நல்ல ஏற்பாடு அண்ணா! இப்பஞ் சாயத்தார் எத்தனை வருஷம் உத்தியோகம் பார்ப் பார்கள் ?

அண்ணன் : இவர்கள் உத்தியோக காலம் மூன்று வருஷம். அந்தக் காலம் முடிந்தவுடன் மறு தேர்தல் நடக்கும். அதில் வெற்றி பெறுகிறவர்களே இன்னொரு மூன்று வருஷத்துக்குப் பஞ்சாயத்தார் ஆவார்கள். இம் மாதிரியே மும்மூன்று வருஷத்துக்கு ஒருமுறை பஞ்சா யத்துச் சபை அமைக்கப்படும்.

கண்ணன் : இவர்களுக்குச் சம்பளம் உண்டோ ?

அண்ணன் : சம்பளம் இல்லை; அதனால், மிகுந்த ஓய்வு நேரம் உள்ளவர்களையாவது அல்லது பொது நலத்தில் அக்கரை உள்ளவர்களையாவது பஞ்சயாத்துச் சபைகளுக்கு உறுப்பினராகக் தெரிந்தெடுத்தல் நலம். பஞ்சாயத்துச் சபையார் பொது மக்களின் மதிப்பைப் பெறுபவர்களாக இருக்கவேண்டும்.

கண்ணன் : சரி, அண்ணா, போவோம். (இருவரும் போகிறார்கள்.)

சத்திரம்	பஞ்சாயத்து	வாதி
தேர்தல்	தெரிந்தெடுத்தல்	பிரதிவாதி
அக்கரை	தொத்துநோய்	நீதிமன்றம்
உறுப்பினர்	ஏற்பாடு	கொடுக்கல் வாங்கல்
பொதுநலம்	சுகாதாரம்	சௌகரியம்

அரும்பதவுரை

அக்கறை - கருத்து. தொத்துநோய் - ஒருவரிடமிருந்து பலருக்கும் பரவக்கூடிய நோய் (அம்மை, வாந்திபேதி முதலியன.)

பயிற்சி

உங்கள் ஊரிலுள்ள பஞ்சாயத்துக் கோர்ட்டு அல்லது பஞ்சாயத்துப் போர்டைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு.

இலக்கணம்

1. (1) ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன், நின்று, இருந்து என்பன.

(உ - ம்.) நான் வீட்டிலிருந்து வருகிறேன்—வீட்டிலிருந்து : ஐந்தாம் வேற்றுமை.

(2) ஆறும் வேற்றுமையின் உருபுகள் அது, உடைய என்பன.

(உ - ம்.) இது என்னுடைய புத்தகம்—என்னுடைய: ஆறும் வேற்றுமை.

(3) ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், இடம், கண் முதலியன.

(உ - ம்.) சத்திரத்தில் கூட்டம் அதிகம்—சத்திரத்தில்: ஏழாம் வேற்றுமை.

(4) எட்டாம் வேற்றுமையின் உருபுகள் பெயர்ச்சொல்லின் ஈறு திரிதல் மிகுதல் முதலியன.

எட்டாம் வேற்றுமை விளித்தற் பொருளில் வரும்.

[விளித்தல் - அழைத்தல், கூப்பிடுதல்] அதனுல், விளி வேற்றுமை என்றும் கூறப்படும்.

(உ - ம்.) தம்பீ, இங்கு வா—தம்பீ : எட்டாம் வேற்றுமை.

2. தடித்த எழுத்தில் உள்ள பெயர்ச் சொற்களுக்கு வேற்றுமை கூறு.

கோர்ட்டில் வழக்குகள் விசாரிக்கப்படும்.
அப்பா, இவர் யார்?
இது யாருடைய பேனு?
திருச்சியின் வடக்குத் திருவரங்கம்.

கேள்விகள்

1. பஞ்சாயத்து என்ருல் என்ன?
2. பஞ்சாயத்துக் கோர்ட்டாரின் வேலைகள் யாவை?
3. பஞ்சாயத்துச்சபை எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது?
4. எத்தகையோரைப் பஞ்சாயத்துச் சபை உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்?
5. பஞ்சாயத்துக் கோர்ட்டாரின் வேலைகள் என்ன?

12. உல்லாசப் பிரயாணம்

1. உல்லாசப் பிரயாணம் என்பது மாணவர்கள் ஆசிரியர் முதலியோரில் பலர் ஒன்று சேர்ந்து ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊரிலுள்ள காட்சிகளைக் காணும் பொருட்டு உல்லாசமாகச் செல்லுதல். நாம் காணவேண்டிய இடம் தொலைவிலிருந்தால் இரயில்வண்டி மூலமாகவும் 'மோட்டார் பஸ்' மூலமாகவும் பிரயாணம் செய்யலாம்; சமீபத்தில் இருந்தால் கால் நடையாகச் செல்லலாம். பலர் ஒன்று சேர்வதால் பிரயாணம், உணவு முதலியவற்றிற்காகும் செலவு குறையும். பல செய்திகளைப் புத்தகத்தின்மூலம் அறிவதைக் காட்டிலும் விளக்கமாக உல்லாசப் பிரயாணத்தின்மூலம் நேரில் அறிந்துகொள்ளலாம்.

2. உல்லாசப் பிரயாணம் செய்வோர் சில கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடப்பதெனத் திட்டம் செய்துகொள்ளவேண்டும். அப்பொழுதுதான் பிரயாணம் செம்மையாக நடைபெறும். பிரயாணக் கூட்டத்தினர் தங்களுக்குள் ஒருவரைத் தலைவராக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அவர் சொல்லுகின்றபடி மற்றவர்கள் நடக்க வேண்டும். வண்டியி லேறும்போதும் வண்டியிலிருந்து இறங்கும்போதும் ஒழுங்கு முறையைக் கைக்கொள்ள வேண்டும். தாம் செல்லும் இடங்களையும் காணும் காட்சிகளையும் அவ்வப்பொழுது குறிப்புப் புத்தகத்தில் குறித்துக் கொள்ளவேண்டும்.

3. திருச்சிராப்பள்ளினுயின்று மதுரை சென்ற ஒரு உல்லாசப் பிரயாணக் கூட்டத்தினருள் ஒரு மாணவன் தான் எழுதிவைத்திருந்த குறிப்பைக் கொண்டு அப்பிரயாணத்தைப்பற்றிக் கூறுகிறான், கேளுங்கள் :

4. சென்ற வெள்ளிக்கிழமை இரவு 9-மணிக்கு மாண

வர்கள் முப்பத்தாறு பேரும் ஆசிரியர் நான்கு பேருமாக நாற்பது பேர் எங்கள் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தோம். எங்கள் பிரயாணக் கூட்டத்துக்குத் தலைவராக எங்கள் தமிழாசிரியர் நியமிக்கப்பெற்றிருந்தார். அவர் பிரயாணக் கூட்டத்தினர் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப் பற்றிச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறினர். பின்னர் நாங்கள் அனைவரும் படுத்துறங்கினோம்.

5. விடியற்காலை மூன்று மணிக்கு எங்களை எழுப்பி விட்டனர். நாங்கள் எழுந்து காலைக்கடனை முடித்துக் கொண்டு திருச்சிக்கோட்டை இரயில் நிலையத்துக்குப் புறப்பட்டோம். புறப்படுவதற்கு முன் கூட்டத்தினர் அனைவரும் சரியாக இருக்கின்றனரா என்று தலைவர் கவனித்துக்கொண்டார். நாங்கள் $3\frac{3}{4}$ மணிக்கு இரயில் நிலையம் அடைந்தோம். இரயில் வண்டி நான்கு மணிக்கு வந்தது. அதில் ஏறித் திருச்சி 'ஜங்ஷன்' சென்றோம். நாங்கள் சென்ற வண்டி அங்கு நின்றுவிடக்கூடியது. ஆதலால், அதனின்று இறங்கி மதுரை போகும் வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டி நாலரை மணிக்குப் புறப் பட்டது. அது மதுரைக்குக் காலை ஏழரை மணிக்குப் போய்ச் சேர்ந்தது. வண்டி மதுரைக்கு அருகே ஒரு பாலத்தின் மீது சென்றது. அப்பாலம் வையை யாற்றின்மீது கட்டப்பட்டுள்ளது என அறிந்து ஆற்றைக் கவனித்தோம். ஆறு சிறிய ஆறே; ஆற்றில் தண்ணீர் இல்லை. ஆனால் ஊற்றுக்கால்கள் பல இருந்தன. அவற்றில் ஊற்றுநீர் தெளிவாக ஓடிற்று. அதில்தான் மக்கள் தங்கள் ஆடைகளைத் தோய்த்துக் குளிக்கின்றனர்.

6. நாங்கள் மதுரை இரயில் நிலையத்தில் இறங்கி மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அடைந்தோம். நாங்கள் வருவதை முன்னரே எங்கள் தலைவர் மூலமாக அறிந்

திருந்த சங்க அமைச்சர் நாங்கள் தங்குவதற்குத் தக்க இடவசதி செய்திருந்தனர். நாங்கள் உடனே நீராடிச் சிற்றுண்டியருந்தி அங்கிருந்து புறப்பட்டுக் கால் நடையாக மதுரை வீதிகளின் வழியாகச் சென்று மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலை அடைந்தோம். கோயில் மிகப் பெரியது. அது ஊரின் நடுவே அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றிலும் நான்கு சதுரமான வீதிகள் இருக்கின்றன. அவை சித்திரை வீதி, ஆவணி மூல வீதி, மாசி வீதி, வெளி வீதி என்பன. கோயிலின் நான்கு பக்கங்களிலும் நான்கு உயர்ந்த கோபுரங்கள் உள்ளன. கோயிலின் உள்ளே ஒரு பெரிய மண்டபமும் சிறிய குளமும் உள்ளன. மண்டபத்துக்கு ஆயிரக்கால் மண்டபம் என்றும் குளத்துக்குப் பொற்றாமரைக் குளம் என்றும் பெயர். நாங்கள் சுவாமி தரிசனம் செய்த பின்னர் வெளியே வந்தோம்.

7. கோயிலுக்கு எதிரே கீழ்த்திசையில், ஒரு மண்டபம் இருக்கிறது. அதனைப் பார்வை யிட்டோம். அதற்குப் புதுமண்டபம் என்று பெயர். மண்டபத்தைச் சுற்றிலும் தண்ணீர் நிரப்புவதற்காக ஒரு சிறு அகழ் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் வசந்தோற்சவம் நடைபெறும் என்று அறிந்தோம். இம் மண்டபம் திருமலை நாய்க்கரால் கட்டப்பட்டதாம். மண்டபத்தின் நடுவில் உள்ள தூண்களில் திருமலை நாய்க்கர் உருவச்சிலையும் வேறு சில உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. புதுமண்டபத்தைப் பார்வையிட்டு முடிப்பதற்குள் மணி பன்னிரண்டாகி விட்டது. உடனே நாங்கள் எங்கள் இருப்பிடம் சென்று உணவருந்திச் சற்று இளைப்பாறினோம்.

8. பிற்பகல் இரண்டு மணியானவுடன் நாங்கள் ஒரு 'பஸ்' அமர்த்திக்கொண்டு வண்டியூர்த் தெப்பக்குளம்

சென்றோம். அது மதுரைக்குக் கிழக்கே இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. வண்டியூர் என்னும் கிராமத்தின் அருகே இருப்பதால் அதற்கு வண்டியூர்த் தெப்பக்குளம் என்று பெயர். குளம் மிக அழகிய தோற்றமுடையது. அது ஏறக்குறைய ஒரு மைல் சுற்றளவுள்ள ஒரு சதுர மான குளம். குளத்தின் மத்தியில் ஒரு மண்டபம் இருக்கிறது. மண்டபத்தைச் சுற்றிலும் மா, பலா, தென்னை முதலிய மரமடர்ந்த சோலை இருக்கிறது. அதன் நான்கு மூலையிலும் நான்கு சிறிய கோபுரங்கள் உள்ளன. அந்த மைய மண்டபத்தை ஒரு சிறு தீவு என்றே சொல்லலாம். இவ்வளவு அழகுடையதாகவும் பெரிதாகவும் உள்ள குளம் தென்னாட்டில் வேறு இல்லை எனக் கூறுகின்றனர். இதில் ஆண்டுதோறும் தை மாதத்தில் தெப்போற்சவம் நடைபெறும். இதனையும் திருமலை நாய்க்கரே உண்டாக்கினர்.

9. குளத்தைப் பார்வையிட்ட பின் சுமார் 3 மணிக்குப் பஸ்ஸிலேயே மீண்டும் மதுரைக்குச் சென்று, திருமலை நாய்க்கர் மஹாலை அடைந்தோம். அது மதுரை நகரின் தென் கிழக்குத் திசையில் உள்ளது. அதுவே திருமலை நாய்க்கர் வசித்த அரண்மனையாம். அதனைக் கட்டியவரும் திருமலை நாய்க்கரே. அது மரம் இரும்பு இவற்றின் சம்பந்தமில்லாமலே முற்றும் செங்கல்லாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட ஒரு சிறந்த கட்டடம். அதன் வேலைப்பாடு மிகவும் பாராட்டத்தக்கது. மேல் தளம் முழுதும் பல வளைவு மச்சுகளாக அமைந்துள்ளது. இந்த மேற்பகுதியைச் சுமார் 15 அடி சுற்றளவும் 40 அடி உயரமும் உள்ள பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. இப்பொழுதும் இந்த மஹால் மிக்க சிறப்பும் பலமும் உள்ள புதிய கட்டடம்போல் தோன்றுகிறது. திருமலை நாய்க்கர் மஹாலின் காட்சி கண்ணுக்கினிய காட்சியாகும்.

10. மஹாலிலிருந்து நாங்கள் நான்கு மணிக்குப் புறப்பட்டுக் கால்நடையாக ஆவணிமூல வீதி வழியே எங்கள் இருப்பிடமாகிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தை அடைந்தோம். அங்குச் சற்று நேரம் தங்கியிருந்தோம். பின்னர்ச் சிற்றுண்டி அருந்தி அங்கிருந்து புறப்பட்டுக் கால்நடையாகச் சென்று மதுரைப் புகைவண்டி நிலையத்தை அடைந்தோம். அப்பொழுது மணி ஆறு. வண்டியும் தயாராக இருந்தது. எங்கள் தலைவர் எங்கள் கூட்டத்தின் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று கவனித்துக்கொண்டார். நாங்கள் வண்டியில் ஏறினோம். உடனே வண்டி புறப்பட்டது. இரவு 9 மணிக்குத் திருச்சி ஜங்ஷன் வந்து வண்டி மாறி 9½ மணிக்குத் திருச்சிக் கோட்டை வந்து சேர்ந்தோம். வண்டியை விட்டிறங்கியவுடன் தலைவர் எங்கள் எண்ணிக்கையைக் கவனித்துக் கொண்டார். பின்பு நாங்கள் வெளியே வந்து அவரவர்கள் வீடு அடைந்தோம்.

தளம்	விளக்கம்	வேலைப்பாடு
வளைவு	எழுப்புதல்	ஒழுங்குமுறை
சோலை	சிற்றுண்டி	அவ்வப்பொழுது
அகழ்	சுண்ணும்பு	இளைப்பாறுதல்
மஹால்	கால்நடை	ஊற்றுக்கால்
திட்டம்	காலைக்கடன்	சங்க அமைச்சர்
சதுரம்	தோய்த்தல்	செதுக்கப்படல்
சுருக்கம்	இடவசதி	தெப்பக்குளம்
தொலைவு	சம்பந்தம்	எண்ணிக்கை

அரும்பதவுரை

மஹால் - பெரிய கட்டடம். சிற்றுண்டி - (சிறு + உண்டி). சிறிதளவாகிய உணவு. அகழ் - நீர் நிற்பதற்காகச் சுற்றிலும் வெட்டப்பட்டுள்ள பள்ளம்.

பயிற்சி

1. நீ சென்றுள்ள ஏதாவது ஒரு உல்லாசப் பிரயாணத்தைப் பற்றிக் கூறு.

2. கால்நடை, உருவச்சிலை, கோபுரம், சோலை, சங்கம் - இச் சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

இலக்கணம்

1. வேற்றுமை உருபு வெளிப்பட்டு நிற்றலே யன்றித் தொக்கு நிற்றலும் உண்டு. வேற்றுமை உருபு தொக்கு நிற்றல் வேற்றுமைத் தொகை என்று கூறப்படும். (தொக்கு நிற்றல் - மறைந்து நிற்றல்)

மதுரை சென்ற—என்பது மதுரைக்குச் சென்ற என்று விரியும். இதில் கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு மறைந்து நிற்கிறது.

3. வேற்றுமைத் தொகைகளை விரித்துக் கூறு :—

சிற்றுண்டி அருந்திஞேம்.

இது கண்ணன் மாடு.

நாங்கள் பள்ளிக்கூடம் வந்து சேர்ந்தோம்.

கேள்விகள்

1. உல்லாசப் பிரயாணம் என்றால் என்ன ?

2. இப்பாடத்தில் வரும் பிரயாணத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் எந்த ஊரிலிருந்து எந்த ஊருக்குச் சென்றார்கள்?

3. அவர்கள் என்னென்ன காட்சிகளைக் கண்டார்கள் ?

4. உல்லாசப் பிரயாணத்தில் என்னென்ன ஒழுங்கு முறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும் ?

13. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே.

2. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

3. சிங்களம் புட்பகம் சாவகம்—ஆகிய
தீவு பலவினும் சென்றேறி—அங்குத்
தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்—நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு.

4. விண்ணை யிடிக்கும் தலையிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார்—தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு.

5. சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக் கலை
ஞானம் படைத்தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு.

—பாரதியார்

குன்றம்	மாலவன்	புலிக்கொடி
திறன்	வெற்பு	சமர்
பார்த்திவர்	மிசிரம்	யவனரகம்
மீன்கொடி	சால்பு	மண்டி

அரும்பதவுரை

திறன் - வலிமை. வெற்பு - மலை. சமர் - போர். பார்த்திவர் - அரசர்.

பயிற்சி

செந்தமிழ், தீவு, சக்தி, செழிப்பு—இச்சொற்களை வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

இலக்கணம்

தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்கு இலக்கணம் கூறு:—

புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு.
இன்பத் தேன் வந்து பாயுது.
எங்கள் தந்தையர் நாடு.

கேள்விகள்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
2. தமிழர் எங்கெங்கு தம் கொடிகளை நாட்டினர்?
3. தமிழ் மன்னர் எங்கெங்கு படையெடுத்துச் சென்று வெற்றி கொண்டனர்?

14. வாஞெலி



1. நாம் பேசுகின்ரேம். எதற்காக நாம் பேசுகின்ரேம்? நாம் பேசுதல் நமது கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பதற்காகவே. நமது வாயினின்று பேச்சொலி தோன்றிப் பல திசைகளிலும் சென்று அங்கங்குள்ளோர் காதுகளில் விழுகின்றது. அவர்கள் நமது கருத்தை அறிந்து கொள்ளுகின்றனர்.

2. ஒலி காற்றின் மூலமாகச் செல்லுகின்றது. அவ்வாறு செல்லும்போது நீரலைகள் போலச் செல்லும். ஒரு குளத்தில் ஒரு கல்லைப் போட்டால் நீர் அசைகிறது. நமது கையினுலும் தண்ணீரை அசைக்கலாம். தண்ணீர் அசையும்போது அந்த அசைவின் ஆற்றலால் அலை உண்டாகும். அந்த அலையிலிருந்து இன்னெரு அலையும் அதிலிருந்து மற்ருெரு அலையுமாக இங்ஙனம் பல அலைகள் உண்டாகும். இவ்வலைகள் ஒன்றினுல் ஒன்று தள்ளப்பட்டுக் குளத்தின் கரையை மோதுகின்றது.

இவ்வண்ணமே ஒலியும் அலைகளாகச் சென்று, கேட்போர் காதுகளில் விழுகின்றது. தண்ணீர் அலை தோன்றிய இடத்திலிருந்து தூரத்தில் செல்லச் செல்ல அசைவு குறைந்து கடைசியில் இல்லாமலே போய்விடும். அதே போல ஒலி அலையும் தூரச் செல்லச் செல்ல அசைவு குறைந்து கடைசியில் இல்லாமலே போய்விடும். அதனால் தான் சமீபத்தில் உள்ளவர்களுக்கு ஒலி நன்றாகக் கேட்கிறது. சிறிது தூரத்தில் உள்ளவர்களுக்கு ஒலி குறைந்து விடுகின்றது; மிகவும் தொலைவில் உள்ளவர்களுக்கு ஒலியே கேட்பதில்லை.

3. ஆனால், தற்காலத்தில் பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள ஒருவர் பேசுகின்ற ஒலி நமது காதில் விழுவதற்கு ஏதுவான கருவிகள் உண்டாக்கப்பட்டுள் ளன. அவ்வொலி ஆகாசமார்க்கமாய் வருவதால், அதனை 'ஆகாச வாக்கு' அல்லது 'வான் ஒலி' என்று கூறலாம். இதுதான் 'ரேடியோ' என்று கூறப்படுவது.

4. நாம் தொலைவிலுள்ளவர்களுக்குச் செய்தி தெரிவிக்க வேண்டுமானால் தபால் மூலமாகக் கடிதம் அனுப்புகின்றோம். செய்தியை மிக விரைவில் தெரிவிக்க வேண்டுமானால் தந்தி அடிக்கிறோம். தந்தி என்பது கம்பி. ஒரு தந்தி நிலையத்திலிருந்து, கம்பியின் மூலமாக, நமது செய்தியைத் தெரிவிக்கும் ஒலிக்குறிகள் மற்றொரு தந்தி நிலையத்திற்கு அனுப்பப்படும். அத்தகைய தந்திக் கம்பிகள் புகைவண்டிப் பாதைகளில் கம்பங்களின்மேல் நீளமாக அமைக்கப்பட் டிருப்பதை நாம் காணலாம்.

5. தந்தி மூலமாகத் தொலைவில் உள்ளவர்களுக்குச் செய்தி அனுப்பும் உபாயம் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடித்து அமைக்கப்பட்டது. இந்த அமைப்புக்கு ஆங்கிலத்தில் 'டெலிகிராப்' என்று பெயர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இன்னொரு கருவி கண்டு பிடிக்கப்பட்டது. அதன் மூலமாக ஒருவர் பேசும் பேச்சையே கம்பியின் மூலமாகத் தொலைவிலுள்ள மற்றொருவர் கேட்கலாம். இதற்கு 'டெலிபோன்' என்று பெயர். அதன் பிறகுதான் முன் கூறிய 'ரேடியோ' என்னும் கருவி தோன்றியது. அதன் மூலமாக மிகத் தொலைவி லுள்ள ஒருவர் பேசும் ஒலியும் பாடும் பாட்டும் கம்பி யில்லாமலே ஆகாயவழியாக வந்து நமது காதில் விழும்.

6. இந்த வியக்கத்தக்க ஏற்பாட்டுக்கு வேண்டிய கருவிகளை ஆராய்ந்து அமைத்தவர் இத்தாலி தேசத்தில் வாழ்ந்த 'மார்க்கோனி' என்னும் கலைஞர். அவர் புகழ் உலகம் உள்ள அளவும் அழியாது.

7. இனி, இந்த வானொலி சம்பந்தப்பட்ட கருவி களின் அமைப்பைக் கவனிப்போம். பேச்சொலியைக் கிரகித்து மின்சாரஅலை ஆக்குதற்கு ஒரு கருவி உண்டு. அதற்கு 'மைக்ரோபோன்' என்று பெயர். இக்கருவியால் ஒலி அலைகள் மின்சார அலைகளாக மாற்றப்படுகின்றன. இந்த மின்சார அலைகள் ஏறத்தாழ 200 அடி உயரமுள்ள கம்பங்களின் உச்சியிலிருந்து வான் வழியே எல்லாத் திசைகளிலும் செலுத்தப்படுகின்றன. இத்தகைய கம்பங் களின் அமைப்புக்கு 'ஏரியல்' என்று பெயர். இந்தக் கம்பங்களிலிருந்து ஒலி எல்லாப் பக்கங்களிலும் பரப்பப் படுகின்றதல்லவா? இங்ஙனம் ஒலி பரப்புதலுக்குப் 'பிராட்காஸ்டிங்' என்று பெயர்.

8. மின்சாரம் என்பது ஒரு அற்புதமான சக்தி. மின்சார சக்தி மிக விரைந்து செல்லக்கூடியது என்பதை ஒரே நிமிடத்தில் கம்பிகளின் மூலமாக ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகள் ஏற்றப்படுவதைக் கொண்டு நாம் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

9. ஆனால், மேற்கூறிய மின்சார அலைகளோ வானின் வழியே செல்லுவதால் ஒரு செகண்டிற்கு 186000 மைல் வீதம் செல்லுகிறது. இவ்வண்ணம் செல்லும் மின் அலைகளை இழுப்பதற்கும், மீண்டும் ஒலி அலைகளாக மாற்றி நம் காதில் விழும்படி செய்வதற்கும் கருவிகள் உண்டு. மின்சார அலைகளை இழுப்பதற்கு உரிய கருவி ஏறத்தாழ 30 அடி உயரமுள்ள கம்பத்தின் உச்சியில் அமைக்கப்பட்ட கயிறுபோன்ற கம்பியே. இதற்கும் 'ஏரியல்' என்றே பெயர். ஒலி அலைகளாக மாற்றி அவ்வொலியைப் பெருக்கி நமது காதில் விழுமாறு செய்வதற்குரிய கருவிகள் ஒரு பெட்டி போன்ற அமைப்பாக இருக்கும். இதற்கு 'ரிசீவிங் செட்' என்று பெயர். இத்தகைய கருவிகள் உள்ள இடத்தில், வான்வழியாக வரும் மின் அலைகள் ஒலி அலைகளாக மாறி நமது காதில் விழுகின்றன. அப்பொழுதுதான் தொலைவிலுள்ளவர் பேசுகின்ற பேச்சையும் பாடுகின்ற பாட்டையும் நாம் கேட்கின்றோம்.

10. நமது இந்தியாவில் சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, மைசூர், லாகூர், லக்ஷ்மணபுரி, திருச்சி முதலிய பெரிய நகரங்களில் ஆகாய ஒலிபரப்பும் நிலையங்கள் நமது அரசாங்கத்தாரால் அமைக்கப்பட்டுள்ளன. அந்த நிலையங்களில் மைக்ரோபோன் உள்ள இடத்திலிருந்து ஒருவர் பேசும் பேச்சும், பாடும் பாட்டும் பல திசைகளிலும் செல்லுகின்றன. அவ்வாறு செல்லும்போது எந்தெந்த ஊரில் எவ்வெவ்விடங்களில் அவ்வொலிகளை வாங்கும் கருவிகள் அமைக்கப்பட்டுள்ளனவோ அங்கெல்லாம் அப்பேச்சையும் பாட்டையும் கேட்கலாம். மின்சார அலைகள் ஒரு கணத்தில் லட்சக்கணக்கான மைல் தூரம் செல்வதால், எந்த நிமிடத்தில் ஒரு நிலையத்

தினின்று ஒலி கிளம்புகின்றதோ கிட்டத்தட்ட அதே நிமிடத்தில் அவ்வொலியை மற்ற இடங்களிலும் கேட்கலாம்.

11. இந்த வானொலி பரப்பும் கருவியினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் பலவாகும். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளவர்கள் பேசுவதையும் பாடுவதையும் அதே நிமிடத்தில் பல ஊர்களில் உள்ள மக்கள் கேட்டு மகிழ்கின்றனர். பல முக்கியமான செய்திகள் ஒரே காலத்தில் பல ஊர்களுக்கு மிக விரைவில் அறிவிக்கப்படுகின்றன. நடுக் கடலில் செல்லும் கப்பல்களில் உள்ளோரும் மற்ற இடங்களிலிருந்து பேசும் பேச்சையும் மற்றச் செய்திகளையும் அறிந்து கொள்ளலாம். தங்கள் செய்திகளையும் நிலப்பகுதியில் இருப்போருக்கு அறிவிக்கலாம்.

12. பெரிய நகரங்களில் பலர் திரளாக இருந்து கேட்கத்தக்க இடங்களில் வானொலி வாங்கும் கருவிகள் வைக்கப்பட்டுள்ளன. சிலர் தமது சொந்தச் செலவில் தமது இருப்பிடத்திலேயே இக்கருவிகளை வைத்து இன்னிசைப் பாட்டுக்களைக் கேட்டின்புறுகின்றனர். கிராம மக்களும் இந்த இன்பம் அனுபவிக்குமாறு கிராமங்களில் இக்கருவிகளை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ முந்நூறு ரூபாய்ச் செலவில் யாரும் வானொலி வாங்கும் கருவியைத் தங்கள் தங்கள் இடத்தில் அமைத்துக் கொள்ளலாம்.

அலை	பேச்சொலி	ஆகாசவாக்கு
அசை	தந்திநிலையம்	நடுக்கடல்
வானொலி	மின்சாரம்	மார்க்கம்

அரும்பதவுரை

மார்க்கமாக - வழியாக. ஒலி - ஓசை; சத்தம். வான் - ஆகாயம்.

பயிற்சி

பின்வரும் வாக்கியங்களை முடி.

1. மின்சாரம் என்பது ——.
2. அசைவின் ஆற்றலால் ——.
3. அலைகள் தூரச் செல்லச் செல்ல ——.
4. ஒலி ஆகாச மார்க்கமாய் வருவதால் ——.

இலக்கணம்

கீழ்க்காணும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு:

1. **கண்ணனுக்கு** ரேடியோ நிலையத்தில் வேலை.
2. **சுந்தரி** இன்று ரேடியோவில் பாடினுள்.
3. **பலர்** கூட்டமாக நின்று வானெலியைக் கேட்கிருர்கள்.

கேள்விகள்

1. ஒருவர் பேசும் பேச்சொலி மற்றவர்களுக்கு எவ்வாறு கேட்கிறது?

2. 'மைக்ரோபோன்' என்று எதற்குப் பெயர்?

3. ஆகாயத்தில் செல்லும் வானெலியைப் பற்பல இடங்களில் உள்ளவர்கள் கேட்டறிவது எவ்வாறு?

4. மின்சாரம் என்பது என்ன? அது எவ்வாறு வானெலிக்கு உதவி செய்கிறது?

5. வானெலி நிலையங்கள் ஏற்பட்டதால் விளையும் நன்மைகள் யாவை?

15. உதயணன் சிறைப்படல்

1. பல நூற்றுண்டுகளுக்கு முன் நமது பரத கண்டத்தில் வத்தவ நாட்டின் தலைநகரான கௌசாம்பியில் சதானிகன் என்னும் அரசன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் சேதிநாட்டு மன்னனுகிய சேடகன் என்பவளது மகள் மிருகாவதியை மணந்து இல்லறத்தை மேற்கொண்டு இனிது வாழ்ந்தனன்.

2. மிருகாவதி கருப்பமுற்று ஒரு ஆண் மகவை ஈன்ருள். அக்குழந்தை சூரியன் உதயமாகும்பொழுது பிறந்தமையால் அதற்கு உதயணன் என்னும் பெயர் வைக்கப் பெற்றது. உதயணன் பிறைமதிபோல் வளர்ந்து உரிய காலத்தில் கல்வி பயிலத் தொடங்கிப் பலவகைக் கலைகளிலும் தேர்ச்சி பெற்ருன். இன்னும், பிரமசுந்தரர் என்னும் முனிவர்பால் இசைப் பயிற்சி பெற்று யாழ் வாசிக்கவும் கற்றுக்கொண்டான். அம்முனிவர், உதயணன் யாழ்ப் பயிற்சியில் தேர்ச்சியுற்றதை அறிந்து மகிழ்ந்து, யானை முதலிய மிருகங்களையும் வயப்படுத்தக்கூடிய கோடபதி என்னும் பெயருள்ள யாழை அவனுக்களித்தார்.

3. ஒரு நாள் உதயணன் அந்த யாழோடு காடு சென்ருன். அங்கு மிக்க வலிமையும் தெய்வத் தன்மையும் உடைய ஒரு பெரிய யானை பல யானைகளுடன் நிற்பதைக் கண்டு தன் யாழை வாசித்தான். யாழிசையைக் கேட்ட அப்பெரிய யானை இசையில் மயங்கி, உதயணன் அருகே வந்து அன்பு பாராட்டி அடங்கி நின்றது ; அவன் ஏவிய தொழில்களைச் செய்தது. உதயணன் அதன் மேலேறித் தன் இருப்பிடம் அடைந்தனன். தெய்வ யானையும் அவனுக்குரிய பணிகளைச் செய்து வந்தது. சிலநாள் சென்ற பின்னர் அந்த யானை ஒரு நாள் இரவில் உத

யணன் கனவில் தோன்றி, " என் மேல் பாகரை ஏற்றி ளுலும் என்னைத் தோற்கயிற்ருல் கட்டினுலும் நான் உண் பதற்கு முன் நீ உண்டாலும் உன்னை விட்டு நீங்கி விடு வேன் " என்று கூறியது. உதயணன் அந்நாள் முதல் மேற்கூறிய மூன்று தவறுகளும் நேராமல் கவனமாக நடந்து வந்தான்.

4. உதயணன் தந்தையாகிய சதானிகன் உலக வாழ்க்கையில் வெறுப்புற்று அரசாட்சியைத் தன் மைந் தன்பால் ஒப்பித்துவிட்டுத் தவஞ் செய்யக் காடடைந் தான். உதயணனும் வத்தவ நாட்டரசனுகிக் கௌசாம்பி நகரிலிருந்து இனிதாக அரசாட்சி புரிந்து வந்தான்.

5. உதயணனுக்கு யூகி என்னும் பெயருள்ள நண் பன் ஒருவன் உண்டு. அவன் பிரமசுந்தர முனிவரின் புதல்வன்; உதயணனுடன் கல்வி பயின்றவன்; சிறந்த மதியூகி; உதயணனிடம் அளவற்ற அன்புடையவன். உதயணன் அவனைத் தன் உயிர்போலக் கருதி வந் தான்; அதனேடு தன் முதலமைச்சனுகவும் நியமித் திருந்தான். ஆயினும் உதயணன் தன் மாமனுகிய சேதி நாட்டரசன் தவத்தினை மேற்கொண்டானுதலின் அந் நாட்டுக்கு யூகியை அரசனுக்கினன். யூகியும் சேதி நாட்டை வைசாலி என்னும் நகரத்திலிருந்து நன்கு ஆண்டு வந்தான்.

6. ஒரு நாள் உதயணன் பசி மிகுதியால் தெய்வ யானைக்கு உணவளிப்பதற்கு முன் தான் உணவருந்தி விட்டான். அதனை யறிந்த யானை உடனே அவனை விட்டு நீங்கித் தன்னிடம் சென்றது. உதயணன் தான் செய்த பிழையை உணர்ந்து வருந்தினுன். அவன் தன் யாழை வாசித்தும் தெய்வ யானை வராமையால் மிக்க மனக்கவலை யடைந்தனன்; தன் பரிசனங்களைப் பல

இடங்களுக்கும் அனுப்பி அதனைத் தேடச் செய்தான்; தானும் யாழுங் கையுமாக நாள்தோறும் காடுகளுக்குச் சென்று அதனைத் தேடித் திரிவானாயினான்.

7. அவந்தி நாட்டில் உச்சயினி நகரத்தில் **பிரச்சோதனன்** என்னும் மன்னன் அரசு புரிந்து வந்தான். அவன் பேராற்றல் உடையவன்; சிறந்த வீரன். சிற்றரசர் பலரும் தனக்குக் கப்பம் கட்டிவரத் தான் ஒரு சக்கர வர்த்தியாக விளங்கினான். பிரச்சோதனனுக்கு அவன் மனைவி பதுமகாரிகை என்பவளிடம் **வாசவதத்தை** என்னும் பெண் ஒருத்தி உதித்தாள். அவள் சகல நற்குணங்களும் பொருந்திச் சிறந்த அழகுடையவளாக வளர்ந்து வந்தாள்.

8. மன்னர் மன்னனாகிய பிரச்சோதனன் ஒரு நாள் தன் அமைச்சரை நோக்கி, "எல்லா அரசர்களும் கப்பம் செலுத்தி வருகின்றனர்களா?" என விசாரித்தனன். அவர்கள் "வத்தவ நாட்டரசனும் சேதி நாட்டரசனும் வழக்கப்படி கப்பம் செலுத்தவில்லை" என்று தெரிவித்தார்கள். அதனை அறிந்த பிரச்சோதனன் வெகுண்டு "உடனே அவர்களைப் பிடித்து வந்து விசாரிக்க வேண்டும்" என்று கூறினன்.

9. அப்பொழுது பிரச்சோதனனுடைய முதலமைச்சனாகிய **சாலங்காயன்** என்பவன் அவனை நோக்கி, "அரசே, வத்தவ நாட்டரசனாகிய உதயணன் சிறந்த வீரன். அவனுக்கு ஒரு தெய்வ யானையின் துணை உண்டு. பராக்கிரமசாலிகளான மந்திரிகளும் சேனை வீரரும் அவனுக்குத் துணையாக இருக்கின்றனர்கள். ஆதலால், அவனை வெல்லுதல் அரிது. வைசாலி நகரத்தரசனான யூகியும் வெல்லுதற்கு அரியவன். உதயணனும் யூகியும் சிறந்த நண்பராதலால் ஒருவர்க்கொருவர் துணை புரிவர். ஆகை

யால், யூகி உதயணனுக்குத் துணை புரியாதவாறு முதலில் ஒரு படையை யனுப்பி யூகியோடு போர் தொடங்க வேண்டும். பின்பு, தெய்வ யானையைக் காணாது வருந்திக் காட்டில் அலைந்து கொண்டிருக்கும் உதயணனை ஒரு எந்திர யானையின் துணைகொண்டு பிடித்து விடலாம்'' என மொழிந்தான்.

10. பிரச்சோதனனும் இவ்வேற்பாட்டுக்கு உடன்பட்டு யூகியுடன் போர் செய்வதற்கு ஒரு பெரிய சேனையை அனுப்பினான். பின்னர், சிறந்த சிற்பிகளைக் கொண்டு உயிருள்ள யானைபோல ஒரு பெரிய எந்திர யானை செய்



உதயணன் சிறைப்படல்

வித்து, அதன் வயிற்றில் ஆயுதபாணிகளாகத் தொண்ணூற்றாறு வீரர்களை இருக்கும்படி செய்தான்; இன்னும், அதன் கால்களிலும் கையிலும் பல போர்க்கருவிகளை

வைத்து அதனை அனுப்பினன். சாலங்காயனும் பல படை வீரர்களும் அதன் பின்னே சென்றனர்.

11. முன் வைசாலி நகரம் சென்ற சேனைகளுக்கும் யூகிக்கும் பெரும்போர் மூண்டுவிட்டது. உதயணன் தெய்வ யானையைத் தேடிக்கொண்டிருக்கும் காட்டின் நடுவில் எந்திர யானை நீலமலை போல் சென்று உலாவியது. அதனை அறிந்த உதயணன் தன் யாழுடன் அவ்விடத்தை அடைந்து யானையைக் கண்டான். கண்டவன் அதனைத் தனக்குப் பணி செய்த தெய்வ யானையாகவே கருதி மிக மகிழ்ந்து அதனருகிற் சென்று இனிமையாக யாழை வாசித்தான். அப்பொழுது எந்திர யானை யாழிசையில் விருப்பங்கொண்டது போல் அவன் எதிரில் நின்றது. உதயணனும் மிக்க மகிழ்ச்சியுடையவனுய்த் தன்னை மறந்து நின்றுன்.

12. உடனே, யானையின் உள்ளே இருந்த வீரர்கள் திடீரென வெளியே வந்து போர்செய்யத் தொடங்கினர்கள். அதைக் கண்ட உதயணன் 'இது வஞ்சகர் செயலாயிற்றே!' எனப் புன்முறுவல்கொண்டு, அவர்கள்முன் கம்பீரமாக நின்றுன். வீரர்கள் அவனைத் தாக்கத் தொடங்கவே அவன் தன் வாளால் அத்தனை பேரையும் கொன்றெழித்தான். பின்பு, மறைந்திருந்த சேனைகள் உதயணனைத் தாக்கின. அவன் அவைகளைத் தன் வாளால் முறை முறையாகக் கொன்று வரும்பொழுது ஒரு யானையின் கொம்பிற்பட்டு வாள் ஒடிந்தது. ஆதலின் ஆயுதமின்றி உதயணன் நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது அவனைப் பிடித்தற்குச் சாலங்காயன் முதலியோர் சூழ்ந்துகொண்டார்கள். உதயணன் நிகழ்ந்தவற்றை ஓர் ஓலையில் எழுதி அதனை யூகியினிடம் கொடுக்கு

மாறு தம் நண்பன் ஒருவனிடம் அனுப்பிவிட்டுத் தான் பகைவர் வசமாயினன்.

13. சாலங்காயன் உதயணனைத் தன் மேலாடையால் கட்டிச் சிறைப்படுத்தி ஒரு தேர்மேல் ஏற்றிக்கொண்டு உச்சயினி நகர் சென்று அரசனுக்குச் செய்தி அறிவித்தான். பிரச்சோதனனும் உதயணனுக்கு விலங்கிட்டு அவனைச் சிறைச்சாலையில் அடைக்கச் செய்தான்.

14. ஆயினும், யூகி செய்த பற்பல அரிய சூழ்ச்சிகளினால், பிரச்சோதனன் தான் செய்த வஞ்சகச் செயலுக்கு நாணமுற்று உதயணனைச் சிறையினின்று விடுவித்துச் சிறப்புச் செய்தான்; மேலும், பிரச்சோதனன் மகள் வாசவதத்தையை உதயணன் மணம் புரிந்து கொண்டான்.

பணி	நீலமலை	மயங்குதல்
யாழ்	நேராமல்	வயப்படுதல்
பாகன்	புன்முறுவல்	வஞ்சகச் செயல்
மதியூகி	மேலாடை	பராக்கிரமசாலி
கப்பம்	நாணம்	எந்திரயானை
ஏறுதல்	பரிசனங்கள்	ஆயுதபாணி

அரும்பதவுரை

புன்முறுவல் - சிறுநகை, வாய்திறவாமல் சிரித்தல். கப்பம் - சிற்றரசர்கள் பெரிய அரசர்களுக்குச் செலுத்தும் பொருள். மதியூகி - அறிவிற் சிறந்தவன். ஏவுதல் - கட்டளையிடுதல். பராக்கிரமம் - வலிமை. பாணி - கை. நாணம் - வெட்கம். பணி - வேலை.

பயிற்சி

1. உயிர் போல் கருதி, பிறைமதி போல், ஆயுதபாணி, வயப்படுத்தல், செங்கோல்—இவைகளைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் கூறு.

2. உயிர்த்தோழர்கள் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைப்பற்றி மூன்று வாக்கியங்கள் கூறு.

3. உயிர்த்தோழன், வஞ்சகத்தால், வயப்படுத்துவான், மயங்குவர், நாணம்—இச்சொற்களைப் பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமாகச் சேர்த்துப்படி :

யூகி உதயணனின் —.
உதயணன் இசையினால் மிருகங்களையும் —.
ஜால வித்தையில் மக்கள் —.
பிரச்சோதனின் — உதயணன் சிறைப்பட்டான்.
தம் குற்றத்தை உணர்வோர் — அடைவார்கள்.

இலக்கணம்

1. உதயணன் சிறந்த வீரன். அவனை வெல்லுதல் இயலாது. இவ்வாக்கியங்களின் பயனிலைகளைக் கவனி. முதல் வாக்கியத்தில் வீரன் என்பது பயனிலை. அதாவது வீரனாவான் என்பது பொருள். இரண்டாவது வாக்கியத்தில் இயலாது என்னும் வினைமுற்றே பயனிலையாக வந்துள்ளது.

2. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பயனிலைகளைக் கூறு:

யூகியும் வெல்லுதற்கு அரியன்.
யூகியும் உதயணனும் சிறந்த நண்பர்கள்.
யூகியும் உதயணனும் ஒருவர்க்கொருவர் துணைபுரிவர்.

கேள்விகள்

1. உதயணன் என்ற பெயரின் காரணம் யாது?

2. பிரமசுந்தரர் யார்?

3. உதயணன் தெய்வயானையை எவ்வாறு பெற்றான்! எவ்வாறு இழந்தான்?

4. உதயணன் யாரால் சிறை செய்யப்பட்டான்? எவ்வாறு?

5. பிரச்சோதனன் உதயணனுக்குக் கடைசியில் சிறப்புகள் செய்யக் காரணம் என்ன?

16. பரதனும் குகனும்

[பரதன் தனக்குக் கிடைத்த இராச்சியத்தை வெறுத்துத் தன் தமையனாகிய இராமனைக் காட்டினின்று அயோத்திக் கழைத்துச் சென்று முடிசூட்ட எண்ணிப் பரிவாரங்களுடனும் தாய்மார் மூவருடனும் கங்கையின் வடகரையை யடைந்து, கங்கையின் இருகரைக்கு முரியவனும் இராமனது ஆருயிர் நண்பனும் வேட அரசனுமாகிய குகன் தென்கரையில் நிற்பதைச் சுமந்திரரால் அறிந்து, அவனைக் காணும் விருப்பத்தோடு நிற்கின்றான். குகன் பரதன் வந்திருத்தலை அறிந்து, அவன் காட்டிலும் இராமனை இருக்க ஒட்டாது அவனோடு போர்புரிய வருகின்றான் எனத் தவறாகக் கருதி, மிக்க கோபங்கொண்டு அவனோடு போர் புரியப் படைதிரட்டத் தொடங்குகின்றான். தொடங்கியவன் பரதனையும் சத்துருக்கனனையும் உற்றுநோக்கி அவர்கள் இராம லட்சுமணர் போலத் தோன்றுதலையும், பரதனது தவக்கோலத் தையும் கண்டு, இராமனது தம்பிமார் அவனுக்குத் தீங்கிழைக்க மாட்டார் என எண்ணிச் சற்று அமைதியுற்றுப் பரதனை நேரிற் கேட்டுச் செய்தி தெரிந்துகொள்ளக் கருதி, ஒரு தோணியில் ஏறிக் கங்கையின் வடகரை அடைந்து பரதனதுண்மை நிலை அறிந்து வணங்க, அவனும் இவனை வணங்குகின்றான்.]

குகன் : பரத, நீ நாட்டினின்றும் காட்டுக்கு வந்தது எதன் பொருட்டு ?

பரதன் : வேடர் தலைவ, எனது தந்தை தசரதர் முன்னோர் மேற்கொண்ட முறையினின்றும் வழுவித் தமது மூத்த குமாரனாகிய இராமனுக்கு முடிசூட்டாது இராச்சியத்தை எனக்குக் கொடுத்துள்ளார். அந்த வழு நீங்குமாறு இராமரை 'அயோத்திக்கு அழைத்துச் செல்லவே யான் இங்கு வந்தேன்.

குகன் : (வியப்புற்றுப் பெருமூச்செறிந்து பரதனை வணங்கி) அரச குமார, உனது தாயுரையைக் கேட்டுத் தந்தை

அளித்த அரசாட்சியை ஏற்றுக்கொள்வது தகாத செயல் என எண்ணி இராமனை அழைத்துச் செல்ல இங்கு வந்திருக்கின்றாயே! என்ன அருமை! என்ன அன்பு! இதனை நான் எண்ணிப் பார்க்கும்போது ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் உனக்கு ஈடாகமாட்டார் என்று தோன்றுகின்றது. இந்த அரிய செயலால் நீ உனது முன்னோர் புகழ்களையெல்லாம் உன்னுடைய புகழாக ஆக்கிக்கொண்டாய்.

பரதன் : வேடர் அரசே, இது நிற்க; நமது தமையன் இந்தக் கங்கைக் கரைக்கு வந்தபொழுது எவ்விடத்தில் தங்கியிருந்தார்?

குகன் : அரசே, இதோ இந்த இடத்திற்றான். யானே அவ்விடத்தைக் காட்டுகின்றேன்; புறப்படுக.

[குகன் பரதனை அழைத்துச்சென்று இராமர் தங்கியிருந்த இடத்தையும், அவர் படுத்திருந்த புற்படுக்கையையும் காட்ட, அவன் கண்டு பதைபதைத்துப் பூமியில் விழுந்து புலம்பி இதற்கெல்லாம் தானே காரணம் எனத் தன்னை வெறுத்துக்கொண்டு பின்னும் குகனை நோக்கிக் கேட்கின்றான்.]

பரதன் : துணைவா, பெரியோனாகிய இராமன் துயின்ற இடம் இதுவாயின், அவனைத் தொடர்ந்து வந்திருக்கும் இலக்குமணன் எவ்விடத்தில் இராப்பொழுதைக் கழித்தான்?

குகன் : இளவரசே, இராமரும் சீதையும் புற்படுக்கையில் படுத்து நித்திரை செய்ய, இலக்குமணன் அந்நிலையைக் கருதி மிகவும் வருந்திக் கண்ணீர் சொரிந்து, வனத்திலுள்ள பிராணிகளால் என்ன தீங்குண்டாகுமோ என அஞ்சி, விடியுமளவும் கண்கொட்டாது வில்லுங் கையுமாக நின்று அவர்களைக் காத்துக்கொண்டிருந்தான்.

பரதன்: இராமன் தம்பிமார்களில் யான் முடிவிலாத துன்பத்துக்குக் காரணமானேன். இலக்குமணன் அத்

துன்பத்தைப் போக்குவதற்காகவே பிறந்திருக்கிறான். அன்புக்கு எல்லை உண்டோ? நான் இராமனுக்குத் தம்பி என்று சொல்லிக்கொள்வது அழகாக இருக்கிறது! (என்று தன்னைத்தானே இகழ்ந்துகொண்டு குகனை நோக்கி) அன்பனே, என்னைக் கங்கையின் இக்கரையிலிருந்து அக்கரை கொண்டு போய்விட்டால் நீ என் துன்பத்தைப் போக்கி இராமனிடம் சேர்த்தவன் ஆவாய்.

குகன் : அரசே, அவ்வாறே செய்கிறேன்.

பரதன் : நல்லது.

[நாவாய்கள் வந்து பரிசனங்களையும் சேனைகளையும் அக்கரை கொண்டுபோய்ச் சேர்த்தன. கடைசியாக ஒரு தோணியில் பரத சத்துருக்கனரும் சுமந்திரரும் தாய்மார் மூவரும் ஏறிக்கொள்ளக் குகன் அதைச் செலுத்திக்கொண்டு அக்கரை செல்லும்பொழுது]

குகன் : (கோசலையைச் சுட்டி) அரசே, இவர் யார்?

பரதன் : பெரும, இவர் தசரதர் முதல் மனைவி; இராமபிரானைப் பெற்றதால் அடையவேண்டிய பெருஞ் செல்வத்தை யான் பிறத்தலால் இழந்த பெரியார்.

[உடனே, குகன் கோசலையின் காலில் விழுந்து அழுகின்றான்; கோசலை இவன் யார்? என்று பரதனை வினவப் பரதன், "இவன் இராமபிரான் தோழன்; குகன் என்னும் பெயருடையவன்" என்று சொல்லக் கோசலை அவர்களையெல்லாம் தேற்றி வாழ்த்துகின்றாள்.]

குகன் : (சுமத்திரையைச் சுட்டி) இவர் யார்?

பரதன் : இவர் தசரதர் இளைய மனைவி; இராமரைப் பின்தொடர்ந்து காட்டுக்கு வந்திருக்கும் இலக்குமணனைப் பெற்றவர்.

குகன் : (சுமத்திரையை வணங்கிவிட்டுக் கைகேயியைச் சுட்டி) அரசகுமார, இவர் யார்?

பரதன் : இவள் இப்பொழுது நிகழ்ந்துள்ள துன்பத்துக்கெல்லாம் காரணமானவள்; பழிகாரி; நானும்

உலகத்திலுள்ள மற்ற அனைவரும் மிக்க வருத்தமடையு மாறு இராமரைக் காட்டுக்கனுப்பி அதனால் மகிழ்ச்சியுற் றிருப்பவள். இவள் முகத்தைப் பார்த்தே இவள் இன்னா ளென்று தெரிந்துகொள்ளலாமே! இவள்தான் என்னைப் பெற்றவள்.

[குகன் மற்ற இருவரையும் வணங்கியது போலவே கைகேயியையும் தாய் எனக் கருதி வணங்குகிறான். தோணியும் தென்கரை சேர்ந்தது. அனைவரும் இராமர் இருக்குமிடம் செல்கின்றனர்.]

இராச்சியம்	பெருமூச்சு	தகாத
படைதிரட்டல்	ஆருயிர் நண்பன்	துணைவன்
தவக்கோலம்	பதைபதைத்த	தோணி
தீங்கிழைத்தல்	பழிகாரி	நித்திரை
உண்மைநிலை	ஏற்றுக்கொள்ளல்	இன்னார்
கண்ணீர் சொரிதல்	முடிசூட்ட	காத்தல்

அரும்பதவுரை

ஆருயிர் - அருமையான உயிர். பழிகாரி - குற்றத்திற்குரிய வள். துணைவன் - நண்பன். நித்திரை - தூக்கம். ஏற்றுக் கொள்ளல் - ஒப்புக்கொள்ளல். தீங்கிழைத்தல் - தீங்குசெய்தல்.

பயிற்சி

1. இலக்குமணன் வில்லுங்கையுமாக நின்றான். பரதன் தவக்கோலம் பூண்டிருந்தான். இம்மாதிரியே புத்தகமும் கையு மாக, துப்பாக்கியும் கையுமாக, போர்க்கோலம், துறவுக் கோலம் — என்பவைகளை அமைத்து வாக்கியங்கள் கூறு.

2. கோடுகள் உள்ள இடங்களில் உண்டு அல்லது இல்லை என்று சேர்த்துப் படி :

அன்பிற்கு எல்லை ——. ஆசைக்கு எல்லை ——. கல்விக்கு எல்லை ——. பொருளுக்கு எல்லை ——. ஊருக்கு எல்லை ——.

இலக்கணம்

1. வினைச்சொற்களில் சில செயப்படுபொருளை ஏற்றுவரும் என்றும் சில செயப்படுபொருளை ஏற்கமாட்டா என்றும் அறிவீர்கள். செயப்படுபொருள் உள்ள வினைச்சொற்களுக்குச் **செயப்படுபொருள் குன்றா வினை** என்று பெயர். செயப்படுபொருள் இல்லாத வினைச்சொற்களுக்குச் **செயப்படுபொருள் குன்றிய வினை** என்று பெயர்.

2. ஓடு, படி, சென்றான், நிற்கிறது, கொடுக்கும்—இவைகளில் செயப்படுபொருள் குன்றா வினைகள் எவை? செயப்படுபொருள் குன்றிய வினைகள் எவை? உதாரணத்தால் விளக்கு.

கேள்விகள்

1. பரதன் ஏன் இராமரைத் தேடிக்கொண்டு காடு சென்றான்?

2. குகன் பரதனை எவ்வாறு புகழ்ந்தான்?

3. பரதன் குகனிடம் இராமரைப்பற்றி என்னென்ன விசாரித்தான்?

17. பருத்தி

1. மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்கள் நான்கு. அவைகள் காற்று, நீர், உணவு, உடை என்பன. காற்றும் நீரும் இயற்கையாகவே கிடைப்பவை. உணவும் உடையும் மக்களால் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றவை. உணவுக்குப் பெரும்பாலும் தானியங்களும் காய்கனி கிழங்குகளும் உதவுகின்றன. உடைக்குப் பெரும்பாலும் பஞ்சு உதவுகின்றது. பஞ்சு என்பது பருத்திச் செடியிலிருந்து கிடைக்கும் வெண்மை நிறமுள்ள மென்மையான நார் போன்ற பொருள்.

2. பருத்தி என்பது தாவரவகையுள் செடி இனத்தைச் சேர்ந்தது. பருத்திச் செடி ஏறத்தாழ ஆறடி உயரம் வளரக்கூடியது. பருத்தி புன்செய் நிலமாகிய கரிசல் நிலத்தில் பயிராகும். கரிசல் நிலம் என்பது கரு நிறமுள்ள களிப்புமண் உள்ள தரை. பருத்தி பயிராவதற்குக் கரிசல் நிலமே ஏற்றது. ஏனென்றால், கரிசல் நிலத்தில் பெய்யும் மழைநீர் நிலத்தில் சுவறி விடுவதால் நீண்டநாள் வரை நிலத்தின் உட்புறம் ஈரமாகவே இருக்கும்; அந்த ஈரத்தைக் கொண்டே பருத்திச் செடி வளரும். அதனோடு கரிசல் நிலத்தில் பருத்தியின் வளர்ச்சிக்கு வேண்டிய சத்து நிரம்ப இருக்கிறது.

3. பருத்தி பயிரிடுவோர் நிலத்தை இரண்டு மூன்று முறை உழுது புழுதியாக்குவார்கள். பின்பு, மழை பெய்தவுடன் ஒரு முறை உழுது உழுசாலில் விதைகளை வரிசையாகப் போட்டுக்கொண்டே போவார்கள். விதைப்பதற்கு முன் பருத்தி விதைகள் ஊறவைக்கப்பட்டிருக்கும். விதைகள் மழையின் ஈரத்தைக்கொண்டே முளைத்து

விடும். விதை முளைத்துச் செடியாகி வளரும்போது களைகள் முளைத்திருப்பின் அவைகளைப் பிடுங்கி எறிந்து விடுவார்கள். பருத்தி புன்செய் நிலத்தில் வளரும் பயிராதலின், அதற்கு வாய்க்கால் வழியே நீர் பாய்ச்சுதல் இயலாது. தண்ணீரும் நன்செய்ப் பயிர்களுக்கு வேண்டிய அளவு புன்செய்ப் பயிர்களுக்கு வேண்டுவதில்லை. பருத்தி வளர்வதற்குப் பருவகாலத்தில் பெய்யும் மழை நீரே போதுமானது.

4. பருத்திச்செடி விதைபோட்ட ஆருவது மாதத்தில் பூக்கத் தொடங்கும். பருத்திப்பூ மஞ்சள் நிறமுடையதாகவும் பெரிய இதழ்கள் உள்ளதாகவும் இருக்கும். பூவினின்று பிஞ்சு தோன்றியவுடன் பூ வாடி உதிர்ந்து விடும். பிஞ்சு காயாகும். பருத்திக்காய் ஒரு பெரிய கொட்டைப்பாக்குப்போல இருக்கும். காயினுள் மூன்று அறைகள் உண்டு. அந்த அறைகளில் விதையும் பஞ்சும் நிறைந்து இருக்கும். பருத்திக்காய் முற்றினுல் பழமாகாது; உலர்ந்து நெற்ருகி வெடிக்கும். பருத்திக்காய் வெடித்தவுடன் உள்ளிருக்கும் வெண்மை நிறமுள்ள பஞ்சு பிதுங்கி வெளிப்படும். இங்ஙனம் ஒவ்வொரு செடியிலும் பல காய்கள் முற்றி வெடிக்குமாதலால், இந்தப் பருவத்தில் பருத்திக் காடு வெள்ளை வெளேரென்ற தோற்றத்துடன் பார்வைக்கு மிக அழகாக இருக்கும்.

5. காய்முற்றி வெடித்தவுடன் பஞ்சைச் சேகரித்து விடவேண்டும். இல்லாவிடில் பஞ்சு சிதறிக் கீழே விழுந்து வீணுகிவிடும். ஆதலால், காய்வெடிக்கும் பருவத்தில் பெண்டிரும் இளைஞருமாகப் பலர் கூடைகளுடன் பருத்திக் கொல்லைக்குச் சென்று, பஞ்சை எடுத்துக் கூடைகளில் நிரப்பிக் கொண்டுவந்து ஓரிடத்தில் சேர்ப்பார்கள். இவ்வாறு பஞ்சு சேகரித்தல் ஒரு பருவத்தில் இரண்டு

மூன்று முறை நடைபெறும். இவற்றுள் முதல் முறையில் எடுக்கப்படும் பஞ்சே முதல்தரமானதாக இருக்கும்.

6. பஞ்சைச் சேகரித்த பின்பு அதிலுள்ள கொட்டை வேருகவும் பஞ்சு வேருகவும் பிரித்துப் பஞ்சைப் பெரிய மூட்டைகளாகக் கட்டி வியாபாரத் தலத்துக்கனுப்புவார்கள். கொட்டை நீக்கப்படாத பஞ்சையும் மூட்டைகளாகக் கட்டி வெளியூர்களுக் கனுப்புவதுண்டு. பஞ்சை நூலாக நூற்று ஆடையாக நெய்கிருர்கள்; கொட்டை ஆடுமாடுகளுக்குத் தீனியாக உபயோகப்படுகின்றது. பருத்திக்கொட்டையிலிருந்து ஒரு வகை எண்ணெய் எடுப்பதும் உண்டு.

7. காயினின்று வெளியான பஞ்சு எவ்வாறு ஆடையாக மாறுகிறதென்று பார்ப்போம். முதல்முதலில்



பருத்திச் செடியும் பருத்திக்காயும்



திரிமணை

பஞ்சினின்று கொட்டையைப் பிரித்தெடுக்க வேண்டும். இதற்கு உதவியாக ஒரு சிறு மர எந்திரம் உண்டு.

அதற்கு ‘ திரிமணை ’ என்று பெயர். பஞ்சை அதிலிட்டுச் சுழற்றினால் கொட்டை வேறாகவும் பஞ்சு வேறாகவும் பிரிந்துவிடும். பஞ்சை ஒரு வகை வில்லால் கொட்டி அதிலுள்ள துகள்களைப் போக்கிச் சிக்கறுப்பார்கள். அதன் பின்பு பஞ்சை நூற்பதற்கேற்ற நிலையில் திரிகளாகத் திரட்டுவார்கள். இவ்வாறு திரட்டப்பட்ட திரிக்குக் ‘கொட்டை’ என்று பெயர். ‘கொட்டை நூற்றுச் சம்பாதித்தல்’ என்னும் பழமொழியில் கொட்டை யென்பது மேற்கூறிய திரியையே குறிக்கிறது. தற்காலத்தில் பஞ்சைத் திரிகளாகத் திரட்டுதலைப் ‘பட்டை போடுதல்’ எனக் கூறுகின்றனர். கொட்டையை இராட்டினத்தின் உதவி கொண்டு நூலாக நூற்பார்கள். நூல், தறியின் உதவியால் ஆடையாக நெய்யப்படும்.

பஞ்சை வில்லால் அடித்தல்

8. மேலே கூறிய நூற்றல், நெய்தல் முதலிய செயல்கள் முற்காலத்தில் சிறு கருவிகளின் உதவியால் கையினாலேயே செய்யப்பட்டன. ஆதலால், நூல் நூற்றலும் ஆடை நெய்தலும் சிறந்த கைத்தொழில்களாக விளங்கின. ஆனால், தற்காலத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாகப் பெரிய பெரிய ஆலைகள் நிறுவப் பெற்று அவற்றில் உள்ள எந்திரங்களின் மூலமாக முன்னே கூறிய ‘பஞ்சிலிருந்து கொட்டையைப் பிரித்தல்’ முதலிய

எல்லாத் தொழில்களும் நடைபெறுகின்றன. ஒரு நாள் முழுதும் பல நூறு பேர் செய்யக்கூடிய வேலையை ஒரு மணி நேரத்தில் சிலர் உதவியால் எந்திரம் செய்து முடிக்கிறது. இதனுல், மக்களுக்குப் போதுமான அளவிலும், சுருங்கிய காலத்திலும், மிக்க பிரயாசை இன்றியும் துணிகள் நெய்யப்படுகின்றன. அவைகள் மலிவாகவும் கிடைக்கின்றன.



கைத்தறி நெசவு

9. பழங்காலத்தில் நமது தமிழ்நாட்டில் கைத்தறியினுலேயே வேலைப்பாடமைந்த உயர்ந்த ஆடைகள் நெய்யப்பட்டு வந்தன. ஆயினும், தற்காலத்தில் புதுமையான எந்திர நெசவு மேலோங்கி நிற்க, கைத்தறி நெசவு குன்றிவிட்டது. இப்பொழுது கைத்தறிகளில் நெய்யப்படும் ஆடைக்கு உபயோகிக்கும் நூலும் எந்திரத்தால் நூற்கப்பட்டதே.

10. நார், உரோமம், பட்டு இவற்றால் நெய்யப்பட்ட ஆடைகளும் மக்களின் உடையாக உதவுகின்றன. ஆயினும் இத்தகைய ஆடைகளை நாம் எப்போதும் உபயோகிக்க இயலாது விலையும் மிகுதியாகும். பருத்தியாடையே நாம் எந்நாளும் உபயோகிக்கக் கூடியது; விலையும் குறைவாக உள்ளது.

11. பருத்தி நமது சென்னை இராச்சியத்தில் கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி முதலிய மாவட்டங்களில் மிகுதியாகப் பயிரிடப்படுகிறது.

பிஞ்சு	கரிசல் நிலம்	பிதுங்குதல்
சிக்கு	களிப்பு மண்	கைத்தொழில்
திரி	சுவறி விடுதல்	நிறுவப்படல்
தறி	தயாரித்தல்	திரிமணை
துகள்	இராட்டினம்	சேகரித்தல்
இதழ்	பட்டைபோடுதல்	வெள்ளை வெளேர்
உரோமம்	முளை கிளம்பல்	விஞ்ஞானம்
புழுதி	உழுசால்	

அரும்பதவுரை

துகள் - தூசி. நிறுவுதல் - ஏற்படுத்தல். சேகரித்தல் - சேர்த்தல். விஞ்ஞானம் - கலையறிவு.

பயிற்சி

1. பஞ்சு இயற்கைப்பொருள். ஆடை செயற்கைப் பொருள். இம்மாதிரி இயற்கைப் பொருளுக்கும் செயற்கைப் பொருளுக்கும் வேறு மூன்று உதாரணங்கள் கூறு.

2. தொழில்களில் எந்திர வளர்ச்சியினால் விளையக்கூடிய நன்மைகளையும் தீமைகளையும் பற்றி யூகித்துச் சொல்லு.

இலக்கணம்

1. உணவும் உடையும் மக்கள் தயாரிக்கிறார்கள். உணவும் உடையும் மக்களால் தயாரிக்கப்படுகின்றன. இவ்விரண்டு வாக்கியங்களிலுள்ள வினைகளைக் கவனி. தயாரிக்கிறார்கள் என்பது செய்வினை. தயாரிக்கப்படுகின்றன என்பது செயப்பாட்டு வினை.

2. பின்வரும் வாக்கியங்களிலுள்ள செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாகவும் செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாகவும் மாற்றி அமைக்க :

பருத்திக்கொட்டைகளை மாடுகளுக்கு உணவாக வைப்பார்கள்.
பஞ்சை நூலாக நூற்கிறார்கள்.
நூல் ஆடையாக நெய்யப்படுகிறது.
இந்தக் குளம் யாரால் வெட்டப்பட்டது?
நீதிபதி குற்றவாளியைத் தண்டித்தார்.

கேள்விகள்

1. பருத்தி பயிர் செய்யும் முறையை விளக்கிக் கூறு.
2. பஞ்சு சேகரிக்கும் முறையைக் கூறு.
3. கரிசல் நிலத்தின் தன்மை என்ன ?
4. எதற்குத் திரிமணை என்று பெயர் ?
5. சென்னை இராச்சியத்தில் எந்தெந்த மாவட்டங்களில் பருத்தி மிகுதியாகப் பயிராகிறது ?

18. நடுநிலைமை குன்றாமை

நமது தேசத்திற்கு வடமேற்கில் வெகு தூரத்தில் துருக்கி என்ற தேசமிருக்கிறது. அதில் திமிர்ணு என்னும் பெயருள்ள ஒரு சிறிய பட்டணமிருந்தது. அங்கு முகம்மதுகான் என்ற பெயருள்ள ஒரு வர்த்தகன் இருந்தான். அவன் மளிகைக் கடையொன்று வைத்து ஜீவனம் செய்து வந்தான்.

முகம்மதுகான் பேராசைக்காரன். மிக விரைவில் அதிகப் பொருள் சம்பாதிக்க வேண்டுமென்பது அவனுடைய ஆசை. ஆகையால், அவன் தன் வர்த்தகத்தைத் தவருன முறையில் நடத்திவந்தான். அவனுடைய கடையிலிருந்த படி, தராசு, படிக்கல் முதலியவை சரியான அளவைகளல்ல. இவ்விதமாய் அவன் கள்ள அளவைகளை வைத்துக்கொண்டு, மக்களை ஏமாற்றி ஏராளமான பணம் சம்பாதித்தான்.

அவனுக்கு ஆமெட் என்னும் பெயருள்ள ஒரு குமாரன் இருந்தான். ஆமெட் சிறு வயது முதல் நற்குணமுடையவனுக விளங்கினுன். அவன் பொய் சொல்லான்; பிறர் பொருளை விரும்பான்; நீதி நெறியினின்றும் தவருன். அவன் எல்லா விஷயங்களிலும் நேர்மையாகவே நடந்து வந்தான். அனைவரும் அவனை நீதிமான் என்று புகழ்ந்து கொண்டாடினுர்கள்.

ஆமெட்டின் குணங்களை யறிந்த சுல்தான் அவனை வரவழைத்துத் தன்னிடத்தில் ஓர் உத்தியோகத்தில் அமர்த்திக் கொண்டான். கடை வீதிக்குச் சென்று வியாபாரிகள் வைத்திருக்கும் படிகள், தராசுகள் முதலியவை சரியாக இருக்கின்றனவா என்று சோதனை செய்வது அவன் வேலை. அவன் மூன்று சேவகர்களை அழைத்துக்

கொண்டு, குதிரையின் மேலேறிச் சென்று, தினந்தோறும் அப்பட்டணத்திலுள்ள கடைகளைச் சோதனை செய்வது வழக்கம்.

ஒரு நாள் அவன் தன் தகப்பனுருடைய கடையைச் சோதனை செய்வதற்காக அங்குச் சென்றுன். தூரத்தில் தன் மகன் வருவதைக் கண்ட தகப்பன், சிறிதும் அஞ் சாது, தன் மகன் தன்னுடைய திருட்டுத்தனத்தை வெளிப்படுத்த மாட்டானென்று எண்ணிக் கடையின் வாயிலில் தைரியமாக நின்று கொண்டிருந்தான்.

ஆமெட் கடையின் வாயிலுக்குச் சென்று, குதிரையை விட்டு இறங்கிச் சோதனைசெய்யத் தொடங்கினுன். முகம்மதுகான் தன் மகனே சோதனைசெய்யும் உத்தி யோகஸ்தன் என்று எண்ணித் தான் வைத்திருந்த அளவைகளை மறைக்கவில்லை.

ஆமெட் அவைகளைச் சோதனைசெய்து, அவை கள்ள அளவைகளென்று தெரிந்துகொண்டான். உடனே அவன் தன் தகப்பனுருக்கு விலங்கிட்டு நியாயாதிபதியிடம் கொண்டு போகும்படிச் சேவகர்களுக்குக் கட்டளை யிட்டான். அவ்வண்ணமே சேவகர்கள் அவனை நீதிபதி யிடம் அழைத்துச் சென்றுர்கள்.

மறுநாள் விசாரணை நடந்தது. ஆமெட் நியாயஸ்தலத் துக்குச் சென்றுன். அங்குத் தன் தகப்பனுரைக் கண்டவுடன் அவன் அவரைப் பணிந்தெழுந்து, "தந்தையே! நான் நமது சுல்தானுக்கும், தேசத்துக்கும் எனக்கும், கடவுளுக்கும் சம்மதமாகுமாறு என் கடமை யைச் செய்தேன். செல்வரென்றும், தாய் தந்தையரென் றும், மற்ற உறவினரென்றும் கருதி நியாய முறைதவறி நடத்தல் ஏற்றதன்று. ஆகையால் நான் என் கடமையை நடுநிலை குன்றுது நிறைவேற்றினேன். என்னை மன்னிக்க

வேண்டும்,'' என்று கேட்டுக் கொண்டான். தகப்பன் தான் செய்த இழிவான செயலை நினைத்து நினைத்துக் கண்ணீர் விட்டு அழுதான்.

நீதிபதி அவனுக்கு இருபது மோகர் அபராதம் விதித்தார். அவன் அபராதத் தொகையைச் செலுத்தி விட்டான்.

மறுநாள் சுல்தான் அதை அறிந்து, ஆமெட்டி னுடைய நேர்மையை மெச்சி, அவனுக்கு நியாயாதிபதி உத்தியோகம் கொடுத்தார். முகம்மதுகானும் அதுமுதல் தன் வர்த்தகத்தை நியாயமாய் நடத்திவந்தான். தன் குமாரன் உயர்ந்த உத்தியோகம் அடைந்ததைக் குறித்துப் பெரு மகிழ்ச்சி அடைந்தான்.

தொகை	நேர்மை	சம்மதம்	நீதிமான்
செயல்	நீதிமான்	இழிவான	வெளிப்படுத்த
செல்வர்	சுல்தான்	ஏற்றதன்று	சாட்டை
மோகர்	அபராதம்	உள்ளங்கால்	நீதிநெறி

அருஞ்பதவுரை

அபராதம் - தண்டனைக் கட்டணம். குற்றம் - பிழை. நீதி நெறி - ஒழுங்கு முறை. நேர்மை - ஒழுங்கு. (நல் + குணம் = நற்குணம். இருபது + அடி = இருபதடி.)

பயிற்சி

நேர்மை, கள்ள அளவு, தவறான, ஏராளமான, சோதனை, நடுநிலை, நிறைவேற்றினான்—இவ்வார்த்தைகளைப் பின்வரும் வாக்கியங்களில் ஏற்றவாறு அமைத்துக் கூறு.

(1) ஆமெட் நீதிநெறியினின்றும் ———.

(2) அவன் எல்லா விஷயங்களிலும் ——— உடையவன்.

(3) முகம்மதுகான் ——— வைத்துக்கொண்டு———
பொருள் சம்பாதித்தான்.

(4) ஆமெட் கடைகளை ——— செய்தான்.

(5) ஆமெட் தன் கடமையை ——— குன்றாது ———.

இலக்கணம்

(1) பின்வரும் பெயர்ச்சொற்கள் ஒவ்வொன்றும் இன்ன வகையைச் சேர்ந்தது என்று குறிப்பிடு :

பட்டணம், வர்த்தகன், ஆசை, படிக்கல், பணம், நேர்மை, மூன்று, தைரியம்.

(2) முகம்மதுகான், மக்கள், குதிரை, காவிரி, புனல், ஆலயங்கள். இப்பெயர்ச் சொற்களுக்குத் திணையும் பாலும் கூறு.

(3) இருக்கிறது, சொன்னார்கள், செய்வேன், கொண்டாடு கிறான் அடித்தான்—இவ்வினைச் சொற்களுக்கு மற்றக் காலங்களைத் தெரிவி.

கேள்விகள்

1. முகம்மதுகான் எப்படிப்பட்டவன் ?
2. முகம்மதுகான் செய்த குற்றம் என்ன ?
3. ஆமெட்டின் நேர்மை எதனால் வெளியாகின்றது ?
4. இக் கதையால் நீங்கள் அறியும் நீதி என்ன ?

19. தீப்பெட்டி செய்தல்



1. ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாத பொருள்களில் தீப்பெட்டியும் ஒன்று. அடுப்புப் பற்ற வைக்கவும்

விளக்கேற்றவும் தீப்பெட்டி இல்லாமல் முடியுமா? ஏதோ ஒரு நாளைக்குப் பக்கத்து வீட்டிலிருந்து தீப்பெட்டியை இரவல் வாங்கலாம்; நாள்தோறும் அப்படிச் செய்ய இயலாது.

2. நம்நாட்டில் சுமார் ஆறு கோடி குடும்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதம் இரண்டு தீப்பெட்டிகள் வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது நம் நாட்டிலுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் சேர்ந்து ஒவ்வொரு மாதமும் சுமார் பன்னிரண்டு கோடி தீப்பெட்டிகள் வேண்டும்.

3. தீப்பெட்டிகளைப் பெரிய எந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைகளிலும் தயாரிக்கலாம்; குடிசைத் தொழிலாகவும் செய்யலாம். நம் சென்னை மாகாணத்தில் சிவகாசி, சாத்தூர் என்ற ஊர்களில் தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த ஊர்களிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் உள்ளவர்கள் தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

4. முதலில், இலவம் என்ற ஒரு மரக்கட்டையை இலேசான தகடுகளாக அறுத்து வேண்டியபடி ஒரே அளவான துண்டுகளாகச் செய்கிறார்கள். பின்பு சில எந்திரங்களில் இவற்றைக் கொடுத்து, மடிப்பதற்கு வசதியாகக் கோடுகள் போடுகிறார்கள். அதன் பிறகு இவற்றை அந்தக் கோடுகளில் மடித்துக் காகிதம் ஒட்டுவார்கள். இத்தகைய காகித ஒட்டினால் மேற்பெட்டியும் உள்பெட்டியும் அமைந்துவிடும். மரத்தகடுகளை மடித்துக் காகிதம் ஒட்டும் வேலையை நூற்றுக்கணக்கான வீடுகளில் செய்கிறார்கள்.

5. மலையாளத்துக் காடுகளிலுள்ள பாலை என்ற ஒரு மிருதுவான மரம் தீக்குச்சிகளைச் செய்ய ஏற்றதாயிருக்கிறது. இந்த மரங்கள் அங்கிருந்து வரவழைக்கப்பட்டு,

எந்திரங்களில் ஒரே அளவான குச்சிகளாக அறுக்கப்படுகின்றன.

6. வெற்றுக்குச்சிகளை அடுக்குவதற்கென்று ஒரு சட்டம் இருக்கிறது. இதில் சுமார் 2500 முதல் 3000 குச்சிகள் வரை அடுக்கலாம். குச்சிகளை அடுக்கியபின் சட்டத்தைப் பூட்டிவிட்டால் குச்சிகள் கீழே விழமாட்டா. இந்த வேலை நூற்றுக்கணக்கான வீடுகளில் நடைபெறுகிறது. குச்சிகள் அடுக்கப்பட்ட சட்டங்கள் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

7. தீக்குச்சி முனையிலும் பெட்டியின் பக்கத்திலும் இரசாயன 'மருந்து'கள் அமைக்கும் தொழில்தான் தீப்பெட்டித் தொழிற்சாலையில் நடக்கிறது. முதலில் சட்டத்தில் அடுக்கப்பட்ட குச்சி முனைகள் ஏற்றத்தாழ்வு இல்லாமல் மட்டந் தட்டப்படும். பிறகு பரபின் மெழுகை உருக்கிய திரவத்தில் குச்சிமுனைகள் தோய்த்து எடுக்கப்படும். குச்சி மெழுகில் தோய்க்கப் பெற்றால்தான், பிறகு அதைப்பற்றவைக்கும்பொழுது நன்ருக எரியும்.

8. தீக்குச்சி முனைகளில் அமைக்க வேண்டிய மருந்துக் கலவை ஒரு கூழ்போல் தயாராயிருக்கும். 'பொட்டாசியம் குளோரேட்டு,' 'அன்டிமனி சல்பைடு,' 'கண்ணுடித் தூள்,' நீரில் கரைந்த வச்சிரப்பசை ஆகிய நான்கும் தேவையான அளவில் சேர்த்துக் குழைத்து இந்தத் தீக்குச்சி 'மருந்து' தயார் செய்யப்படுகிறது. இதில் சட்டத்திலுள்ள குச்சிமுனைகளைத் தோய்த்து எடுத்தால், ஒவ்வொரு குச்சிமுனையிலும் சிறிது மருந்து ஒட்டிக் கொள்ளும். பிறகு சட்டத்தைத் தலைகீழாகத் திருப்பி வைத்து மருந்து உலரவிடப்படுகிறது.

9. மருந்து உலர்ந்த குச்சிகளை நாற்பது அல்லது அறுபது ஆக எண்ணி உள் பெட்டிகளில் அடுக்குவார்கள்.

இந்த வேலையையும் நூற்றுக்கணக்கானவர் செய்து பிழைக்கிறார்கள்.

10. உள்பெட்டியை மேல்பெட்டிக்குள் செருகிய பிறகு அவற்றை அடுக்கிவைப்பார்கள். மேல்பெட்டியின் பக்கங்களில் தடவ மற்றொரு மருந்துக் கலவை தயாராயிருக்கும். சிவப்பு பாஸ்வரம், கண்ணாடித்தூள், வச்சிரப்பசை ஆகிய மூன்றும் சேர்த்துச் செய்யப்படும் இது துகிலிகையால் பெட்டியின் பக்கங்களில் பூசப்படுகிறது.

11. பின்பு தீப்பெட்டி தயாரித்த தொழிற்சாலையின் பெயர், வியாபார அடையாளமான படம் முதலியவை அச்சடித்த காகிதம் ஒவ்வொரு பெட்டிக்கும் ஒட்டப்படும். இதனோடு தீப்பெட்டி செய்யும் தொழில் முடிகிறது. தொழிற்சாலை முதலாளி ஒவ்வொரு தீப்பெட்டிக்கும் சர்க்காருக்கு வரி கொடுக்க வேண்டும். இந்த வரி கொடுத்தாயிற்று என்பதற்கு அடையாளமாக, முத்திரையிட்ட மெல்லிய நாடா போன்ற ஒரு காகிதம் தீப்பெட்டியைச் சுற்றி ஒட்டப்படுகிறது.

12. நீங்களும் தேவையானபொழுது, அரையணாவோ, முக்காலணாவோ கொடுத்து எளிதாக ஒரு தீப்பெட்டி வாங்கிவிடுகிறீர்கள். தீக்குச்சிகளை அலட்சியமாகக் கொளுத்துகிறீர்கள். எத்தனை பேருடைய உழைப்பினால் ஒரு தீப்பெட்டி உருவாகியிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்! அப்பொழுதுதான் தீப்பெட்டியின் பெருமை உங்களுக்குத் தெரியும்.

இரவல்	மட்டந்தட்டு	முதலாளி
வரவழை	துகிலிகை	முத்திரை
ஏறத்தாழ	கொளுத்து	

அரும்பதவுரை

மட்டந்தட்டு - சமமாக்கு. துகிலிகை - தூரிகை, வர்ணம்பூச உபயோகிக்கும் கருவி. முத்திரை - அடையாளக் குறி.

பயிற்சி

1. தீக்குச்சி செய்தலைப் பற்றி ஒரு சிறு கட்டுரை எழுது.

2. தீக்குச்சிமுனை மருந்து, பெட்டியின் பக்கத்திலுள்ள மருந்து—இவை என்னென்ன பொருள்கள் சேர்ந்த கலவைகள் ?

இலக்கணம்

சில பெயர்கள் வேற்றுமை ஏற்கும்பொழுது, உருவம் மாறுபட்டு வரும். அவை, யான், யாம், நாம், நீ, நீர், தான், தாம் என்பன.

யான் என்பது என் எனவும்,
யாம், நாம் என்பன எம், நம் எனவும்
நீ என்பது நின் அல்லது உன் எனவும்
நீர் என்பது நும் அல்லது உம் எனவும்
தான், தாம் என்பன தன், தம் எனவும் திரியும்.

கேள்விகள்

1. தீக்குச்சிக்கும், பெட்டிக்கும் ஏற்ற மரங்கள் யாவை ?

2. தீக்குச்சிகளை வைக்கும் பெட்டிகள் எப்படிச் செய்யப் படுகின்றன ?

3. தீக்குச்சிகளை எதில் அடுக்குகிறார்கள் ?

4. தீக்குச்சிமுனைகளுக்கு மருந்து அமைக்கும் வழியைப் பற்றி எழுது.

20. தசரதர்

[ஒரு நாடகம்]

காட்சி—1

இடம் : தசரதர் அரண்மனையின் அரச சபை.

பாத்திரங்கள் : தசரதர், வசிட்டர், சுமந்திரர் முதலிய அமைச்சர்கள்.

தசரதர் : குலகுருவே, சுமந்திரரே, அமைச்சர்களே, இன்று ஒரு முக்கியமான செய்தியைப்பற்றி உங்கள் கருத்தை அறிய விரும்புகின்றேன்.

சுமந்திரர் : அரசர் ஏறே, அது என்ன செய்தி? அதனைக் கூறின் அது பற்றிய எங்கள் கருத்தைத் தெரிவிக்கின்றோம்.

தசரதர் : யான் நீண்ட காலம் அரசபாரத்தை வகித்து, என் சக்திக்கு ஏற்றவாறு ஆட்சி புரிந்திருக்கின்றேன். இனியும் அரசாட்சி செய்வதில் எனக்கு விருப்பமில்லை. எனக்கு மூப்பும் வந்துவிட்டது. எனக்கு இறுதிக் காலம் கிட்டுவதற்குள் எனது உயிர்க்குறுதி தேடுதல் வேண்டும். ஆதலால், அரசியலை எனது அருமை மைந்தன் இராமனிடத்தில் ஒப்பித்து விட்டுத் தவம் செய்வதில் எனது காலத்தைப் போக்க எண்ணுகின்றேன்.

வசிட்டர் : அரசே, இந்தச் சூரிய குலத்தில் நின்னைப் போலப் புகழ் உண்டாகுமாறு அரசாண்ட மன்னர் பலர் இருந்திருக்கின்றனர். எனினும், இராமனைப் போன்ற சிறந்த புதல்வரை அடைந்தவர் ஒருவரும் இலர். ஆதலால், அத்தகைய இராமனைப் பெற்ற

நீ உரிய காலத்தில் அவனுக்கு முடி சூட்டுதலினும் சிறந்த செயல் யாதுளது?

சுமந்திரர் : மன்னர் மன்ன, இதுகாறும் உங்கள் ஆட்சியில் குடிகள் யாதொரு குறையுமின்றி வாழ்ந்து வருகிறார்கள். உங்கள் ஆட்சி எங்களுக்கும் இன்பம் அளித்து வருகின்றது. அதனால் உங்கள் பிரிவை நினைக்கும்போது எங்களுக்கு மிகுந்த வருத்தம் உண்டாகிறது. ஆயினும், உங்கள் மூத்த புதல்வர் அரசினை மேற்கொள்வார் என்பதைக் கருதும்போது ஒருவித மகிழ்ச்சியும் உண்டாகிறது. என் செய்வது!

தசரதர் : முனிவரே, அமைச்சர் தலைவரே, உங்கள் கருத்து என் கருத்தோடு ஒத்திருத்தலை அறிந்து மிக மகிழ்கின்றேன். இனி, முடி சூட்ட நாள் குறித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வோம்.

[தசரதர் இராமனுக்கு முடிசூட்ட வசிட்டரைக்கொண்டு நாள் குறித்து, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் செய்கின்றார்.]

காட்சி—2

இடம் : கைகேயியின் அந்தப்புரம்.

பாத்திரங்கள் : கைகேயி, மந்தரை. (மந்தரைக்குக் கூனி என்னும் பெயர் உண்டு.)

[முடி சூட்டுதற்குக் குறிக்கப்பெற்ற நாளுக்கு முந்தியநாள் அச்செய்தி யறிந்த கூனி, தூங்கிக் கொண்டிருக்கும் கைகேயினிடம் பரபரப்புடன் சென்று எழுப்பிக் கூறுகின்றாள்.]

கூனி : என் தலைவியே, என்ன தூக்கம் வேண்டியிருக்கிறது! இராமனுக்கு நாளைக்குப் பட்டம் கட்டப் போகிறார்களாமே!

கைகேயி : அப்படியா! மிக்க மகிழ்ச்சி; இந்நற்

செய்தியைக் கூறிய உனக்கு இதோ இந்த முத்துமாலையைத் தருகின்றேன்.

[கைகேயி முத்துமாலையைக் கொடுக்க, கூனி அதனை வாங்கிக் கோபத்துடன் ஓங்கிப் பூமியில் வீசி எறிந்து விட்டுத் தன் தலைவியை நோக்கிக் கூறுகின்ருள்.]

கூனி: அரசியே, உனக்குப் பெரிய ஆபத்து வந்திருக்கின்றது; அதனை அறியாமல் நீ மகிழ்ச்சி யடைகின்ருயே!

கைகேயி: ஆபத்து என்ன! இராமனுக்கு முடிசூட்டு விழா நாளை நடைபெறும் என்று தானே நீ சொன்னுய்? இதில் என்ன ஆபத்து இருக்கிறது! இராமன் நான் வளர்த்த அருமை மைந்தன்; சகல நற்குணங்களும் பொருந்தியவன்; சக்கரவர்த்தியின் மூத்த குமாரன். அவனுக்கு முடி சூட்டுவதனுல் என்ன ஆபத்து நிகழப்போகிறது?

கூனி: ஐயோ, பேதையே, நீ இவ்வளவு அறியாமையை உடையவளாய் இருப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை. இராமனுக்கு முடிசூட்டினுல் அவனுக்கும் அவன் தாய் கோசலைக்கும் அல்லவா வாழ்வுண்டாகும்? நீயும் உன் மகன் பரதனும் சுதந்தரம் இன்றி அவர்களுக்கு அடிமைத் தொழில் செய்து வாழவேண்டியது தான்.

கைகேயி: மந்தரை, ஏன் அவ்வாறு கூறுகின்ருய்? இராமனும் என் மைந்தனே; கோசலை என் சகோதரி ஆவாள். அவர்களுக்கு ஏற்படும் வாழ்வு எங்களுக்கும் ஏற்படாதோ?

கூனி: நன்ருகச் சொன்னுய்! அரசாட்சி அந்த இராமன் கைக்குப் போய்விட்டால் அவன் உங்களை இலட்சியம் பண்ணுவானு? அவன் தாய் தான் உங்களை மதிப்

பாளா? நீங்கள் பரம ஏழைகளாய் அடிமை வாழ்வு வாழ வேண்டியதுதான்.

கைகேயி: (சிறிது நேரம் சிந்தித்த) ஆமாம், கூனி, நீ சொல்லுகிறபடி ஒருவேளை நடந்தாலும் நடக்கலாம்.

கூனி: 'ஒருவேளை நடந்தாலும் நடக்கலாமா?' நிச்சயமாய் அப்படித்தான் நடக்கப் போகிறது.

கைகேயி: மந்தரை, நீ என் அருமைத் தோழி யன்றோ? இப்பொழுதுதான் நீ சொல்வது எனக்கு நன்ருகப் படுகின்றது. இதற்கென்ன யோசனை செய்ய லாம்?

கூனி: இனி யோசிக்க வேண்டியது ஒன்றுமில்லை. யான் அந்தச் செய்தியைக் கேட்டவுடனேயே யோசித்து ஒரு முடிபு செய்து வைத்திருக்கின்றேன்.

கைகேயி: அப்படியா! என்ன அந்த முடிபு?

கூனி: தசரதர் இன்றிரவு அச்செய்தியைத் தெரி விக்க உன்னிடம் வருவார். அப்பொழுது நீ துக்கக்குறி தோன்றுமாறு படுத்துக்கொண்டிரு. அவர் உன்னை எழுப்பிப் பேசத் தொடங்குவார். அப்பொழுது நீ உன் மகன் பரதனுக்கு முடிசூட்ட வேண்டுமென்றும் இராமன் காட்டுக்குப் போகவேண்டுமென்றும் இரண்டு வரம் கேள்.

கைகேயி: இது நல்ல யோசனைதான்; ஆனுல் அவர் நான் கேட்கும் வரங்களைக் கொடுக்க வேண்டுமே!

கூனி: அதற்கும் ஒரு வழி இருக்கிறது. தசரதர் உனக்கு முன்னமே நீ கேட்கும் இரண்டு வரங்களைக் கொடுப்பதாக வாக்களித்திருக்கிருர் அல்லவா? அதனை இப்பொழுது ஞாபகப்படுத்தி, நான் கூறும் இந்த வரங்கள் இரண்டையும் தரவேண்டும் என்று கேட்டால் அவர் கொடுக்காமல் இருக்க இயலாதே.

கைகேயி: எனதருமைத் தோழி, நீ சொல்வது

மிகப் பொருத்தமான வழி. நான் அப்படியே செய்கி றேன். நீ போய்வா.

[கூனி போகிருள். தசரதர் அன்றிரவு கைகேயியின் அந்தப்புர வருகின்ற சமயத்தில், அவள் அலங்கோலமாகப் படுத்துக் கிடக்கின்ருள்.

காட்சி—3

இடம் : கைகேயியின் அந்தப்புரம்.

பாத்திரங்கள் : தசரதர், கைகேயி, கூனி.

[தசரதர் கைகேயியின் அந்தப்புரம் வந்து, அவள் தலைவிரி கோல மாகப் பூமியில் படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டுக் கூப்பிடுகின்ருர். அவள் வாய் பேசாதுப், எழுந்திருக்காமலும் இருந்தமையால், அவளைக் கையினுல் தூக்கி எடுக்க, அவள் நழுவிக் கீழே விழுகின்ருள். அப்பொழுது அவளை நோக்கி]

தசரதர் : எனதருமைக் கைகேயி, ஏன் இவ்வளவு துக்கத்தோடு இருக்கின்ருய்? உனக்கு என்ன வருத்தம் உண்டாயிற்று? யான் இருக்கும்போது உனக்கு யாதொரு குறைவும் நேரிடாதே.

கைகேயி : குறைவு ஒன்றுமில்லை.........

தசரதர் : பின்னை ஏன் இவ்வளவு துக்கம்?

கைகேயி : நீங்கள் எனக்குக் கொடுப்பதாக மு னரே வாக்களித்துள்ள இரண்டு வரங்களையும் இ பொழுது கொடுக்கவேண்டும்.

தசரதர் : இதற்குத்தானு இவ்வளவு துக்கம்? நா வாக்களித்தபடி நீ வரங்கள் கேட்டால் நான் எப்பட மறுக்க முடியும்? நீ அதுபற்றிக் கவலைப்பட வேண்டாம். இன்னும் நீ மகிழ்ச்சியடைவதற்கு உரிய ஓர் நற்செயலும் நாளைக்கு நடக்கப்போகிறது. உன் மகன் இராமனுக்கு நாளை முடிசூட்டு. விழா நடைபெறும். அச்செய்தியைத் தெரிவிப்பதற்காகவே நான் உன்னிடம் வந்தேன்.

கைகேயி : அதெல்லாம் சரி. நீங்கள் அந்த இரண்டு வரங்களையும் இப்பொழுது கொடுக்கவேண்டும்.

தசரதர் : நான்தான் தருகிறேன் என்று முன்பே சொன்னேனே. இவைகள் இன்னவை என்று கூறி இப்பொழுதே பெற்றுக்கொள்ள வேண்டுமென்றாலும் பெற்றுக்கொள்.

கைகேயி : சரி, இரண்டு வரத்தையும் கொடுங்கள்; ஒன்று, பரதனுக்கு முடி சூட்ட வேண்டுமென்பது; மற்றொன்று, இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் செய்யவேண்டுமென்பது.

தசரதர் : (திகைப்படைந்து சற்றநேரம் மௌனமாக இருக்கிறார். பின்பு) கைகேயி, நீ கேட்கும் வரங்களைக் கொடுப்பதாக வாக்களித்தபடி, நான் இவ்வரங்களைக் கொடுக்கக் கடமைப்பட்டவனே. ஆயினும் இவ்வரங்களைத் தவிர வேறு எவையேனும் இரண்டினைக் கேட்கலாகாதா?

கைகேயி : ஏன்? நீங்கள் இவ்வரங்களைக் கொடுக்க மாட்டீர்களா? உங்கள் வாக்குறுதி என்னுவது?

தசரதர் : என் வாக்குறுதி பொய்க்காது. (சற்று யோசித்து) இந்த இரண்டு வரங்களில் 'பரதன் நாடாள வண்டும்' என்பதைப் பெற்றுக்கொள். மற்றைய நான்றை மறந்துவிடு.

கைகேயி : கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது உங்களைப் போன்ற மன்னர்களின் கடமையன்றோ?

தசரதர் : கைகேயி, அதிலொன்றும் ஐயம் வேண்டாம். என் வாக்கை நிறைவேற்றியே தீருவேன். ஆனால் இராமன் காடு செல்லவேண்டும் என்கிறாயே, அதனை மறந்து விடலாகாதா? இராமன் எனது உயிர்போன்றவன். நான் அவனைப் பிரிய நேர்ந்தால் எனது உயிர் உடலில் நில்லாதே! உனக்கு என்மீது இரக்கமில்லையா!

இதோ உன்னை வணங்குகின்றேன். மன மிரங்குவாய்.
[தசரதர் கைகேயியைக் கைகூப்பி வணங்குகின்றார்.]

கைகேயி : இதெல்லாம் எதற்காக? இந்த இரண்டு வரங்களையும் கொடுக்க உங்களுக்கு மனமில்லையானால் இதோ நான் என்னுயிரை மாய்த்துக் கொள்கிறேன். அதனால் உண்டாகும் பழி உங்களையே சாரும்.

தசரதர் : ஈந்தேன், ஈந்தேன் இவ்வரம். பெற்றுக் கொள். இதனால் வரும் பழியையும் சுமப்பாயாக. ஆ... இராமா......[மூர்ச்சை அடைகிறார்.]

கைகேயி : [கைகேயி கூனியைத் தன்னிடம் அழைத்து] என தருமைத் தோழி, உனது சூழ்ச்சித் திறத்தினால் காரியம் கைகூடிற்று. இனி, இராமனை அழைத்துக் காட்டுக்குப் போகச் சொல்ல வேண்டியதுதான்.

கூனி : அதற்கென்ன தடை? அந்த இராமன் தரித்துக்கொள்ள மரவுரிகூட முன்பே சித்தம் செய்யப் பட்டுளது.

தலைவி	பொய்த்தல்	குலகுரு
தோழி	மனமிரங்குதல்	இறுதிக்காலம்
மூப்பு	மாய்த்துக்கொள்ளல்	உயிர்க்குறுதி
வரம்	மூர்ச்சையடைதல்	அரசபாரம்
பிரிவு	சுதந்தரம்	அரசர் ஏறு
மரவுரி	இலட்சியம்	அரச சபை
வகித்தல்	துக்கக் குறி	வாக்களித்தல்
வசித்தல்	அந்தப்புரம்	வனவாசம்
மறுத்தல்	அலங்கோலம்	தலைவிரிகோலம்
கைகூடுதல்	அடிமைத் தொழில்	பட்டங்கட்டுதல்
வாக்குறுதி	கடமைப்படல்	ஞாபகப்படுத்துதல்

அரும்பதவுரை

மூப்பு - கிழத்தன்மை. வரம் - ஒருவர் தமக்கு வேண்டியதைக் கொடுக்குமாறு இன்னொருவரைக் கேட்டல். அந்தப்புரம் - அரசி இருக்கும் இடம். இலட்சியம் பண்ணுதல் - மதித்தல்; கவனித்தல். அலங்கோலம் - அழகான தோற்றம் மாறும்படி செய்தல். சித்தம் - தயார். கைகூடுதல் - எண்ணியபடி நிறைவேறுதல். சுதந்தரம் - பிறருக்கு ஆளாகாத நிலை.

பயிற்சி

இந்நாடகத்தின் காட்சி 2-ல் உள்ள கதைப் பகுதியைச் சுருக்கிக் கூறு.

இலக்கணம்

1. அவன் உங்களை இலட்சியம் பண்ணுவானா? அவன் தாய்தான் உங்களை மதிப்பாளா?—இவ்வாக்கியங்களின் இறுதியில் முற்றுப்புள்ளி வரும்படி மாற்றி அமைக்க.

2. இதற்கென்ன யோசனை செய்யலாம்? அப்படியா! என்ன அந்த முடிபு?—இவ்வாக்கியங்களிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கூறு.

கேள்விகள்

1. இராமனுக்கு முடிசூட்டுவதைப்பற்றி வசிட்டர் கூறிய கருத்து என்ன?
2. கூனி, கைகேயியின் மனத்தை எவ்வாறு கலைத்தாள்?
3. கைகேயி தசரதரைக் கேட்ட இரண்டு வரங்கள் யாவை?
4. தசரதர் கைகேயியின் கருத்திற்கு ஏன் உடன்பட்டார்?

21. தேனீ வளர்த்தல்

பலவகை மலர்களில் உள்ள மதுவை எடுத்துத் தனது கூட்டிலுல் தேனுக்கி வைக்கும் இயல்புள்ள ஈயைத் தேனீ என்கிறோம். குப்பை அழுக்குப் பொருள்களின் மேல் மொய்க்கும் ஈய்க்கும், தேனீக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஈ நமக்கு நோய்களையே வருவிக்கிறது. தேனீயோ தேன் மெழுகு, தேன் முதலிய பொருள்களைத் தயாரித்துக் கொடுத்து நமக்குப் பலவகைகளில் உதவுகிறது.

மலைகளில் உயர்ந்த மரங்களில் தேனீக்கள் கூடு கட்டி வாழும். உயர்ந்த மரங்களில் உள்ள கொம்புத் தேன் மிகவும் சுவை யுள்ளதாய் இருக்கும். தேனைக் கருதியே நாம் தேனீக்களை நாடுகிறோம். தேனீயில் மூன்று வகைகள் உண்டு. சிறு தேனீ ஒரு வகை; மலைத்தேனீ மற்றொரு வகை; காட்டுத் தேனீ வேறொரு வகையாம். காட்டுத் தேனீ மிகக் கொடிய விஷமுள்ளது. அதைப் பிடித்துப் பழக்குவது அருமை. அது தன்னை நெருங்கிய மனிதரைக் கொட்டிப் பெருந்துன்பம் விளைவிக்கும். தப்பி ஓடித் தண்ணீரில் விழுந்தாலும், அங்கும் பறந்து வந்து கொட்டும். நாம் பிடித்து வளர்க்கத் தக்கது சிறு தேனீ ஒன்றே. மலைத் தேனீ தேன் நிறையக் கொடுக்கும். மலைகளில் வாழ்வோர் அந்தத் தேனை விற்றுப் பிழைக்கிறார்கள்.

சிறு தேனீ கொட்டுவதில்லை என்று எண்ணக் கூடாது. தேள் கொட்டியது போலக் கடுக்கும்படி எந்தத் தேனீயும் கொட்டும். தேனீக்கள் கோபத்தோடு கொட்டிலுல் உடம்பெல்லாம் வீங்கிப்போகும். சிலருக்கு மயக்கமும் வருவதுண்டு. ஆகையால் இவைகளை நெருங்கும்போது மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.



தேனீ வளர்த்தல்

1. மூவகைத் தேனீக்கள், 2. செயற்கைத் தேனடைப் பெட்டி, 3. தேனீக்கள் மலர்களில் தேனெடுத்தல், 4. தேனடைச் சட்டங்கள், 5. தேனைப் பிரிக்கும் எந்திரம், 6. தேன்

தேன் உயர்ந்த பொருளாய் இருப்பதால், நாம் மிகவும் பாடுபட்டுத் தேனீக்களை வளர்க்கவேண்டும். நல்ல தேன் வெகுநாள் வரையில் கெடாது. நீண்ட நாள் இருக்கத் தக்க மருந்துகளைச் செய்ய இது உதவுகிறது. நம் உண வோடு சிறிதளவு தேனைக் கலந்து உண்டால், விரைவிலே உணவு ஜீரணம் ஆகும். பலவகைகளிலும் நமக்கு அவசியமாய் இருக்கின்ற தேனின் பொருட்டு நாம் தேனீக் களை வளர்க்கிறோம்.

இயற்கையில் சுயேச்சையாக வளரும் பூச்சியாகிய தேனீயை நாம் பிடித்து வளர்ப்பது சிரமமே ஆயினும், அதைப் பிடிப்பதற்குச் சில சுலபமான வழிகள் உண்டு. அவ்வழிகளை அறிந்து அவ்வாறு செய்ய வேண்டும். ஒரு சட்டியில் கொஞ்சம் தேன் மெழுகைத் தடவிக் காடுகளில் வைத்தால், தேனீ தானாகவே வந்து அதில் கூடு கட்டும். அதை எடுத்து வந்து நாம் வளர்க்கலாம். இருபுறமும் துளையுள்ள பனந்துண்டங்களும் இதற்கு உதவும். நாம் அடிக்கடி நடமாடும் இடத்தில், ஒரு பெரிய மரத்தின் உச்சியில் தேன்கூடு ஒன்று தொங்கினால், நாம் எப்படி வீட்டுக்குக் கொண்டு போவது என்பதைப்பற்றி, யோசிக்கவேண்டும். முகத்தைப் பத்திரமாக மூடிக் கொண்டு காலைவேளையில் மரத்தின்மேல் ஏறிக் கத்தியின் உதவியால் கூட்டைக் கிழித்து விடாமல் மெல்ல அறுக்க வேண்டும். தேனீக்கள் அங்கும் இங்கும் ஓடும். அவை ஓடுமுன்பு அக்கூட்டத்தில் மிகவும் பெரியதாயும் வனப் புள்ளதாயும் இருக்கும் தேனீயைப் பிடித்து வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு இராணி ஈ என்று பெயர். பின்பு கூட்டை நமக்கு விருப்பமான இடத்தில் வைத்து இராணித் தேனீயை அதற்குள் விடவேண்டும். மற்றத் தேனீக்கள் எல்லாம் உடனே அதற்குள் வந்து புகும்.

தேனீக்களின் குடும்பத்தை ஒரு பெரிய அரசாங்கம் என்னலாம். அதற்கு ஆண் தேனீ அதிகம் இல்லை. பெரிய அழகிய பெண் தேனீ, ஆண் தேனீயோடு ஒரு முறை வெளியே பறந்து பழகும். அரசித் தேனீ அன்று முதல் தன் உயிருள்ள வரையில் ஆயிரக் கணக்கான முட்டைகளை இட்டுக்கொண்டே யிருக்கும். தாய்த் தேனீக்குத் தகுந்த உணவுப் பொருள்களை வேலை செய்யும் தேனீக்கள் தேடிக் கொடுக்கும். கூட்டில் எவ்விதக் குஞ்சுகள் அதிகமாக வேண்டுமோ, அதற்கு ஏற்ற உணவைத் தாய்த் தேனீக்குக் கொடுத்து, அது இடும் முட்டைகளை வேலைக்காரத் தேனீக்கள் சேர்த்து வைக்கும்.

தேனீக்கள் குஞ்சுகளையும் முட்டைகளையும் கீழ் அறைகளில் வைத்துத் தேனை மேல் அறைகளில் சேர்க்கும். ஆகையால் தேன் எடுக்க விரும்புவோர், மேல் அறைகளை வேருக எடுத்துத் தகரத்தால் செய்த சுழலும் எந்திரத்தில் வைத்துச் சுற்றித் தேன் திரட்டலாம். அப்படிச் சுற்றுவதால் அறைகள் கெட்டுப் போவதில்லை; திரும்பவும் அவற்றைக் கூட்டில் வைத்து விடலாம்.

தேனீக்களைப் புகையிட்டுக் கொன்று குஞ்சுகளோடும் முட்டைகளோடும் கசக்கிப் பிழிந்து தேன் எடுக்கும் பழைய வழக்கம் மிகவும் கொடியது. அப்படி எடுக்கப்பட்ட தேனில் தேனீக்களும் புழுக்களும் மிதக்கும். மரச் சட்டங்களால் அமைத்த கூட்டில் வளர்க்கப்படும் தேனீக்களைக் கொண்டு அடிக்கடி தேன் பெறலாம். அரசித் தேனீ சில மாதங்களில் வேருேர் அரசியைக் கூட்டில் வைத்து விட்டு வெளியேறும். அந்தச் சமயம் பார்த்து நாம் அதைப் பிடித்து, மற்ருெரு கூட்டில் வைக்க வேண்டும். இப்படியே தேனீக்களைக் கவனமாய் வளர்த்தால், அவை நம்மைக் கொட்டாமல் தேன் கொடுக்கும்.

மது	மயக்கம்	திரட்டம்	அரசாங்கம்
தேன்	கொட்டும்	புனந்துண்டம்	கசக்கிப்பிழிந்து
தேனீ	இயல்பு	நீண்டநாள்	ஜாக்கிரதையாய்
அரசி	மொய்க்கும்	சுயேச்சையாக	உணவு பொருள்
குஞ்சு	வேறுபாடு	கடிக்கும்	உயிருள்ளவரையில்
மெழுகு	இயற்கையில்	வருவிக்கிறது	புகையிட்டுக்கொன்று

அரும்பதவுரை

மது - தேன். இயல்பு - தன்மை, குணம். வனப்பு - அழகு. கொம்புத்தேன் - மரத்திலுள்ள கூட்டுத்தேன். சுயேச்சையாக - தன் இஷ்டப்படி.

பயிற்சி

தேனீக்களின் குடும்ப ஒற்றுமையைப்பற்றிச் சில வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

பேசினேன், பேசுகிருய், பேசுவான்...இச்சொற்களைக் கவனி. அவைகளெல்லாம் பேசு என்ற சொல்லிலிருந்து பிறக்கின்றன. பின்வரும் சொற்களின் பகுதிகளைக் கூறு :

நடந்தன, ஓடிற்று, நிற்கிறேன், வருவார்கள், போனுள்.

கேள்விகள்

1. தேனீ எத்தனை வகைப்படும்?
2. தேனீக்கும் சாதாரண ஈக்குமுள்ள பேதமென்ன?
3. தேனீயைப் பிடிப்பது எப்படி?
4. அரசித் தேனீயை ஏன் பிடிக்க வேண்டும்?
5. தேன் எடுப்பதில் நல்ல முறை எது?

22. பஞ்ச தந்திரக் கதைகள்

[பாடலிபுரத்து மன்னன் சுதரிசனன் என்பவனுக்குப் பல பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் அனைவரும் மூடர்களாக இருந்தமையால் அரசன் மிக்க கவலையடைந்தான். அதை யறிந்த சோமசன்மா என்னும் அந்தணர் அரசனை நோக்கி, "நீங்கள் கவலைப்பட வேண்டாம், யான் இவர்களைச் சிறந்த அறிவுடையவர்களாக ஆக்குவேன்" என்றார். அரசனும் மிக்க மகிழ்ச்சி யடைந்து, பிள்ளைகளை அவரிடம் ஒப்பித்தான். சோமசன்மா பல கதைகளின் மூலமாகப் பிள்ளைகளை நல்வழிப் படுத்தினார். அந்தக் கதைகளுக்குப் 'பஞ்ச தந்திரக் கதைகள்' என்று பெயர். அவைகளில் 'சிங்கமும் முயலும்' என்பது ஒன்று; 'நண்டும் கொக்கும்' என்பது மற்றொன்று. பஞ்ச தந்திரக் கதைகளைத் தமிழில் செய்யுளாகப் பாடிய புலவர் **வீரமார்த்தாண்ட தேவர்.**]

1. சிங்கமும் முயலும்

குறுமுயல் சிங்கந் தன்னைக்
    கொன்றதொன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
    சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
    யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
    விலங்கெலாம் ஒருங்கு கூடி. 1

ஆணிளஞ் சிங்க மேயுன்
    அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்
    விதத்தினில் தினமொன் றாக
ஊனுனக் களிப்போம் என்ன
    உண்மையாக் கொண்டு சிங்கம்

2. நண்டும் கொக்கும்

மீனென்றையு மேதின்றுடல் மிகவேவளர் கொக்குத்
தானங்கொரு பால்நண்டுத னைக்கண்டிரை கொள்ள
ஞானந்தரு மோனங்கொடு நண்ணும்படி கண்டப்
பானண்டிதை நீயிங்குறை பண்பேதுரை என்ன. 1

என்னென்றுரை செய்வேன்இனி யான் எங்ஙனம் உய்வேன்
கொன்னுந்திய வலைகாரர்கள் கூடிக்குளம் ஏரி
மன்னுந்தட மெல்லாம்மிக வளைந்தேவலை வீசிச்
சின்னஞ்சிறு பொடிமீன்முதற் சேரப்பிடித் தாரே. 2

இந்தக்குளம் நாளைக்கென எண்ணிக்கொடு போனார்
அந்தப்படி வந்தேபிடித் தவர்காவிலெ டுத்தே
சந்தைக்கடை தொறும்மீன்கடை தானேஎன விற்பார்
எந்தப்படி இவர்தப்புவ தெனவெண்ணியி ருந்தேன். 3

அந்தப்பழி காரர்வரு முனமேயொரு பாயம்
சிந்தித்தனன் நான்அப்படி செய்தால்அவை உய்யும்
எந்தப்படி யானும்அழைத் திங்கேவரு வாயேல்
இந்தக்குளம் விட்டோர்குளம் எய்தும்படி செய்வேன். 4

என்றேபக ராசன்சொல வியனண்டதை நம்பிச்
சென்றேபல மீனோடுரை செயவேஅவைகூடி
நன்றே யென வரஒவ்வொரு நடைக்கொன்றுகொண் டேகிக்
கொன்றேசில தின்றேசில கொடும்பாறையில் உலர்த்தி, 5

அலவன்தனை தனையுண்டிட அதையுங்கொடு செலவந்
நிலமெங்கணும் மீனென்புகள் நிறைகொண்டது கண்டே
நலதிங்கிது பலமீனையும் நனிதின்றது நமையும்
கொலவந்தது நாமும்இது கொலுமுன்கொலு வோமே. 6

நம்மால்வரு பிழையேயிது நாமும்அந்த மீன்போல்
சும்மாவிருந் தனமேல்கொலும் அதிலேயொரு சூழ்ச்சி

எம்மால்வகை வருமாறினிச் செய்வோம்என எண்ணி
அம்மாபகன் கழுத்தைக்கவை அடியால்நெருக் கியதே. 7

நெருக்குண்டற வீழ்ந்தேகொக்கு நீங்கிற்றுயிர் அலவன்
இருக்குந்தலம் ஏகித்தன தினத்தோடிருந் ததுவே
செருக்கும்பகை பெரிதாகிலும் சிலதந்திர வகையால்
முருக்கும்படி நினைத்தால் அதின் முடியாததும் உளதோ. 8

ஊன்	என்பு	ஈர்ந்த	துளங்கி
புனல்	வியன்	எடுப்பு	உய்தல்
துரவு	நனி	வெருவி	உளை
வேழம்	பைய	பகன்	நண்ணுதல்
பங்கம்	ஆணை	மோனம்	பழிகாரர்
தடம்	அடவி	அலவன்	நெருங்குதல்
காவி	வெய்ய	கவையடி	முருக்குதல்

அரும்பதவுரை

புனல் - நீர். வேழம் - யானை. அடவி - காடு. வெருவி - பயந்து. பங்கம் - சேறு. துரவு - கிணறு. மோனம் - பேசாமல் இருத்தல். என்பு - எலும்பு. வியன் - பெரிய. அலவன் - நண்டு. பகன் - கொக்கு.

பயிற்சி

இக்கதைகளை வசனத்தில் கூறு.

கேள்விகள்

1. சிங்கம் செய்து வந்த கொடுமை என்ன?
2. மற்ற மிருகங்கள் என்ன ஏற்பாடு செய்தன?
3. முயல் தன்முறை வந்தபோது என்ன செய்தது?
4. இக்கதையால் விளங்கும் நீதி யாது?
5. கொக்கு ஏன் மௌனங் கொண்டிருந்தது?
6. அது மீன்களை எவ்வாறு மோசம் செய்தது?
7. நண்டு செய்த சூழ்ச்சி யென்ன?
8. கொக்கு செய்த மோசத்தை நண்டு எப்படித் தெரிந்து-கொண்டது?

23. நல்வழி

['நல்வழி' என்பதற்கு 'நல்லவழியை அறிவிக்கும் நூல்' என்பது பொருள். இது ஒரு நீதி நூல்; நாற்பது பாட்டுக்களை உடையது. பாட்டுக்களில் கூறப்படும் நீதிகள் தகுந்த உபமானங்களால் விளக்கப்பட்டுள்ளன. இந்த நூலை இயற்றியவர் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்களை இயற்றிய ஔவையாரே. இவர் ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருந்தவர்.]

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ்மூன்றும் தா. 1

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. 2

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 3

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. 4

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். 5

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமிங் கில்லை—சுரந்தமுதம்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றார் உலகத் தவர். 6

ஆறிடு மேடும் மடுவும்போல் ஆஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர்—சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து. 7

கல்லானே ஆனாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். 8

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு. 9

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 10

பாகு	பெருக்கு	கரத்தல்	கைப்பொருள்
கோலம்	வீற்றிருந்த	மாறிடல்	எதிர்கொள்வர்
துங்கம்	பொல்லன்	சார்பு	மூவர்தமிழ்
தூமணி	சுரத்தல்	உண்ணீர்மை	முனிமொழி
சங்கத்தமிழ்	வீறும்	கோவை	

24. நன்னெறி

['நன்னெறி' என்பது ஒரு சிறந்த நீதி நூல்; நாற்பது வெண்பாக்களை யுடையது; நன்னெறி என்பதற்கு 'நல்ல நெறிகளைப் போதிக்கும் நூல்' என்று பொருள். இதில் சிறந்த நீதிகள் எளிய உபமானங்களால் விளக்கப்படுகின்றன. இந்த நூலைப் பாடியவர் சிவப்பிரகாச சுவாமிகள் என்பவர். இவர் ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்தவர்.]

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்—துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழுவோ
நாவிற் குதவும் நயந்து. 1

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 2

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 3

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
வரார் கடலின் கடு. 4

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. 5

கம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
ம்மால் இயலுதவி தாம்செய்வர்—அம்மா!

முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று.

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை.

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர் தாம்என்றும் மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காட
பால்வேண்டும் வாழைப் பழம்.

நல்லார் செயுங்கேண்மை நாடோறும் நன்ருகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய்கேள்
காய்முற்றின் தின்தீங் கனியாம் இளந்தளிர்நாள்
போய்முற்றின் என்ருகிப் போம்.

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்ரெவ்வார்—மின்னுட
பூணும் பிறவுறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண்.

பொலி	பொழில்	கதலி
பூங்கை	கைம்மாறு	எட்டி
தீர்வு	உகவாமல்	அறைதல்
உள்ளுதல்	மெய்	காமுறுதல்
விழுமியோர்	இயலுதல்	புளிங்காடி
பைந்தொடி	எயிறு	கேண்மை
அரம்பை	முனிவினும்	புனைதல்
மீக்கொள்	நல்குதல்	அணி
சேக்கை	உள்ளம்	பூணுதல்